## ஓம்

# 1. வேதாந்தியின் மயக்கம் தீரட்டும்!

நவீன வேதாந்திகள் மனம் போன போக்கில் அர்த்தத்தை அனர்த்தம் செய்து உலகிற்குத் தீங்கு விளைவித்து வருகின்றனர். அன்றியும் மனிதர்களை பிடிவாதம், வீண் பெருமை முதலிய குறைகள் உள்ளவர்களாக்கித் துயர்க் கடலில் மூழ்கடித்து வருகின்றனர். வெறும் சிற்றறிவு படைத்த மனிதர்கள் இவர்களுடைய உபதேச வலையில் விழுந்து மீன்களைப் போல மரணத் துயர் அடைந்து, அறவழி விட்டு, சீரும் சிறப்புமிழந்து, கொத்தடிமைகளாகி, துயர் உருவான சிறையில் எப்பொழுதும் விழுந்து கிடக்கின்றனர்.

இவர்கள் கூறுகின்ற முதல் விஷயம், ஜீவனே பிரம்மம் என்பது. இரண்டாவது விஷயம் தாங்களே பாவம் செய்து விட்டு, நாங்கள் செய்யவில்லை, அனுபவிக்கவில்லை என்பது. மூன்றாவது விஷயம், உலகம் பொய் என்பது. நான்காவது விஷயம் மோட்ச நிலையில் ஜீவன் இரண்டறக் கலந்து விடுகிறது என்பது. அது மட்டுமல்ல, உண்மையில் மோட்சமும் இல்லை, பந்தமும் இல்லை என்றும் கூறுவது. இவ்வாறு அனேக பொய்யான விஷயங்களை இவர்கள் கூறுகின்றார்கள். எனினும் உதாரணத்திற்காக மேலே கூறப்பட்ட நான்கு விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு அவற்றின் பொய்யான தன்மையைச் சுருக்கமாகக் காட்டுகின்றோம்:-

முதலாவதாக, ஜீவனை பிரம்மம் என்பதற்குப் பின் வரும் வாக்கியத்தை ஆதாரமாகத் தருகின்றார்கள். "ப்ரஜ்ஞான மானந்தம் ப்ரஹ்ம" இதனை ரிக் வேத வாக்கியம் என்று சொல்கிறார்கள். ஆனால் ரிக் வேதத்தின் எட்டு அஷ்டகங் களிலும், அதாவது எட்டுப் பகுதிகளிலும், ஓர் இடத்திலும் இந்த வாக்கியம் இல்லை. ஆனால் இந்த வேதத்தின் விளக்கமான ஐதரேய ப்ராஹ்மணத்தில் இந்த வாக்கியம் உண்டு. அதனிலும் "ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம" என்று மட்டுமே கூறப்படுகிறது (ஐதரேய ப்ராஹ்மணம், 5-3). இந்த வாக்கியத்தில் பிரம்மத்தின் உண்மைத் தன்மை பற்றி விளக்குகின்றபொழுது கூறப்படுகிறதாவது:-

“ப்ரக்ருஷ்டம் ஞானம் யஸ்மின் தத் ப்ரஜ்ஞானம் அர்த்தாத் ப்ரக்ருஷ்ட ஞான ஸ்வரூபம்.”

**பொருள் விளக்கம்:**

ப்ரக்ருஷ்ட ஞான ஸ்வரூபமாகிய ப்ரஜ்ஞானம் என்ற அடை மொழியால், எதனை அறியாமை இருள் சற்றும் தீண்ட இயலவில்லை, முன்பும் தீண்டியதில்லை, இனியும் தீண்ட முடியாதோ, அதுவே நிச்சயம் ப்ரஜ்ஞானம் என்று பெறப்படுகிறது. எல்லாவற்றையும் விடப் பெரியது பிரம்மம். அது உலகம் முழுவதையும் வாழ வைத்து வளரச் செய்வது; தன்னைப் போற்றி வணங்கும் பக்தர்களுக்கு எல்லையற்ற மோட்ச சுகத்தில் எல்லையற்ற ஆனந்தத்தில் இன்ப மிக்கவர்களாக்கி நடைமுறையிலும் அதாவது இவ்வுலக வாழ்விலும் பெரும் சுகம் தருவது. இதுவே பரமாத்மாவின் தன்மை; உருவம்.

இந்த வாக்கியத்திற்கு ‘மகா வாக்கியம்’ என்று நவீன வேதாந்திகள் பெயர் வைத்திருப்பது கூட ஆதாரமற்ற விஷயம். ஏனெனில் ரிஷிகளால் இயற்றப்பட்ட நூல்களில் இதனை மகா வாக்கியம் என்று எழுதியிருக்கக் காணோம்.

**இரண்டாவது**

“அஹம் ப்ரஹ்மாஸ்மி” (பிருகதாரண்யக உபநிஷதம் 1.4.10) இந்த வாக்கியத்திற்கு வேதாந்திகள் பின்வருமாறு பொருள் சொல்கிறார்கள். நான் பிரம்மம். அதாவது மயக்கம் காரணமாக நான் ஜீவனாக இருந்தேன். இப்பொழுது தெரிந்து கொண்டேன் நானே சாட்சாத் பிரம்மம், உண்மையில் பிரம்மம், என்று,

இவர்கள் சொல்கிற இந்த அனர்த்தமான = பொருளற்ற சங்கதி முழுக்கப் பொய். ஏனெனில் முன்னும் பின்னும் கூறப்பட்ட தொடர்பான விஷயத்தைக் காணாமல் திருடர்களைப் போல இடையிலிருந்து ஒரு துண்டை எடுத்துக்

கொண்டு தங்களுடைய அர்த்தக் கடலை உருவாக்கி தாங்கள் கூறுவதே சரியென்று பிடிவாதம் செய்கின்றார்கள்.

பாருங்கள், இந்த வாக்கியத்தின் முன்-பின் தொடர்பு வருமாறு:- (சதபத ப்ராஹ்மணம் காண்டம் 14, ப்ரபாடகம் 3, ப்ராஹ்மணம் 2, கண்டிகை 18).

"ஆத்மேத்யே வோபாஸீத அத்ர ஹ்யேதே ஸர்வ ஏகம் பவந்தி : இத்யுபக்ரம்ய -ததே ப்ரேய: புத்ராத் ப்ரேயோ, வித்தாத் ப்ரேயோ, அன்யஸ்மாத் ஸர்வஸ் மாதந்தர தரம் யதய மாத்மா. ஸயோ S ன்ய மான்மன : ப்ரியம் ப்ருவாணம் ப்ரூயாத் ப்ரியங் ரோத்ஸ்ய தீதீ ஷ்வரோ ஹ தைைவ ஸ்யாதாத் மான மேவ ப்ரிய முபாஸீத ஸ ய ஆத்மான மேவ ப்ரிய முபாஸ்தே ந ஹாஸ்ய ப்ரியம் ப்ரமாயுகம் பவதி. (19)

ததாஹு : யத் ப்ரஹ்மவித்யயா ஸர்வம் ப விஷ்யந்தோ மனுஷ்யா மன்யந்தே கிமு தத் ப்ரஹ்மா வேத்யஸ் மாத் தத் ஸர்வமபவததி. (20)

ப்ரஹ்ம வா S இத மக்ர S ஆஸீத். ததாத்மான மேவா வேதஹம் ப்ரஹ்மாஸ்மீதி. தஸ்மாத் தத் ஸர்வமபவத்தத்யோ யோ தேவானாம் ப்ரத்ய புத்யத ஸ ஏவ ததபத்த த S ர் ஷீணாம் ததா மனுஷ்யாணாம். (21)

தத் வை தத் பச்யன் ரிஷிர் வாம தேவ: ப்ரதி பேதே-அஹம் மனு ரபவங் ஸூர்யஷ் சேதி ததித மப்யே தர்ஹிய ஏவம் வேதா S ஹம் ப்ரஹ்மா ஸ்மீதிஸ இதங் ஸர்வம்பவதி. தஸ்ய ஹ நதேவாஷ் சனா பூத்யா ஈஷத S ஆத்மா ஹ்யேஷாம் ஸ பவதி. அத யோ அன்யாம் தேவதாமு பாஸ்தே S அன்யோ ஸா S வன் யோஹ மஸ்மீதி ந ஸ வேத, யதா பஷு ரேவங் ஸ தேவானாம் யதா ஹ வை பஹவ; பஷவோ மனுஷ்யம் புஞ்ஜ்யு ரேவ மேகைக: புருஷோ தேவான் புனகத் யே கஸ் மின்னேவ பஷாவாதீய மானே ப்ரியம் பவதி கிமு பஹுஷு, தஸ்மாதேஷாம் தன்ன ப்ரியம் யதே தன் மனுஷ்யா வித்யு:" (22)

(ஆத்மா...) "அததி ஸர்வத்ர வ்யாப்னோ தீத்யாத்மா பரமேச்வர:". "இங்கு, எல்லா ஜீவர்களும் பரமேசுவரனையே உபாசனை செய்ய வேண்டும் வேறு எவரையும் அல்ல என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில் எங்கும் நிறைந்ததும் எல்லாவற்றினுள்ளும் மறைந்து ஒளிர்ந்து விளங்குவதுமாகிய பரப்பிரம்மம் எல்லாவற்றையும் விட விரும்பத்தக்கது. அதனை அறிந்து கொள்க. மக்கள், பொருள், செல்வம் இவற்றுடன் இவ்வுலக முழுவதிலுமுள்ள உண்மைப்

பொருள்கள் யாவற்றையும் விட அந்தப் பிரம்மமே இனியது, நாடத்தக்கது. அன்றியும் உள்ளே இருக்கின்ற ஆத்மாவினுள்ளும் மறைந்திருக்கும் பொருளே, அந்தர்யாமியாகிய பரமாத்மா. அதுவே நம் எல்லோருடையவும் ஆத்மா. எவனேனும் இந்த ஆத்மாவைவிட வேறு எதனையேனும் விரும்பத்தக்கது என்று கூறினால் அவனிடம் சொல்லுங்கள்: பரமாத்மாவைவிட நாடத்தக்கது என்று வேறு எதனைப் பற்றியும் நீ கூறுவதனால், நீ துயர்க் கடலில் வீழ்ந்து என்றும் கண்ணீர் விடுவாய். எவன் பரமாத்மாவை விட்டு விட்டு வேறு எதனையேனும் உபாசனை செய்கின்றானோ அல்லது நாடுகின்றானோ அவனும் எப்பொழுதும் அழுவான். கல் முதலிய ஜடப் பொருள்களை வணங்குவோனும் எப்பொழுதும் அழுவான். (ஆத்மானமேவ ப்ரியமுபாஸீத், ஸ ய ஆத்மானமேவ ப்ரியமுபாஸ்தே ந ஹாஸ்ய ப்ரியம் ப்ரமாயுகம் பவதி) எவன் சர்வாந்தர்யாமியும் சர்வ சக்தி மானும் நியாயம் செய்வோனும் உருவற்றவனும் பிறப்பற்றவனும் என இவ்விதமான சிறப்புக்களுடன் கூடிய பரமேசுவரனை உபாசனை செய்கின்றானோ அவன் இவ்வுலகிலும் இப்பிறவியிலும், மறு உலகிலும் அடுத்த பிறவியிலும் மோட்சத்திலும் எல்லா இன்பமும் அடைகின்றான். அன்றியும் அதே இறைவன் அருளால் (ஈஷ்வரோ ஹ ததைவ ஸ்யாத்) மனிதர்களிடையே மேலான செல்வத்தைப் பெற்றவனாகவும் திறன்கள் கொண்டவனாகவும் இருக்கின்றான். பிறருக்கு இது இல்லை. மேலும் (ந ஹாஸ்ய ப்ரியம் ப்ரமாயுகம் பவதி) பரப்பிரம்மத்தை உபாசனை செய்வோன் தன்னுடைய இன்பத்தையும் சுகத்தையும் ஒரு நாளும் இழப்பதில்லை; மாறாக அவனுக்கு எப்பொழுதும் நிலையான சுகம் கிட்டும். ஏனெனில் (அத்ர ஹ்யேதே ஸர்வ ஏகம் பவந்தி) பிரம்ம ஞானத்தில் ஈடுபட்டு, சுகம்-துக்கம், வேண்டுதல்-வேண்டாமை, எனுமிவற்றைத் தம்முள் ஒருவருக்கொருவர் எல்லோரும் அறிந்து உணர்வது போன்றே, எல்லா உயிர்களினுடையவும் சுக-துக்கத்தைத் தன்னுடையது போன்றே கருதி, நியாயம் செய்தல் முதலிய குணங்களுடன் எல்லா மனிதர்களுடைய சுகத்திலும் தானும் கலந்து கொண்டு, ஒரே விதமான சுகத்தை அதிகரிக்கச் செய்வதில் எல்லோருடனும் முயற்சி செய்கின்றான். ஏனெனில் தன் ஆத்மாவைப் போன்றதே எல்லோருடைய ஆத்மாக்களும் என்பதை அவன் அறிகின்றான். (19)

(ததாஹு:) பிரம்மத்தைப் பற்றி அறிந்த மனிதர்கள் பரமேசுவரனுடைய திறமையால் எல்லா உலகங்களும் தோன்றின என்றும் எல்லா உலகங்களையும்

தோற்றுவித்தவன் அவனே என்றும் கூறுகின்றனர். இது பிரம்ம ஞானிகளின் உறுதியான கருத்து. உலக முழுவதிலும் (தத்ப்ரஹ்மாவேத்) அந்தப் பிரம்மம் வியாபித்து எல்லோரையும் பாதுகாக்கின்றது. (கிமு) அதனை அன்றி வேறு எதுவும் உலகின் காரணமன்று. (20)

(ப்ரஹ்ம வா இதம்) சிருஷ்டியின் துவக்கத்தில் சர்வ சக்தியுள்ள பிரம்மம் மட்டுமே இயங்கியது. எனவே தன் ஆத்மாவைப் பற்றி உண்மை உருவின் மறதி-ஞாபகமின்மை-மயக்கம்-தெளிவின்மை அதற்கு ஒரு பொழுதும் உண்டாகாது. அந்தப் பரமாத்மாவின் சாமர்த்தியத்தினால் உலகங்கள் எல்லாம் தோன்றின. இவ்வாறு அறிந்த அறிஞர்களிடையே எவர் பிரம்மத்தை அறியாமை உறக்கத்தினின்றும் விலகியிருப்பதாக அறிகின்றாரோ, அவரே பிரம்மானந்த சுகத்துடன் இருப்பவர் ஆவர். மேலும் ரிஷிகளுக்கும் மனிதர்களுக்குமிடையே, அறியாமையாகிய உறக்கத்தினின்றும் எழுந்தவராக பிரம்ம வித்யா ரூபமான ஒளியைப் பெற்றவரே பிரம்மத்தினுடைய நித்திய சுகத்தைப் பெறுகின்றவர். (21)

(தத் வை தத்) இந்தப் பிரம்மத்தை ரிஷி வாம தேவர் கண்டார். அடைந்தார். "மனு என்றும், சூரியன் என்றும் பெயருள்ள, உடல் பெற்ற ரிஷியாகிய நான், அதாவது சூரிய லோகத்தில் பிறந்தவன் நான்". இத்தகைய சிறந்த ஞானம், உயர் ஞானம் சமாதி நிலையில் பரமேசுவரனைத் தியானம் செய்து அவனில் ஒன்றிய வாம தேவ ரிஷிக்குக் கிட்டியது. எனவே இந்த உயர் ஞானம் எவருக்கு அவ்விதம் கிடைக்குமோ அவரும் அவ்விதமாக அறிவார். (ய ஏவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மீதி) நான் பிரம்மம் அதாவது நான் பிரம்மத்தில் உள்ளேன், என்னுடைய உள்ளும் புறமும் பிரம்மம் பரவி நிறைந்திருக்கின்றது என இவ்வாறாக அறிந்த மனிதரே இந்த சுகம் முழுவதையும் பெறுகின்றார். அவர் எதிரே சிறப்பற்றவர்களாகிய அறிஞர்களும், புலன்களும் அல்லது பிற வித்வான்களும் சிறப்படைவது இல்லை. ஆனால் பிரம்மத்தை அது உள்ளவாறே கண்டு உபாசனை செய்வோர் ஆயின் அத்தகையோரும் அவர்களுடைய புலன்களும், ஆத்மாவும் அவ்வாறே இன்பமயமாக, பிரிய சொரூபமாக ஆகின்றனர்.

ஆகாயத்தினின்றும் வீடு தனித்து நிற்க முடியாதது போலவே, ஆகாயமும் வீட்டினின்றும் வேறுபட்டிருக்க முடியாது. மேலும் ஆகாயமும், வீடும் ஒன்றல்ல; இரண்டும் வேறு வேறு. இவ்விதமாகவே ஜீவாத்மாவும், பரமாத்மாவும்

வியாபிக்கப்பட்டும் வியாபித்தும் உள்ள தொடர்பு காரணமாக பிரிந்தோ, பிரிக்க முடியாமலோ இருக்க இயலாது. இவ்விதம் இதே பிருகதாரண்யகத்தில் ஆறாவது பிரபாடகத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றது. அந்த வாக்கியம் வருமாறு:-

"ய ஆத்மனி திஷ்டன்னாத்மனோSந்தரோய மாத்மா நவேத யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மானமந்த ரோ யமயதி ஸத ஆத்மாந்தர்யாம் யம்ருத:"

**பொருள் :**

ஜீவாத்மாவே, உன்னுடைய அந்தர்யாமியாகவும் அமிர்த சொரூபமாகவும் உள்ள உபாசிக்கத்தக்கவனாகிய பரமாத்மா உன்னில் வியாபித்து நிறைந்திருக்கின்றான். உன்னோடு இருக்கின்றான், உன்னிலிருந்து வேறுபட்டிருக்கின்றான், உன்னுடன் இணைந்தும் இருக்கின்றான். நீ அவனை அறியமாட்டாதவனாக இருக்கின்றாய். ஏனெனில், எவனுடைய உடலாக நீ இருக்கின்றாயோ, இந்த ஸ்தூல சரீரம், பருவுடல், ஜீவனுடையது என்பது போலவே, பரமாத்மாவுக்கும் நீ உடல் தரித்தவனாகின்றாய். உன்னிலும் பரமன் உள்ளான். எவன் உன்னில் இருந்தவாறு உன்னை இயக்கி ஆள்கின்றானோ அந்த அந்தர்யாமியை விட்டு விட்டு வேறு எவனையும் எதனையும் எந்தப் பொருளையும் உபாசனை செய்யாதே."

பிற தேவர்களை, அதாவது செவி முதலிய புலன்களைஅல்லது உடல் தரித்தவர்களாகிய அறிஞர்கள் முதலியவர்களை பிரம்மம் என்று அறிவோர் அல்லது உபாசனை செய்வோர், வணங்குவோர், அல்லது நான் ஈசுவர உபாசகன் அல்ல, அவனின்றும் நான் வேறுபட்டவன், அவனால் எனக்கு எவ்விதப் பயனும் இல்லை, அதாவது ஈசுவரனே இல்லை என்று கர்வம் கொள்வோரும் அல்லது நானே பிரம்மம் என்று கூறுவோரும் புலன்கள் அல்லது உடல்கள் கொண்ட தேவர்கள் வசம் இருக்கும் மிருகங்களே ஆவர். எவ்வாறெனில் காளை அல்லது கழுதை போன்றவரே அத்தகைய மனிதர்கள். அவர்கள் பரமேசுவரனை உபாசனை செய்யாதவர்கள் என்பதால்."

இவ்விதமான சந்தர்ப்பங்களைக் கருத்தில் கொள்ளாது நான்கு எழுத்துகளை= வாக்கியங்களைப் பிடித்துக்கொண்டு திருடர்களைப் போல மனம் போன போக்கில் அர்த்தம் செய்வதற்கு ஆதாரம் இல்லை. நூலின் விரிவஞ்சி நாம் அதிகம் எழுதவில்லை. இதுவும் ("அஹம் ப்ரஹ்மாஸ்மி" வசனமும்) யஜுர் வேத வசனமல்ல, சதபதப் பிராம்மணத்தின் முன்னர் கூறப்பட்ட வாக்கியமேயாகும்.

**மூன்றாவது :**

இது போன்றே "தத்வமஸி" இதுவும் ஸாம வேத வசனமல்ல, மாறாக ஸாம பிராமணத்தில் உள்ள சாந்தோக்ய உபநிஷதத்தினுடையதாகும் (6-8-7). இதனுடன் முன்பின் தொடர்பை விட்டு விட்டு நவீன வேதாந்திகள் அனர்த்தம் செய்து வைத்திருக்கின்றார்கள். அதனில் கூறப்பட்ட சந்தர்ப்பமாவது :-

'ஸ ய ஏஷோSணிமை த தாத்ம்ய மிதங் ஸர்வம் தத் ஸத்யங் ஸ ஆத்மா தத்வமஸி ஷ்வேதகேதோ இதி." (சா. உ-6-8-7)

உத்தாலகர் தம் மகன் சுவேதகேதுவுக்கு உபதேசம் செய்கின்றார்: எனவே முன்னர் கூறிய பரமாத்மா எல்லா உலகிற்கும் ஆத்மா ஆவன். அவன் எத்தகையவன் எனில் அவன் இயற்கை, ஆகாயம், ஜீவாத்மா இவை யாவற்றையும்விட மிக மிக "அணிமா" - சூட்சுமமானவன். நுண்ணியவன். அவனே உள்ளதாம் பொருள். சத்யம், உண்மை. சுவேதகேது, உலகம் யாவற்றிலும் அந்தர்யாமியாகவும், அவற்றுக்கும் ஆதாரமான பொருளும் அவை யாவற்றையும் நிலைத்திருக்கச் செய்பவனும் அவனே. அந்தப் பிரம்மம் என்றும் உள்ளது, மாறுதல் அற்றது, உண்மை உருவானது, அழியாதது.

**கேள்வி**

ஈசுவரன், ஜீவன் தொடங்கிய உலக முழுவதற்கும் ஆத்மா என்பதுபோல, அந்த இறைவனுக்கும் ஆத்மாவாக வேறு ஏதேனும் உண்டா, இல்லையா?

**பதில் :-**

(ஸ ஆத்மா) பரமேசுவரனுடைய ஆத்மாவாக அவனுள் எதுவும் இல்லை. அவனுடைய ஆத்மா அவனே. சுவேத கேது, எல்லாவற்றுக்கும் ஆத்மாவாக இருக்கின்ற அவனே உன்னுடைய அந்தர்யாமியாக உன்னுள் நிலைத்திருக்கின்ற ஆத்மாவாகவும் இருக்கின்றான். அதாவது " ததந்தர்யாமீ தததிஷ்டானஸ் ததாத்மகஸ்த்வமஸீதி பலிதோSர்த்த" - அது உடன் உள்ளது, உடன் இயங்குகிறது என்ற விசேஷத் தன்மையை இவ்வாக்கியத்தில் காணவேண்டும். (எவ்விதமெனில்)

"யஷ்டிகாம் போஜய அர்த்தாத் யஷ்டிகயா ஸஹ சரிதம் ப்ராஹ்மணம் போஜயேதி கம்யதே ததைவதத் ப்ரஹ்ம ஸஹ சரிதம் ஸ் த்வ மஸீ த்யவகந்தவ்யம். ததா அஹம் ப்ரஹ்மாஸ்மீத்யத் ராஹம் ப்ரஹ்ம் ஸஹ சரிதோ வா ப்ரஹ்மஸ்

தோSஸ்மீதி விஜ்ஞே யோSர்த்த - தாத்ஸ் யோபாதினாயதா மஞ்சா: க்ரோ சந்தீத் யத்ர மஞ்சஸ்தா: க்ரோசந் தீதி விஜ்ஞாயதே ஏவம் யத்ர யத்ரா ஸம்பவ ஆகச்சேத் தத்ர தத்ரோ பாதீனாSர்த்தோ வேதிதவ்ய:"

*அத்ர ந்யாய தர்சனஸ்ய த்விதீயாத்யாயஸ்தம் சதுஷ் ஷஷ்டிதமம் ஸூத்ரம் ப்ரமாண மஸ்தி-*

*ஸஹ சரண ஸ்தானதாதர்தத்ய வ்ருத்தமான தாரண ஸாமீப்ய யோக ஸாதனாதிபத்யேப்யோ ப்ராஹ்மண மஞ்ச கட ராஜ ஸக்து சந்தன கங்கா சாடகான்ன புருஷேஷ் வதத் பாவேSபி ததுபசார:*

*ஏஷு தசவிதா ஸம்பவேஷு வாக்யார்த் தேஷு தசோ பாதயோ பவந்தீதி வேத்யம்.*

இங்கும் சர்வ சக்தியுள்ளவனும், ஐயம், குழப்பம் முதலிய குணங்களற்றவனு மாகிய பிரம்மம் ஜீவர்களிடையே தோன்றுவது என்பது ஒரு பொழுதும் நடை பெறக் கூடியதல்ல. ஏனெனில் சிறிதளவே சக்தியுள்ளதும், ஐயம் முதலிய குறைகளுடன் கூடியதுமே ஜீவன்-மனிதன். இதனால் பிரம்மம், ஜீவன் எனுமிவ்விரண்டும் ஒன்றே எனக் கருதுவது வெறும் மயக்கமேயாகும்.

**நான்காவது : –**

"*அயமாத்மா ப்ரஹ்ம*" இதனை அதர்வ வேத வாக்கியம் என்கின்றனர். இது அதர்வ வேத வாக்கியமும் அல்ல. மாறாக மாண்டூக்யோபநிஷதம் முதலியவற்றினுடையதாகும். இதனுடைய தெளிவான பொருள் என்னவெனில் சிந்தனையாளனாகிய மனிதன் தன்னுள் அந்தர்யாமியாகி இருக்கும் பிரம்மத்தை பிரத்தியட்ச ஞானத்தால் கண்டு, "என்னுள் அந்தர் யாமியாக இருக்கும் அதுவே பிரம்மம்" என்று கூறுகிறான். அதாவது "எனக்கும் அதுவே ஆத்மா" என்று பொருள். தன்னால் உபாசிக்கப்படும் பரமனை பிரத்தியட்சமாகவும் அனுபவ பூர்வமாகவும் ஜீவன் அறிய வேண்டுமென்பதற்கே இந்த வாக்கியம்.

மேலும் "யோS ஸாவாதித்யே புருஷஸ் ஸோSஸாவஹம்" இது யஜுர் வேதத்தின் 40-ஆம் அத்தியாயத்தின் (17-வது மந்திரம்) வாக்கியம் ஆகும். ஆதித்தனில் அதாவது பிராணனில் இருக்கின்ற புருஷனாக உள்ள நானே ஜீவாத்மா, "ஆதித்யோ வை பிராண:" (சதபத ப்ராஹ்மணம்) அன்றியும் "ஆதித்யோ ஹ வை ரயிரேவ சந்த்ரமா" என்று முண்டக முதலிய உபநிஷத்துக்கள்.

இந்தப் பிரமாணத்தினால் - ஆதாரத்தினால் பிராணனில் பூரணமாகவும்' பிராணனில் உறங்கியவாறும் பிராணனைத் தூண்டுவோனாகவும் இருக்கும் ஜீவாத்மாவாகிய புருஷன் நான் என்பது புலனாகும்.

"யத்வா பரமேஷ்வரோSபி வததி : ஹே ஜீவா : ய அஸௌ ஆதித்யே பாஹ்யே ஸூர்யேகிம் வா அந்தர்கதே ப்ராணே ஸ அஸௌ அஹமே வாஸ்மீதி மாம் வித்த."

"ஜீவர்களே என்னை, உள்ளும் புறமும் உள்ளவனாகக் காண்பீர். சூரியன் முதலான எல்லா ஸ்தூல ஜகத்தும் ஆகாயமும் ஜீவன் முதலான சூட்சும ஜகத்தும் என இவ்விரண்டிலும் இறைவனாகிய நான் பரிபூரணமாக நிறைந்திருக்கிறேன். இவ்விதமாக நீங்கள் என்னை அறிந்து கொள்க". ஏனெனில் இம்மந்திரத்திற்கு முன் உள்ள "அக்னே நய" முதலானவற்றில் மோட்சம் தர வேண்டுமென இறைவனிடம் பிரார்த்தனை செய்யப்படுகிறது. மேலும், ஓம் கம் ப்ரஹ்ம" மிகச் சிறந்த பெயரான ஓம் என்பதால் அழைக்கப்படுகின்ற கம்-ஆகாயம் போன்று வியாபித்து நிலைத்து இருக்கின்ற அவனே எல்லாவற்றையும் விடப் பெரியவன். எல்லா உயிர்களாலும் உபாசனை செய்யத் தக்க பிரம்மம் அவனே.

"ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலானிதி சாந்த உபாஸீத்"-இது சாந்தோக்ய உபநிஷத் வசனமாகும் (3-14-1) இதன் பொருளும் முன்னர் கூறிய விதமாகவே கொள்க.

"இதம் ஸர்வம் ஜகத் ப்ரஹ்ம அர்த்தாத் ப்ரஹ்மஸ்தம். யத்வா இதம் யஜ்ஜகததிஷ்டானம் தத் ஸர்வம் ப்ரஹ்ம வ நாத்ர கிஞ்சித்வஸ்த்வந்தரம் மிலிதமிதி விஜ்ஞேயம். யதேகம் ஸர்வம் க்ருதமேவ நேதம் தைலாதிபிர் மிஷ்ரிதமிதி."- இவ்வுலகம் முழுவதும் பிரம்மம் எனப் பெயர் கொண்ட இறைவனில் பிரம்மத்தில் இருக்கின்றது. அல்லது பிரத்தியட்சமாகவும் அந்தர்யாமியாகவும் உள்ள சேதனப் பொருள் அது எனலாம். ஒரே பொருளாகிய பிரம்மம் அது. அதனில் வேறு எதுவும் கலந்திருக்கவில்லை. இது முழுவதும் நெய்யே. கலப்படமற்ற நெய், எண்ணெய் முதலிய எதுவும் கலக்கப்படவில்லை என்று கூறுவதுபோல இந்தப் பிரம்மத்தின் உபாசனையை ஜீவன் சாந்தமாக அமைதியுடன் நிச்சயம் செய்யட்டும். வேறு எதனையும் உபாசனை செய்தல் வேண்டா.

*2.* இரண்டாவது விஷயம் இந்த உடலில் செய்வோனும் அனுபவிப்போனும் ஜீவனே ஆவன் என்பது. ஏனெனில் புத்தி முதலிய பிற ஜடப்பொருள்கள் ஜீவனின் கட்டுப்பாட்டில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கின்றன. ஏனெனில், பிருகதாரண்யம் முதலான உபநிஷத்துக்களிலும், "வியாசசூத்திரம்." பிற வேத முதலான சாஸ்திரங்களிலும் கூட இதே சித்தாந்தம் உள்ளது. " ஷ்ரோத்ரேண ஷ்ரு ணோதி, சக்ஷுஷா பச்யதி, புத்யா நிஷ்சினோதி, மனஸா ஸங்கல் பயதி" என்றிவ்வாறாக விளக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, "அஸினா சினத்தி சிர:" - வாளால் சிரம் வெட்டப்படுகிறது. இதனில் வெட்டுதலாகிய செயலைச் செய்வோன் மனிதனே. வெட்டுவதற்கான கருவி வாள். வெட்டுவதன் பயனை அனுபவிப்பது சிரம். இதனில் பாபமும் தண்டனையும் மனிதனுக்கு (எவன் வெட்டுகிறானோ அவனுக்கு) கிடைக்கிறது. வாளுக்கு அல்ல. இவ்விதமே செவி முதலியவற்றால் இயற்றப்படும் பாவ, புண்ணியங்கள் செய்வோனும் அனுபவிப்போனுமாகிய ஜீவனுடையதேயன்றி வேறு எதனுடையதும் அல்ல.

இதனை கோதம முனிவரும் வியாசர் முதலானோரும் உறுதிப்படுத்தி யிருக்கின்றனர். "இச்சா த்வேஷ ப்ரயத்ன ஸுக துக்க ஜ்ஞானான் யாத்மனோ லிங்கமிதி" - ( நியாயம் 1-1-10) அதாவது, இச்சை, துவேஷம், பிரயத்தனம், சுகம், துக்கம், ஞானம் எனுமிவை ஆத்மாவைச் சேர்ந்ததும், சார்ந்திருப்பதும் ஆகும்.

"தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத் வத்தி" - (ரிக் 1-164-20) இதனிலும் ஜீவன் சுகதுக்கங்களை அனுபவிக்கின்றதாகவும் பாப புண்ணியங்களைச் செய்கின்ற தாகவும் உறுதியாகின்றது. அனுபவத்தாலும் ஜீவாத்மாவே செய்வோனும் அனுபவிப் போனும் என அறிகின்றோம். வெறும் புலனுகர்ச்சியில் ஈடுபட்டு சுக போகங்களை அனுபவிக்க வேண்டுமென்ற சொந்த விருப்பங்களை நிறை வேற்றிக் கொள்ளவே, ஜீவன் செய்வதில்லை, அனுபவிப்பதில்லை, அது பாப-புண்ணித்தி லிருந்து விடுபட்டது என்றெல்லாம் உள்ள இந்த வாதங்கள் பொய்யானவை என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. இது நவீன வேதாந்திகளின் கற்பனை விஷயமேயாகும்.

*3.* மூன்றாவதாக இவர்கள் உலகம் பொய், மாயை என்கிறார்கள். அவ்வண்ணமே கருதுகிறார்கள். இது இவர்களுடைய அறியாமை இருளின்

மகத்துவம் மட்டுமே. அதிகம் வேண்டாம், உலகம் உண்மை என்பதற்கு ஒரே ஒரு ஆதாரம் தெளிவாக இருக்கின்றது:-

"ஸன் மூலா: ஸோம்யேமா : ப்ரஜா : ஸதாயதனா: ஸத் ப்ரதிஷ்டா:" இது சாந்தோக்ய உபநிஷத் வசனம் (6-8-4) பொருள்:- சத்தியமே மூலம் அல்லது வேராக இருக்கின்ற பொழுது அதனுடைய மரம் எப்படிப் பொய்யாகும்? பரமாத்மாவின் திறமையே உலகின் காரணமாக இருக்கின்றதனால் அது நித்தியமே. பரமாத்மா நித்திய மெனில் அவனுடைய திறமையும் நித்தியமே. அவனிலிருந்து இவ்வுலகம் உண்டாயிற்று எனில் அது எவ்விதத்திலும் பொய்யென்று ஆகாது.

"ஆதாவந்தே சயன்னாஸ் தி வர்த்தமானேऽபிதத்ததா-" (மாண்டூக்யோ பநிஷத், கௌடபாத காரிகை 31) என்று கூறுவாராயின், அது பொருந்தாக் கூற்று ஆகும். முன்னர் இருந்ததில்லை என்றால் பின்னர் வரவும் இயலாது. கோப்பையில் தண்ணீர் இல்லை எனில் அதனின்றும் தண்ணீர் எப்படி வரும்? எனவே ஈசுவரனின் திறமையில் அல்லது திறமையின் உருவமான உலகம் முன்னரும் இருந்தது; அதுவே இப்பொழுதும் இருக்கிறது. இனிமேலும் இருக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

சிலர் கூறக்கூடும்:- சேர்வதன் விளைவால் தோன்றும் பொருள் சேர்க்கைக்கு முன் இருந்திருக்க முடியாது. பிரிவின் முடிவில் இருப்பதும் இல்லை. எனவே இப்பொழுதும் நிகழ்காலத்திலும் இல்லை. இவ்வாறு அறிந்துகொள்ளலாம்.

இதற்குப் பதில் வருமாறு:- இருக்கின்ற சத்தான, உள்ள பொருள்களுக்கே சேர்க்கை உண்டு, பொருள்களே இல்லை என்றால் அவற்றின் சேர்க்கையும் இல்லை. அதனால் பிரிவின் முடிவிலும் அப்பொருள்கள் தனித்தனியாக எப்பொழுதும் இருக்கின்றன. எவ்வளவுதான் பிரித்தாலும் கூட, முடிவில் மிகமிகச் சூட்சுமமான பொருள்கள் மீதமிருக்கத்தான் செய்கின்றன என்பதில் கொஞ்சம் கூட சந்தேகமில்லை.

சேர்க்கையும் பிரிவும் இருப்பதே அனித்தியத்தை- நிலையில்லாத் தன்மையைக் குறிக்கிறது என்றும் சிலர் கூறலாம். அதுவும் ஒப்புக் கொள்ளத்தக்கது அன்று. ஏனெனில் இன்றுள்ள நிலையில் பொருள்களின் சேர்க்கையால் பூமி முதலிய இன்றுள்ள நிலையில் பொருள்களின் சேர்க்கையால் பூமி முதலிய உலகங்கள் அமைந்திருப்பதுபோல பொருள்களின் சேரும் தன்மையின்றி அவை

ஒருபொழுதும் சேர்வதில்லை. மேலும், பிரியும் தன்மையின்றி அவை பிரிந்திருப்பதுமில்லை. எனவே சேர்க்கையும் பிரிவும் பொருள்களின் தன்மையே ஆகும். மண்ணில் சேர்க்கை குணம் இருப்பதால் பானை முதலியவற்றைச் செய்ய முடிகிறது. மணலால் அல்ல. எனவே மண்ணில் சேரும் தன்மையும் பிரியும் தன்மையும் இயல்பாகவே இருக்கின்றதென்று காண்கிறோம். அது போன்றே ஈசுவர சாமார்த்தியத்தால் உண்டாக்கப்பட்ட இவ்வுலகிலும் சேர்தலும், பிரிதலுமாகிய குணங்கள் இயல்பாகவே இருக்கின்றன. இதனால் நிச்சயமாகத் தெரிவது, உலகிற்குக் காரணமான ஈசுவர சாமார்த்தியம் நித்தியமானது எனின், அவ்வுலகின் பிரிதல் முதலிய குணங்களும் நித்தியமே என்பதாகும். உலகை மாயை என்று கூறுவோரின் பேச்சும் கொள்கைகளும் மாயையிலிருந்து தோன்றியவை. வெறும் மயக்கம், பொய் என்று இதனால் உறுதியாக அறிந்து கொள்ள வேண்டும்.

4. இவர்கள் சொல்கிற நான்காவது விஷயம் மோட்ச காலத்தில் பிரம்மத்தில் ஜீவன் இரண்டறக் கலந்து விடுகிறது, லயித்து விடுகிறது-சமுத்திரத்தில் அனேக நீர்த்துளிகள் சேர்ந்து விடுவதுபோல என்பதாகும். இவர்களுடைய இந்தக் கூற்றும் பொய்யே; இதுபொய் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. ஆனால் நூல் விரிவடையக் கூடாது என்பதற்காகச் சுருக்கமாக எழுதுகின்றோம்:-

"கடவல்லி"யிலும் பிருகதாரண்யக முதலான உபநிஷதங்களிலும் மோட்சத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறுவதாவது :

"யதா பஞ்சாவதிஷ்டந்தே ஞானானி மனஸா ஸஹ;

புத்திஷ்ச ந விசேஷ்டதே தாமாஹு: பரமாம் கதிம்-(கடோ, 2-3-10)

பொருள்-ஐந்து ஞானேந்திரியங்களின் ஞானம் மனத்துடன் அதாவது உயர் ஞானத்துடன் நிலை பெறும் பொழுது ஜீவன் மோட்சத்தை அடைகிறது. அன்றியும் திடமான அறிவு அதாவது சஞ்சலமற்ற அறிவு அதாவது சுத்த ஞான சொரூபமாகிய ஜீவாத்மா பரமாத்மாவில் பரமானந்த சொரூபத்தோடு கூடியதாகி எப்பொழுதும் ஆனந்தத்தில் வசிக்கின்றது. அதனையே பரம கதி அல்லது மோட்சம் என்கின்றனர்.

வேறு இடத்தில் கூறப்படுகின்றது: "பரம ஜ்யோதி ரூப ஸம்பத்யஸ்வேன ரூபேணுபி நிஷ்பத்யதே" இது பிருகதாரண்யகத்தில். பொருள்:- (பரம ஜ்யோதி)

பரமாத்மாவின் (உபஸம்பத்ய) மிக அருகாமையினை அடைந்து (ஸ்வேன ரூபேண) அறியாமை முதலிய குறைகளிலிருந்து விடுபட்டு தூயதான ஞான சொரூபமும் தனதேயான திறமையும் கொண்ட ஜீவன் முக்தி நிலை அடைகிறான்.

இதே சொரூபத்தை சாரீரக சூத்திரங்களினுடைய நான்காவது அத்தியாயத்தில் நான்காவது பாதத்தில் விளக்கப்பட்டிருப்பது காண்க.

"அபாவம் வாதரிராஹ ஹ்யேவம்" (வேதாந்த தர்சனம் 4-4-10)-மோட்ச சமயத்தில் மனத்தையன்றி பிற உறுப்புக்கள் அல்லது உடல் ஜீவனுடன் இருப்பதில்லை மனம் இருக்கின்றது என்றாலும் பிற இல்லாமலும் இருக்கின்றன. இந்த முடிவு வாதரி ஆசார்யருடையதாகும். மேலும்,

"பாவம் ஜைமினிர் விகல்பாமனனாத்" (வேதாந்த தர்சனம் 4-4-11)- மோட்ச விஷயம் பற்றி ஜைமினி ஆசார்யர் கருத்து வருமாறு:- மோட்சத்தில் மனம் ஜீவனுடன் உள்ளது. புலன்களினுடையவும் சுய சக்தி ஜீவனுடன் உள்ளது. புலன்களினுடையவும் சுய சக்தி சொரூபமான உடலின் திறமையும்கூட மோட்சத்தில் உண்டு. அதாவது சுத்த இயல்பான திறமையுடன் கூடியதாக ஜீவன் மோட்சத்திலும் வசிக்கின்றது.

வாதராயணருடைய (வியாசருடைய) கருத்து: "த்வாதசாஹவதுபயவிதம் வாதராயணோSத;" (வேதாந்தம் 4-4-12)-மரணம் நேரிட்ட பின் உள்ள தூய்மைக்கான பன்னிரண்டாம் நாளில் ஸத்ரயாக ரூபமாக ஏற்கப்படுகின்றது; அதற்கு மாறாகவும் கொள்ளப்படுகின்றது. அன்றைய தினம் வேள்வி செய்யலாம்; இல்லையென்றும் கொள்ளலாம். அதுபோலவே மோட்ச நிலையிலும் உள்ளதும் உண்டு, இல்லாததும் உண்டு. இருக்கிறதென்றும் கொள்வர், இல்லையென்றும் கொள்வர். அதாவது ஸ்தூல சரீரம், அறியாமை முதலிய துயர்கள் தீர இல்லாமலிருப்பதும் ஞானம், சுத்தம், சுயசக்தி எனுமிவை எப்பொழுதும் இருப்பதும் மோட்ச நிலையில் தொடர்ந்து அமைந்தவாறே இருக்கின்றன. சச்சிதானந்த சொரூபனாகிய பரமாத்மவுடனிருந்த வண்ணம், பிறப்பு-இறப்பு முதலிய எல்லாத் துயர்களிலிருந்தும் விடுபட்டு ஜீவன் எப்பொழுதும் ஆனந்தத்தில் வசிக்கின்றது. இது வாதராயணர் என்று அழைக்கப்படும் வியாசருடைய கொள்கையாகும்.

அன்றியும் கோதம ரிஷியின் கொள்கையும் இதுவே. நியாய தர்சனம் 1-2-ல்,

துக்க ஜன்ம ப்ரவ்ருத்தி தோஷ மித்யா ஞானானா முத்தரோத்த ராபாயே ததனந்தராபாயாதப வர்க: (2)

**பாதனா லக்ஷணம் துக்கம் (21)**
**ததத்யந்த விமோக்ஷோऽபவர்க : (22)**

பொய்யறிவு என்பது வருமாறு : ஜடப்பொருளில் சேதன புத்தி காண்பது, சேதனத்தில் ஜடபுத்தி காண்பது முதலிய அனேகவித பொய் அறிவு உண்டு. இவை நீங்குவதால் ஜீவர்களுடைய அறியாமை முதலிய தோஷங்கள், குறைகள் நீங்குகின்றன. குறைகள் நீங்குவதால் செயல்களும் அதாவது புலனிச்சை, அனியாயம் முதலியவற்றில் ஈடுபாடு முதலியனவும் நீங்குகின்றன. செயல்கள் விடுபட்டுப் போவதால் பிறப்பும் விடுபட்டுப் போகின்றது. ஜன்மம் விடுபட்டுப் போவதால் துன்பமும் விடுபட்டுப் போகின்றது. எல்லாத் துன்பங்களும் நீங்குவதால் அபவர்கமெனப்படும் மோட்ச நிலை உள்ளவாறே கிடைக்கின்றது. (2)

பாதனா = பலவிதமான துயர்கள், அதாவது துக்கங்கள். அவை சிறிதளவும் இல்லாத நிலை ஏற்படுவதால் ஜீவனுக்கு அபவர்கம் எனப்படும் மோட்சம்-ஈசுவரனுடைய ஆதாரத்தில் மிக அதிகமான ஆனந்தம்-எப்பொழுதைக்குமாகக் கிடைக்கிறது. இதன் பெயரே அபவர்கம் அதாவது மோட்சம். (21,22)

இவ்விதமான அனேக ஆதாரங்கள் மோட்சத்தில் ஜீவன் லயித்துப் போவதில்லை (இரண்டறக் கலந்து விடுவதில்லை), ஆனால் ஜீவன் உச்சக்கட்டமான ஆனந்த நிலையில் இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன.

வேறொரு சான்றும் தருகின்றோம்

“ஸத்யம் ஞான மனந்தம் ப்ரஹ்ம யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன:

ஸோऽஷ்னுதே ஸர்வான் காமான் ப்ரஹ்மணா ஸஹவிபஷ்சிதேதி”- (தைத்திரியோ பநிஷத் வசனம், ஆனந்தவல்லி 1-1)

- சத்திய ஞான ஆனந்த சொரூபமாகிய பிரம்மம் அந்தர்யாமியாகி தன்னுடைய அறிவிலும் ஞானத்திலும் இருக்கின்றதென்று அறிகின்றவன் அல்லது அதனை அடைந்தவன் பரம வ்யோமம் எனப்படும் எங்கும் நிறைந்த உருவினனாகிய பரமாத்மாவில் மோட்ச சமயத்தில் நிலை கொள்கின்றான். பின்னர், எல்லா அறிவும் கல்வியும் உடையவனும், எல்லாம் அறிந்தவனும், எல்லாம் வல்லவனுமாகிய பரப்பிரம்மம் அவனுடன் எல்லாச் செயல்களிலும் இருக்கின்றான். அதாவது, எல்லாத் துயர்களிலிருந்தும் விடுபட்டு அந்த ஜீவன் பரமேசுவரனுடன் சதா ஆனந்த நிலையில் வசிக்கின்றான்.

ஜீவன் லயித்துப் போகின்றது என்போரின் கொள்கையில் அனிர்மோக்ஷ ப்ரஸங்கம் - மோட்சமில்லை எனும் நிலை - என்பதாகிய குறை ஏற்படுகின்றது. அன்றியும் மோட்சத்திற்கான கருவி எனப்படும் சாதனையும், பயிற்சியும் பயனற்றுப்போகின்றது. ஏனெனில் சிருஷ்டிக்கு முன்பு பிரம்மம் விடுபட்டு இருந்தது போல, (நவீன வேதாந்தியின் கொள்கைப்படி) அதுவே அறியாமை மயக்கம் அஞ்ஞானம் முதலியவற்றோடு கூடியதாகி கட்டுப்பட்டுவிட்டது. அவ்வாறு பெறப்பட்ட மோட்ச சாதனத்திற்கு மீண்டும் அறியாமை முதலிய குணங்களின் தொடர்பு ஏற்பட்டுவிடுவதால் மோட்சத்திற்கு நித்தியத் தன்மை இல்லாமற் போகிறது. அன்றியும் மோட்ச நிலை பெறுவதற்காக விவேகம் முதலிய சாதனைகளில், முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். அந்த மோட்சத்தைப் பெறுகின்றதாகிய ஜீவன் லயமடைந்துதான் ஆகவேண்டுமெனில், இரண்டறக் கலந்தேயாக வேண்டுமெனில், அந்த சாதனங்கள் = கருவிகளான விவேகம், முயற்சிகள் முதலியன, பயனற்றுப்போகின்றன. ஏனெனில் முக்தி சுகத்தின் ஆனந்தம் அனுபவிக்கின்றதாகிய ஜீவனுடைய பெயர் முதலிய சின்னம்கூட மிஞ்சுவதில்லை.

மேலும், ஜீவப் பிரம்ம ஐக்கியத்தை ஏற்றுக் கொள்கிறவர்களின் கொள்கைப்படி, பிரம்மமே அஞ்ஞானியாகி விடுகிறது. ஏனெனில் படைப்பே தோன்றாத நிலையில் ஞான சொரூபமான சுத்த பிரம்மம் இருந்தது. அதே பிரம்மம் அறியாமை முதலிய குறைகளோடு கூடியதாகி விட்டது. இது வேதம், உபநிஷத்துடன் வேதாந்த சாஸ்திரத்திற்கும் முரண்பாடான கொள்கையாகும். ‘சுத்தமபாப வித்தம் கவி:” - இவ்வாறான யஜுர் வேதசம்ஹிதை (40-8)

முதலியவற்றின் வாக்கால் பிரம்மம் எப்பொழுதும் தூயதும், பாபமற்றதும், எல்லாமறிதல் முதலிய குணங்களோடு கூடியதுமாகும். அதனில் அஞ்ஞான முதலான தோஷங்கள் ஒருக்காலும் ஏற்படமாட்டா. ஏனெனில் ஈசுவரனை இடம், காலம், பொருள் எனுமிவற்றால் பிரிக்க இயலாது. மாயை (மயக்கம்) முதலிய குறைகள் சிற்றறிவாளர்களான ஜீவர்களில் உண்டேயன்றி, மற்றவாறு அல்ல.

**கேள்வி :**

''தத்ஸ்ருஷ்ட்வா ததேனு ப்ராவிஷத்'' (தை.உ. பிரம்மானந்த வல்லி 6) ''அனேனாத்மனா ஜீவேனானுப்ரவிஷ்ய நாமரூபே வ்யாகரவாணி'' (சா. உ.6.3.2)- ''இதே பிரம்மம் உலகம் முதலியவற்றைப் படைத்த பின்னர் மீண்டும் பிரவேசித்தது. இதனில் ஜீவாத்மா ரூபமாகிய அந்தக் கரணத்திலும் பிரவேசித்து பெயர் உருவமாகிய இலக்கணமும் தரட்டும்''-இதிலிருந்து அதே பிரம்மம்தான் ஜீவன் உருக்கொண்டது என்று முடிவாக வில்லையா, என்ன?

**பதில் :**

இது நீங்கள் அனர்த்தம் செய்துகொண்ட, பொருளற்றதாகச் செய்த விஷயம். ஏனெனில் பரிபூரணமான ஒரே சாரம், சத்து, (கடவுள்) எல்லாவற்றிலும் நிறைந்து இருக்கின்றதால் அது பிரவேசிப்பதோ அல்லது வெளிவருவதோ இயலாது. ஆனால் ஜீவன் புத்தியால் அஞ்ஞானியாக இருக்கும் வரையிலும் பரமாத்மாவை அடைய இயலாது. அதே புத்தியின் மூலம் அதற்கு ஞானம் உண்டாகும் பொழுது அந்த ஜீவன் பரமாத்மாவை அடைய முடியுமேயன்றி மற்றெவ்விதமாகவும் அல்ல. அதனால் பிரம்மம் தன்னுள் பிரவேசித்தது என்று ஜீவனுக்குத் தோன்றுகிறது. அதாவது எவ்வெப்பொழுதெல்லாம் எந்த எந்த ஜீவனுக்கு ஈசுவரனைப் பற்றிய ஞானம் உண்டாகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் அந்த அந்த ஜீவனுக்கு அதன் ஆத்மாவில் தான் அவ்வாறு உண்டாகிறது. அதனால் பிரவேசித்தவனும் பிரவேசிக்கப்படுகின்றவனும் வேறு வேறுதான் என்கிற விஷயம் இதிலிருந்து நிச்சயமாகத் தெளிவாகின்றது.

மேலும், ஒருவர் பிரவேசம் செய்கின்றவராகவும் மற்றவர் அடுத்தாற்போல பிரவேசிக்கின்றவராகவும் உள்ளனர். ஏனெனில், ''சரீரம் ப்ரவிஷ்டோ ஜீவ : ஜீவ மனு ப்ரவிஷ்ட ஈஷ்வரோऽஸ் தீ திகம்யதே''-இவ்விதம் பொருள் கொள்வதால்

மட்டுமே இந்த வாக்கியத்தின் உண்மையான பொருள் விளங்கும். கிம்வா ஸஹார்த்தத்தில் த்ருதீய விபக்தி உள்ளது. "அனேன ஜீவாத்மனா ஷரீரம் ப்ரவிஷ்டேன ஸஹ தம் ஜீவ மனுப்ரவிஷ் யாஹ மீஷ்வரோ நாமரூபே வ்யாகர வாணீத்யன்வய."

இதற்குப் பிரமாணம்:- "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வருஷம் ப்ரிஷஸ்வஜாதே" (ரிக் 1. 164.20)- இங்கு ஒரு உடலில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இருத்தலும், அவ்விரண்டிற்குமுள்ள தொடர்பும் கூறப்படுகின்றது. இதிலிருந்து ஜீவனும் ஈசுவரனும் ஒன்றெனக்கொள்வது காட்டுமிராண்டிகளின் கதையே அன்றி, ரிஷி-முனி-வித்வான்களின் வாக்கியம் ஆகாது.

இறைவன் தன் திறமையால் உலகைப் படைத்திருக்கின்றான். இதற்கு ஆதாரம் :-

"த்வமஸ்ய பாரே ரஜஸோ வ்யோமன : ஸ்வபூத்யோஜா அவஸே த்ருஷன் மன:

சக்ருஷம் பூமிம் ப்ரதிமான மோ ஜஸோsப : ஸ்வ : பரிபூரேஷ்யாதிவம்."

**பொருள்:**

பரமேசுவரா, உன்னுடைய சொந்தத் திறமையாலும் (ஓஜ:) எல்லையற்ற வல்லமையாலும் பூமி, ஜலம், ஸ்வர்க்கம், திவ எனப்படும் பூமி முதல் சூர்யன் வரை உள்ள எல்லா உலகங்களையும் நீ படைத்திருக்கின்றாய். காத்தல், தாங்குதல், அழித்தல் ஆகியவற்றையும் நீயே இயற்றுகின்றாய்.

"ந யஸ்ய த்யாவாப்ருதிவீ அனுவ்யசோ ந ஸிந்தவோ ரஜஸோ அந்தமானஷு:

நோத ஸ்வ வ்ருஷ்டிம் மதே அஸ்ய யுத்யத ஏகோ அன்யச்சக்ருஷே விஷ்மானுஷக்-(2) (ரிக் 1.4.14.4)

**பொருள் :**

பரமேசுவரா, ஆதாரமற்று நிற்கும் இவ்வுலகங்கள் யாவும் உன்னைப் பின்பற்றி, உன்னால் இயற்றப்பட்டு தாங்கவும்படுகின்றதால் தான் நிலைத்து இருக்கின்றன. அவை உன்னிலிருந்து வேறுபட்டவை. உன்னைப் போன்றவையும் அல்ல. ஏனெனில் "அன்யத் விஷ்வம் ஸ்வஸ்மாத் பின்னம் த்வம் சக்ருஷே

க்ருதவானஸி''-இவ்வுலக முழுவதையும் நீ உன்னிலிருந்து வேறுபட்டதாக, வேறுவேறான பொருட்களின் உருவில் இயற்றியிருக்கின்றாய். இவ்வுலகின் உருவமாக நீ இல்லை.

மேலும்,

''அணோரணீயான் மஹதோ மஹீயானாத்மாஸ்ய ஐந்தோர் நிஹிதோ குஹாயாம் |

தமக்ரது : பஷ்யதி வீத ஷோகோ தாது : ப்ரஸாதான் மஹிமான மாத்மன : *(3) (கடோ. 2.20)*

-சூட்சுமத்திலும் சூட்சுமமான, பெரிதினும் பெரிய பரமாத்மா இந்த ஜீவனுடைய ஞானத்தில், அதாவது ஜீவனில் இருக்கின்றது. ஆனால் அந்த சர்வாத்மாவை, பெருமையற்றதும், சோகம் முதலிய குறைகளற்றதும் பரமாத்மாவின் கிருபைக்குப் பாத்திரமானதுமாகிய ஜீவன் ஞானத்தால் காண்கிறது. அந்த ஆத்மாவின் அந்தர்யாமியாக விளங்கும் பரமாத்மாவின் மகிமை, எல்லாம் வல்ல தன்மை, எங்கும் நிறைந்துள்ள தன்மை முதலிய குணங்களையும் கூட அது காண்கிறது : பிற அல்ல.

இதனினும் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் உள்ள வேற்றுமை நிரூபிக்கப் பட்டது.

''நித்யோ நித்யானாம் சேதனஷ் சேதனானாமேகோ பஹூனாம் யோ விததாதி காமான் ;

தமாத்மஸ்தம் யோனுபஷ்யந்தி தீராஸ்தேஷாம் சாந்தி: சாஸ்வதீ னேதரேஷாம்.-*(4) (கட 3.15)*

-அன்றியும் எவர் பரமனை ஜீவன், இயற்கை இவற்றிடையே நித்தியமெனவும் சேதனமான ஜீவனை அவற்றின் மத்தியில் சேதனமாகவும் எண்ணற்ற ஜீவர்கள் முதலான பொருட்களிடையே அவனை ஒரே ஒருவனாகவும், பூமி முதலியன தொடங்கி ஸ்வர்கம் வரையுள்ள பொருட்களை இயற்றி அறிவு பூர்வமாக அவை யாவற்றினுடையவும் தொழில் முறைகளை அமைத்து அளித்தவனாகவும் ஏற்று, அப்பரமாத்மாவைத் தம் ஆத்மாவிலும் காண்கின்றாரோ அந்த ஜீவருக்கே நிரந்தரமான, முடிவற்ற, சாந்தி, சுகம் கிடைக்கிறது. பிறருக்கு அல்ல.

இதனிலும் "ஆத்மஸ்த" சொல் காணப்படுவதால் ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் இடையே உள்ள வியாபகவியாப்பிய (பரவியுள்ள-பரவப்பட்டிருக்கின்ற), அந்தர்யாமீ-அந்தர்யாம்ய (உள்நிறைந்து ஒளிர்கின்ற-அவ்வாறு ஒளிமயமாக்கப் படுகின்ற) தொடர்பு இருப்பதால், ஜீவனும் பிரம்மமும் ஒருபொழுதும் ஒன்றென ஆகாது.

**வியாச சூத்திரம் :**

*1) நேதரோ஽னுபபத்தே :. (1.1.16)*

*பிற ஜீவர்களால் உலக சிருஷ்டி என்ற முயற்சியில் ஈடுபட முடியாது.*

*2) பேத வ்யபதே ஷாச்ச. (1-1-17) பிரம்மமும் ஜீவனும் இரண்டும் வேறுவேறுதான்.*

*3) முக்தோப ஸ்ருத்ய வ்யபதே சாத். (1.3.2.) வீடுபேறு பெற்ற ஜீவன் பிரம்மத்தை அடைந்து ஆனந்தமாக இருக்கிறது.*

*4) ப்ராண ப்ருச்ச (1.3.4.)*

*பிராணன் உடையதாகிய ஜீவன் உலகின் காரணமன்று (உலகியற்றியதன்று)*

*5) விசேஷண பேதவ்யபதே ஷாப்யாம் நேதரௌ (1.2.22.)*

விசேஷமான திவ்வியத் தன்மை, எல்லா மறிந்த தன்மை முதலிய வேறுபாடுகள் இருப்பதால் பரமாத்மாவானது ஜீவனிலிருந்தும், இயற்கை முதலியவற்றினின்றும் விலகி வேறாக நிற்கின்றது.

இதிலிருந்து ஜீவனும், இயற்கையும் உலகின் காரணப் பொருள் அல்ல என்றாகிறது. ஜீவனும் பிரம்மமும் வேறல்ல எனின் அவை உலகின் காரணமாக இருப்பதில் எதிர்ப்பு உண்டாகாது. அன்றியும், ஜீவனும் பிரம்மமும் ஒன்றெனில் அதனை மறுக்கவும் இயலாது. இவ்விதமாக வியாசருடைய சாரீரக சூத்திரங் களிலிருந்தும் தெளிவாகப்புலனாவது ஜீவனும் பிரம்மமும் ஒன்றல்ல, அவை வேறு வேறு என்னும் விஷயம்.

மேலும், நவீன வேதாந்திகள் பஞ்சீகரணம் என்கிற ஒரு கற்பனையையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் பொருந்தாக் கூற்றேயாகும். ஏனெனில்,

ஆகாயத்தை பஞ்சீகரணமாகப் பிரிப்பதோ அல்லது சேர்ப்பதோ இயலாது என்று, த்ரிவ்ருத் கரண சாந்தோக்ய உபநிஷத்தில் எழுதியிருக்கின்றது.

நவீன வேதாந்திகளின் பிரசாரத்தால் மனிதர்களுடைய சுகம் முதலியவற்றிற்கு மிகவும் தீங்கு உண்டாகிறது. ஏனெனில் அவர்களிடம் இரண்டு பெரும் குறைகள் உண்டு ஒன்று, உலகை மாயை (பொய்) என்று கருதுவது : மற்றது ஜீவனும் பிரம்மமும் ஒன்றே எனக் கொள்வது.

உலகைப் பொய் எனக் கொள்ள இவர்கள் கூறும் சங்கதி, இந்த உலகம் களவுக்குச் சமமாகும் என்பதாம். எது கிடைத்திருக்கிறதோ, எதனுடைய காரணம் சத்தியமோ அதனைப் பொய்யென்று கூறுவோரின் வார்த்தையே பொய்யானது. கனவு கூட, கண்ட, கேட்டவிஷயங்களின் விளைவாக உண்டாகிறது. கண்ட, கேட்ட (அல்லது காணப்பட்ட, கேட்கப்பட்ட) விஷயத்தின் பண்பு அல்லது படிமம் நேரடி அனுபவமின்றி சொப்பனமாகாது. எல்லாமறிந்தவனும், எவ்விதமான நிலைகளோ பாதிப்புகளோ இல்லாமலிருப்பவனுமாதலின் பரமாத்மாவுக்குக் கனவே உண்டாவதில்லை.

ஜீவன் பிரம்மம் எனின், பிரம்மமானது எண்ணற்ற சிருஷ்டி செய்திருக்கின்றது. அதுபோல ஒரு கொசுவையோ அல்லது ஈயையோ படைக்க ஜீவனால் ஏன் முடியவில்லை? எனவே உலகைப் பொய்யெனவும், ஜீவனும் பிரம்மமும் ஒன்றெனவும் கொள்வதே பொய்யாகும். உலகைப் பொய் என்பதால், உலகினரின் உயர்வு, அவர்தம்முள் அன்பு, கல்வியறிவு முதலிய குணங்களைப் பெறுதலாகிய முயற்சியும் ஆர்வமும் மிகவும் குறைந்து போய் உலகினரின் உயர்வுக்கான உத்தமச் செயல்கள் எத்தனை உள்ளனவோ அவை அனைத்தும் அழிந்து ஒழிந்து போகின்றன.

ஜீவனையும் பிரம்மத்தையும் ஒன்றாகக் கொள்வதனால் பரமார்த்தம் எனப்படும் மறுமை முழுவதும் அழியும். ஏனெனில் பரமேசுவரனின் கட்டளைப் படி நடத்தலாலும், அவனை துதித்துப் பிரார்த்தனையும் உபாசனையும் செய்வதாலும் ஏற்படும் இன்பமும் முற்றிலும் விட்டு விலகிப் போவதனால் வெறும் போலிப் பெருமை, தன்னலத்திலேயே ஈடுபட்டிருத்தல், அநியாயம் செய்தல், பாவச் செயல்களில் ஈடுபடுதல், புலனிச்சைகளில் சிக்குவதால் மிக அதிகமான பாமரத்தன்மை=அறியாமை, அதனால் வீழ்ச்சி முதலிய குறைகளோடு,

தான் மனிதப்பிறவி எடுத்ததனால் இயற்றவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நான்கினுடையவும் பலனுமற்றுப்போய் உருவ வணக்கம் முதலான செயல்களைச் செய்வதாலும் அந்த ஜீவனுடைய பிறவியானது பயனற்றுப் போகிறது.

எனவே, உண்மைக் கல்வியறிவு முதலிய சிறந்த குணங்கள் உலகில் பரவச் செய்தல், இம்மை-மறுமைக்கான வாழ்வில் தூய்மை, உயர்நிலை பெறுதல் இவற்றுடன் வேதக் கல்வியறிவு முதலியன அளிக்கும் அழிவற்ற உண்மை நூல்களைக் கற்றலும் கற்பித்தலும், பல வேறுமொழிகளில் வேத முதலான உண்மை நூல்களின் உண்மைப் பொருளை வெளியிடல், உருவமற்ற ஒரே பரமாத்வை உபாசனை முதலியன செய்வதற்காக ஏற்பாடுகள் செய்தல், கலைகள்-தொழிற் திறமைகள் முதலியவற்றால் தத்தம் நாட்டு மக்கள் இன்பமுற வழி கோலுதல், தம்முன் அன்புடன் நடந்து கொள்ளல், பிடிவாதம்-பேராசை-தீய இச்சைகள் கொண்ட தீயோரின் தொடர்பை விட்டுவிடுதல், மேன் மக்களாகிய ஆடவர்-பெண்டிரின் சபைகளில் எல்லா மனிதர்களுக்கும் நன்மை-தீமை விளைவிக்கும் விஷயங்களைப்பற்றிச் சிந்தித்தல், கருத்துப்பரிமாற்றம் செய்தல், உண்மையான விவகாரங்கள் மூலம் முன்னேற்றமும் உயர்வும் பெறுதல்-இத்தகைய விஷயங்களே மனிதர்களின் அவசியமான கடமைகளாகும். இவையே மனிதவாழ்விற்கு ஏற்றவையாம். எல்லா எதிர்ப்புக்களையும் விடுத்து, இவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பதே எல்லா மேன்மக்களுக்கும் நம்முடைய வேண்டு கோளாகும். இதனை மேன்மக்கள் நிச்சயம் ஒப்புவர் என்பதே நம்முடைய முழு நம்பிக்கை.

எனவே, இது நிறைவேற எல்லாம் வல்லவனும், உலக முழுவதன் தந்தை-தாய்-அரசன்-துணைவன் ஆகவும் உள்ள பரமாத்மாவை நாம் மிகவும் பணிவுடன் பிரார்த்தனை செய்கின்றோம். அவன் எல்லா மனிதர்கள் மீதும் அருள் கூர்ந்து தீய வழியினின்றும் அவர்களை விலக்கி நல்வழியில் செலுத்துவானாக. அவனே நம் பரம குரு ஆவன்.

**-இவ்வாறு ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய தயானந்த ஸரஸ்வதி ஸ்வாமி அவர்களால் இயற்றப்பட்டதும், வேதமார்க்கத்திற்கு அனுகூலமான சான்றுகளும், துணைச் சான்றுகளும் கொண்டதுமான "வேதாந்தி த்வாந்த-**

**நிவாரணம்" எனப்படும் "வேதாந்தியின் மயக்கம் தீரட்டும்" எனும் நூல் முற்றுப்பெற்றது.**

................................

## ரிஷி தயானந்தர்

*கி.பி. 1824-ல் இன்றைய குஜராத் மாநிலத்தில் உள்ள மோர்வி-டங்காரா கிராமத்தில் கர்ஸன்ஜி திவாரி எனும் அந்தண நிலக்கிழாரின் அருமை மகனாகப் பிறந்து, மூலசங்கரர் எனப் பெயர் சூட்டப்பட்டுத் தீவிர சைவராக வளர்க்கப்பட்டவரே, பின்னாளில் ஆரிய சமாஜ நிறுவனர் ஸ்வாமி தயானந்த சரஸ்வதி என அழியாப் புகழ் பெற்றார் என்பது, வரலாறு கூறும் உண்மை. ஒரு சிவராத்திரி நாளன்று உருவ வழிபாட்டில் நம்பிக்கை இழந்து, உண்மையான அறிவை நாடி, சிறுவயதிலேயே துறவு பூண்டு, வீட்டைவிட்டு வெளியேறினார். வட மதுரையில் சுவாமி விரஜானந்தரிடம் பயின்று, தம் ஐயங்கள் அனைத்தும் நீங்கப் பெற்றார். குருவின் கட்டளைப்படி உண்மை இந்து சமயமாகிய வேத நெறியினைப் பரவச் செய்ய, நாடு நகரமெல்லாம் அலைந்து பல இடுக்கண் களையும் கடந்து, எதிர்ப்புகளைச் சந்தித்து வேதப் பிரச்சாரம் செய்தார். பலமுறை அவருடைய உயிருக்கு ஆபத்து நேரிட்டதெனினும், கலங்காமல் சூறாவளி போலத் தம்முடைய கொள்கைகளைப் பரப்பி வந்தார். 1875-ல் ஆரிய சமாஜத்தை அமைத்து, மீண்டும் இந்துக்களை வேத வழிக்குக் கொண்டுவரும் அரும் பெரும் பொறுப்பினை அதற்கு அளித்தார். 1883-ல் அவர் காலமாகும் வரை, இந்துக்களை சாதி (வகுப்பு) -மத-பழக்க வழக்கப் பிடிகளிலிருந்தும், மூட நம்பிக்கைகளி லிருந்தும் விடுவித்து, அவர்களை ஒரே சமயத்தவராக, சமுதாயத்தினராக ஆக்க அரும் பாடுபட்டார்.*

................................

*காயத்ரீ மகாமந்திரம்*

**ஓம் பூர்புவ : ஸ்வ : |**
**தத் ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி |**
**தியோ யோ ந: ப்ரசோதயாத் ||**

*(யஜுர் 36-3)*

ஓங்காரமான பொருளே! ஹே சச்சிதானந்த ஸ்வரூபா ! நீ எல்லா உலகிற்கும் ஆதாரமானவன். உயிரினங்களின் அன்பன். உயிரினும் அரியன். எங்கும் நிறைந்தவன், துயரில்லாதவன். நினைப்பவர் துயர்களையும், பிணிகளையும் நீக்கி நன்மையளிப்போன். விண்ணிறைந்தவன், அனைத்திற்கும் ஆதாரமாய் இருக்கும் பரமன். அண்டங்கள் யாவற்றையும் படைத்து எல்லாச் செல்வங்களையும், சுகங்களையும் அளிக்கும் ஒளியோன். நீயே எமது வணக்கத்திற்குரிய தூயோன். தூய வடிவோனாய்ப் பிறரையும் தூயவனாக்கும் பரம்பொருள். அத்தகைய உன் புனிதத் தன்மையை நாம் தியானிப்போமாக! அந்த ஒரே தேவனான நீ, எங்கள் அறிவை தீவினையினின்று விலக்கி தூய்மைப்படுத்தி ஒளியுறுத்தி நன்கு நடத்துவாயாக!

-------

# பிற்சேர்க்கை

# துறவியின் தகுதிகள் - கடமைகள்

**வேதங்கள் கூறுவதைக் காண்போம்:-**

1) ஓம் வாஸீமந்த ருஷ்டிமந்தோ மனீஷிண: ஸுதன்வான் இஷுமந்தோ நிஷங்கின : |
ஸ்வஸ்வா : ஸ்த ஸுரதா ப்ருஷ்னிமாதர : ஸ்வாயுதா மருதோ யாதனா ஷுபம் || (ரிக் 5-57-2)

*பொருள் :- (மருத:) புலனடக்கமுள்ள (வாஷிமந்த:) இனிமையாக பேசுபவரும் (ருஷ்டிமந்த:) ஞானத்தின் பாதையில் திடமானவரும் (மனீஷிண:) வேத முறையைக் கடைபிடிப்பவரும், மற்றவர்களை அதில் ஊக்குவிப்பவரும் (ஸுதன்வான்) தீயோர்களை ஆன்மீகத்தில் கொண்டு செல்பவரும் (இஷுமந்த:) ஆன்ம பலத்தால் உயர்ந்தவரும் (நிஷங்கின:) உலகியல் ஆசையில் பற்றற்றவரும் (ஸ்வஷ்வா:) வேதங்களைக் கற்பிக்க ஆசாரியர்களை நியமிப்பவரும் (ஸுரதா) எல்லாவிதமான வலிமையும் ஆரோக்கியமும் உடையவரும் (ப்ருஷ்னி மாதர:) உலகத்தை தாய் போல் காப்பவரும் அதாவது உலகனைத்தையும் தன் குடும்பமாகக் கருதுபவரும் (ஸ்வாயுதா) தன் சாமர்த்தியத்தாலும், ஒழுக்கத்தாலும் உயர்ந்து விளங்குபவரும் மற்றவர்களை சார்ந்திராதவரும் (யாதனா ஷுபம்) ஆன்மீகத்தின் உன்னத குறிக்கோளான வீடுபேற்றை அடைய தகுதியுள்ளவராவார்.*

2) ஓம் யத் தேவா யதயோ யதா புவநாந்யபின்வத|
அத்ரா ஸமுத்ர ஆ கூட்டமா ஸூர்ய்யமஜபர்த்த ந||
(ரிக் 10-72-7)

*பொருள் :- (தேவா:) அங்க உபாங்களுடன் சிக்ஷா முதல் வேதம் வரை கற்ற முற்றறிஞர்களே! (யதய:) துறவியான நீங்கள் (யதா) எவ்விதம் (அத்ர ஸமுத்ரே) இந்த ஆகாயத்தில் (கூடம்) சூட்சுமமானவரும் (ஆஸூர்யம்) இயல்பாகவே பிரகாச குணமுடையவரும், சூரியன் முதலியவற்றை பிரகாசிக்க செய்யும் இறைவனை (ஆ அஜபர்த்தன்) தன் ஆத்மாவில் நாற்புறத்திலிருந்து அனுபவித்து ஆனந்தம் அடைவது போல (யத் புவனானி) பூமியிலுள்ள இல்லறத்தார்களுக்கு*

*(அபின்வத) கல்வி ஞானம் மற்றும் உபதேசத்தால் நல்வழி காட்டுவீர்களாக. இதுவே துறவியின் மேன்மையான கடமையாகும்.*

3) ஓம் பத்ரமிச்சந்த ருஷ்ய: ஸ்வர்விதஸ்தபோ தீக்ஷாமுப
நிஷேதுரக்ரே |
ததோ ராஷ்ட்ரம் வலமோஜஷ்ச ஜாத ததஸ்மை தேவா
உப ஸம் நமந்து || (அதர்வம் 19-41-1)

*பொருள்:- அறிஞர்களே! (ருஷய:) சிக்ஷா முதல் வேதங்கள் வரை அங்க உபாங்கங்களுடன் கற்றுணர்ந்து (ஸ்வர்வித:) இன்பத்தை அடைந்து (அக்ரே தப:) விதிமுறைகளை முழுமையாக கடைபிடிப்பதன் மூலம், விதிமுறைப்படி தன் திடத்தன்மையால் முதல் ஆசிரமான பிரம்மசரியத்தை அடைந்து (பத்ரம் இச்சந்த:) நன்மையின் விருப்பத்துடன் (தீக்ஷாம்) துறவறத்தை (உபநிஷது:) பிரம்மசரியத்திலிருந்தே அடைந்தவரையே (தேவா:) அறிஞர்கள் (உபஸந்மைந்து) முறைப்படி மரியாதை செய்யவும். (தத:) அதன் பிறகு (ராஷ்ட்ரம் பலம்) நாடு, வலிமை (ச) மேலும் (ஜாதம்) பராக்கிரமம் உண்டாகும். (தத்) அதன் மூலம் (அஸ்மை) இத்துறவறத்தை கடைபிடிக்க முயற்சி செய்யவும்.*

4) ஓம் அந்ருணா அஸ்மின்னா ந்ருணா: பரஸ்மின் த்ருதீயே
லோகே அந்ருணா: ஸ்யாம |
யே தேவயானா: பித்ருயானாஸ்ச லோகா: ஸர்வான் பதோ
அந்ருணா ஆக்ஷியேம || (அதர்வம் 6-117-3)

*பொருள்:-(அஸ்மின்) பிரம்மசரியம் என்னும் முதல் நிலையில் (அந்ருணா:) தவம் மற்றும் வேதம் முதலிய அனைத்து சாஸ்திரங்களையும் கற்பதின் மூலம் பாவமென்னும் ருணத்திலிருந்து கடனிலிருந்து விடுபட்டு (பரஸ்மின்) இல்லறம் என்னும் இரண்டாவது நிலையில் (அந்ருணா:) பஞ்ச மஹா யக்ஞங்களைச் செய்வதின் மூலம் பாவமென்னும் ருணத்திலிருந்து விடுபட்டு (த்ருதீயே) வானப்பிரஸ்தம் என்னும் மூன்றாவது நிலையில் (அந்ருணா:) தவம் மற்றும் வேதம் முதலிய சாஸ்திரங்களைக் கற்பிப்பதன் மூலம் பாமென்னும் ருணத்திலிருந்து விடுபட்டு (ஸர்வான் பத: ஆக்ஷியேம) நாம் மேற்கூறிய வழிகளைக் கடந்து (யே லோகா: தேவயானா:) எவை எல்லாம் வேதஞானத்தால் பிரகாசித்து ஆன்மீகத்தை அடைய உதவுமோ (ச) மேலும் (பித்ருயானா:)*

பித்ருக்களின் (உயிருடன் இருக்கும் தாய், தந்தை, ஆசாரியர்) சேவையின் மூலம் (அந்ருணா:) பாவமென்னும் ருணங்களிலிருந்து மீண்டும் விடுபட்டவர்களாக இருப்போமாக. இம்மூன்று பாவமென்னும் ருணங்களிலிருந்து விடுபட்டவரே துறவறத்திற்குத் தகுதியானவர்.

5) ஓம் ஏஷ வா அதிதிர்யச் ச்ரோத்ரியஸ்தஸ்மாத்
பூர்வோ நாஷ்நீயாத் (அதர்வம் 9-6-37)

பொருள்:- (யச்ச்ரோத்ரியா:) நான்கு வேதங்களையும் நன்கு கற்றறிந்த துறவியானவர் எவரோ (ஏஷா வை அதிதி:) அவரை விருந்தாளியாக ஏற்று (தஸ்மாத் பூர்வா:) அவருக்கு உணவளிக்காமல் (நாஸ்னீயாத்) இல்லறத்தார் உண்ணக்கூடாது.

6) யஸ்விகேத ஸ ஸுக்ரத்துர் தேவக்ரா ஸ வ்ரவீது ந:|
வருணோ யஸ்ய தர்ஷதோ மித்ரோ வா வந்தே கிர:||
(ரிக் 5-65-1)

பொருள்:-(சிகேத) ஞானமுள்ளவர் (ஸுக்ரது:) நற்கர்மங்களைச் செய்பவர் (யஸ்ய) எவருக்காக (வருண:) மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இறைவனை (தர்சத:) அறிவதற்கு ஏற்றதான (வா) மேலும் (யஸ்ய ஜிர:) எவருடைய சொற்பொழிவு (மித்ர: வன்தே) இறைவன் அனைவரின் நண்பனாக ஏற்றுக்கொள்ளும் (வ்ரவீது ந:) எங்களிடம் உரையாடவும் (தேவத்ர:) ஞானத்தை பெறுவதற்காக தர்மத்தின் சபையில் ஒன்று கூடியவர் (ய:) எவரோ (ஸ:) அவரே துறவி.

7) ஓம் ருதம் வதன்ந்ருதத்யும்ன ஸத்யம் வதந்த் ஸத்யகர்மன் |
ஷ்ரத்தாம் வதந்த்ஸோம ராஜும் தாத்ரா ஸோம பரிஷ்க்ருத
இந்த்ராயேந்தோ பரிஸ்ரவ || (ரிக் 9-113-4)

பொருள்:- (ஸோம) அமைதியான ஒழுக்கமான துறவி! (ரிதம்த்யும்ன) ஆன்மீக ஞானத்தில் மேன்மையான மற்றும் சிறந்த (வதன்ருதம்) வேத ஞானத்தையும் சித்தாந்தத்தையும் பரப்புவோர் (சத்யகர்மன்) சத்திய வழியில் நிற்போர் (வதன்ஸத்யம்) உண்மையைப் பரப்புபவர் (ஸோம ராஜம்) கடவுள் பக்தியுடன் கூடிய அறிவுடையவர் (வதன் ஸ்ரத்தாம்) கடவுள் மற்றும்

உண்மையின் நம்பிக்கையைப் பரப்புபவர் (பரிஷ்க்ருத் தாத்ரா) இறைவனால் தூய்மை அடைந்த, உலகத்தில் உள்ள அனைவருக்கும் அடைக்கலமாகத் திகழ்பவர் (இந்த்ரோ) இரக்கமும் கருணையும் உள்ள துறவி (இந்த்ராய) ஆன்மீக மேன்மைக்காகவும், எல்லாம் வல்ல இறைவனை அறிவதற்காகவும் (பரிஷ்ரவ) இடம்விட்டு இடம் செல்வீராக.

8) ஓம் ஆ பவஸ்வ திஷாம் பத ஆர்ஜீகாத் ஸோம மீட்வ:|
ருதவாகேன ஸ்த்யேன ஷ்ரத்தயா தபஸா ஸுத
இந்த்ரோயயேந்தோ பரிஸ்ரவ || (ரிக் 9-113-2)

பொருள்:- (ஸோம) மென்மையான, கருணை-இரக்க குணத்தை உடைய, அனைவரின் அந்தக்கரணத்தை சத்தியத்தின் மூலம் ஈர்ப்பவர் (திஷாம் பதே) அனைத்து திசைகளிலும் உள்ள மனிதர்களுக்கு சத்திய ஞானத்தை உபதேசித்து காப்பவர், (இந்தோ) புலனடக்கம் முதலிய குணங்களை உடைய துறவியே! நீங்கள் (ருதவாகேன) உள்ளதை உள்ளபடியே உரைப்பதின் மூலம் (ஸத்யேன ஸ்ரத்தயா) நேர்மையாக தன் விருப்பத்துடன் உண்மையை கடைபிடிப்பதின் மூலம் (தபஸா) பிராணாயாமம், யோகப்பயிற்சியின் மூலம் (ஆர்ஜீகாத்) எளிமையாக (ஸுத:) துறவறத்தை கடைபிடித்தவாறு தன் உடல், புலன், மனம், புத்தி ஆகியவற்றை (ஆபவஸ்வ) தூய்மை செய்வீராக. (இந்த்ராய) சகல ஐசுவரியமுடைய இறைவனை அடைவதற்காக (பரிஸ்ரவ) ஓரிடத்திலேயே வசிக்காமல் நாற்புறமும் சென்றவாறு இருப்பீராக.

9) ஓம் யத்ர ப்ரஹ்மா பவமான சந்தஸ்யாம் வாசம் வதன் |
க்ராவ்ணா ஸோம மஹீயதே ஸோமேனாந்த
ஜனயன்னிந்த்ராயேந்தோ பரிஸ்ரவ || (ரிக் 9-113-6)

பொருள்:- (சந்தஸ்யாம்) சுதந்தரமான (வாசம்வதன்) வாணியை கூறியவாறு (ஸோமேன) வேதஞானம், யோகத்தின் மூலம் (ஆனந்தம் ஜனயன்) அனைவருக்காக ஆனந்தத்தை வெளிப்படுத்தியவாறு (இந்தோ) ஆனந்தத்தை கொடுக்கவல்ல (பவமான) தூய்மையான ஆன்மாவாக விளங்கும், மற்றவர்களைத் தூய்மைப்படுத்தவல்ல துறவியே! (யத்ர ஸோமே) பரம ஐசுவரியமுடைய எவ்விறைவனில் (பிரஹ்மா) நான்கு வேதங்களையும் அறிந்த அறிஞர் (மஹீயதே) மேன்மையை அடைந்து, புகழை அடைகின்றனர். (க்ராவ்ணா) எவ்விதம்

மேகத்தின் மூலம் அனைத்து உலகமும் ஆனந்தம் அடைகிறதோ அவ்விதமே நீங்கள் அனைவருக்கும் (இந்த்ராய) பரம ஐசுவரியமுடைய வீடுபேற்றின் ஆனந்தத்தை கொடுப்பதற்காக உணவு, உடை, இருப்பிடம் முதலிய அனைத்து சாதனங்களை (பரிஸ்ரவ) எல்லா வழிமுறைகளிலும் அடைவிப்பீராக.

*உபநிஷதங்களின் கருத்து :-*

1) அவித்யாயாமந்தரே வர்த்தமானா: ஸ்வயம் தீரா:
பண்டிதம்மண்யமானா:|
ஜங்கன்யமானா : பரியந்தி மூடா அந்தைநைவ
நீயமானா யதாந்தா: || (முண்டகோபநிஷத் 1-2-8)

*பொருள் :- அஞ்ஞானத்தில் விளையாடிக் கொண்டிருப்பவர்கள் தன்னையே குருமார்-சாமியார்-அறிவாளிகள் என்று கருதுபவர்கள், குருடர்களை வழி நடத்தும் குருடன், தன்னுடன் சேர்ந்த அனைவரையும் துர்கதியை அடைவிப்பது போல, இம்மூடர்களும் தாழ்ந்து துக்கத்தை அடைகின்றனர்.*

2) வேதாந்த விக்ஞான ஸுஷ்சிதார்தா: ஸந்யாஸயோகாத்யதய:
ஸுத்தஸத்வா:|
தே ப்ரஹ்மலோகேஷு பராந்தகாலே பராம்ருதா:
பரிமுச்யந்தி ஸர்வே || (முண்டகோபநிஷத் 3-2-6)

*பொருள்:- வேதாந்தம் அதாவது இறைவன் உபதேசித்த வேதமந்திரங்களின் ஞானத்தை பொருளறிவுடன் உணர்ந்து, தன் நடத்தையை நன்றாகத் தீர்மானித்து, சந்யாச யோகத்தின் மூலம் அனைத்தையும் துறந்து, தூய்மையான அந்தக்கரணத்துடன் துறவியானவர் இருந்து, சுத்த முக்தனாய் நீண்ட காலம் ஆனந்தம் அனுபவித்து, முக்தியின்பம் நிறைவேறியதும், இவ்வுலகிற்குத் திரும்பவும் வருகிறார். முக்தியின்றி துன்பம் நீங்காது.*

*துறவிகள் உலகப் புகழாசை, தன இலாபம், செல்வ போகம், கௌரவம், புத்திர மோகம் இவற்றை விட்டு, பிச்சையெடுத்துண்டு, இரவும் பகலும் மோக்ஷ சாதனத்திலேயே தத்பரராகுகிறார்கள்.*

*(ப்ருஹதாரண்யகத்தில் 5-1, சதபதம் 14-5-2-1).*

மனுஸ்ம்ருதி:-

1)இந்த்ரியானாம் நிரோதேன ராகத்வேஷக்ஷயேண ச
அஹிம்ஸயா ச பூதானாமம்ருதத்வாய கல்பதே
(மனுஸ்ம்ருதி அத்-6, சுலோகம்-52)

*பொருள்:- புலன்களை அடக்கி, விருப்பு வெறுப்புக்களைப் போக்கி, எவ்வுயிரும் தன்னுயிர் போலக் கருதி, அஹிம்ஸா விரதம் பூண்டு, துறவியானவர் பேரின்பமளிக்கும் மோட்சம் பெற முயல்க.*

2) தூஷிதோSபி சரேத்தர்மம் யத்ர தத்ராஸ்ரமே ரத: |
ஸம: ஸர்வேஷு பூதேஷு ந லிங்க தர்மகாரணம் ||
(மனுஸ்ம்ருதி அத்-6, சுலோகம்-60)

*பொருள்:- இசை வசைகளால் மாறுபடாமல் துறவறம் பூண்டவர், தனக்குரிய தர்மத்தை நிறைவேற்றுக. ஓரகமின்றி எல்லா உயிர்களிடமும் அன்பு பேணி, தானுந் தர்மாத்மாவாய் மாந்தரையும் தர்மாத்மாக்களாக்கவே துறவி பாடுபட வேண்டும். வெறும் தண்டு, கமண்டலம், காஷாயம் பூண்பதே துறவறமன்று. எல்லோருக்கும் தர்மோபதேசஞ் செய்து, கல்வி தானமும் செய்து மனித ஜாதியை உயர்த்தலே துறவியின் கடமையாகும்.*

*இதனையே திருவள்ளுவரும்,*

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்." - என்று கூறுகிறார்.

*மேற்கூறியவற்றிலிருந்து துறவியானவர், நான்கு வேதங்களையும் பொருளுடன் கற்றறிந்தவராகவும், மற்ற சாஸ்திர நூல்கள் அனைத்திலும் புலமை பெற்றவராகவும், யோகத்தில் திறமையுள்ளவராகவும், தவவொழுக்கத்தில் பூரணமானவராகவும் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் இன்றோ பலர் தங்களை துறவிகள் என்று அழைத்துக் கொண்டு ஒரு வேதமும் கற்றுணராமல், யோகமும் தவவொழுக்கமும் இன்றி, தாமும் கெட்டு மக்களையும் மயக்கி மூடத்தனத்தில் ஆழ்த்துகின்றனர்.*

# முப்மதப் பட்டிமன்றம்



—Swami Dayanand Saraswati
மகரிஷி தயானந்த சரஸ்வதி

சென்னை ஆர்ய சமாஜம் (சென்ட்ரல்) வெளியீடு

ஓம்

# மும்மதப் பட்டிமன்றம்

## (சத்ய தருமப் பிரசாரம்)

ஆர்ய சமாஜ ஸ்தாபகர் **மகரிஷி தயானந்த சரஸ்வதியார்**
**மௌலவி முகம்மது காசிம்** அவர்களுடனும்
**ரெவரண்ட் ஸ்காட் பாதிரியார்** அவர்களுடனும்
பொது மேடையில் நடத்திய தர்க்கவாத விவரம்

1st Edition 1987
2nd Edition 1991
3rd Edition 1995
4th Edition 2014

காலம் சென்ற **R.B. ரத்தன் லால்** அவர்களின்
ஆங்கில மொழி பெயர்ப்பினின்றும்
தமிழாக்கம்

**K. வேலாயுத ஆர்ய**

# நன்றி அறிவிப்பு

இன்றைய உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சாந்தாபூரில் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயத்தலைவர்களுடன் ஆர்ய சமாஜ ஸ்தாபகர் மகரிஷி தயானந்த சரஸ்வதி அவர்கள் நடத்திய விவாதம் சத்ய தர்ம பிரசாரம் அல்லது சாந்தாபூர் பட்டிமன்றம் என்ற பெயரில் சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவம், அதன் முழு விவரத்தை ஒரு சிறு நூலாக என ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது ஆஜ்மீர் பரோபகாரிணி சபை. சபையாரின் அனுமதியுடன் இந்நூல் முதன் முறையாகத் தமிழில் வெளிவருகிறது. சபையாருக்கு சென்னை ஆர்ய சமாஜத்தின் நன்றி உரியதாகும்.

ஆர்யசமாஜம் (சென்ட்ரல்)

சென்னை.

ஓம்

# 2. மும்மதப் பட்டிமன்றம்

*(சத்ய தருமப் பிரசாரம்)*

*சாந்தாபூர் உத்தரப்பிரதேச மாநிலம் ஷாஜகான்பூர் ஜில்லாவில் உள்ளது. அவ்வூரைச் சார்ந்த முன்ஷி பியாரே லால் எனும் நிலக்கிழார் உண்மைச் சமயம் பற்றிய அறிவு மக்களுக்கு உண்டாக வேண்டுமென விரும்பி, ஜில்லா கலெக்டரின் அனுமதியுடன் ஒரு சமய விழா எடுக்க முடிவு செய்து பல சமயத்தவர்களையும் பங்கு கொள்ள அழைத்தார். அந்நாளில் புகழ் பெற்ற கிறிஸ்துவ, இஸ்லாமிய, இந்து சமய அறிஞர்கள் அதனால் பங்கு கொள்ள முன்வந்தனர். சமய விழாவின் முதல் கூட்டம் 19 மார்ச் 1877 அன்று நடைபெறும் என அச்சிட்ட அறிக்கைகள் பொது மக்களிடையே வினியோகிக்கப்பட்டன. நட்புறவுடன் சம்பாஷணை-வாதம் செய்து அறிஞர்கள் சமயங்களின் உண்மையை வெளியிட வேண்டுமென்பதே விழாவின் நோக்கம். மேற்கூறிய சமயக் கோட்பாடுகளை எல்லா மேன்மக்களும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இந்நூல் வெளியிடப்படுகிறது. எல்லாச் சமயங்களையும் சார்ந்த மேன்மக்கள் இச்சமய விவாதங்களைப் பாரபட்சமின்றிப் படித்து உண்மையைத் தெளிந்து தேறல் சிறந்ததாகும்.*

*(அறிக்கை வெளியான பின்னர் சமய விழாவில் பங்கேற்க பல அறிஞர்கள் வந்தனர். முதலாவதாக வந்தவர் புகழ்பெற்ற வேத வித்தகரும், ஆர்ய சமாஜ ஸ்தாபகருமான சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள். அவருடன் வந்தவர் முன்ஷி இந்த்ர மணி எனும் அறிஞர். முன்ஷி அவர்கள் தீவிர முஸ்லீம் மத எதிர்ப்பாளர். மொரதாபாத் (உ.பி) நகரைச் சேர்ந்தவர். பாரசீகம், அராபிய மொழிகளில் மெத்தப் புலமை வாய்ந்தவர் என்பதுடன் குரான்-ஹதீஸ் நூல்களையும் நன்கு விமரிசனம் செய்யக் கூடிய அளவுக்குக் கற்றவர். சமய விஷயங்களில் ஈடுபாடு கொண்ட இவ்விரு பெரியோர்களும் சாந்தாபூருக்கு 1877 மார்ச் 15-ம் நாளன்று வந்து சேர்ந்தனர். பட்டிமன்ற நாளான 19-ஆம் தேதியன்று புகழ் பெற்ற*

கிறிஸ்துவசமய அறிஞரான ரெவரெண்ட் டி.ஜி. ஸ்காட் அவர்கள், ரெவ. நோபல், ரெவ.பார்க்கர், ரெவ. ஜான் தாம்சன் எனும் பாதிரியார்களுடனும், பரேலி, கான்பூர், மொரதாபாத், ஷாஜகான்பூர் நகர்களைச் சேர்ந்த வேறு பல கிறிஸ்துவ அறிஞர்களுடனும் வந்து சேர்ந்தார். ஸ்காட் அவர்கள் பெரும் அறிஞர்-தர்க்கத் திறமை வாய்ந்தவர், பைபிள் பற்றிய விளக்க நூலும், அநேக சிறு நூல்களும் வெளியிட்டவர். முகம்மதியர்களின் சார்பாக அதே நாளில், அதே நேரத்தில் தேவபக்த் (இஸ்லாமிய சமய) கல்லூரி முதல்வரும், தர்க்கம் பற்றி மிகச் சுவையான நூல் ஒன்று எழுதிய வருமான மௌலவி முகம்மது காஸிம் அவர்களும் வந்து சேர்ந்தார். இப்பெரியார் தலைமை வகித்த ஸ்தாபனம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த புகழ்பெற்ற அராபிய மடம் ஆகும். மவுலவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கினவர் இவர். இவருடன் வந்தவர்களுள் முக்கியமானவர் டில்லியைச் சேர்ந்த சையத் அப்துல் மன்ஸூர் அவர்கள். இவர் கிறிஸ்துவத்தை எதிர்த்து “ஜிந்தா ஜவேத்” எனும் நூல் இயற்றியவர்; இலக்கியப் பட்டிமன்றங்களில் முதன்மையாக நின்றவர்; தம்முடைய புலமைக்காக துருக்கி சுல்தானிடமிருந்து பாராட்டுப் பத்திரம் பெற்றவர். - மூல மொழி பெயர்ப்பாளர்.

இந்த சமய விழா இரண்டு நாள் நடைபெற்றது. விழா ஆரம்பமாகுமுன் பலர் சுவாமி தயானந்தரை அணுகி ஆர்யர்களும் (இந்துக்களும்) முஸ்லிம்களும் கூட்டணி அமைத்து கிறிஸ்தவர்களை விமர்சனம் செய்வது சிறப்பாக இருக்குமென்று கருத்து தெரிவித்தனர். ஆனால் சுவாமி தயானந்தர் அதற்கு இணங்கவில்லை. எந்த சமயம் உண்மையானது, எது பொய் என்பதை அறிந்து கொள்ளவே சமய விழா நடக்கிறது என்றும், எவரேனும் ஒரு குழுவினரை விரோத மனப்பான்மையுடன் தாக்குவது மிகவும் தவறு என்றும், பாரபட்சமின்றி எல்லோரும் அன்புடன் உண்மையை அறிந்து கொள்ள முன் வருவதே நன்மை பயக்கும், நியாயமானதும், சரியானதும் ஆகும் என்று அவர் கூறிவிட்டார்.

பின்னர் விழாவின் கால அளவு பற்றி விவாதம் நடைபெற்றது. அறிக்கையில் இரண்டு நாள் என்று குறிப்பிட்டிருந்ததால் அதற்கு மேல் தங்குவதற்குத் தங்களால் இயலாது என்று கிறிஸ்துவப் பிரதிநிதிகள் சொன்னார்கள். விழா குறைந்தது ஐந்து நாள், அதிகபட்சம் எட்டு நாள் நடைபெறும் என்று தமக்கும் தம்முடன் வந்தவருக்கும் தெரிவிக்கப்பட்டதாகவும், இந்தக் கால அளவில் எல்லாச் சமய கோட்பாடுகளும் நன்கும், திருப்திகரமாகவும் எல்லோரும் தெரிந்து கொள்ள

இயலும் என்பதால் தாங்கள் இருவரும் வந்ததாகக் கூறினார் சுவாமிகள். கிறிஸ்தவ அறிஞர்கள் ஐந்து அல்லது எட்டு நாள் கால அளவுக்கு ஒப்புக் கொள்ளவில்லை. அப்பொழுது அவருடன் வந்த முன்ஷி இந்த்ரமணி சொன்னார்: "சுவாமிகளே, ஒரு நாள் விவாதத்திலேயே எது உண்மைச் சமயம் என்று தீர்மானிக்க முடியும் என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளலாம்".

இதன் பிறகு சமயப் பட்டிமன்றம் ஐந்து விஷயங்கள் பற்றி நடைபெற வேண்டும் என்றும், ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த முதன்மைப் பேச்சாளர் விஷயம் பற்றி அரைமணி நேரம் பேச வேண்டும், அவருக்குப் பதில் சொல்கிறவர் அல்லது விமர்சனம் செய்கிறவர் ஒவ்வொருவரும் பத்து நிமிடம் பேச வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அப்பொழுது பத்து மணி கடந்து விட்டது.

**முதல் நாள் நிகழ்ச்சிகள்**

நிகழ்ச்சி நிரல் முடிவு செய்யப்பட்ட பிறகு முன்ஷி பியாரேலால் அவர்கள் எழுந்து சபையோர் முன் நின்று செய்த உரையின் சாரம் வருமாறு:

"முதன்மையாக நாம் அனைவரும் எங்கும் நிறைந்தவரும் எல்லாம் வல்லவருமான இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். சமய விஷயங்களில் சுதந்திரமாகப் பயமின்றிப் பேச அனுமதி அளித்துள்ள ஒரு அரசாங்கத்தினிடம் அவர் நம்மை ஒப்படைத்திருப்பது நாம் எல்லோரும் செய்துள்ள பாக்கியம். இன்றைய தினம் ஓர் ஆசிர்வதிக்கப்பட்ட நாள். அநேக அறிஞர்கள், செல்வாக்கு மிகுந்தவர்கள் பல்வேறு சமயங்களின் சார்பில் இங்கு வந்து குழுமியுள்ளார்கள் என்பதே இந்த தேசம் மகிழ்ச்சி பெறத்தக்க ஒன்று. அவர்கள் இனிய நன்மொழிகளில் தம் சமயத்தின் சிறப்புக்களைப் பற்றிக் கூறி, தங்களுடைய விளக்கங்களால் சபையோர் பொய்யினின்று உண்மையைப் பிரித்து அறிந்துகொண்டு உண்மை வழி நடக்க தக்கவிதமாக உதவுவார்கள் என்று நான் நம்புகிறேன்."

அவருடைய வரவேற்புரைக்குப் பின்னர் ஐந்து அறிஞர்கள் முஸ்லிம்களாலும், ஐவர் கிறிஸ்துவர்களாலும் தங்கள் பிரதிநிதிகளாகப் பட்டிமன்றத்தில் பங்கேற்குமாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆர்யர்களின் (இந்துக்களின்) சார்பாக இருவர் மட்டுமே இருந்தனர்-சுவாமி தயானந்த சரஸ்வதி, பண்டிட் முன்ஷி இந்த்ரமணி. மௌலவிகளும், கிறிஸ்தவர்களும் ஆர்யர்களின் சார்பாகவும் அதே

முழு எண்ணிக்கையில் (ஐந்து) பிரதிநிதிகள் வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஆனால் சுவாமிகள் தாங்கள் இருவருமே போதும் என்று உறுதியளித்தார். இந்தப் பதிலில் திருப்தியுறாமல், கிறிஸ்தவர்கள் லட்சுமண சாஸ்திரி என்பவரையும் ஆர்யர்களின் பிரதிநிதியாகச் சேர்க்க முயன்றனர். இந்தச் செயலுக்கு சுவாமி தயானந்தர் எதிர்ப்புத் தெரிவித்து, கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய பிரதிநிதிகளைத் தேர்வு செய்ய முழு சுதந்திரம் உண்டு, ஆனால் பிறருக்காக அவ்வாறு செய்ய உரிமையில்லை என்றார்.

மேலும் அந்தப் பண்டிதரைப் பார்த்து அடிகள் சொன்னார்: "அவர்கள் விளையாடுவதன் நோக்கம் உமக்குத் தெரியவில்லையா? நமக்குள் பிணக்கு ஏற்படுத்தி வேடிக்கை பார்க்க அவர்கள் விரும்புகிறார்கள்." முஸ்லிம்கள் அடிகளின் எதிர்ப்பினைப் பொருட்படுத்தவில்லை. அவர் பேசி முடிந்ததும் ஒரு மௌலவி முன்னே வந்து பண்டிதரின் கையைப் பிடித்துக் கொண்டு பண்டிதர் பெயரையும் சேர்த்துக் கொள்ளுமாறு அவரிடம் வற்புறுத்தினார். அதைக் கண்டு சுவாமிகள் ஆர்யர்கள் ஏகமனதாக பண்டிதரைத் தம் பிரதிநிதியாக நியமிக்க ஒப்புக் கொண்டால், அவர் பெயரும் சேர்க்கப்படட்டும், ஆனால் அவரைத் தேர்வு செய்வது முஸ்லிம்களின் வேலையல்ல என்று கூறினார். சுவாமிகளின் பேச்சைக் கேட்டதும் ஒரு முஸ்லிம் விமர்சகர், அப்படி என்றால் அங்குள்ள எல்லா இந்துக்களையும் அவர்கள் சுவாமி தயானந்தரையும், முன்ஷி இந்த்ரமணியையும் நியமிக்க விரும்புகிறார்களா என்று கேட்க வேண்டும் என்றார். அதற்கு சுவாமிகள் "ஷியாக்களும், சன்னிகளும் ஏகமனதாக உங்களைத் தேர்ந்தெடுக்காத பொழுது, ரோமன் கத்தோலிக்கர்களும் இங்குள்ள கிறிஸ்தவர்களைப் பிரதிநிதிகளாக நியமிக்காத பொழுது எங்களைப் பற்றி இவ்விதம் எதிர்ப்பு தெரிவிக்க தேவை என்ன உங்களுக்கு? எங்களைப் பிரதிநிதிகளாக ஏற்க அனேகர் இருக்கலாம், அப்படி ஏற்க விரும்பாதவர்களாக எங்களில் பலர் இருக்கலாம். ஆனால் அதற்காக எங்களிடையே மனமாச்சிரியம் உண்டாக்க உங்களுக்கு உரிமையில்லை" என்றார். முன்ஷி இந்த்ர மணியும் சொன்னார்: "வேதங்களையும், சாத்திரங்களையும் நம்புகிறவர்கள் நாங்கள்; இவர்களும் அப்படித் தான்; அப்படி நம்பிக்கையில்லாத இந்துக்கள் இங்கிருந்தால் அவர்கள் விவாதத்திற்கு நான்காவது கட்சியாகச் சேர்ந்து கொள்ளலாம்." எதிர்ப்புகளை மௌலவிகள் கொண்டு வந்ததன் நோக்கம், ஆர்யருக்கும், இந்துக்களுக்குமிடையே சச்சரவுண்டாக்கி

அதனால் நிச்சயம் ஏற்படுகிற சண்டையை வேடிக்கை பார்க்கலாம் என்பதாம். பண்டித லட்சுமணரை ஒரு பிரதிநிதியாக தம்முடைய குழுவில் ஏற்பது உசிதமென ஆர்யர்களும் கருதவில்லை. இதற்கிடையில் மௌலவிகளும் புரிந்து கொண்டு நமாஸுக்கு நேரமாகிறது என்று சென்று விட்டனர். திரும்பிய பின் மௌலவி முகம்மது பின் காசிம் ஒரு மணி நேரம் தம்முடைய சமயம் பற்றிப் பேசுவதாகவும் விவாதத்திற்கு எடுக்கப்பட்டுள்ள விஷயங்கள் பற்றித் தம்முடைய கருத்துகளைப் பின்னர் கூறுவதாகவும், தன் பேச்சால் எழக் கூடிய சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதாகவும் சொன்னார். இதற்கு எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

**முதல் நாள் விவாதம்**

*மௌல்லி முகம்மது காசிம் சொல்கிறார்: (கடவுள் வாழ்த்து முடிந்தபின்) "அந்த அந்தக் காலத்தில் அரசராக இருப்பவரை எல்லோரும் பணிந்து நடக்க வேண்டும். இப்பொழுது அரசராக இருக்கிறவரைப் பணிந்து சேவை செய்து எல்லோரும் நடந்து கொள்வதை நாம் பார்க்கிறோம். இதற்கு முன்பு அரசராக இருந்தவரை அல்ல; அவருடைய பதவிக்காலம் முடிந்துவிட்டது. மேலும் ரத்தாகி விட்ட சட்டப்படி யாரும் நடப்பது இல்லை. ஆனால் அமலில் உள்ள சட்டம் எல்லோராலும் ஏற்கப்படுகிறது. அதேபோல முந்தைய அவதாரங்களையும், தேவதூதர்களையும் அல்லது அவர்களுடைய நூல்களான பழைய, புதிய ஏற்பாடுகள், சங்கீர்த்தனங்கள் போன்றவற்றையும் நாம் பின்பற்ற வேண்டியதில்லை. முகம்மது அவர்களே கடைசித் தூதர். எனவே அவரையே தூதராகவும் அவர் மூலமாக இறங்கிய குரானை கடவுள் வாக்காகவும் கொண்டு பணிந்து நடக்க வேண்டும். நாம் ஸ்ரீ ராமரையோ, ஸ்ரீ கிருஷ்ணரையோ ஏசுவையோ குறைசொல்லவில்லை. அவரவர்கள் காலத்திற்கு மட்டுமே அவர்கள் தூதர்களாக இருந்தார்கள். ஆனால் நாம் உறுதியாகச் சொல்கிறோம். இப்பொழுது முகம்மது அவர்கள் மட்டும்தான் ஆளுகின்றார். முகம்மது அவர்களையும், எங்கள் சமயத்தையும் குரானையும் இழிவு செய்கிறவர்கள் கொல்லப்படத்தக்கவர்கள்" ("வாஜிபுல்கதல்"- மூல இந்தி நூலில் உள்ள வார்த்தையின் மொழிபெயர்ப்பு- மொழி பெயர்ப்பாளர்).*

ரெவ. நோபல் பாதிரியார் மௌல்வியின் பேச்சை விமரிசனம் செய்து பின்வருமாறு உரைத்தார்: முகம்மது அவர்கள் இறைத்தூதர் என்பதும் குரான் இறைவன் வாக்கு என்பதுவுமே மிகவும் சந்தேகத்திற்குரிய விஷயமாக உள்ளது. குரானே பைபிளிலிருந்து இரவல் வாங்கப்பட்ட சங்கதி. எனவே இது ஒரு தனி மறைநூலாக இருக்க முடியாது. கிறிஸ்து அவதார புருஷர்தாம் என்பது விவாதத்திற்கிட மில்லாத ஒரு உண்மை ஆகும். தம்முடைய வசனத்தால் அவர் மக்களை வழிநடத்திச் சென்றார் என்பது அவருடைய போதனைகளிலிருந்து தெளிவாகிற விஷயம். அவர் அற்புதங்களும் இயற்றினார்.

மௌல்வி முகம்மது காசிம்பதில்: கிறிஸ்து இறைத்தூதர் என்பதையும், பைபிள் இறைவனால் தரப்பட்ட மறைநூல் என்பதையும் நாங்கள் நம்புகிறோம். ஆனால் கிறிஸ்தவர்கள் அதனில் அனேக இடைச் செருகல்களைப் புகுத்தியிருக்கிறார்கள். அதனால் அது இப்பொழுது உண்மை நூல் அல்ல. குரான் அதனைக் கண்டித்து அதன் இடத்தைப் பெற்றுள்ளது. எனவே பைபிள் இனிமேலும் நம்புவதற்குரியதல்ல. எங்கள் தூதர் முகம்மதுவே கடைசியில் வந்தவர். அதனால் எங்கள் சமயமே உண்மையானது.

பின்னர் பிற மவுல்விகள் அந்தப் பாதிரியாருக்கு பைபிளிலிருந்து ஒரு சுலோகத்தை எடுத்துக் காட்டி கிறிஸ்தவர்களே அந்த சுலோகம் அதிகாரப்பூர்வமானது அல்ல என்று ஒப்புக்கொண்டுள்ளதையும் சொன்னார்கள்.

ரெவ. நோபல்: இப்படிச் சொன்னவர் உண்மையாக நடந்து கொண்டிருக்கிறார். ஒரு தவறைத் திருத்தியிருக்கிறார் என்பதற்காக அவரைக் குற்றம்சொல்ல முடியாது. நாங்கள் உண்மையை நாடுகிறோம். எனவே எங்கள் சமயம் உண்மையானதே.

மவுல்வி முகம்மது காசிம்: - ஆமாம் அவர் அவ்வாறு செய்தது நல்லதேதான். ஆனால் ஒரு புத்தகம் அல்லது தஸ்தாவேஜில் ஒரு தவறு கண்டுபிடிக்கப்பட்டால் அது அதிகாரபூர்வமானது ஆகாது. அப்படிப்பட்ட ஏடு நீதிமன்றத்தில் சரியானதாக ஏற்கப்படவும் மாட்டாது.

ரெவரண்ட் நோபல்: குரானில் அத்தகைய தவறு இல்லையா என்ன? இதைப்பற்றிப் பிடிவாதம் செய்து பெரிதுபடுத்துவது சரியல்ல. நாம் உண்மையை மட்டும் நம்புகிறோம். அந்த சத்தியத்தை அடையவே பாடுபடுகிறோம். அதனால்

பைபிளில் ஏற்பட்ட சொல் பிழையை ஒப்புக்கொண்டோம். நீங்கள் எத்துணையோ பெரிதுபடுத்திப் பேசிய உங்கள் குரானிலும் அத்தகைய இடைச்செருகல்கள் முதலியன நிரம்ப உண்டு.

இந்த விஷயம் பற்றி கிறிஸ்தவராக மாறிய ஒரு மவுல்வி குரானின் அரபி மொழி சுலோகங்கள் பலவற்றை, தூதர் முகம்மதுவின் காலத்திற்குப் பின்னர் குரானில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன என்பதை எடுத்துக்காட்டுவதற்காக வாசித்துக் காட்டினார்.

மவுல்வி முகம்மது காசிம்: ஆஹா, நீங்கள் சத்தியத்தையே நாடிச் செல்பவர்கள்தானே? நீங்கள் சத்தியத்தையே நம்புகிறவர் என்றால் ஏன் மூன்று கடவுள்கள் மீது நம்பிக்கைக் கொண்டிருக்கிறீர்கள்?

ரெவ. நோபல்: நாங்கள் மூன்று கடவுள்களை ஏற்கவில்லை. அந்த மூவரும் ஒருவரே; ஒரே கடவுளே. அவருடைய செயலில் மனிதத் தன்மையும் உண்டு. கடவுட் தன்மையும் உண்டு. மனித குணம் இருந்ததால் அவர் மனிதனுக்கு இயல்பானதைச் செய்தார். கடவுள் தன்மை இருந்ததால் கடவுளால் மட்டுமே முடியும் என்பதைச் செய்தார். அதாவது அற்புதங்களை நிகழ்த்தினார்.

மவுல்வி முகம்மது காசிம்: ஓ! ஒரே உறையில் இரண்டு வாட்கள் எப்படி இருக்க முடியும்? பாதிரியார் அவர்கள் சொன்னது முழுப்பொய். தாம் கடவுள் என்று ஏசு எங்குமே சொல்லவில்லை. பகுத்தறிவுக்கு ஒவ்வாத பிடிவாதம் உங்களைக் குருடாக்கிவிட நீங்கள் அவரைக் கடவுள் நிலைக்கு உயர்த்தியிருக்கிறீர்கள்.

இதற்கு விடையாக ரெவரண்ட் நோபல் அவர்கள் பைபிளில் இருந்து ஒரு பகுதியைப் படித்துக்காட்டினார். அதனில் யேசு தம்மைக் கடவுளாக அறிவித்துக் கொண்டதைப் பற்றிக் கூறி, அவர் அனேக அற்புதங்களை நிகழ்த்தினார் என்றும் எழுதியிருந்தது. அவர் கடவுளே தாம் என்ற உண்மை பற்றி எவ்விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாத படி அந்தப் பகுதி அமைந்திருந்தது.

மௌல்வி முகம்மது காசிம்: யேசு கடவுள் என்றால் ஏன் சிலுவையில் அறையப்படுவதினின்றும் தம்மை அவர் காத்துக் கொள்ளவில்லை?

அப்பொழுது ஒரு இந்தியப் பாதிரியார் குறுக்கிட்டு, குரானில் பலவேறு பொருந்தா விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்: ஒரு கட்டளை வேண்டுமானால் ரத்து செய்யப்படலாம்; ஒரு செய்தியோ அல்லது தீர்க்க தரிசனமோ (வருங்கால முரைப்பதோ) அல்ல. குரானில் வருகிற தீர்க்க தரிசனம் செய்திகளையும் தீர்க்கதரிசனங்களையும் ரத்து செய்துவிடுகிறது. முஸ்லிம்கள் முதலில் ஜெருசலேம் நகரில் உள்ள பைதுல் முகத்தஸ் எனும் தேவலாயத்தின் திசையில் சிரம்தாழ்த்தி வணங்கினார்கள்; ஆனால் பிறகு மக்கா அல்லது காபாவின் திசைக்குத் தலைவணங்கினர். பின்னர் அவர் பல பகுதிகளை விளக்கிவிட்டு "கிறிஸ்துவை நம்பினாலன்றி மோட்சம் அடைவது சாத்தியமில்லை" என்று உறுதியாகச் சொன்னார். முஸ்லிம்களை நோக்கி மேலும் அவர் கூறினார்: உங்களுடைய குரான் பைபிள் மீதும் யேசுவின் மீதும் நம்பிக்கை வைக்குமாறு வலியுறுத்துகிறது. அந்தக் கட்டளைப்படி நீங்கள் ஏன் நடக்கக்கூடாது?

விவாதம் நடக்கும்பொழுது மாலைநேரம் வந்தது. சபையும் முடிவுற்றது.

## இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

குறிப்பிட்ட அதே இடத்தில் காலை 7-30 மணிக்கு மக்கள் கூட்டம் சேர்ந்தது. கூட்டத்தில் ஏற்கெனவே விவாதத்திற்கு ஏற்கப்பட்ட விஷயங்களான ஐந்து கேள்விகள் மீண்டும் படிக்கப்பட்டன.

பின் வருவனவே அந்த ஐந்து கேள்விகள்:

1) எப்பொழுது, எதனின்றும், ஏன் உலகைக் கடவுள் படைத்தார்?

2) கடவுள் எங்கும் நிறைந்தவரா, இல்லையா?

3) கடவுள் நியாயவானாகவும் அதே நேரத்தில் இரக்கமுள்ளவராகவும் எப்படி இருக்க முடியும்?

4) வேதம் அல்லது குரான் அல்லது பைபிள் கடவுளின் வாக்கு என்பதற்கு சான்றுகள் யாவை?

5) மோட்சம் என்றால் என்ன? அதனை எவ்வாறு அடைய முடியும்?

யார் ஆரம்பித்து இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்வது என்பதைத் தீர்மானிப்பதில் சிறிது நேரம் சென்றது. கடைசியில் ரெவரெண்ட் ஸ்காட் பாதிரியார் முதல் கேள்வி பற்றிப் பேச எழுந்தார். கேள்வியே பொருளற்றது- அசட்டுத்தனம் - non sense - அதற்குப் பதில் சொல்வது பயனற்றது என்று குறிப்பிட்ட அவர் சொன்னார்: எனினும் இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று எல்லோரும் ஒப்புக்கொண்டுவிட்டதால் இந்த விஷயத்தை எடுத்துச் சொல்கிறேன். இந்த உலகங்கள் அனைத்தையும் (Cosmos - பிரம்மாண்டம்) கடவுள் எதனின்றும் படைத்தாரென்று நமக்குத் தெரியாது என்றாலும் கூட, இந்த அளவுக்கு நாம் உறுதியாகச் சொல்கிறோம் - சூனியத்திலிருந்துதான் இவற்றை அவர் உண்டாக்கினார் என்று. காரணம் ஆதியில் கடவுளைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. இந்த உலகங்கள் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்ட பின் எத்தனை வருடங்கள் கடந்து சென்றன என்பதும் நமக்குத் தெரியாது. அது கடவுளுக்கு மட்டுமே தெரிந்த விஷயம். எனவே இந்த விஷயம் பற்றி அதிகம் சொல்வது உசிதமல்ல. கடவுள் ஏன் உலகைப் படைத்தார் என்றுள்ள இந்தக் கேள்வியின் மூன்றாவது பகுதிக்கு முற்றிலும் சரியான விடையைக் கூற நம்மால் இயலாது. நமக்குத் தெரிந்ததெல்லாம், இந்த சிருஷ்டிகள் அனைத்தையும் மனிதர்களின் சந்தோஷத்திற்காகவே அவர் இயற்றியுள்ளார் என்பதுதான். மரணமடையக் கூடியவர்களாகிய நாம் இன்ப நிலை பெற்று எல்லாவிதமாகவும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பதற்காக கடவுள் உலகைப் படைத்தார்.

மௌல்வி முகம்மது காசிம்: கடவுள் தம்முடைய உடலிலிருந்து இவ்வுலகங்களைத் தோற்றுவித்தார். நாம் அவரிலிருந்து வேறுபட்டிருக்கவில்லை. நாம் அவரிலிருந்து வேறுபட்டவர்களாக இருந்தால், அவருடைய சக்தியின் கீழ் இருக்க மாட்டோம். அனைத்துலகங்களின் சிருஷ்டி எப்பொழுது நடைபெற்றது என்ற கேள்விக்குப் பதில் சொல்வது பயனற்ற வெறும் யூகம் ஆகும். ஏனென்றால் ரொட்டியைத் தின்பது பற்றித்தான் கவனிக்க வேண்டுமே தவிர அது சமைக்கப் பட்டதற்கு எடுத்துக்கொண்ட காலம் அல்ல. இந்த உலகம் மனிதர்களுக்காக சிருஷ்டிக்கப்பட்டது. அவனை வணங்குவதற்காகவும். சிந்தித்துப் பார்த்தீர்களானால் இந்தப் பூமி நமக்காக உண்டாக்கப்பட்டது, நாம் பூமிக்காக அல்ல என்பது தெளிவாகும். ஏனென்றால் நாம் உயிர்வாழவில்லை எனில் இந்த பூமிக்கு நஷ்டம் எதுவும் இல்லை. ஆனால் இந்த பூமி இல்லை என்றால் நாம்

மிகவும் துன்புறுவோம். அதேபோல தண்ணீர், காற்று, நெருப்பு பிற இயல்புகள் அனைத்தும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டன. அனைத்துலகங்களிலும் பிற எல்லா உயிர்களையும் விட மனிதனே மேலானவன். அவனுடைய மேன்மைக்குச் சான்றாகவே அறிவு அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுருங்கக்கூறின், கடவுள் தம்மை வணங்க வேண்டுமென்பதற்காக மனிதனையும், அவனுக்காக இந்த உலகத்தையும் உண்டாக்கினார்.

## சுவாமி தயானந்த சரஸ்வதி

ஆரம்பத்தில் இங்குள்ள முகம்மதியர், கிறிஸ்துவர் பிறர் அனைவருக்கும் இந்த சபையானது உண்மையை அறிந்து தேர்வதற்காகக் கூடியுள்ளது என்கிற விஷயத்தைக் கவனத்தில் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் நோக்கம் உண்மைச் சமயம் எது என்பதைக் கண்டு கேட்டு அறிவதே ஆகும். வெற்றி அல்லது தோல்வி மனப்பான்மை எவருக்கும் வேண்டாம். காரணம், உண்மை எப்பொழுதும் நிலைத்து நிற்கும் பொய் எப்பொழுதும் அழிந்துவிடும் என்பதை நல்லோர் அனைவரும் ஏற்றுள்ளனர். கிறிஸ்தவப் பாதிரியார் பொய் சொன்னார் என்று முகம்மதியர்களும் முகம்மதியர் பொய் சொன்னார் என்று பாதிரியார்களும் கூறிக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். கற்றறிந்த பெரியோர்கள் அவர்களுக்குத் தெரிந்த அளவுக்கு உண்மையை நயமான மொழியில் கூறிப் பொய்யை மறுதளித்தால் மக்கள் அனைவரும் உண்மையின் பக்கம் வந்து சேர்வார்கள். அறிஞர்கள் ஒருவரை ஒருவர் குற்றம் குறை கூறிக் கடுமொழி பேசுவதை எப்பொழுதும் தவிர்க்க வேண்டும். வேதனை தரக்கூடிய “நான் ஜெயித்தேன், நீர் தோற்றீர்” என்பது போன்ற புண்படுத்தும் பேச்சுகளையும் தவிர்க்க வேண்டும். ஒருதலைச் சார்பாக இருப்பதை விட்டுவிட்டு எல்லோரும் உண்மையே பேச வேண்டும். பரஸ்பரம் குற்றச்சாட்டுகள் அறிவில்லாதவர்களிடமிருந்தே எழுகின்றன, அறிஞர்களிட மிருந்து அல்ல. விவாதத்தில் மட்டுமல்ல, எங்குமே எவரும் கடுமொழி கூறலாகாது.

இனி என்னுடைய சிற்றறிவுக்கும், படிப்புக்கும் இயன்ற அளவில், அந்த வெளிச்சத்தில் முதல் கேள்விக்கு விடை கூறுகிறேன். கேள்வி, “எதனின்று, எப்பொழுது, ஏன் கடவுள் உலகைப் படைத்தார்?” என்பது.

பிரம்மாண்டம் எனப்படுகிற இவ்வுலகங்கள் அனைத்தையும் இறைவன் ப்ரகிருதி எனப்படும் மூல இயற்கையினின்றும் தோற்றுவித்தான். இதற்கு அவ்யக்தம், அவ்யாக்ருதம் (தெளிவற்ற இயற்கைத் தனிப் பொருள்), பரமாணுக்கள் என்றும் பெயர்கள் உண்டு. இந்த மூல இயற்கையே அனைத்துலகின் பொருளாகு காரணம் ஆகின்றது. சாத்திரங்கள் இதனை என்றுமுள்ளதாக, நித்தியப் பொருளாகக் கூறுகின்றன. கடவுளுக்கு முதலும் முடிவும் இல்லை என்பது போன்றே இந்த பிரகிருதிக்கும் முதலும் முடிவும் இல்லை. காணப்படுகின்ற இந்தப் பிரம்மாண்டத்தின் காரணமாக உள்ள இந்தப் பரமாணுக் கூட்டத்தில் ஒரு அணு கூட கூடுவதும் இல்லை; குறைவதும் இல்லை.

(பிரம்மாண்டம், ஜகத் என்றெல்லாம் கூறப்படும்) இவ்வுலகைத் தோற்றுவிக்கும் பொழுது இறைவன் இந்தக் காரணத்தையே காரிய உருவத்திற்கு மாற்றுகிறான். காணப்படுகின்ற இவ்வுலகு, அதாவது காரிய ஜகத்திற்கு காரணமாக உள்ளது இந்த மூலப் பிரகிருதியே. சூட்சுமப் பொருள்களைச் சேர்த்து அவன் இந்த ஸ்தூலப் பொருள்களை உண்டாக்குகிறான். அப்பொழுது இந்த திடப் பொருள்கள் நம் கண்ணுக்குத் தென்பட்டு நாம் செயலாற்றத் தக்க வகையில் அமைகின்றன. அனேக விதமாகத் தோன்றுகிற இவ்வுலகப் பொருட்கள் அனைத்தையும் மூலப் பிரகிருதி என்கிற இந்த உபாதான (பொருளாகு) காரணத்திலிருந்தே இறைவன் இயற்றியிருக்கின்றான். பிரளயம் எனப்படும் உலக அழிவுக் காலத்தில் இந்தத் திடப் பொருள்களைத் தனித்தனியே பிரித்து விடவும் செய்கிறான். இந்தத் திடப் பொருள்கள், ஸ்தூலமாக உள்ளவை, சூட்சுமப் பொருள்கள் ஆகி விடுவதால் அவை கண்ணுக்குத் தெரிவதில்லை. அவை பரமாணுக்களாக ஆகாயத்தில் பரவி விடுகின்றன. எனவே இக்காரணப் பொருள் எப்பொழுதும் அழிவதில்லை என்பது தெளிவு. பிரளயம் என்பது கண்ணுக்குத் தெரியாத நிலையைக் குறிக்கும். பரமாணுக்கள் பிரிந்தால் அவை கண்ணுக்குப் புலனாவதில்லை; சேரும் போது ஸ்தூலப் பொருட்களாகி மீண்டும் புலப்படும் நிலை பெறுகின்றன. இறைவனின் என்றுமுள்ள ஆக்கல்-அழித்தல் விதிமுறை இதுவே. இறைவன் எத்தனை முறை தோற்றுவிக்கிறான், எத்தனை முறை அழிக்கிறான் என்பது நம்மால் கணக்கிட முடியாத விஷயம். எவராலும் கணக்கிட முடியாதது.

இப்பொழுது சூன்யத்திலிருந்து எதுவும் உண்டாகாது என்றும், ஏதோ சில வார்த்தைகள் சொல்லப்படுவதாலும் உலகு உண்டாகாது என்றும் தெரிந்து கொண்டீர்கள். இவையெல்லாம் ஆதாரமற்றவை; நடைபெற இயலாதவை. இப்படியெல்லாம் சொல்வது “மலடியின் மகனுடைய திருமணத்தை என் கண்களால் கண்டேன்” என்று கூறுவது போலாகும். மலடி என்றால் அவளால் குழந்தை பெற இயலாது; மகனே இல்லாத பொழுது அவனுக்குத் திருமணம் நடைபெற்றதைக் காண்பது எப்படிச் சாத்தியம்? மேலும் சூனியத்திலிருந்துதான் உலகம் உண்டாக்கப்பட்டது என்று சொல்வது “நான் இருக்கவில்லை, என்றாலும் இப்பொழுது இங்கே இருக்கிறேன்” என்பதுபோலவோ அல்லது பாம்பு புற்றில் இருக்கவில்லை, ஆனால் அங்கிருந்து தான் அது வந்தது என்று கூறுவது போலவோ ஆகும். இத்தகைய ஆதாரமற்ற கூற்றுக்களை அறிஞர்கள் மதிக்கமாட்டார்கள். இல்லாத ஒரு பொருள், பிறகு இருக்கிறதாக எப்படிச் சொல்வது? உதாரணமாக இங்கே பேச வந்துள்ள பேச்சாளர்களாகிய நாங்கள் அவரவர்களுடைய ஊர்களில் இல்லாவிட்டால் சாந்தாபூருக்கு வந்து சேர்ந்திருக்க மாட்டோம். ஆகையால் சாஸ்திரங்கள் கூறுவது போல -

“நாஸத ஆத்ம லாப: / ந ஸத ஆத்ம ஹானம்” அதாவது, இல்லாதது என்றும் இருக்கப் போவதில்லை; உள்ளது இனிமேலும் இருக்கும். இதனின்றும் தெளிவாகிறது என்னவெனில் உள்ளதிலிருந்து மட்டுமே வேறொன்று உண்டாகும். இல்லாததிலிருந்து ஒன்றும் வராது என்பதே காரணம். இந்த உலகில் காரணமின்றி எதுவும் இல்லை. எனவே உள்ளதாம் பொருளிலிருந்துதான் ஒன்று தோன்றும்: வெறுமை அதாவது சூனியத்திலிருந்து எதுவும் வெளி வராது. இதற்கு மாறாகச் சொல்வது எதுவும் தனக்குத் தானே முரணாகிற விஷயமாகும். முதலில் ஒரு பொருள் முழுவதுமாக இல்லை என்று ஒப்புக்கொண்டுவிட்டு, பின்னர் அது இருக்கிறது என்று கூறுவது முற்றிலும் தெளிவான எளிய முரண்பாடே. படித்தவர் எவரும் இதனை நம்ப மாட்டார். காரணமின்றி காரியம் உண்டாயிற்று என்பதை எந்தச் சான்றாலும் உறுதி செய்யவும் இயலாது. ஆகையால் சூன்யம்-வெறுமையிலிருந்து உலகம் தோன்றியது அல்லது வெறும் வார்த்தையிலிருந்து அது உண்டாயிற்று என்பது நடைபெறாத சங்கதி. எனவே கடவுள் என்றுமுள்ளதாகவே பொருளாகும் மூல காரணத்திலிருந்து - மூல இயற்கைப் பொருளிலிருந்து-உலகைத் தோற்றுவித்தார், வேறு எவ்விதமாகவும் அல்ல என்பதையே நம்புதல் வேண்டும்.

இனி இங்கு இரண்டு விஷயங்கள் சிந்தனைக்குரியனவாகின்றன. முதலாவது, கடவுள் உலகின் பொருளாகு காரணம் என்றால் காணப்படும் இவ்வுலகில் உள்ள பொருட்களுடன் அறிவு-அறியாமை, இன்பம்-துன்பம், பிறப்பு-இறப்பு, இலாபம்-நஷ்டம், சொர்க்கம்-நரகம், பசி-தாகம், பந்தம்-மோட்சம், ஜுரம்-பிறநோய் நொடிகள் இவையாவும் கடவுளுக்கு உண்டு, கடவுளில் உண்டு என்று ஆகும். மேலும் இந்தக் கருத்துப்படி நாய், பூனை, திருடன், தீயோன்-எல்லோருமே கடவுள் தாம்!

இரண்டாவதாக அடிப்படைப் பொருள் என ஒன்று ஏற்கெனவே இருந்தது என்பதை ஒப்புக்கொண்டால், அப்பொழுது உலகைச் செய்கிறவர், அமைக்கிறவர் என்கிற நிலையில் கடவுள் இருக்கிறார்.

இப்பொழுது, இவ்விரண்டு விஷயங்களையும் பற்றி நாம் சிந்திக்கும் பொழுது, மூவகைக் காரணங்கள் உண்டு என்பது புலனாகும்.

1) உபாதான காரணம் அல்லது ஒரு பொருள் உண்டாவதற்குத் தேவையான அடிப்படைப் பொருள் என்ற காரணம். உதாரணமாக, பானை செய்வதற்குக் களிமண், நகை செய்வதற்குத் தங்கம், ஆடை நெய்வதற்குப் பருத்தி இவையெல்லாம் அவ்வப் பொருட்கள் செய்வதற்கு இருந்தே ஆகவேண்டிய மூலப்பொருட்கள்.

2) நிமித்த காரணம் அல்லது திறமை காரணம் பானை செய்வதற்கான அறிவுத் திறமை அல்லது சக்தி குயவரிடம் உள்ளது என்பது போன்ற விஷயம் இது.

3) சாதாரண காரணம் அல்லது கருவி காரணம் மேற்கூறிய பானை உதாரணத்தில், பானை செய்வதற்கு உதவியாக சக்கரம், நேரம், திசை போன்ற பிற கருவி காரணமாகும்.

இப்பொழுது உலகின் பொருட் காரணம் கடவுளே என்று வைத்துக் கொண்டால் நாம் அவரை உலகப் பொருளாக்கி விடுகிறோம். அப்படி ஆகிவிட்டவின் அழியக் கூடிய உலகப் பொருளாகவே அவர் ஆகிவிடுகிறார். ஏனெனில் பானை அது செய்யப்பட்ட மண்ணிலிருந்து வேறுபட்டது, வித்தியாசப் பட்டது அல்ல. அவரை செயல் - திறமைக் காரணமாக்கினால், மூலப்பொருள் களில்லாமல் உண்டாக்க அவரால் இயலாது - களிமண் இல்லாமல் குயவரால்

பானை செய்ய முடியாது என்பதுபோல. மேலும் அவர் உலகின் சாதாரண துணைக் காரணம் தான் என்றாலோ பானை செய்பவர் இல்லாமல் பானை தானே உண்டாகாதது போல, இயற்றுபவர் இன்றி இவ்வுலகம் தானே தோன்றவும் முடியாது. கடைசியாகக் கூறப்பட்ட இரண்டு விஷயங்கள் அவர் வேறு ஒரு திறமையை நம்பியிருக்க வேண்டியவர் என்பதோடு அவரே உயிரற்ற ஜடப்பொருள் என்றும் ஆக்கிவிடும். எனவே கடவுள் தாமே இவ்வுலகப் பொருட்களாகக் காட்சியளிக்கிறார் என நம்புகிறவர்கள், அவரைத் திருடர் போன்ற தீயோரும் ஆவர் என்கிற நிலைக்குக் கொண்டு செல்கின்றனர். இவ்வுலகின் மூலப்பொருளாகு காரணம், கடவுளைப் போன்றே அவருடன் என்றுமுள்ள நித்தியப் பொருள் என்றும் அவர் இதனின்றும் இவ்வுலகங்களைப் பலவேறு வடிவங்களில் தோற்றுவித்துள்ளார் என்றும் நம்புதல் வேண்டும்.

அது போன்றே ஆத்மாவும் ஒரு நித்தியப் பொருள்தான். பருப் பொருளாகிய இவ்வுலகம் மூல இயற்கையின் விளைவே. ஜீவர்கள் எனப்படும் ஆத்மாக்களின் கர்மங்கள் எனப்படும் செயல்களும் அவற்றின் நித்தியப் பிரவாகத்தால் அனாதி - அதாவது சாதாரண காரணரூபத்தினால் நித்தியமாகும். இவ்விதம் ஏற்றாலன்றி உலக சிருஷ்டியை விளக்குவது சாத்தியமில்லை.

இனி உலகம் தோன்றி எத்தனை காலம் ஆயிற்று என்கிற கேள்விக்கு என்னுடைய பதில் :

சகோதரர்களே, நான் கூறுவதைக் கவனமாகக் கேட்பீர். வேத சமயத்தைப் பின்பற்றுவோராகிய எங்களால் தான் இந்த வினாவுக்கு விடை அளிக்க முடியும். வேறு எவராலும் அல்ல. ஏனென்றால் உங்களுடைய சமயங்கள் யாவும் பதின்மூன்று நூறு ஆண்டுகளுக்கு முன்போ, பதினெட்டு நூறு ஆண்டுகளுக்கு முன்னரோ அல்லது ஐந்து நூறு ஆண்டுகளுக்கு முன்போ தாம் தோன்றின, என்கிற மிகச் சாதாரண காரணத்தினால். இதனால்தான் உலக சிருஷ்டி காலம் பற்றிய சரித்திரம் உங்களுடைய சமயங்களில் இல்லை. ஆர்யர்களோ (இந்துக்களோ) உலக சிருஷ்டியிலிருந்தே இந்த ஞானம் பெற்றவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

பாருங்கள், இந்த தேசத்திலிருந்துதான் பிற எல்லா நாடுகளுக்கும் அறிவு சென்று பரவியது. எல்லா தேசங்களின் வரலாற்றிலும் ஆர்யாவர்த்தம் என்கிற இந்த இந்திய நாட்டிலிருந்துதான் முதலில் எகிப்து நாட்டிற்கும் அங்கிருந்து

கிரேக்கர்களின் நாட்டிற்கும் பின்னர் அங்கிருந்து ஐரோப்பாவுக்கும் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அறிவு பரவியுள்ளதாக உலக சரித்திர ஆசிரியர்கள் ஒரு மனதாக ஏற்று வந்துள்ளனர்.

எனவே இந்த உலக சிருஷ்டியின் சரித்திரம் வேத சமய இலக்கியம் அல்லாத வேறு எந்த சமயத்தின் இலக்கியத்திலும் இடம் பெறவில்லை. இனி கவனமாகக் கேளுங்கள் : ஆர்யர்கள் (இந்துக்கள்) ஆகிய எங்களுக்கு இவ்வுலகின் தோற்றம் - மறைவு பற்றிய ஞானம் வேத முதலான புனித விஞ்ஞான நூல்களிலிருந்து கிடைத்துள்ளது. அதன்படி நாலாயிரம் சதுர் யுகம் கொண்டது ஒரு பிரம்மதினமாகும் - அதாவது பிரம்மம் எனப்படும் பரம்பொருளின் ஒரு பகல் பொழுது. அதே கால அளவான சதுர்யுகங்கள் ஒரு பிரம்ம இராத்திரி ஆகும். அதாவது பரம்பொருளின் இரவுப் பொழுது. உலக சிருஷ்டி நிலைத்து இருக்கும் காலமே பிரம்ம தினம். இவ்வுலகம் அழிந்து மறைந்து விட்ட காலமே பிரம்ம இராத்திரி. இந்த உலக சிருஷ்டிக் காலத்திற்கே கல்பம் என்று பெயர். இது பதினான்கு மன்வந்தரம் கொண்டது. இதனில் எழுபத்தொன்று (71) சதுர்யுகங்கள் கொண்டது ஒரு மன்வந்தரம் எனப்படும். இப்பொழுது ஏழாவதான வைவஸ்வத மன்வந்தரம் நடக்கிறது. இதற்கு முன் ஆறு மன்வந்தரங்களான ஸ்வாயம்புவ, ஸ்வரோசிஷ, ஔத்தமி, தாமஸ, ரைவ, சாக்ஷுஷ என்பன கடந்துவிட்டன.

வேறுவிதமாகச் சொல்வதென்றால், 1877 எனப்படும் கிறிஸ்தவ ஆண்டாகிய இக்காலத்திற்கு உலகம் தோன்றி நூற்றுத் தொண்ணூற்று ஆறு கோடி எட்டு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஆறு ஆண்டுகள் ஆகியுள்ளன. இனியும் இருநூற்று முப்பத்து மூன்று கோடி முப்பத்திரண்டு லட்சத்து இருபத்தேழாயிரத்து இருபத்து நான்கு ஆண்டுகள் இந்த சிருஷ்டி நீடிக்கும். இவ்வாறுள்ள விஷயங்கள் எமது (இந்து-ஆரிய) வரலாற்றில் மிக நுணுக்கமாகவும் திட்டவட்டமாகவும் கூறப்பட்டுள்ளன.

எமது வானநூல் வல்லாரும் ஒவ்வொரு ஆண்டினையும் தக்கவாறு கூட்டியும் கழித்தும் கணக்கிட்டு வந்துள்ளனர். ஜோதிஷம் எனப்படும் வான நூல் அடிப்படையில் அவர்கள் அதனைத் தம் பஞ்சாங்கங்களில் பதிவு செய்து வருகின்றனர். ஆண்டுக்கு ஆண்டு ஒரு ஆண்டினை அவர்கள் கழித்தும் கூட்டியும் வருகின்றனர். பாரத நாட்டைச் சேர்ந்த வரலாறுகள் யாவும் இந்த உண்மைகள்

பற்றி ஒருமித்த கருத்து உடையனவாக இருக்கின்றன. இதுபற்றி அவைகளுக் கிடையே கருத்து வேறுபாடு கிடையாது. ஜைனர்களும் முகம்மதியர்களும் பாரதத்தின் சரித்திர நூல்களை அழிக்க ஆரம்பித்தபொழுது ஆர்யர்கள் (இந்துக்கள்) சிருஷ்டி வரலாறு பற்றிய இந்தக் கொள்கையை சங்கல்பம் எனப்படும் மனப்பாடமாக உள்ள யுகக் கணக்கீட்டு முறையினை அமைத்தனர். இது இன்றும் சிறுவர் முதல் வயதானவர் வரை எல்லோராலும் தினந்தோறும் கூறப்படுகிறது. அந்த சங்கல்பம் எனும் சிருஷ்டிக் கணக்கு முறை வருமாறு :-

"ஓம் தத் ஸத் ஸ்ரீ ப்ரஹ்மணே த்விதீய ப்ரஹரார்தே வைஸ்வத மன்வந்தரேSஷ்டா விம்ஷதி தமே கலியுகே கலி ப்ரதம சரணே ஆர்யா வர்த்தாந்த ரைக தேசே அமுக நகரே ஸம்வத்ஸரா யனர்து மாஸ பக்ஷ தின நக்ஷத்ர லக்ன முஹூர்த்தேSத்ரேதம் க்ருத்ரம் க்ரியதே வா."

பொருள் : உண்மையும் சத்துமாகவும் விளங்கும் பரம்பொருளே, பிரம்ம தினத்தினுடைய இந்த இரண்டாம் பகுதியின் வைவஸ்வத மன்வந்தரத்தின் 28-வது கலியுகத்தின் முதல் பாதத்தின் இன்ன ஆண்டில் அதனுடைய இன்ன அயனத்தில், ருதுவில், மாதத்தில், பக்ஷத்தில் தினத்தில், நக்ஷத்திரத்தில், லக்னத்தில், முஹூர்த்தத்தில் நான் இந்தச் செயலைத் தொடங்குகிறேன். *

(* ஆங்கில மொழி பெயர்ப்பாளர் குறிப்பு : இப்பகுதியின் மொழி பெயர்ப்பு ரிஷி தயானந்தர் இயற்றிய "ரிக் வேதாதி பாஷ்ய பூமிகா" (ரிக் முதலான வேதங்களின் விளக்கத்திற்கு ஒரு முன்னுரை) நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பாளர் காஸிராம் அவர்கள் ஆக்குவித்தவாறு ஆகும். இந்த சங்கல்ப சுலோகத்தை ரிஷி தயானந்தர் சாந்தாபூர் சமயப்பட்டிமன்றத்தில் மொழி பெயர்க்கவில்லை.)

இதுபற்றிச் சிந்தித்து அறிகிற எவரும் இந்த உலக சிருஷ்டி ஆண்டினைக் கணக்கிட இயலும். இதனை நம்ப மறுக்கிற எவரும் தவறு செய்கிறவர் ஆவர். ஆர்யர்களின் (இந்துக்களின்) பஞ்சாங்கம் எனப்படும் இந்தக் கணக்கு முறை இப்பொழுது தொடர்ந்து வரும் ஆண்டுகளைக் குறிப்பதுடன், கடந்துபோன ஆண்டுகளின் எண்ணிக்கையினையும் காட்டுகிறது. இந்தக் கணக்கு பற்றிய உண்மையே எல்லா மறுப்புக்களையும் சந்திக்க வல்லது. சரித்திர, வான நூல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. எனவே இது பற்றி ஐயத்திற்கு இடமில்லை.

மேலும், இந்த வேதக் கணக்கை ஒப்புக் கொள்ளாதவரை, காலக் கணக்கு பற்றி உம்முடைய சமயம் என்ன சொல்கிறது என்று கேட்டால். அவர் இந்த உலகம் தோன்றி, ஆறு, ஏழு அல்லது எட்டு ஆயிரம் ஆண்டுகள் தாம் ஆயிற்று என்று பதில் சொல்வார். ஏனென்றால் அவருடைய நூல்களில் அப்படித்தான் சொல்லப்பட்டு இருக்கிறது. இது ஏற்கத்தக்கதன்று.

மேலும் குறிப்பிட வேண்டிய விஷயம், உலக சிருஷ்டி பற்றிய ஆர்யர்களின் (இந்துக்களின்) இந்தக் கணக்கு விவரங்களை மண்-பாறை படிமத் துறை (Geology) ஆய்வாளர்களும் நவீன விஞ்ஞானிகளும் ஆதரிக்கின்றனர் என்பதாகும். இந்த உலகின் வயதை வேத சமயத்தால் கணிக்க முடியும்; பிற சமயங்களால் அன்று. எனவே சிருஷ்டி தோன்றிய காலம் பற்றி ஆரியர்கள் (இந்துக்கள்) கூறுவதையே நாம் எல்லோரும் நம்புதல் வேண்டும்.

**எதற்காகக் கடவுள் இப்பிரம்மாண்டத்தை இயற்றினார்?**

இந்தக் கேள்விக்கு என்னுடைய பதில் இதுவே. ஆத்மாவும் இவ்வியற்கையின் காரணம் எனும் மூலப் பொருளும் பிரவாகத்தால் அனாதியானவை - நித்தியமானவை. காணுமிவ்வுலகம் மூலப்பிரக்ருதி-மூல இயற்கையின் விளைவே.பிரளய காலத்தில் ஆத்மாக்கள் அதாவது ஜீவர்களின் சில செயல்கள் உபரியாக அல்லது மீதமாக நின்றுவிடுகின்றன. எனவே இறைவன் அவர்களுடைய செயல்களின் பலன்களை அவர்கள் அனுபவிக்க வேண்டுமென்பதற்காக உலகை இயற்றுகின்றன. இவ்விதமாக அவன் தன்னுடைய பாரபட்சமற்ற நியாயத்தை வெளிப்படுத்துகின்றான். மேலும், இறைவனிடம் எல்லையற்ற அறிவு, திறமை, வல்லமை, அருள் என திவ்விய குணங்கள் உள்ளன. எல்லையற்ற சக்தியுள்ளவன் அவன். இவையனைத்தும் பயன்படவேண்டும். நிறைவேற வேண்டும் என்பதற்காகவே இப்பிரம்மாண்டத்தை அவன் உண்டாக்கினான். காண்பதற்காகக் கண்ணும், கேட்பதற்காகச் செவியும் உள்ளது போன்றே, இறைவனின் இயற்றும் திறமையும் உலக சிருஷ்டிக்காகவே. எனவே இறைவன் தன்னுடைய வல்லமை பயனுள்ளதாக அமைந்து எல்லா ஜீவர்களும் இவ்வுலகப் பொருட்களை அனுபவித்து ஆனந்தம் அடைய வேண்டுமென்பதற்காகவே உலகைத் தோற்றுவித்துள்ளான். அறம், பொருள், இன்பம், வீடுபேறு இவற்றை ஜீவர்கள் அடைய வேண்டும், அவர்களுடைய வாழ்க்கை நிறைவு பெற வேண்டும் என்பதற்காகப் புலன்கள் அளிக்கப்பட்டுள்ளன. உலக சிருஷ்டிக்கு மேலும் பல

நோக்கங்கள் உண்டு. நேரமின்மையால் நாம் இங்கு அவற்றைக் கூறமுடியவில்லை. அறிஞர்கள் எளிதில் அறிந்துகொள்வார்கள்.

**ஸ்காட் பாதிரியார்**

எல்லையுள்ளது அனாதியாகவும் அந்தமில்லாததாகவும் அல்லது நித்தியமானதாகவும் இருக்க முடியாது. இந்த உலகுக்கு எல்லையுண்டு. எனவே இது நித்தியமல்ல. எதுவுமே தானே தோன்றாது. தம்முடைய எல்லையற்ற வல்லமையால் கடவுள் தனி ஒருவராக எல்லாவற்றையும் படைத்தார். எந்தப் பொருளிலிருந்து கடவுள் உலகைப் படைத்தார் என்று எவருக்கும் தெரியாது. பண்டிட்ஜியும் (சுவாமி தயானந்தரும்) எந்தப் பொருளால் இந்த உலகைக் கடவுள் படைத்தார் என்று சொல்லவும் இல்லை.

**மவுலவி முகம்மது காஸிம்**

எல்லாப் பொருட்களும் நித்தியம் என்றால் கடவுளை நம்புவதில் பயனில்லை. இந்த உலகம் தோன்றிய காலத்தைப் பற்றிச் சொல்ல எவராலும் இயலாது.

**சுவாமி தயானந்த சரஸ்வதி (1. ஸ்காட் பாதிரியாருக்கு விடை)**

பாதிரியார் அவர்கள் நான் சொன்னதைப் புரிந்து கொள்ளவில்லை. இவ்வுலகின் காரணப் பொருள் தான் நித்தியம் என்று நான் சொன்னேன். காரிய ரூபமானது (பலன் ஆனது) ஒரு பொழுதும் நித்தியமல்ல. உதாரணமாக: எண்சாண் அளவுள்ள என்னுடைய இந்த உடல் நான் பிறப்பதற்கு முன்பு இருந்ததில்லை; இறப்புக்குப் பின்பு இது இருக்கப் போவதில்லை. ஆனால் இந்த உடலினை அமைத்துள்ள அணுக்கள் ஒரு பொழுதும் அழிய மாட்டா. என் மரணத்திற்குப்பின் அவை தனித்தனியே பிரிந்து ஆகாயத்தில் பரவிவிடும். சேர்தல் பிரிதலாகிய அவற்றின் இந்தத் தன்மை அல்லது திறன் அவற்றில் எப்பொழுதும் இருக்கும். உதாரணமாக, மண்பானை அது அமைக்கப்படுவதற்கு முன்பு அது இப்பொழுது காணப்படுகின்ற உருவத்தில் இருக்கவில்லை; உடைக்கப்பட்ட பிறகு அது தொடர்ந்து இருக்கப் போவதும் இல்லை. ஆனால் அது அமைக்கப் படுவதற்குக் காரணமான மண், (பிருதிவி) அழியாது, அழிக்கப்படமாட்டாது. சேர்க்கைக் குணமுள்ள அதன் தன்மையே பொருள்களை உருவாக்கச் செய்கிறது.

இந்தத் தன்மை மண்ணில் இயல்பாக உள்ளது. அந்த மண்ணில் உள்ள அணுக்கள் சேர்தல், பிரிதல் எனும் தன்மை உள்ளனவாக இருக்கின்றன. இந்த உலக சிருஷ்டி முழுமையும் பரமாணுக்களால் ஆனது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அணுக்கள் என்றும் உள்ளவை; காணும்பொருட்கள் அவ்வாறு அல்ல. இவ்வுலகில் உள்ள பொருட்கள் தாமே உண்டானவை என்று நான் எப்பொழுது சொன்னேன்? நான் சொன்னதெல்லாம், இறைவன் முதன்மையாகிய பொருட் காரணத்தால் உலகை இயற்றினான் என்பதேயாகும்.

கடவுள் தம்முடைய வல்லமையால் உலகை உண்டாக்கினார் என்று பாதிரியார் சொன்னார். அந்த வல்லமை ஏதேனும் பொருளா, அல்லது, ஒன்றுமே இல்லையா என்று அறிய நான் விரும்புகிறேன். அது ஒரு பொருள் என்றால் அந்தப் பொருள் நித்தியம். அது ஒன்றும் இல்லை என்றாலோ, அதனின்றும் எதுவும் தோன்றாது. எதிலிருந்து இவ்வுலகம் தோற்றுவிக்கப்பட்டது என்று நான் சொல்லவில்லை என்று பாதிரியார் கூறினார். நான் சொன்னதை அவர் சரிவரக் கேட்காமலிருக்கலாம். இந்த உலக சிருஷ்டிக்கு காரணப் பொருள் (அடிப்படைக் காரணம்) ப்ரக்ருதி எனப்படும் தெளிவற்ற பொருள்: அதாவது பரமாணுக்களின் கூட்டம் (மூலப்ரக்ருதி - மூல இயற்கை)

2. (மவுலவி சாஹிபிற்கு சமாதானம்) என் பதிலுக்கு மவுலவியாரின் விமரிசனம் பற்றி நான் சொல்ல விரும்புவது, எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படைக் காரணம் நித்தியமானது என்கிற உண்மையே கடவுள் மீது நம்பிக்கையைத் தேவையுள்ளதாக்கி விடுகிறது. மண்ணோ அல்லது களிமண்ணோ தானே ஒரு ஜாடியாக உருவம் பெறுகிற சக்தி உடையது அல்ல. பொருள் தானாகவே உருவங்களை ஏற்றுக்கொள்ளக் கூடியது அன்று. ஏனெனில் அத்தகைய தேவையான அறிவு அதற்கு இல்லை. எந்த மனித ஆத்மாவும் அத்தகைய விளைவை உண்டாக்க முடியாது. ஒரு ரோமத்தை உண்டாக்கும் சக்தி கூட மனிதனுக்கு இல்லை. அணுக்களைக் கைப்பற்றி அவற்றால் பொருட்களை ஆக்கும் திறன், எந்த விதமாகவும் எவருக்கும் கிடையாது. இன்றும் த்ரசரேணுக்கள் எனப்படும் இரண்டு பரமாணுக்களை இணைக்கும் திறன் உள்ளவர் எவரும் இல்லை. கடவுள் ஒருவருக்கு மட்டுமே இவ்வுலகைச் சிருஷ்டி செய்யும் வல்லமை உண்டு என்பதையே இது காட்டுகிறது.

கண் எண்கிற இந்த ஒரு உறுப்பின் சிருஷ்டியிலேயே எத்துணை திறமையும் அறிவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது! சிந்தித்துப் பாருங்கள். இது நாள்வரை பெரும் உடற்கூறு நூல் வல்லாரும், வைத்தியர்களும் கண்ணைப்பற்றிப் படித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனினும் அவர்கள் சேர்த்துவைத்துள்ள அறிவு அரைகுறையாகவே உள்ளது. எவ்வாறு இறைவன் அதனை அமைத்துள்ளான். எத்தனை விதமான அழகினை அதற்கு அவன் அளித்துள்ளான் என்பதை எவராலும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. சூரியர்கள், சந்திரர்கள் எனக் காணுமிந்த சிருஷ்டியெல்லாம் கடவுளின் படைப்பே. ஜீவர்களின் செயல்களுக்கான விளைவுகளை அவர் தாம் அளிக்கின்றார். வேறு எவரும் அல்ல. நிச்சயமாக கடவுள் நம்பிக்கை என்பது முழுமையாக மிகவும் தேவையான ஒன்று.

**இந்தியக் கிறிஸ்தவர் ஒருவர்**

ஒன்று காரணமாகவும், மற்றது விளைவாகவும் இருக்கிற இரண்டு பொருள்களும் நித்தியமாக இருக்க இயலாது. எனவே இல்லாமையிலிருந்துதான் கடவுள் தம் ஆணை மூலமாக உலகைப் படைத்தார்.

**மவுலவி முகம்மது காசிம்**

குணம், தன்மை இரண்டு வகை இயல்பானது ஒன்று; புறப்பொருட்களிலிருந்து வருவது மற்றது, இயல்பான தன்மை முக்கியம்; உடன் வருவது புறத் தன்மை; வெளியிலிருந்து பெறப்படுவது. இயல்பான குணங்கள் தம்மிலே உள்ளவை; புறத்தன்மைகள் பிறவற்றிலிருந்து தமக்குள் வருபவை. இயல்பானவை பிறவற்றுக்கும் சென்று அவ்வாறே ஆகி அப்பொருள்களின் தன்மையை, குணத்தை எடுத்துக் கொள்கின்றன; ஆனால் அவற்றிலிருந்து தனித்து நிற்கின்றன. உதாரணமாக, சூரியனுடைய பிரதி பிம்பம் பாத்திரத்தில் விழுகிறது. ஆனால் பாத்திரம் சூரியனாகவே ஆகிவிடுகிறதில்லை. இந்த விதமாகத்தான் இறைவன் விருப்பத்தால் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம்.

**சுவாமி தயானந்த சரஸ்வதி**

(இந்தியக் கிறிஸ்தவரைப் பார்த்த வண்ணம்) காரணமும் காரியமும் நித்திய மென்பதை நீங்கள் ஏன் எதிர்க்க வேண்டும்? ஜடப்பொருளான இவ்வுலகம் அமைவதற்கான பொருட்காரணம், அல்லது அடிப்படை விஷயம் நித்தியமானதே. எண்ணவியலாத ஆத்மாக்களும் நித்தியமானவை. சூனியத்திலிருந்து எதுவும்

உண்டாகாது. இந்த விஷயத்தை நான் முன்பே தெளிவுபடுத்தியிருக்கிறேன். வல்லமையால் தான் சிருஷ்டி உண்டாயிற்று என்று சொல்கிறீர்கள். சொல்லுங்கள், வல்லமை என்பது என்ன? அது ஒரு உண்மைப் பொருள் என்று நீங்கள் கருதினால், அதுவே காரணமாகி, நித்தியமானதாகிறது. ஏனெனில் கடவுளின் பெயர்கள், தன்மைகள், வல்லமைகள் அனைத்தும் என்றுமுள்ளவை; அவற்றில் எதுவும் காலத்தினால் விளைவது அல்ல.

(மவுலவி முகம்மது காசிமுக்கு பதில்) இயல்பான (இறை) குணங்களே இந்த உலக சிருஷ்டி என நீங்கள் குறிப்பிட்டால், உங்களுடைய வாதம் சரியல்ல. ஏனென்றால் பொருட்கள் அமையுமாறு செய்ய அவற்றால் இயலாது. இறைவனுடைய இயல்பான, சத்தான திவ்விய குணங்களாலே தான் இவ்வுலகம் உண்டாக்கப்பட்டது என்றால், அப்பொழுது உலகம் கடவுள்தான் (காரிய உருவக் கடவுள்) என்றாகிறது.

இறைவனுடைய புறத்தன்மையான திவ்விய குணங்களால் உண்டான பொருள் இவ்வுலகம் என நீங்கள் வாதிப்பீராயின், கடவுள் மீதுள்ள நம்பிக்கை யுடன், இந்த குணங்களும் நித்தியமானவை என்றும் நீங்கள் நம்ப வேண்டி யிருக்கும். உலக சிருஷ்டி இறைவனுடைய விருப்பத்திலிருந்து உண்டாயிற்று என்று நீங்கள் வலியுறுத்தினாலோ, இந்த இறைவன் விருப்பம் என்பது குணமா, பொருளா என்று நான் கேட்கிறேன். அது பொருள் என்றால் அது நித்தியம் தான் என்று நம்பாமலிருக்க உங்களால் முடியாது; குணம் என்றால், இவ்வுலகம் அதனின்றும் வெளிப்பட்டிருக்கவும் இயலாது. வெறும் விருப்பத்தினின்றும் எதனையும் உங்களால் செய்ய முடியாது; அது போலவே உலகில் உள்ள உயிர்களும் பிறவும் வெறும் விருப்பத்தினின்றும் தம்மைத் தோற்றுவித்துக் கொண்டிருக்க முடியாது.

**ஸ்காட் பாதிரியார்**

எங்களுக்கு இந்த அளவுதான் தெரியும் : சூனியத்திலிருந்து தான் கடவுள் உலகை இயற்றினார். எதனால், எப்பொழுது, எப்படி என்றெல்லாம் எங்களுக்குத் தெரியாது. அதனைக் கடவுள் மட்டுமே அறிவார் : மனிதனால் அறிந்து கொள்ள முடியாது.

**மவுலவி முகம்மது காசிம்**

*கடவுள் தன்னுடைய ஒளியால் (நூர்) இவ்வுலகை இயற்றினார்.*

**சுவாமி தயானந்தர்**

*(ஸ்காட் பாதிரியாருக்கு விடையாக)*

*ஒரு காரியத்தைக் கண்டு, நாம் அதனுடைய காரணத்தை யூகம் செய்ய முடியும். காரியம் என்கிற இந்த பலன் எப்பொழுதும் காரணத்தின் தன்மை உடையதாக இருக்கும். மண் ஜாடி மண் அல்லது களி மண்ணின் தன்மையைக் கொண்டிருப்பது போல, மண் அல்லது களிமண்ணில் உள்ள அதே பொருளால் தான் ஜாடி அமைக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய சக்தியால் இறைவன் உலகை உண்டாக்கினான் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன், அந்த சக்தி நித்தியமானதா அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே உள்ளதா? நித்தியம் என்றால், அது ஒரு பொருள் என்றும் நீங்கள் நம்புவதுடன் உலகிற்கு அது புறப்பொருட் காரணமாக உள்ளது என்றும் ஏற்க இயலும்.*

*(மவுலவியாருக்கு சமாதானமாக)*

*நூர் என்றால் ஒளி. ஒளியிலிருந்து எந்தப் பொருளையும் செய்ய முடியாது. புறப்பொருள்களின் வடிவங்களைக் காண்பதற்கு அது உதவுகிறது. ஒளி வீசுகின்ற பொருளிலிருந்து விலகியிருக்க அதனால் ஒரு பொழுதும் இயலாது. இதனின்றும் தெளிவாகிற விஷயம், இவ்வுலகிற்குப் பொருட் காரணம் என ஒன்று இல்லாமல் இருக்க முடியாது என்பதாகும். நாமும் காரியம் அல்லது விளைவை முழுதும் நித்தியம் என்று கருதவில்லை; அந்த காரியம் அல்லது விளைவுக்குக் காரணமாக உள்ளதை, மூலப்பொருளாக உள்ளதை மட்டுமே நித்தியம் என்கிறோம்.*

**ஒரு இந்தியக் கிறிஸ்தவர்**

*கடவுள் தம்முடைய சத்தான தன்மையினின்றும் உலகைத் தோற்றுவித்தார் என்றால், அவருடை சத்தாக உலகம் என்றும் இருக்க வேண்டும். அவரும் உலகில் என்றும் நிலைத்திருக்க வேண்டும். இது கடவுளைக் கட்டுப்படுத்துகிறது. அல்லது நிபந்தனைக்குள்ளாக்குகிறது. அப்பொழுது கடவுள் கட்டுப்பட்டவர், நிர்ப்பந்திக்கப்பட்டவர் ஆகிறார்.*

**சுவாமி தயானந்தர் :**

இறைவனில் சத்தாக உள்ள இவ்வியற்கை நித்தியமானது; இதுவே நாம் காணும் வடிவங்கள் கொண்ட பருப்பொருளாக, கட்டுப்பட்ட, அல்லது நிபந்தனைக்குட்பட்ட பொருளாக, உள்ளதேயன்றி, இறைவன் அல்ல. இறைவன் இந்த மூல ப்ரக்ருதி எனும் அடிப்படை இயற்கைப் பொருளுக்கு, பரமாணுக்களால் ஆன இந்த சத்தான பொருளுக்கு, அளவு, நீளம், அகலம், உயரம் முதலிய பரிமாணங்களை அளித்து வடிவங்கள் ஈந்தவர். அதனால் தான் உலகம் கட்டுக்குட்பட்டதாக, நிபந்தனைக்குட்பட்டதாக ஆயிற்று. கடவுள் கட்டுப்பட்டவர் அல்லர்.

நான் ஆரம்பத்தில் கூறியதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். சூனியத் திலிருந்து, வெறுமையிலிருந்து எதுவும் வராது; ஏதேனும் ஒரு பொருளிலிருந்து தான் பொருள் உண்டாகும். உங்களுடைய கருத்துகளும் இதனையே தான் குறிப்பிடுகின்றன. அதாவது, உலகின் காரணப்பொருள் நித்தியமானது என்பதை.

**ஸ்காட் பாதிரியார் :**

கேளுங்கள், என் முகம்மதியச் சகோதரர்களே! பண்டிதர் அவர்கள் இந்தப் பிரச்சனைக்கு ஆயிரம் விதமாக பதில் சொல்வார்; நம்மைப் போன்றோர் ஆயிரம் பேர் சேர்ந்தாலும் கூட அவர் பதில் சொல்வார். அதனால் இந்த விஷயத்தைப் பற்றிப் பேச்சை நீட்டிக்கொண்டு போவது விரும்பத் தக்கதல்ல.

காலை பதினொன்று மணி வரை வாதப் பிரதிவாதம் நடைபெற்றது. பின்னர் எல்லோரும் தத்தம் இருப்பிடம் சென்றனர். இந்தப் பட்டிமன்ற மாநாட்டிற்கு வந்திருந்த ஜனங்களிடையும் இந்த சமய வாதங்களே முக்கியமான பேச்சாக இருந்தது. எல்லோரும் சொன்னார்கள் : " நாம் கேள்விப்பட்டதைவிட இவர் (சுவாமி தயானந்தர்) ஆயிரம் மடங்கு பெரும் ஞானமுள்ளவர் தாம்" என்று

பொது மக்கள் மீண்டும் மதியம் ஒரு மணிக்கு கூடினர். சமய அறிஞர் களிடையே எந்த விஷயத்தைப் பற்றித் தர்க்கம் செய்வது என்று முடிவு ஏற்படவே சிறிது நேரம் சென்றது. ஏனென்றால் பேசுவதற்கான நேரத்தில் பெரும் பகுதி சென்றுவிட்டிருந்தது. மேலும் பல விஷயங்கள் விவாதிக்கப்படுவதற்கிருந்தன. கடைசியாக முக்திவிஷயத்தை (மோட்சம்) எடுத்துக்கொள்வதென்று முடிவாயிற்று. அடுத்தாற்போல இந்த விஷயத்தைப் பற்றிய பேச்சை யார் துவக்கி

வைப்பது என்றும் சிந்திக்கப்பட்டது. முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும், ஒருவர் பின் ஒருவராக, பின் வாங்கினர், மற்றவரை முதலில் தொடங்குமாறு கேட்டுக்கொண்டு. இதனைக் கவனித்த சுவாமி தயானந்தர், இந்த விஷயத்திலும் ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்ட ஒழுங்கு முறையைப் பின்பற்றலாம் என்றார். அதாவது முதலில் ஸ்காட் பாதிரியார் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்; அவரைத் தொடர்ந்து மவுலவி சாகிப், பின்னர் தாம் பேசுவதாகக் கூறினார். பாதிரியாரும், மவுலவியாரும் இதனை ஏற்காததனால், சுவாமிகளே முக்தி விஷயம் பற்றி பேச்சை ஆரம்பித்தார் :-

**முக்தி எனும் வீடு பேறு பற்றி சுவாமி தயானந்தர்**

முக்தி (மோட்சம், வீடு பேறு) என்றால் விடுதலை அதாவது எல்லாவிதமான துன்பம் - துயர்களிலிருந்தும் விடுதலை பெற்று எல்லையற்ற ஞானமும் ஆனந்தமும் உருவான பரமனில் ஆனந்தம் பெறுவது. பிறப்பு-இறப்பினின்றும் விடுதலை பெறுவதை இது குறிக்கின்றது. ஆனால் இதனை (முக்தி நிலை) அடைவது எப்படி? அதனை அடைவதற்கான முதற்படி நல்லொழுக்கம். அறவழி எனப்படும் நல்லொழுக்கம் என்பது என்ன? இதனை இறைவனுக்குச் சம்மதமான, மனித ஆன்மாவுக்கும் சம்மதமான விஷயமாக அறிந்து கொள்ள வேண்டும். இறைவனுடையவும் ஆத்மாவினுடையவும் ஒப்புதல் பெறாத எதுவும் தவறு, பாபம் ஆகும். என் கருத்தை விளக்க ஒரு உதாரணம் தருகிறேன். ஒரு மனிதன் ஒரு பொருளைத் திருடுகின்றான். அதைப்பற்றி அரசன் வினவினால் அந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்று குற்றவாளி மறுக்கின்றான். ஆனால் அவனுடைய ஆத்மா அவனுள் இருந்தவாறு சொல்கிறது- "ஆம், நீ குற்றவாளிதான்" என்று. அதேபோல, திருட வேண்டும் என்று ஒரு மனிதன் நினைக்கிறபொழுது உள்ளே இருக்கும் பரமாத்மா அவனுடைய மனத்தின் ஆழத்திலிருந்து, அது தவறானது, அவன் அதனைச் செய்யக்கூடாது என்று கூறுகின்றான்; பரமாத்மாவாகிய தலைவன் அம்மனிதனின் மனத்தில் அச்செயல் பற்றி **வெட்கம், சந்தேகம், பயம்** முதலிய உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கிறான். ஆனால் ஒரு நல்ல செயலாற்ற மனிதன் நினைக்கும்பொழுது இறைவன் அம்மனிதனின் மனத்தில் ஓர் இன்ப உணர்வை எழுப்பி அவ்வாறே செய்யுமாறு அவனைத் தூண்டுகிறான். ஒரு மேன்மையான செயலைச் செய்யும்பொழுது ஆத்மாவை ஒளியுறச் செய்யும் இன்ப உணர்வுகள், தீய செயல் எதனிலாவது அது ஈடுபடும்பொழுது மறைந்து

*போகின்றன. பரமாத்மாவின் ஆணையை மீறித் தீய செயல்களில் ஈடுபடுகின்ற மனிதனுக்கு எவ்விதமாகவும் மோட்சம் கிடைக்காது. அத்தகைய மனிதனை அசுரன், துஷ்டன், தைத்தியன், நீசன் என்பர். இதற்கு வேதத்தில் ஆதாரம் வருமாறு :*

**ஓம் அஸூர்யா நாம தே லோகா**
**அந்தேன தமஸாவ்ருதா :**
**தாம்ஸ்தே ப்ரேத்யாபி கச்சந்தி**
**யே கே சாத்மஹனே ஜனா:**

**- யஜுர்வேதம், 40.3.**

*ஆத்மாவைத் துன்புறுத்துகின்றவன், அதாவது பரமாத்மாவின் கட்டளையை மீறுகின்றவனும், தன்னுடைய ஆத்மாவின் ஞானத்திற்கு விரோதமாகப் பேசுகின்றவனும் செய்கின்றவனும் நினைக்கின்றவனுமாகிய மனிதனின் பெயர்களே அசுரன், ராட்சசன், பாபி, நீசன் முதலியனவாகும்.*

**முக்தி நிலைபெற வழிகள் :**

*1. சத்திய ஆசாரம் எனும் உண்மை ஒழுக்கம்.*

*2. உண்மை அறிவு அதாவது இறைவனால் இயற்றப்பட்ட வேதம் எனும் அறிவு நூல்களை உள்ளது உள்ளவாறு கற்று அறிந்து உயர்ந்த ஞானம் பெற்று உள்ளது உள்ளவாறே உண்மையைக் கடைபிடித்து செயலாற்றுதல்.*

*3. ஒழுக்கமுள்ள ஞானிகளுடன் தொடர்பு கொள்ளல்.*

*4. யோகப் பயிற்சி செய்து தனது மனம், புலன்கள், ஆத்மா ஆகியவற்றைப் பொய்யினின்றும் விலக்கி உண்மை வழியில் நிலைநாட்டுதலும், அறிவைப் பெருக்குவதும்.*

*5. இறைவனைப் போற்றி வணங்குதல் - அதாவது இறைவனுடைய குணங்களைப் போற்றிச் செவியுறுதலும், சிந்தித்தலும்.*

*6. இறைவனிடம் வேண்டுதல் இவ்விதமாக இருக்க வேண்டும் :- ஜகதீசுவரா, கிருபா நிதியே, எம் தந்தையே, எங்களை அசத்தியத்தினின்றும் விலக்கி சத்தியத்தில் உறுதியுள்ளவர்களாகச் செய். பகவானே, எங்களை இருளினின்றும் (அஞ்ஞானத்தினின்றும்) அதருமம் முதலான தீய செயல்களிலிருந்தும் விலக்கி,*

கல்வி அறிவு, தருமம் முதலிய மேன்மையான செயல்களில் எப்பொழுதும் ஈடுபடுத்து. பிரம்மமே, ஜனன - மரணமென்கிற இவ்வுலகத் துயர்களிலிருந்து விடுதலை தந்து உன்னுடைய அருட்பார்வையால் அம்ருதம் எனப்படும் மோட்ச பதவியை அளிப்பாயாக.

உண்மை உள்ளத்துடன் தன் ஆத்மா, பிராணன், எல்லாத் திறன்களையும் இறைவனில் ஈடுபடுத்தி ஜீவன் இறைவனைத் தொழுகின்ற பொழுது, கருணையே உருவான இறைவன் அந்த ஜீவனை ஆனந்தத்தில் நிலைப்படுத்துகின்றான். ஒரு குழந்தை வீட்டின் மாடியிலிருந்து கீழேயுள்ள பகுதிக்கும், அல்லது கீழ்ப்பகுதி யிலிருந்து மாடிக்கும் சென்று அங்கே உள்ள தன் தாய் தந்தையரைச் சேர விரும்புகிற பொழுது தாயும் தந்தையும் தம்முடைய மற்ற எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு ஓடிச் சென்று குழந்தையை எடுத்துத் தம் மடியில் வைத்துக் கொள்கிறார்கள். குழந்தை எங்கேனும் விழுந்து தன்னைத் துன்புறுத்திக் கொள்வானோ என்ற பயம் அவர்களுக்கு உண்டு. தாயும் தந்தையும் தம் குழந்தையை எப்பொழுதும் சுகமாக வைத்திருப்பதில் விருப்பம் கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது போலவே பரம கிருபாநிதியான பரமேசுவரனிடம் எவரேனும் ஆத்மார்த்தமான உணர்வுகளுடன் செல்லும் பொழுது அவன் தன்னுடைய எல்லையற்ற வலிமையுள்ள கரங்களால் அந்த ஜீவனை ஏற்றுத் தன் மடியில் எப்பொழுதும் வைத்துக் கொள்கிறான். பிறகு அந்த ஜீவனுக்கு எந்தத் துயரும் உண்டாவதில்லை. அது எப்பொழுதும் ஆனந்தத்தில் நிலைத்திருக்கின்றது.

பாரபட்சமின்றி உண்மையைக் கடைபிடித்து பொய்யை விட்டு விட்டு ஜனங்கள் இன்பமாக வாழ முயற்சி செய்ய வேண்டும். தவறான நடத்தை, பட்சபாதம், சுயநலம் இவற்றின் விளைவே அநியாயம். உதாரணமாக, மவுலவி சாகிபின் உடைகள் நேர்த்தியாக இருக்கின்றன. அந்த உடைகள் மீது நான் விருப்பம் கொண்டால் நான் என் சொந்த சுகத்தைப் பற்றி நினைத்தவாறு மவுலவியாரின் சுகத்தைப் பற்றி அலட்சியம் செய்கிறவன் ஆகிறேன். இந்த அநியாயம் அல்லது அதருமத்திற்குக் காரணம் சுயநல உணர்ச்சி. இந்த சுயநலத்திலே நாட்டமானது “அனர்த்தம்” என்று சொல்லப்படுகிற தீய விளைவில் முடியும். காமம் எனப்படும் விருப்பமானது, அதாவது இன்ப நிலை பெற வேண்டும் என்ற விருப்பமானது அறவழி நின்று பொருளீட்டி பொருளை

அடைவதில் இருக்க வேண்டும். அதருமமான முறையில் இன்பம் துய்க்க விரும்புவது குகாமம் எனப்படும். வீடுபேறு எனும் மோட்சம் அறம், பொருள், இன்பம் என்பதன் மூலம்தான் கிட்டும். முன்னரே கூறியது போன்று, இறைவன் விருப்பத்திற்கு இணங்கி வாழ்க்கையை நடத்துவதே தருமம்; அதனை அலட்சியம் செய்வது அதருமம். இத்தகைய விஷயங்கள் தாம் முக்தி அடைய வழிகாட்டுகின்றன. வேறு எதுவும் அல்ல. இந்த முக்தி சுய முயற்சியால் தான் கிட்டும். வேறு எதனாலும் அல்ல.

**ஸ்காட்பாதிரியார்**

பண்டிதர் அவர்கள் துன்பம் துயர்களிலிருந்து விடுதலையே முக்தி என்று திட்டவட்டமாகக் கூறினார். ஆனால், முக்தி என்பது பாவத்தை விட்டு விலகி, சுவர்க்கத்தை அடைவதே என நான் கருதுகின்றேன். கடவுள் ஆதாமைப் புனிதமாகப் படைத்தார். ஆனால் சாத்தான் பாவம் செய்யுமாறு அவனைத் தூண்டினான். ஆதாமின் இந்த வீழ்ச்சியே அவனுடைய சந்ததியார் எல்லோரையும் களங்கப்படுத்திவிட்டது. கடிகாரம் செய்தவர், அந்தக் கடிகாரம் வேலை செய்கிறபொழுது குறுக்கிடாதது போல எந்தவிதமான தடைகளையும் அதற்கு ஏற்படுத்தாமல் அதன் வேலையை அது செய்ய விட்டு விடுவது போல, கடவுள் மனிதனைச் சுதந்திரமுள்ளவனாகப் படைத்தார். அந்த மனிதன் தன் விருப்பப்படி பாவம் செய்கிறான். தன் சொந்த முயற்சியால் மோட்சத்தை அடையவோ, அல்லது துயர்களிலிருந்து தப்பவோ, எந்தவிதமாகவும் அவனால் முடியாது. எனவே மோட்சம் என்கிற நிலை பிரபுவாகிய ஏசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை இருந்தாலொழிய கிட்டாது. இந்துக்கள் பாவம் - தீய செயல்களின் காலமே கலியுகம், இந்த யுகத்தில் மனிதன் முக்தி அடைய மாட்டான் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன், அவர்களுக்கு மோட்சம் கிட்டும், அவர்கள் ஏசுவின் மீது நம்பிக்கை வைத்தாலே போதுமானது என்று.

பிரபு ஏசு சென்ற இடங்களில் உள்ள மனிதர்கள் அதாவது அவருடைய போதனைகள் பரவிய நாடுகளில் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்து சமயத்தைச் சேர்ந்தவர்களையன்றி வேறு எந்தச் சமயத்தாரிடமாவது நல்லொழுக்க முதலான மேன்மையான குணங்கள், குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகிறதா? நம்முடைய பண்டிதர் அவர்களைப் போல மிகவும் திடகாத்திரமான, சக்தியுள்ள ஒரு மனிதன் இங்கிலாந்து தேசத்தில் இருந்தான்.

ஆனால் அவன் குடிகாரனாகவும், திருடனாகவும், காம வெறியனாகவும் இருந்தான். எனினும் கிறிஸ்து சமயத்தை ஏற்றுக்கொண்ட பிறகு அவன் இந்தக் குறைகள், பாவச் செயல்களிலிருந்து விடுபட்டான். அவ்வண்ணமே ஏசுவை என் ரட்சகராக நான் நம்பியதும், எனக்கு மோட்சம் கிடைத்து எல்லாவிதமான தீய செயல்களிலிருந்து நான் விலகியிருக்கின்றேன். ஏசுவின் விருப்பத்திற்கு இணங்கி நடந்தாலன்றி மோட்சம் சாத்தியமில்லை. எனவே எல்லோரும் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும். அவரால் மட்டுமே மோட்சம் தரமுடியும். அதனை அடைய இது ஒன்றுதான் வழி. வேறு எதுவும் இல்லை.

**மவுலவி முகம்மது காசிம் :**

பண்டிதர் அவர்கள் சொன்ன வழிகளே முக்தி பெறப்போதுமானவை என்று எம்மால் கூறமுடியாது. ஏனென்றால் எல்லாம் இறைவன் விருப்பப்படி தான் நடக்கின்றது. எவர் மீது அவனுக்கு விருப்பம் உண்டோ, அவருக்குத்தான் அவன் மோட்சம் தருகின்றான். இந்தக் காலத்திலே ஆட்சி செய்கிற அரசர் தம் விருப்பம் போல பிரஜைகளைத் தண்டிப்பதோ அல்லது விட்டு விடுவதோ போல. இறைவன் மீது நமக்கு அதிகாரம் இல்லை. அவன் என்ன செய்வான் என்று நமக்குத் தெரியாது. ஆனால் இந்தக் காலத்தில் உலகை ஆளுகின்ற அரசப் பிரதிநிதியின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இந்தக் கால கட்டத்தின் அரசர் நமது தூதர் (முகம்மது நபி) அவர்களே. எனவே மோட்சம் என்பது முழுமையாக அவர் மீது நம்பிக்கை வைப்பதில் தான் இருக்கிறது. அறிவு மூலமாக ஒருவர் நற்செயல்கள் செய்ய முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மோட்சம் கடவுள் கையில் இருக்கிற விஷயம்.

**சுவாமி தயானந்த சரஸ்வதி :**

(ஸ்காட் பாதிரியாருக்கு பதில்) பாவத்தை விட்டு விலகுவதால் முக்தி, துன்பத்திலிருந்து விடுதலை பெறுவது என்று நீங்கள் சொன்னது, என்னுடைய பேச்சைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால். நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன், தீய செயல்களினின்று விலகி, பாவம் செய்யாமலிருப்பது முதலியவைகளே மோட்சத்திற்கு முதற்படி என்று. தீய செயல்களின் விளைவுதான் துன்பம்-துயர். வேறு வார்த்தைகளில், மனிதன் பாவம் செய்கிறான்; எனவே துன்பத்திலிருந்து தப்பிக்க முடியாது. சாதனை எனப்படும் வழிகளையும்

நான் தெளிவாகப் பட்டியல் போட்டுச் சொல்லி விட்டேன். நான் சொன்னதை பாதிரியார் அவர்களை நினைவில் கொண்டிருந்தால் அவ்வாறு பேசியிருக்க மாட்டார்கள்.

அவர் சொன்ன இரண்டாவது விஷயம், சாத்தானால் தூண்டப்பட்டு ஆதாம் பாவம் செய்தான். அதனால் அவனுடைய சந்ததியான மனிதர்கள் களங்கமுற்றார்கள் என்பது. இது ஆதாரமற்ற சங்கதி. கிறிஸ்துவ நம்பிக்கைப் படியே, கடவுள் எல்லாம் வல்லவர். ஆனால் சாத்தான் கடவுளால் படைக்கப்பட்ட புனிதப் பிறவியான ஆதாமை இழி நிலைக்கு கொண்டு சென்று, அவ்விதமாகக் கடவுளின் ஆட்சியில் குறுக்கிட்டு, அவரால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பைத் தலைகீழாக மாற்றிய பொழுது, கடவுளின் எல்லாம்வல்ல தன்மை மறைந்துவிட்டது. உண்மை என்னவென்றால் கடவுளின் கட்டளைகளை எவராலும் மீறிக் குறுக்கிட முடியாது. ஆதாம் செய்த பாவத்தால் மனித இனம் முழுவதுமே களங்கப்பட்டு விட்டது என்று சொல்வது, சாதாரண புத்தி, சாமானிய அறிவுக்குப் பொருந்தாது. பாவம் செய்கிறவர் எவரோ அவரே துன்பம் அடைவார். வேறு எவரும் அல்லர். இந்தக் கிறிஸ்துவக் கொள்கையை எந்த அறிவாளியும் ஒப்புக்கொள்ள மாட்டார். அன்றியும் ஆதாமும் ஏவாளும் மட்டுமே மனித குலத்தின் தந்தை தாயாக இருக்க முடியாது. ஏனென்றால் சகோதரர் சகோதரி விவாகமே பாபச் செயல். நிச்சயமாக, ஆதி சிருஷ்டியின் போது ஆண்களும் பெண்களுமாக அநேக மனிதர்களைக் கடவுள் படைத்தார். இதைத்தான் நம்ப வேண்டும்.

இனி சாத்தான் தூண்டினான் என்கிற விஷயம். நான் கேட்பேன்; சாத்தான் எல்லோரையும் தூண்டி விடுகிறான் என்றால், சாத்தானைத் தூண்டி விட்டவர் யார்? அவனுக்குத் தூண்டுதலை அவனே ஏற்படுத்திக் கொண்டான் என்று நீங்கள் சொன்னால், நான் சொல்கிறேன், பிற மனிதர்களைப் பற்றியும் அவ்விதமாகவே அதே அழுத்தத்தோடு சொல்லலாம் என்று. இத்தகைய நிலையில் சாத்தான் தூண்டியதாக நம்புவது பயனற்றது. வேறு யாராலோ சாத்தான் தூண்டப்பட்டதாக நீங்கள் சொன்னால், அந்தச் செயலைச் செய்தவர் கடவுளே அன்றி வேறு எவராகவும் இருக்க முடியாது என்று ஆகிவிடும். இது கடவுளின் வேலைதான் என்றாலோ, உங்களுடைய சமயக் கருத்தின்படி மோட்ச நிலை தருபவர் என்றும் பெறுபவர் என்றும் இருக்க முடியாது.ஏனென்றால் கடவுளே தூண்டுபவராக

இருக்கையில் ரட்சகராக யார் இருக்க முடியும்? இப்படிப்பட்ட நிலை இறைவன் விருப்பத்திற்கு மாறானது. ஏனென்றால் இறைவன் உண்மையும் நியாமும் உருவானவன். அவனுடைய செயல்கள் எப்பொழுதும் நியாயமாகவே இருக்கும். அவன் யாரையும் தூண்டி விடுகிறவனோ அல்லது எவருக்கும் துன்பம் அளிப்பவனே அல்லன்.

கடவுளுடைய ஆட்சியில் இப்படிப்பட்ட குறும்பு செய்தாலும் கூட, அந்தச் சாத்தானைக் கடவுள் தண்டிக்கவோ, கொல்லவோ, அல்லது சிறையில் தள்ளவோ செய்கிறதில்லை என்பது கவனிக்க வேண்டிய விஷயம். கடவுள் செயலற்றுப் போய்விட்டார் என்று தெளிவாகிறது. கடவுள்தான் தூண்டி விட்டவர் என்றும் இது காட்டுகிறது. ஆனால் இவையெல்லாம் பொய்யானவை. சாத்தான் என்று ஒருவர் அல்லது ஒரு பொருள் இல்லை. சாத்தானில் நம்பிக்கை என்கிற விஷயத்தை மனதிலிருந்து வேரோடு நீக்குகின்ற வரையிலும் பாவச் செயல்களிலிருந்து விடுதலை கிடையாது. தாங்கள் பாவிகள் அல்ல என்று நம்பி மனிதர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்: -

"சாத்தான் ஆதாமைத் தூண்டி அவனையும் அவனுடைய சந்ததியையும் பாவத்தில் ஈடுபடச் செய்ததால் கடவுளும் மனித குலத்தை மீட்பதற்காக அவருடைய ஒரே மகனைச் சிலுவையிலறையச் செய்தார். இனி எதைப் பற்றியும் பயம் இல்லை. நாம் பாவம் செய்தால் கூட, ஏசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைப்பதால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும். ஏனென்றால் நம்முடைய பாவங்களுக்காக அவர் தம்மைத் தாமே பலி கொடுத்தார்." நிச்சயமாக இப்படிப்பட்ட மனிதர்கள் பாபத்திலிருந்து தப்ப முடியாது.

"கடிகார" உதாரணம் சரியானதே. ஏனென்றால் எல்லோரும் சுதந்திர மனிதர்கள். ஆனால் இறைவன் விருப்பம் மனிதர்கள் தீய செயல்களிலிருந்து விலகி நற்செயல்களில் ஈடுபட வேண்டும் என்பதாகும். சுவர்க்கத்தை அடைவது மோட்சம், சாத்தானின் தூண்டுதல்கள் காரணமாக மனிதர்கள் பாவத்தினின்றும் தம்மை விடுவித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள் என்றெல்லாம் கூறுவது ஆதாரமற்ற விஷயம் : ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் செயலாற்ற சுதந்திரம் உண்டு ; சாத்தான் என்பது கற்பனை. பாவத்தின் பிடியிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ள உங்களால் முடியும் ; இறைவன் அருளால் மோட்சத்தைப்

பெறவும் முடியும். ஆதாம் கனியைத் தின்றான். அது தான் அவன் செய்த ஒரே ஒரு பாவச்செயல். அதன் விளைவாக சுவர்க்கத்தினின்றும் வெளியேற்றப் பட்டான். நான் கேட்கிறேன், வெறும் கனியை உண்பதே ஆதாமைப் பாவியாக்கி விட்டது, அவனை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றியது என்றால் மோட்சத்தை அடைய விரும்புகிறவர்களாகிய நீங்கள் இத்தகைய பொருட்களை உபயோகிக்காமல் இருப்பீர்களா? இல்லையென்றால் நீங்களும் பாவிகளாகி அதன் விளைவாக சுவர்க்கத்தினின்றும் விரட்டப்பட மாட்டீர்களா? எனவே நீங்கள் சொல்வது சரியல்ல.

கடவுள் பற்றிய உங்கள் கருத்தே மானுடமாக உள்ளது. அதாவது மனிதன் எல்லாமறிந்தவனல்லன்; அது போலக் கடவுளும் எல்லாமறிந்தவர் அல்லர். காரணம், உங்களுடைய சமய நம்பிக்கையின் படி, கடவுளிடம் ஏசு சாட்சியம் சொல்வார், வாதிப்பார், முறையிடுவார் என்கிறீர்கள். இப்படிப்பட்ட விஷயம் எல்லாம் வல்ல இறைவனில் குறை காண்பதாகும். கடவுள் எல்லாமறிந்தவராதலின் மனிதர்களுக்காக ஒரு வக்கீல் அல்லது சாட்சியம் அவருடைய நீதிமன்றத்தில் தேவையில்லை. சாட்சியம் யாருடைய நன்மைக்காக? அவரைப் பற்றிக் கடவுளுக்குத் தெரியாது என்ற நிலை இருந்தால்தானே சாட்சியம் தேவை? மேலும் உங்களுடைய கருத்துப்படி கடவுள் ஒருவரை முக்கியமாகச் சார்ந்து இருக்கிறார். ஏனென்றால் ஏசுவின் சாட்சியமின்றி எவருக்கும் மோட்சம்தர அவரால் முடியாது. அதாவது, அவர் எல்லாம் வல்லவர், எல்லாமறிந்தவர் என அவருடைய குணங்களை நீங்கள் ஒப்புக் கொண்டு விட்ட பிறகு அவருடைய அறிவு ஒரு எல்லைக்குட்பட்டது என்பது பொருந்தாத விஷயம். இதனை நீங்களே ஒப்புக் கொள்வீர்கள். கடவுள் நீதிமான் என்றால் அவருடைய இந்த குணத்தை விட்டு விட்டு எவருடைய குறுக்கீடு-சாட்சியத்தையும் அவர் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி அவர் செய்தால், அவர் நீதிமானும் அல்ல. அதுபோன்றே, அவரது தெய்வீக அவையில் தேவதைகள் முதலானோர் மனிதர்களுடைய நீதிமன்றங்களில் இருப்பது போல் இருக்கிறார்கள் என்று நீங்கள் நம்பினால், அவருடைய திவ்வியத் தன்மையைப் பல விதங்களில் குற்றம் குறைகளுடையதாகச் செய்து விடுகிறீர்கள். ஏனென்றால் அத்தகைய நிலைமையில் கடவுள் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவராகவும், எல்லாவற்றையும் தமக்குள் அடக்கியிருப்பவராகவும் இருக்க முடியாது. கடவுள் எங்கும் உள்ளவரல்ல

எனிலோ அவர் உடல் தரித்தவராக, உருவமுடையவராகின்றார். உருவமுடையவர், உடல் கொண்டவர் என்றாலோ எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவராகவும், தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவராகவும் அவர் இருக்க முடியாது.

மேலும் உடல் தரித்தவர் பிறப்பு-இறப்புக்கு ஆளாகின்றார். இது கடவுள் தன்மைக்கு மாறுபட்டது. ஆகையினால் இத்தகைய நம்பிக்கை ஒரு பொழுதும் ஏற்கத்தக்கது அன்று என்று தெளிவாகிறது. காரணம் அது அவரை ஒரு எல்லைக்குட்பட்டதாகச் செய்து விடுகிறது.

கவனியுங்கள், ஆர்ய(இந்து) சாத்திரங்களைச் சரிவரப் படிக்காததால், மனிதர்கள் தவறான கருத்துகள் கொண்டவர்களாகி விடுகிறார்கள். கலியுகத்தைப் பற்றி பாதிரியார் அவர்கள் சொன்னார்கள். அது தவறான விஷயம். எங்களுக்கு (ஆர்யர் / இந்துக்களுக்கு) அதனில் நம்பிக்கையில்லை. ஏனென்றால் வேதத்தின் போதனை, ஐதரேய பிராமணத்தின் படி,

**கலிஷ்ஷயானோ பவதி ஸஞ்ஜிஹானஸ்து த்வாபர:|**
**உத்திஷ்டம் ஸ்த்ரேதா பவதி க்ருதம் ஸம்பத்யதே சரன்||**

*-ஐத. பஞ்ஜிகா 7, கண்டிகா 15*

அதாவது, எப்பொழுதும் அதருமத்தில் ஈடுபட்டு, பெயரளவுக்கு தருமவானாக இருக்கிறவனை கலி என்றும், பாதி அளவுக்கு அதருமம் செய்து மற்றப் பாதிக்கு தருமவானாக உள்ளவனை த்வாபர என்றும், கால் பங்கு அதருமவான், முக்கால் பங்கு தருமவானாக உள்ளவனை த்ரேதா என்றும், முழுமையும் அறவழி நிற்போனை சத்ய என்றும் அழைக்கின்றோம்.

(கலியுகத்தான் =ஆஷாடபூதி, பகல் வேஷக்காரன்; த்வாபரயுகத்தான் = சிரத்தை இல்லாதவன்; திரேதாயுகத்தான் = போற்றத்தக்கவன்; சத்யயுகத்தான் = சத்யசந்தன், அறவோன். - ஆங்கில மொழி பெயர்ப்பாளர்)

இந்த உண்மையினை அறிந்து கொள்ளாமல் ஏதேதோ பேசுவது சரியல்ல. பாவச் செயல்களில் ஈடுபடுவோர் அவற்றின் துன்ப மயமான பலன்களிலிருந்து தப்ப முடியாது. நற்செயல்களில் ஈடுபடுவோர், அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராயினும், இன்புறுவர்.

ஏசுவின் இடைப்படுதலின்றி இறைவனால் தன் வல்லமையால் தன் பக்தர்களைக் காப்பாற்ற முடியாதா? முடியும் என்பதுதான் பதில். காரணம் தூதர்கள் அவருக்குத் தேவையில்லை, என்பதே. அறவழி நிற்கும் மகான்கள், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயினும், மக்கள் பாவம் செய்வதினின்று காப்பாற்றுகின்றார்கள். அத்தகைய நாடு செல்வமும் சிறப்பும் அடைகிறது. இந்த விரும்பத்தக்க விளைவு முக்கியமாக அறநெறி நின்றொழுகுவதால் உண்டாகிறது. வெறும் மத சம்பிரதாயங்களால் அல்ல. பண்டைக் காலத்தில் ஆர்யர்களிடையே (இந்துக்களிடையே) சான்றோர்களால் நல்லுபதேசங்களுக்கான ஏற்பாடுகள் இருந்தன. அதன் பலனாக ஆர்யர்களின் (இந்துக்களின்) நிலைமையும் நன்றாக இருந்தது. இப்பொழுது தக்க உபதேசகர்கள் இல்லாததாலும், பல வேறு காரணங்களாலும் அவர்கள் சீர்கெட்டுப் போயிருக்கின்றார்கள். என்றாலும் இந்தச் சீர்கேடு காரணமாக அவர்களுடைய உயரிய மேன்மையான தருமத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.

சிருஷ்டியின் ஆரம்பத்திலிருந்து ஆர்ய (இந்து) தருமம் மட்டுமே தன்னுடைய புனிதத் தன்மையைக் காப்பாற்றி வந்துள்ளது- அதனில் தகாத விஷயங்கள் பல புகுத்தப்பட்டுள்ளன. கடந்த 1800 ஆண்டுகளில் கிறிஸ்தவர்களாலும் 1300 ஆண்டுகளில் முகம்மதியர்களாலும் நிகழ்ந்துள்ள தீமைகளுடன் ஒப்பிட்டால் கடந்த 196,09,52,976 ஆண்டுகளில் நமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள தீமை அப்படியொன்றும் பெரிதல்ல. கிறிஸ்தவர்கள் வளமையாக இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய சமயம் அல்ல, அவர்களுடைய நல்ல கட்டுப்பாடான ஒழுங்கு முறையுள்ள அமைப்பே ஆகும். பிரிட்டிஷ் பாராளுமன்றம் இதற்கு ஒரு உதாரணம். இந்த ஒழுங்கான அமைப்பு உங்களிடையே (கிறிஸ்தவர்களிடையே) இல்லாவிட்டால், உங்கள் சமயத்தின் மூலமாக நீங்கள் திடமான முன்னேற்றம் அடைந்திருக்க முடியாது. இங்கிலாந்தில் வாழ்ந்த ஒரு தீயவரின் உதாரணத்தைப் பாதிரியார் அவர்கள் சொல்லி அவர் என்னைப் போல (உடலுறுதியுள்ளவராக) இருந்ததாக ஒப்பிட்டுச் சொன்னார். இது பாதிரியாரின் உயர் நிலைக்குப் பொருந்துவதல்ல. உள்நோக்கம் எதுவுமின்றி அவர் அப்படிச் சொன்னாரென்றே நான் கருதுகின்றேன்.

(மவுலவியாருக்கு பதில்) முக்தி விஷயம் பற்றிமவுலவியார் சொன்னார்கள், கடவுள் தம் விருப்பம் போல் செய்கிறார் என்று. இது அறிவுக்குப் பொருந்தாது.

ஏனெனில் கடவுள் அறிவு மயமானவர்; நியாயம் செய்கிறவர்; அவர் எவருக்கும் பாரபட்சம் காட்டுகிறவர் அல்ல. மேலும் மவுலவியாரின் கூற்றினால், கடவுள் தாம் தீங்கு செய்கிறவர், உலகில் உள்ள தீமை கடவுள் விருப்பத்தின் விளைவு என்பதாக உணர்த்துகின்றது. இது உண்மையாக இருக்க முடியாது. மோட்ச நிலை பெறுவதற்கான நற்செயல்களைச் செய்கிறவர் எவராக இருப்பினும் அவருக்குத் தான் அது கிட்டுகிறது. அத்தகைய நற்செயல்களைச் செய்யாதவருக்கு அல்ல. காரணம் கடவுள் ஒரு பொழுதும் அநியாயம் செய்கிறதில்லை. மனிதர்களுக்கு இன்ப நிலை அளிப்பதும், அல்லது துன்பமும் வேதனையும் தருவதும் அவர் மனம் போன போக்கில் தான் என்றால் கடவுளுடைய அத்தகைய நடத்தையினால், அவர் அநியாயம் செய்கிறவர், பாரபட்சமுள்ளவர் என்ற குற்றச்சாட்டு உண்டாகும். உண்மையில் இறைவன் அவ்வாறு செயலாற்றுவதில்லை. தன்னுடைய இயல்புக்கு மாறாக நெருப்பு சுடாமலிருக்க முடியாதது போல, இறைவனும் தன்னுடைய இயல்புக்கு, அதாவது உலக முழுவதற்கும் நியாயம் செய்கிறவர் என்ற நிலைக்கு மாறாகச் செல்ல முடியாது. மிக மிகக் குறைந்த அளவில் கூட அநியாயம் என்பதாக ஒன்றை அவர் ஒருக்காலும் செய்வதில்லை.

எல்லாக் காலத்திலும் முக்தி நிலை தருகின்றவர் உலகின் தலைவரான கடவுள் ஒருவர் மட்டுமே. வேறு எவரும் அல்ல. மோட்சம் தருகிறவராக வேறு எவரையேனும் குறிப்பிடுவோர் தவறான கருத்துடையவர் ஆவர்.

ஒரு தனி மனிதர் மீது வெறும் நம்பிக்கை வைப்பதால் மட்டுமே முக்தி நிலை (வீடு பேறு) அடைதல் சாத்தியமன்று. வெளியிலிருந்து ஒருவர் குறுக்கிட்டு சாட்சியம் சொல்வதாலேயே வீடு பேறு கிட்டுமெனில் கடவுளுக்கு அதனை அளிப்பதாகிய வல்லமை உண்மையில் இல்லையென்று ஆகிவிடுகிறது; வேறு சொற்களில் கூறுவதானால் அந்த விஷயத்தில் கடவுள் சுதந்தரமுடையவர் அல்ல! அப்படிப்பட்டவர் கடவுளாக இருக்க முடியாது! உண்மைக் கடவுளுக்கு எவருடைய சாட்சியமும் தேவையில்லை, அவர் எல்லாம் வல்லவர். எல்லா அறிஞர்களும் அவரைப் பற்றி இத்தகைய கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். முன் விருப்பம் காரணமாகச் சில அறிஞர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அது வேறு விஷயம். தனக்கு இணையாக ஒருவரும் இல்லாதவன் என்று இறைவனைப் பற்றிய நம்பிக்கை உள்ளவர்களாகிய நீங்களே தூதர்களை அவனோடு இணைத்து விட்டு,

எவர் முக்தி அடைய வேண்டும், எவருக்கு அது கிடையாது என்பதைத் தீர்மானிக்க அவர்களுடைய ஆலோசனை இன்றியமையாதது, என்று சொல்வது விந்தையாக இருக்கிறது.

உண்மை இதுவே: அறவழி நிற்போர் நற்செயல்களில் ஈடுபட்டு அவற்றை நிறைவேற்றுவதால் இறைவன் அவர்களுக்கு வீடு பேறு எனும் முக்தி நிலை அளிக்கின்றார். இந்த விஷயத்தில் எவருடைய உதவியும் அவருக்குத் தேவை இல்லை. பிறரின் உதவி மனிதனுக்குத்தான் தேவை. கடவுளுக்கு எவருடைய உதவியும் தேவையில்லை. அவர் மனம் போனபோக்கில் நடப்பவரும் அல்லர். அவர் அப்படித்தம் விருப்பம் போல செயலாற்றுகிறவர் என்றால் அவர் அநியாயம் செய்கின்றவராகிறார். உண்மையில் அவர் தமது இயல்பினின்றும் விட்டு மாறாதவர். அவர் தம்முடைய உண்மையான, அறவழிநிற்கும் பக்தர்களுக்கு முக்தி தந்து அவர்களை எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கச் செய்கின்றார்.

மாலை மணி நான்கு ஆயிற்று. சுவாமிகள் தாம் இன்னும் பல விஷயங்கள் கூறவேண்டியுள்ளது என்றார். முஸ்லிம்கள் தொழுகைக்கு நேரமாயிற்று என்றனர். ஸ்காட் பாதிரியார் சுவாமிகளுடன் தனிமையில் உரையாட விருப்பம் தெரிவித்தார். எனவே இருவரும் அதற்காக வேறிடம் சென்றனர். அவர்கள் இருவரும் சென்ற பிறகு, மவுலவிகளுள் ஒருவர் மேடை மீதேறி தன் சமயத்தைப் பற்றி ஆவேசமாகப் பேச ஆரம்பித்தார். அவருக்குச் சற்று தொலைவில் பாதிரிகள் தம்முடைய கொள்கைகள் பற்றி பேசலாயினர்.

பட்டி மன்றம் முடிவடைந்துவிட்டது என்று சிலர் தெரிவிக்க, இதனைச் செவியுற்ற சுவாமிகள் மவுலவியார்கள் தொழுகையிலிருந்து திரும்ப வந்து விட்டார்களா என்று பாதிரிமார்களையும் ஆர்யர்களையும் (இந்துக்களையும்) கேட்டார். பட்டிமன்றம் முடிவுற்றதாகப் பதில் வந்தது. சம்பந்தப்பட்டவர்களின் சம்மதமின்றியோ, அல்லது விவாதத்தைத் தொடரலாமா வேண்டாமா என்று கேட்காமலோ, இப்படி யார் முடிவு செய்து அறிவித்தார்கள் என்று சுவாமிகள் வினவினார். குழப்பமும் கூச்சலும் அதிகமாக இருந்தது. மேலும் விவாதம் நடைபெற வாய்ப்பில்லை என்பதால் சில அன்பர்கள் பட்டிமன்றம் முடிவுற்றது என்றும் சுவாமிகள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டினார்கள்.

குறைந்தது ஐந்து நாளாவது பட்டிமன்றம் நடைபெற வேண்டுமென சுவாமிகள் விருப்பம் தெரிவித்தார். தம்மால் இரண்டு நாட்களுக்கு அதிகமாக இருக்க முடியாது என்றார் ஸ்காட்பாதிரியாரவர்கள். எனவே சுவாமிகள் தம் இருப்பிடத்தை அடைந்து, "தருமத்தின் கொள்கைகள்" பற்றி விளக்கம் தர ஆரம்பித்தார்.

அன்றைய தினமே ஸ்காட் பாதிரியாரவர்கள் தம் துணைவர்கள் இருவருடன் சுவாமிகள் தங்கியிருந்த இடத்திற்கு வருகை தந்தார். மறுபிறப்பு என்கிற கொள்கை உண்மைதானா என்று அவர் வினவியதும், சுவாமிகள் ஆமென்று பதில் தந்தார். சுவாமிகள் மேலும் சொன்னார்: மறுபிறவி மனிதனின் கருமத்திற்கு (செயலுக்குத்) தக்கவாறு அமைகிறது. நற்செயல்கள் புரிவோர் மனிதப்பிறவி எடுக்கின்றனர். தீயசெயலில் ஈடுபடுவோர், பறவைகள், மிருகங்கள் முதலிய உடல்களைப் பெறுகின்றனர். மிக மிக உயர்ந்த நற்கருமங்கள் மேலான செயல்கள் செய்தவர்கள் தேவர்களாகவும் ஞானிகளாகவும் முனிவர்களாகவும் பிறக்கின்றனர். இந்த கொள்கையின் உண்மையினை விளக்குவதற்கு உதாரணமாக சுவாமிகள் கூறிய விஷயம்: பிறந்தவுடனேயே குழந்தை தாயின் மார்பகம் பற்றிப் பாலருந்த ஆரம்பிக்கிறது. முற்பிறவியின் அனுபவம் காரணமாகத் தான் குழந்தை அவ்வாறு செய்யத் தூண்டப்படுகிறது. மேலும் செல்வம், இன்பம் எனுமிவற்றில் காணப்படுகிற கூடுதல் குறைதல் முதலான வேறுபாடுகள், சமூக நிலையில் உள்ள வித்தியாசங்கள் இவையாவும் கர்மத்தின் விளைவுகளே. செயல்கள் தாம் பிறப்புக்களை (உடல்களை) நிர்ணயிக்கின்றன. ஆன்மாக்கள் எண்ணற்றவை, அவற்றிற்கு முதலும் முடிவும் இல்லை. முந்தைய பிறவியின் சமஸ்காரம் அல்லது படிமம் ஆன்மீக உடலுடன் இணைந்து இருக்கிறது. மனிதர்களிடையில் பல வேறுவிதமாக குணங்கள், தன்மைகள் இருக்கக் காரணம் இதுவே.

இதுபோலவே முற்பிறவி-மறுபிறவி எனப்படும் இந்தக் கொள்கையின் உண்மையை நிரூபிக்க மேலும் அனேக சான்றுகள் உள்ளன. ஆனால் ஆன்மாவும் ஒரு படைப்புதான், அதுவும் கடைசியில் மறைந்துவிடும் என்ற கருத்துக்கு ஆதாரம் இல்லை. மரணத்திற்குப் பிறகு ஆத்மா தூங்குகிறது என்பதும், கடைசித்தீர்ப்பு நாள் என்பதும் உண்மை அல்ல என்றார் சுவாமிகள்.

உரையாடலுக்குப் பின் பாதிரிமார்கள் விடைபெற்றுச் சென்றனர்.

ஷாஜஹான்பூர் சென்றபின்னர் மவுலவியார்கள், விவாதத்திற்கு அங்கு வருமாறு பண்டித முன்ஷி இந்திர மணி அவர்களுக்குக் கடித மூலம் அழைப்பு விடுத்தனர். ஆனால் சுவாமிகளும், முன்ஷியாரும் அங்கு சென்றபொழுது எவரும் தர்க்கம் செய்யப் பட்டிமன்றம் அமைக்க முன்வரவில்லை.

**பிற்சேர்க்கை எண்.1**

“ஸ்பெயின் நாட்டில் தோர்க்கி மாடா (கிறிஸ்தவ சமயத் தலைவர்) ஹிப்ரு மொழியில் (இன்றைய இஸ்ரேலின் அரசு மொழி, யூத மக்களின் தாய்மொழி) உள்ள நூல்களைக் கிடைத்த இடங்களில் எல்லாம் எரித்து அழித்தார். சலமான்கா எனுமிடத்தில் மட்டும் 6000 கீழ் நாட்டு மொழி நூல்கள் (யூத, அராபிய) தீக்கிரையாயின. 119 அறிஞர்கள் சமயக் கொள்கைக்கு விரோதமானதைக் கற்பித்ததற்காக அல்ல, விஞ்ஞானம் கற்பித்ததற்காக பாதாளச் சிறையில் தள்ளப்பட்டனர். இது ஸ்பெயின் நாட்டில் இன்க்விசிஷன் என்ற பெயரால் நடைபெற்ற மத விசாரணைக் கொடுமையின் போது நிகழ்ந்தது. பிரான்சு நாட்டில் ஹ்யூஜி நாட்டுகள் எனப்படும் கிறிஸ்தவ ஆதிக்கவாதிகள் ஆட்சிக்கு வந்து கிரேக்க மொழி, ரசாயனம் கற்பதைத் தடை செய்தனர். அதே நாட்டில் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தார் எந்தவிதமான விஞ்ஞான அறிவு நூலும் கற்பிக்கக்கூடாது என அவை எல்லாவற்றையும் விலக்கிவிட்டனர்”. (அன்னி பெசண்ட் அம்மையார்)

முகம்மதியர்கள் தாங்கள் சென்ற விடங்களில் எல்லாம் எல்லாவிதமான நூல்களையும் எரித்தனர். கி.பி. 1303-ல், வங்காளத்தின் மீது படையெடுத்துச் செல்லும் வழியில், பாட்னா நகரில் இருந்த மிகப் பெரிய நூலகத்தை பக்தியார் கில்ஜி என்ற முஸ்லிம் படைத் தலைவன் தீக்கிரையாக்கினான். வேதம் என்று கேட்டாலே முகம்மதியர்கள் ஆச்சரியப்படுகின்றார்கள். ஏனென்றால் அவர்களுடைய செல்வாக்கு உச்சகட்டத்தில் இருந்த பொழுது வேதங்களையும் பிற எல்லாச் சமய நூல்களையும் எரித்து விட்டதாக அவர்கள் நம்புகிறார்கள். கலிபா உமர் என்பவரின் கட்டளைப்படி, அலெக்ஸாண்டிரியா நகரில் (எகிப்து நாட்டில் உள்ளது) இருந்த உலகப் புகழ்பெற்ற நூலகம் தீயிடப்பட்டு

மாதக்கணக்காக எகிப்து நாட்டில் முஸ்லிம்களின் குளியலறைகளில் வெந்நீர் போடுவதற்கு உபயோகமாயிற்று.

**பிற்சேர்க்கை எண்:2**

முதலில் திட்டமிட்டபடி பட்டிமன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. இதற்குக் காரணம், அந்த இடத்தில் தங்கியிருந்து விவாதிக்க கிறிஸ்தவ, முகம்மதிய சமயத்தலைவர்கள் முன்வரவில்லை. சமயக் கொள்கைகளைப்பற்றிய உண்மைகளை ஆராய்கின்ற இத்தகைய பொது பட்டிமன்றங்கள் இந்திய உலகில் பொது மக்கள் கவனத்தை மிகவும் ஈர்ப்பனவாகும். உலகம் முழுவதும் உள்ள ஹிந்து, கிறிஸ்தவ, முகம்மதிய சமயத் தலைவர்கள், குருமார்கள் தம்மைப் பின்பற்றுவோரால் ஆதரிக்கப்பட்டு செல்வந்தர்களாக இருக்கின்றவர்கள். சமயச் சார்பை விட உலகியல் அல்லது பொருளாதாரச் சார்பே அவர்களுக்கு முக்கியம் என்பதால் இத்தகைய பட்டிமன்றங்களில் ஈடுபாடற்றவர்களாக உள்ளனர். சுவாமிகள் தம் ஏமாற்றத்தை வருத்தத்தின் மூலம் வெளிப்படுத்தினார். என்ன பயன்? பாதிரிகளும் தர்க்கம் செய்வதற்காகத் தங்கியிருக்க முன்வரவில்லை. மவுலவிகள் ஷாஜஹான்பூரில் பட்டிமன்றம் நடத்துவோம் என்று கூறிச் சென்றாலும், சுவாமிகள் அந்த ஊரை அடைந்த பொழுது பேசுவதற்கு யாரும் வரவில்லை.

இந்த சாந்தாபூர் சமய விவாதம் கற்றறிந்த இந்தியர்களுக்கு மெதுவாகவும் ஆனால் திடமாகவும் புரியச் செய்த விஷயம் இதுதான்: வேத தருமத்தோடு ஒப்பிட்டால் கிறிஸ்தவமும் முகம்மதிய மதமும் நிலை நிற்கா; வேத சமயம் அவற்றைவிட மிக உயர்ந்தது; அதனில் உண்மை இருக்கிறது. உண்மையைத்தவிர, முழு உண்மையைத் தவிர வேறு எதுவும் அதனில் இல்லை

## பிற்சேர்க்கை எண் : 3

# வேதமும் வேத காலமும்

முன்னுரை:- வேதம் என்பது என்ன? அது எப்பொழுது இயற்றப்பட்டது? வேத காலத்து மக்கள் எத்தகையவர்கள்? இந்த விஷயங்களைப் பற்றி என்னுடைய கருத்துகளை வெளியிடவே இந்நூலை இயற்றியுள்ளேன். இதை எழுதுவதற்கு காரணம் உண்டு. சில மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்கள், சிந்தனையாளர்கள் தங்களை வேதவித்வான்களாகக் கருதி கொண்டு அதையே பிரசாரம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய சிந்தனைகள் பலவும் பொய்யானவை. உண்மையானவை அல்ல.

இந்த யுகத்தில் வேதத்தையும் வேத காலத்தையும் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் உண்டானதன் காரணமாக பகீரத முயற்சி செய்கிறார்கள். அதற்கு அடிப்படை அமைத்து கொடுத்தவர் சுவாமி தயானந்தர்.

அவர் வேதகாலத்தை குறித்து சிலவற்றை எழுதித் தந்தார். ஆனால் அதற்கும் ஆதாரமான சங்கதிகளை அவர் எடுத்துக்காட்டவில்லை. பாரத சரித்திரமும், இலக்கியமும் அறிந்தவர்கள் இக்காலத்தில் பலர் உண்டு எனினும் அவர்கள் மேன்னாட்டார்களையே பின்பற்றி செல்கிறார்கள். அதுதான் ஒருகுறையாகும். ஐரோப்பியன் இண்ட்டாலிஜிஸ்டுகள் எழுதியவற்றைப் படித்து அவர்களை கடுமையாக விமர்சனம் செய்கிற இந்திய வித்வான்கள் கூட ஐரோப்பியர்களை ஓரளவு பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள்.

மத்திய கால பாரதிய வித்வான்கள் அதாவது சாயணர், மஹிதரர் போன்றவர்களின் பாஷ்யங்களை ஏற்றுக் கொள்கிறவர்கள் கூட திதி-காலம் பற்றி மவுனமாக இருக்கிறார்கள் அல்லது வேத காலத்தைப் பற்றி நிச்சயமாக தெரிந்து கொள்ள ஆதாரம் இல்லை என்கிறார்கள். இதனால் நாம் இந்த விஷயம் பற்றி சிந்தித்து சிலவற்றை இங்கே எழுதுகிறோம். எமது கருத்துகளை உறுதிப்படுத்தி யுக்தி, தர்க்கம், பிரமாணம் மூன்றும் கொடுக்க முயற்சி செய்துள்ளோம். அப்படியும் நான் எழுதியது தான் 'த்ருவ ஸத்தியம்' என்று உரிமை கொண்டாடவில்லை. விஷயம் அவ்வளவு பெரிது. யூகம் செய்வதற்கும்

கடினமானது. எமக்குக் கிடைத்த ஓரளவு ஆதாரங்களைக் கொண்டே இந்த நூலை எழுதியுள்ளோம்.

மகரிஷி தயானந்தர் எழுதினார்:- ரிக் என்றால் ஸ்துதி - இறைவனைப் போற்றல், ஸ்துதி என்றால் ஏதாவது ஒரு பொருள் - ஒரு நபர் பற்றி விசேஷ பண்பு செயல் தன்மைகளைப் பற்றி சொல்வது. அதாவது ருசுக்கள் - ரிக்வேத மந்திரங்கள் பூமியிலிருந்து பரமாத்மா வரைக்கும் எல்லா பொருளைப் பற்றியும் குண-கர்ம-சுபாவ வர்ணனைகளை விளக்குகின்றன. முடிந்தவரை எளிய மொழியிலேயே எழுதியுள்ளோம்.

நோக்கம் :- வேதம் ஞானம் - விஞ்ஞான நூல் என்பதை உறுதிப்படுத்த:-

ஞானம் என்றால் என்ன? அனாதி மூல தத்துவங்களைப் பற்றின வர்ணனைதான் ஞானம். இவற்றின் பரஸ்பர தொடர்பு. விஞ்ஞானம் என்பது காரிய ஜகத் அதாவது செயல்படும் விஷயங்களில் பலவகைப் பொருள்களை உபயோகித்துக் கொள்ள அவற்றின் விசேஷத் தன்மைகளை வர்ணிப்பது. இவ்விரண்டும் வேதத்தில் உள்ளன. இதுதான் சுவாமி தயானந்தரின் உறுதியான கருத்து. இதை நாமும் ஒப்புகிறோம். இருப்பினும் சுவாமி தயானந்தர் வேதத்தின் உற்பத்தி விஷயம் பற்றி “ரிக் வேதாதி பாஷ்ய பூமிகா” நூலில் எழுதுகிறார்.

வேத உற்பத்தி விஷயம்:- வேதங்கள் உண்டாக்க - உற்பத்தி செய்யப்பட்டவை அல்ல. ஜீவாத்மா - பரமாத்மா - மூல பிரகிருதி இவை மூன்றும் அனாதி. இது புரியவில்லை என்று சிலர் சொல்வார்கள். சுவாமி சில மந்திரங்களை எடுத்தாண்டுள்ளார். அதில் ‘ஜஜ்ஞிரே’ அல்லது ‘அபாதக்ஷன்’ என்று வருகிறது. இதன் பொருள் உற்பத்தியாயிற்று என்று அல்ல அல்லது முன்பேயே தோன்றியிருந்தது என்றும் அல்ல. இங்கு இந்த இரண்டு சொற்களுக்கும் பொருள் வேத ஞானத்திலிருந்து என்று அல்ல. மாறாக வேதத்தின் இன்றைய தொகுப்பு, மொழி அதனுடைய தனித்தன்மை குறித்தாகும். வேத வித்யா (த்ரயி வித்யா) அது உற்பத்தி செய்யப்பட்டது அல்ல. எனவே இந்த சொற்களின் நிர்வசனம் - Definition - விளக்கம் தோன்றியது என்றாகும். இதை தான் அபௌருஷேயம் - (மனிதனால் உண்டாக்கப்பட்டது அல்ல) என்கிறோம்.

ஆனால் இது ஒரு சாதாரண ஞானம். சில சமயங்களில் பெரும் வேத வித்வான் கூட சாதாரண மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக சாதாரண மொழியை உபயோகிக்கிறார்கள்.

எனினும் வேதத்தினுடைய இந்த பூமி எப்படி தோன்றியது? அதனுடைய காலம் என்ன? என்றெல்லாம் கேட்டால் நாம் சொல்கிறோம். இந்த பூமியும் மனிதனும் உற்பத்தியாவதற்கு முன்பே அல்ல. அதனோடே தோன்றியது.

எனவே வேதங்கள் தோன்றிய காலத்தை குறித்த வர்ணனையில் தேவைப்படும் விஷயம்-இந்த பூமி தோன்றிய காலமும், மனிதன் தோன்றிய காலமும் வேதத்தில் குறிப்பு உண்டு. ரிஷி தயானந்தர் எழுதுகிறார்:- 'வேதானாம் உத்பத்தௌ இயதி வர்ஷானி யதிராணி'.

'அத்ரோச்யதே'' - ''ஏகோ வ்ருத:'' ''கோட்யோ அஷ்டௌலக்ஷாணி த்விபஞ்சாஷத் ஸஹஸ்ராணி, நவ ஷதானி ஷட் ஸப்ததி சைதாவதி'' (1966852979 வருடங்கள்).

''வர்ஷாணி வியதிதானி''.

''ஷப்த ஷப்ததி தமோ அயம் ஸம்வத்ஸரோ வர்த்தத இதி வேதிதவ்யம்.''

''யேதாவத் ஏவ வர்ஷானி வர்த்தமான கல்ப சிருஷ்டே சேதி.'' - அதாவது வேதம் தோன்றி எத்தனை வருடங்கள் ஆயிற்று? ஒரு நூறு கோடி 96 கோடி 8 இலட்சம், 52 ஆயிரம், 979 வருடமாயிற்று என்று சொல்லப்படுகிறது. இந்த வருஷமே வேதத்தினுடையவும் உலகத்தினுடையவும் உற்பத்தி காலம் ஆகும்.

இப்பொழுதைய ஸம்வத்ஸரம் 77-வது ஆண்டு ஆகும். 77-வது வருடம் என்றால் 1777 என்று கருதலாம். இந்த வருடத்தில் சுவாமி வேதபாஷ்யம் செய்ய ஆரம்பிக்கிறார்.

சிருஷ்டி தோன்றிய காலத்தை குறித்த கணக்கு மனுஸ்மிருதியிலும் உண்டு. சூரிய சித்தாந்தத்திலும் உண்டு. அங்கும் இதே யுகக் கணக்குத்தான் தரப்படுகிறது. அதாவது 197, 29, 42976 ஆண்டுகள்.

பண்டித யுதிஷ்டிர மீமாம்ஸகர் இந்த கால கணக்கு ஒரு விதத்தில் தப்புதான் என்கிறார். இந்த தவறு மன்வந்த்ரங்களின் காலம் முதலியவற்றில் இறுதியில் வருகிற சந்திகாலம் பற்றி உள்ள கணக்கு எடுக்கப்படாததால்.

நாம் கருதுகிறோம்-சிருஷ்டி தோன்றிய காலக்கணக்கு இரண்டு விதமாகக் கொள்ளப்படுகிறது. (1) மன்வந்த்ரங்களின் கணக்கு (2) சதுர்யுகங்களின் கணக்கு. ஒரு மன்வந்த்ரம் 71 சதுர்யுகங்களுக்குச் சமம் என்று ஏற்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் ஒரு மன்வந்த்ரம் என்பது 71.14 சதுர்யுகங்களின் கணக்காகும். போதும். இந்த தசாம்சம். ஒரு நான்கின் கணக்கை எடுக்காமல் இலட்சக்கணக்கின் வருடங்களாக எடுத்துக் கொண்ட வித்யாசமாகும்.

எனினும் நமக்கு நேர்ந்த தவறு இந்த கணக்கில் வந்த பிழையால் அல்ல. நம்முடைய பிரச்சினை வேதங்களின் தோற்றம் சிருஷ்டி ஆரம்பிக்கப்பட்ட பொழுதே உண்டாயிற்றா என்பதாகும்.

உலக சிருஷ்டி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது? அப்பொழுது சிருஷ்டி இயற்றல் ஆரம்பமானது. எப்பொழுது என்றால் (சாங்கிய தர்சனப்படியும், ரிக் வேதம் 1-163-1-ம் மந்திரத்தின்படி) பரமாணுக்கள் மீது பரமாத்மாவின் சக்தி - வல்லமை-Energy ஆதிக்கம் செலுத்தின பொழுது (அர்வன்) ஆரம்பமானது. இந்த சமயம்தான் வேதங்கள் தோன்றின காலமும் ஆகுமா? ஆனால் வேத (ரிக் வேதம் 10-130-2,3,4) மந்திரங்களில் அப்படி சொல்லப்படவில்லை. அப்படி தோன்றவில்லையே.

இந்த பிரமாணங்களால் நாம் உறுதியாகச் சொல்வது-உலக உற்பத்தி உண்டான பிறகு குறைந்தது ஒரு ஸம்வத்ஸரம் கழித்து சந்தோச்சாரணம் தோன்றியது. அதற்கும் வெகு காலம் பிறகு இந்த பூமி குளிர்ந்து அவற்றின் மீது தாவரங்கள், மிருகங்கள் முதலியவைகள் எல்லாம் தோன்றிவிட்டன. அதன் பிறகு மனித சிருஷ்டி உண்டாயிற்று. அப்பொழுது உச்சரிக்கப்பட்ட சந்தங்கள் ரிஷிகளால் கேட்கப்பட்டன. பின்னர் மனிதர்களுக்கு வேத மந்திரங்களாக வெளிப்பட்டன.

இதுதான் வேதத்தின் பிரமாணம். மகாபாரதம் மற்றும் புராணங்களின் ஆதாரங்கள் கூட இந்த வேத ஆதாரத்தில்தான் எழுந்தன. இராமாயணம், மகாபாரதம், புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு மன்வந்தரத்தின் ஆரம்பத்திலும் ஒரு புது பிரம்மா தோன்றுவார். வேதங்களை உச்சரிக்கும் இந்த பிரம்மா விவஸ்வத-ஸ்ருத மன்வந்த்ரங்களின் ஆரம்பத்தில் தோன்றியவர்.

எனவே இந்த ஆதாரங்களால் நாம் கொள்வது என்னவெனில் வேதங்களை உச்சரிப்பது என்பது சந்தங்களின் ரூபத்தில் ஆரம்பமாயிற்று. அப்பொழுது பிரம்மாண்டம் வெடித்தது. (மனுஸ்மிருதி 1-13). அப்பொழுது சூரியன், பூமி முதலியவை தோன்றின. எனவே இந்த பிரமாணங்களால் நமக்கு கிடைப்பது வேதங்களின் உச்சாரணம் சந்தஸ்களின் ரூபத்தில் அமைந்தது. அப்படி ஆயிற்று. அப்பொழுது பிரம்மாண்டம் வெடித்து (மனு 1-13) சூரியன், பூமி முதலியவை தோன்றின. ஆனால் ரிஷிகள் அன்றைய பாஷையில் வேத மொழியில் இவற்றின் ஸ்வரூபம் குறித்து மனிதர்களை அறிவு பெறச் செய்தார்கள்.

மனிதன் பூமியில் தோன்றியபொழுது தான் இவையெல்லாம் நடைப்பெற்றன. சிருஷ்டி உண்டான பிறகு வேதம் தோன்றியது அல்ல மாறாக மனிதன் எப்பொழுது பூமியில் தோன்றினானோ அப்பொழுதே வேதமும் தரப்பட்டது.

மேல்நாட்டு வித்வான்களும் அவரைப் பின்பற்றுவோராகிய பாரதிய சரித்திரக்காரர்கள் எழுதியவை ஏற்கப்பட வேண்டியவை அல்ல. அவர்கள் சொல்வது எதற்கும் பிரமாணம் இல்லை. அவைகளில் உத்தி-தர்க்கமும் இல்லை. இவர்கள் வேதம் அறிந்தவர்கள் அல்ல. வேத பாஷையை குறித்து எழுதினதெல்லாம் பிரமாணமின்றி எழுதப்பட்டது.

வேத பாஷையை குறித்து எப்பொழுதும் அறிவற்ற மக்களால் சொல்லப்பட்டவைகளை எழுதி வைத்துக் கொண்டார்கள். அப்படி அவர்களுக்குத் தெரியாத விஷயங்களை குறித்து எழுதி வைக்க முயன்றார்கள்.

இந்தியாவில் ஒரு அமைப்பு உண்டு. பாரதிய வித்யா பவன். இந்த அமைப்பு இந்திய வரலாற்றின் முதல் வால்யூம் ‘வேதிக் ஏஜ்‘ என்ற புத்தகத்தை வெளியிட்டது. இந்த புத்தகத்தின் ஆசிரியர் எழுதுகிறார்:- வேதம் கிறிஸ்துவுக்கு முன்பு ஒன்று அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது என்று. இது மாக்ஸ்மூலரின் கூற்று. இந்த மாக்ஸ்முல்லர் எந்தளவுக்கு வேதவித்வானாக இருந்தார் என்பது அவருடைய ஒரு உதாரணத்திலிருந்தே தெரிந்துவிடும், அது இவ்விதமாக உள்ளது:-

மிஸ்டர் கிளோட்டன் என்பவர் தம் ‘ The Rigveda and Vedic Religion‘ நூலில் மாக்ஸ்மூலருடைய வேத விஷயம் பற்றிய சிந்தனைகளை குறித்து எழுதுகிறார்.

Prlf. MaxMullar did not hesitate to say, “It must not be forgotten that though the Historical interest if the veda can hardly be exaggerated, large number of the vedic hyms are “childish in the extreme”, tedious and common place. Many of them convey no clear meaning, or are full of vain repetitions. It is not the rule but the exception to find in this great collection of literature. Any cry of the soul, any glimpse of a spiritual instinct, any grasp of a high revelation.”

இதன் பொருள் .......................

இந்த மகா பண்டிதர் அருளிய ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் சிஷ்யர்கள் எழுதின கட்டுரைகளின் ஆதாரத்தில் ‘வைதிக் ஏஜ்‘ புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

பாரத வர்ஷத்தை பிடித்த ஒரு நோய் இது. அது என்னவென்றால் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகிற மனிதரை பெரிய வித்வானாகவும், இறைவனின் பக்தராகவும் கருதுவது.

ஒருமுறை இந்துக்களில்  ஒரு பக்தராகிய பிரம்மசாரி பிரபுதத்தர் பண்டிதர் ஜவஹர்லால் நேருவைக் கூட ஈஸ்வர பக்தர் என்று விசேஷமாகப் பாராட்டி ஒரு பிரமாண பத்திரம் அளித்து விட்டார். இப்படிப்பட்ட மனிதர்கள் தான் பாரதிய வித்யா பவன் போன்ற வேத விரோத அமைப்புகளுக்கு இலட்சக்கணக்கில் தானம் கொடுத்து இவர்களை பெரிய மகான்களாக்கிவிட்டார்கள்.

வைதிக் ஏஜ் எழுதின ஆசிரியர்களுக்கு ஆரியசமாஜத்தை சேர்ந்த வித்வான்கள் சவால் விட்டபொழுது, தங்களை வித்வான்கள் என்று சொல்லிக் கொண்டு அரசியலில் ஈடுபட்டு உள்ள அறிவில்லாத தலைவர்களுக்கு மதிப்பு கொடுத்து நடத்துவதால், வேத வித்வான்களின் இந்த சவாலை ஏற்க முடியாமல் தவிக்கிறார்கள்.

இந்த ஐரோப்பிய வித்வான்களையும் அவர்களை கண்மூடி பின்பற்றுகிற இந்திய வித்வான்களுக்கும் இந்த மாதிரியான குறை ஏற்பட்டதற்கு காரணமே மத்திய காலத்தில் வேதபாஷ்யம் செய்த பிராமணர்கள்தான். அவர்கள் கூட வேத விஷயங்களில் தங்களுடைய பேனாவை எடுப்பதற்கு முன் அந்த ஆதிகால ஞானத்தை உண்மையில் பெற முயற்சி - சிரமம் எடுத்துக் கொள்ளவில்லை.

எவ்விதம் M.A. படிக்கும் மாணவர்க்கு B.A. தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமோ அதேபோல வேதங்களைப் புரிந்து கொள்ள அதனுடைய அங்கங்கள் - உபாங்கங்கள் பற்றிய அறிவு பெற வேண்டியது அவசியமாக உள்ளது.

இந்த ஞானம் சாயணாதி பாஷ்யக்காரர்களுக்கு கிடைக்கவில்லை. அந்த காரணத்தால் அவர்களால் சரியான முறையில் வேதத்திற்கு அர்த்தம் சொல்ல முடியவில்லை. சிறிதளவு சாயணரும், மஹிதரரும் வேத பாஷ்யங்களின் ஆதாரத்திற்கு கொஞ்சம் உபயோகித்துக் கொண்டாலும், இவர்களைப் பின்பற்றி வேதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றிய இந்திய வித்வான்களுக்கும் இந்த உண்மைப் பொருள் எப்படி கிடைக்கும்? அதனால் உண்மையான வேதத்தின் பொருள் விளங்காமல் போயிற்று.

ஐரோப்பா, குறிப்பாக இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி நாடுகளில் ஏசுவுக்கும் முற்பட்ட காலம் இருட்காலமாக ஏற்கப்பட்டிருக்கிறது. இந்த காரணத்தால் பட்சபாதமுள்ள அந்த ஜனங்கள் இந்த பூமண்டலத்தில் அவர்களை விட மேலான ஒரு ஞானம் பரவியிருந்த ஒரு தேசம் உண்டு என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் ஏசுவுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் மிருகங்களைப் போல் வாழ்ந்தார்கள். அவர்களின் முன் இந்திய சரித்திரம் வைக்கப்பட்ட பொழுது இயேசுவுக்கு முன் இங்கே பாரதத்தில் நடந்ததெல்லாம் பொய்யான கற்பனையான விஷயங்களாகும்.

நாம் திதி-காலம் நிச்சயித்து யுகக் கணக்கும் எழுதி வைத்துள்ளோம். அவையே ஆதாரம் எனக் கொள்கிறோம். இந்த யுகக் கணக்கும் வான சாஸ்திரப்படி அமைந்ததுதான். பாரதிய-இந்தியர்கள் இந்த கல்வியறிவுப் பெற்ற பெரும் பண்டிதர்களாக இருந்தார்கள். இது நிச்சயிக்கப்பட்டு விட்ட விஷயம்.

ஐரோப்பிய வானசாஸ்திரியர்கள் இந்தியாவில் இயற்றப்பட்ட வான சாஸ்திர நூல்களை ஆராய்ந்து அவற்றைப் புகழ ஆரம்பித்தார்கள். அப்பொழுது Mr.Cook போன்ற ஆங்கில பண்டிதர்கள் இந்த வானசாஸ்திரம் அரேபியர்கள் மூலமாக இந்தியர்களுக்குக் கிடைத்தது என்கிறார். யாராவது பண்டைய அரபு வித்வான்கள் இப்படி சொல்லியிருந்ததாக அவரால் ஆதாரம் காட்ட முடியுமா?

இப்படிப்பட்டவர்கள் தான் இந்தியர்களின் அறிவையும் வேதத்தின் மகிமையையும் பக்ஷபாதம் காரணமாக பொய் என்று தள்ளினார்கள். இவ்விதமாக அனேக உதாரணங்களை நம்மால் கொடுக்க முடியும்.

Dr. Alfrd Russel என்பவர் தம்முடைய 'Social Environment and Moral Progress' எனும் நூலில் எழுதுகிறார்.

In the earliest records which have come down to us from the past, we find ample indications that accepted standard of morality and the conduct resulting from these were in no degree inferior to those which prevail today, through in some respect they differed from ours. The wonderful collections of hyms known as the vedas is a vast system of religious teachings as pure and lofty as those of the finest portions of the Hebrew scriptures. Its authors were fully our equals in their conception of universe and the deity, expressed in finest poetic language. (page 11)

we must admit that the mind which conceived and expressed in appropriate language such ideas as are everywhere present in those vedic hymns, could not have been inferior to those of the best of our religious teachers and poets, to our Milton, Shakespeare, and Tennyson. (page 14).

ஆனால் நம்முடைய அடிமை மனப்பான்மை உள்ள Vedic Age ஆசிரியர்களுக்கு மாக்ஸ்முல்லருடையவும் கிரிஃபித் போன்ற கிறிஸ்தவ பாதிரிகளின் ஆதாரம்தான் சரியாகத் தோன்றுகிறது.

இந்த நூலில் யுகக்கணக்கு 1978 வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்த நூல் வெளியிடப்பட்ட காலம் வரை. எனவே வாசகர்கள் இதை அனுசரித்து தங்களுடைய காலத்தை திருத்திக் கொள்ளவும். இந்த நூலை எழுதுவதில் எமக்கு பண்டித சுசிவ்ரத சாஸ்திரி M.A.M.O.L. அவர்களுடைய உதவி கிடைத்தது. அவருக்கு நாம் மிகவும் நன்றி செலுத்துகிறோம்.

-குரு தத்தர்

**பின் குறிப்பு :**

மேலும் விவரங்களுக்கு பண்டித குரு தத்தரின் "வேதமும் வேத காலமும்" என்ற நூலைப் படிக்கவும். மேலே உள்ளவை அவருடைய அந்த நூலின் முன்னுரை பகுதி மட்டுமே.

**ஓம்**

**பிற்சேர்க்கை எண் : 4**

# <u>காலச்சக்கரம்</u>

*ஆர்ய சமாஜ ஸ்தாபகர் மகரிஷி தயானந்த சரஸ்வதி அவர்கள் தமது ஒப்பற்ற வேத விளக்க நூலான* ***"ரிக் வேதாதி பாஷ்ய பூமிகா"*** *வில் காலத்தின் அளவுகளை மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளார். அதுபற்றிய விவரமான விஷயங்கள் :*

| | |
|---|---|
| *60 விநாடிகள்* | *ஒரு நிமிஷம்* |
| *60 நிமிஷம்* | *ஒரு மணி* |
| *ஒன்றரை மணி நேரம்* | *ஒரு முஹூர்த்தம்* |
| *16 முஹூர்த்தம்*<br>*16 x 1½ - 24 மணி* } | *ஒரு நாள்* |
| *15 நாள்* | *ஒரு பக்ஷம்* |
| *2 பக்ஷம்* | *ஒரு மாதம்* |

*அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரை சுக்ல பக்ஷம்*

*பௌர்ணமியிலிருந்து அமாவாசை வரை கிருஷ்ண பக்ஷம்*

*12 மாதங்கள் கொண்டது 360 நாட்கள்*

*6 ருதுக்கள் கொண்டது ஒரு வருடம்*

*60 வருடங்கள் ஒரு ருத்பிஜம்*

*7,200 ருத்பிஜம் அதாவது*

*4,32,000 வருடங்கள் கொண்டது ஒரு யுகம்.*

*4 யுகங்கள் ஒரு சதுர்யுகம்.*

**இனி யுகக் கணக்கு :**

*4,32,000 வருடம் ஒரு கலியுகம்.*

*அதன் 2 மடங்கான 8,64,000 வருடங்கள் ஒரு துவாபரயுகம்.*

*கலியுகத்தின் 3 மடங்கான த்ரேதாயுகம்.*

*12 இலட்சத்து 96 ஆயிரம் வருடங்கள்.*

*கலியுகத்தின் 4 மடங்கான 17 லட்சத்து 28 ஆயிரம் வருடங்கள்.*

*ஒரு சத்திய யுகம்.*

*இந்த நான்கு யுகங்களின் கூட்டுத் தொகையான 43 லட்சத்து 20 ஆயிரம் வருடங்கள் கொண்டது ஒரு சதுர்யுகம் எனப்பட்டது.*

*அவ்வாறாக 71 சதுர்யுகம் கொண்டது ஒரு மன்வந்த்ரம் ஆகும். 14 மன்வந்த்ரங்கள் கொண்டது ஒரு உலக சிருஷ்டி காலம். அவற்றின் மொத்த ஆண்டுகள் 429 கோடியே 40 லட்சத்து 80 ஆயிரம் ஆண்டுகள்.*

*இது தவிர இரண்டு சந்தி காலங்கள் உண்டு. ஒவ்வொன்றும் 3 சதுர் யுகம் கொண்டதாக, அதாவது 1 கோடியே 29 லட்சத்து 60 ஆயிரம் ஆண்டுகள்.*

| | | |
|---|---|---|
| *1. சிருஷ்டி சந்தி* | *1,29,60,000* | |
| *2. பிரளய சந்தி* | *1,29,60,000* | |
| மொத்தம் | *2, 59,20,000* | ஆண்டுகள் |

மேற்கண்ட இரண்டு சந்தி வருஷங்களை சிருஷ்டிக் கணக்கில் சேர்க்கக் கூடாது.

| | | | |
|---|---|---|---|
| *71 சதுர் யுகம் X* | *14 மன்வந்த்ரம்* | *994* | *சதுர் யுகம்* |
| | சிருஷ்டி சந்தி | *3* | *சதுர் யுகம்* |
| | பிரளய சந்தி | *3* | *சதுர் யுகம்* |
| | மொத்தம் | *1,000* | *சதுர் யுகம்* |

*இவ்வாறாக 1,000 சதுர்யுகம் கொண்டது ஒரு சிருஷ்டி. அதே போல 1,000 சதுர்யுகம் கொண்டது ஒரு பிரளயம். மேற்கூறிய 14 மன்வந்த்ரங்களின் மொத்த வருடங்கள் 429,40,80,000 ஆண்டுகள். இதனுடன் இரண்டு சந்தி காலங்களின் மொத்த தொகையான 2,59,20,000 ஆண்டுகள் சேர்த்தால் கிடைக்கும் தொகை 432 கோடி ஆண்டுகளே ஒரு சிருஷ்டியின் கால அளவாகும். ஒரு சிருஷ்டி முடிந்த பின் பிரளயம் (அழிவு) அதே அளவுக்கு நீண்டு செல்லும். எனவே ஒரு சிருஷ்டியும்*

ஒரு பிரளயமும் சேர்ந்ததே ஒரு சிருஷ்டி காலம். அதாவது 864 கோடி ஆண்டுகளை ஒரு கல்பம் என்பர். அதேபோல 36,000 சிருஷ்டிகளும் 36,000 பிரளயங்களும் கொண்டது ஒரு மகா கல்பம் எனப்படும்.

**<u>இனி மன்வந்த்ரங்கள் பற்றிய விவரமும் பெயர்களும்:</u>**

ஒரு மன்வந்த்ரம் 30 கோடியே 67 லட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகள். இவ்வாறாக 14 மன்வந்த்ர கால கட்டம் உண்டு. அவற்றின் பெயர்க்ள 1 ஸ்வாயம்புவ 2 ஸ்வரோசிஷ 3 அவுத்தமி 4 தாமஸ 5 ரைவத 6 சாக்ஷுஷ 7 வைவஸ்த 8 ஸாவர்ணி 9 தாக்ஷ ஸாவர்ணி 10 ப்ரஹ்ம ஸாவர்ணி 11 தர்ம ஸாவர்ணி 12 ருத்ர ஸாவர்ணி 13 ரௌச தேவ ஸாவர்ணி 14 இந்த்ர ஸாவர்ணி இப்பொழுது நடைபெறுவது வைவஸ்வத மன்வந்த்ரத்தில் இருபத்தெட்டாவது கலியுகமாகும். இப்பொழுது நடைபெறுவது கலிவர்ஷம் 5108. ஆங்கில ஆண்டு 2014.

எனவே சிருஷ்டி ஆரம்பித்து 197 கோடியே 29 லட்சத்து 49 ஆயிரத்து 106 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் பிரளய காலம் வர 234 கோடிக்கும் அதிகமான ஆண்டுகள் இருக்கின்றன. எனவே இதோ இன்னும் சில ஆண்டுகளில் உலகம் அழியப்போகிறது என்று சிலர் விடும் கட்டுக் கதைகளை நம்ப வேண்டாம்!

அறிவுதெளிவு பெற வேதம் கற்பீர், வேதமே உண்மை அறிவு நூல்.

# கடவுளுக்கு உருவம் உண்டா?



—Swami Dayanand Saraswati

மகரிஷி தயானந்த சரஸ்வதி

சென்னை ஆர்ய சமாஜம் (சென்ட்ரல்) வெளியீடு

ஓம்

# கடவுளுக்கு உருவம் உண்டா?

ஆஜ்மீர் பரோபகாரிணி சபை வெளிட்ட
“காசி சாஸ்த்ரார்த்தம்” நூலின் மொழி பெயர்ப்பு

ஆங்கில மூலம் :

**R.B. ரதன் லால்**

1st Edition 1986
2nd Edition 1991
3rd Edition 1995
4th Edition 2014

முன்னுரையுடன்
தமிழாக்கம்

**K. வேலாயுத ஆர்யா**

# நன்றி அறிவிப்பு

"காசி சாஸ்த்ரார்த்தம்" என ஆங்கிலத்திலும், இந்தியிலும் உள்ள இந்த நூலினைத் தமிழில் வெளியிட அனுமதித்த ஆஜ்மீர் பரோபகாரிணி சபையாருக்கு எமது நன்றி உரியதாகும்.

"காசி சாஸ்த்ரார்த்தம்" - விவாதம் சரியான முறையில் நடைபெறவில்லை என்பது குறித்து, காசி மன்னர் மிகவும் வருந்தியதாகத் தெரிகிறது. சுவாமி தயானந்தர் மீண்டும் காசிக்கு வருகை தந்து கோஸாப் பிஹாரிலாலின் இல்லத்தில் தங்கியிருந்த பொழுது, அதே காசி மன்னர், ஈஸ்வரி பிரசாத் நாராயணசிம்மர் அவர்கள், தன் அரண்மனைக்கு வருகை தருமாறு சுவாமிகளுக்கு அழைப்பு விடுத்தார்; பல்லக்கு அனுப்பினார். அடிகளும் சென்றார். மன்னர் மிகுந்த மரியாதையுடன் அவரை வரவேற்று, தங்க அரியாசனத்தில் அமரச்செய்து, மரியாதை செய்து, தாமும் அருகே ஒரு வெள்ளி ஆசனத்தில் அமர்ந்தார். வெள்ளியாலான ஒரு மாலையை அடிகளுக்கு அணிவித்து, அவருடைய கால்களைத் தொட்டு வணங்கி சாஸ்திரார்த்த (சாத்திர விளக்க உரையாடல்) நாளன்று நடைபெற்ற நிகழ்ச்சிக்காக, மன்னிப்புக் கோரினார். அடிகள் அவர் மீது இரக்கம் கொண்டு கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். மறுநாள் மன்னர் அவர்கள், தமது இருப்பிடத்துக்கு அனுப்பிய இனிப்புக்களையும், அன்பளிப்புகளையும் அடிகள் ஏற்றுக் கொண்டார்.

(ஹர்பிலாஸ் சாரதாவின் "தயானந்தர் வாழ்க்கை வரலாறு" பக்கம் 75 ஆங்கில நூல், ஆஜ்மீர் பரோபகாரிணி சபை வெளியீடு, 1968)

ஆர்ய சமாஜம்

சென்னை-600 086.

# 3. கடவுளுக்கு உருவமுண்டா?

**பதிப்புரை**

மனிதன் சிந்திக்கத் துவங்கிய நாள் முதல் இன்று, இப்போதுவரைப் பலருக்கு அடிக்கடித் தோன்றி, இதுவரைத் தெளிவான விடை கிடைக்காத வினா "கடவுளுக்கு உருவமுண்டா?" மனிதஇனத்துக்கு ஒப்பற்ற வழிகாட்டியாக விளங்குகின்ற நமது வேதங்கள் இவ்வினாவுக்கான விளக்கத்தை மிகத் தெளிவாகத் தந்துள்ளன.

உலகனைத்தும், உலகனைத்துமுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்தும் தோன்றவும், அவை நின்று நிலைத்துப் பின்பு மறையவும் காரணமானதும், தோற்றமும், வளர்ச்சியும், முடிவுமற்றதும், என்றும் எங்கும், எல்லாமாகவும் இருப்பதுவும், அனைத்தையும் கடந்து இருப்பதுவும், எல்லாம் வல்லதும் அனைத்தும் அறிந்ததுவும், அஃதின்றி ஓர் அணுவும் அசைய இயலாத தன்மையதுவும், ஆணாகவும், பெண்ணாகவும், இரண்டுமாகவும் இருப்பதுவும், உலகனைத்துமுள்ள அனைத்தும் ஒழுங்குமுறைச் சிறிதும் தவறாது இயங்கி வருவதற்கு ஆதாரமாயிருப்பதுவும், அணுவைச் சத கூறிட்டக் கோனினும் நுண்ணியதுவும், அறிவும், ஆற்றலும், ஒளியுமாக இருப்பதே அது.

இந்த விளக்கத்தைப் புரிந்து கொள்ள இயலாதவர்கள், கற்பனைசெய்ய இயலாதவர்கள், அதற்குப் பலவித உருவத்தைத் தந்து, தாம் விரும்பியவாறு ஆணாகவோ, பெண்ணாகவோ வழிபாடு செய்து வருவதுடன், அவற்றுக்குப் புதிய விளக்கத்தையும் தந்து, அவற்றை சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சாக்தம் என வகைப்படுத்தியும் வைத்தனர்.

ஒரு மேல்நாட்டுச் சிந்தனையாளர் " ஒரு கழுதை கடவுளைப் படைத்திருந்தால், தன்னைப் போன்றே நான்கு கால்களுடனும், ஒரு வாலுடனும் படைத்திருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். சாதாரண மனிதனின் கடவுளைப் பற்றிய சிந்தனை இவ்வாறுதான் இருக்கிறது.

மனிதன் தன்னைப் போன்றே தன்னுருவில் கடவுளைப் படைத்து, தன்னைப் போன்றே கடவுளுக்கும் உணவையும், உடையையும் வாழ்க்கை முறையையும், தேவைகளை, பற்று, பாசத்தையும் கொடுத்துள்ளான். இவை மனித சிந்தனையின்

வளர்ச்சியா அன்றி வீழ்ச்சியா என்பதனை, இக்கையேட்டினைப் படிக்கின்ற அன்பர்களே முடிவு செய்து கொள்ளுமாறு அவர்களின் சிந்தனைக்கு விருந்தாக, இக்கையேட்டினை வடித்துத்தந்துள்ள நண்பர் திருமிகு. கே. வேலாயுத ஆர்ய அவர்களின் கைமாறு கருதாப்பணிக்காக எமது நன்றி.

வணக்கம்.

சென்னை

ஆரிய சமாஜம், சென்னை

# ஓம்

## முன்னுரை

குருகுல வாழ்க்கையை முடித்துக் கொண்டு, தம்மிடம் விடைபெறப் பணிவுடன் நின்ற தயானந்தரைக் கண்டு, குரு காணிக்கையாக சுவாமி விரஜானந்தர், வட மதுரையில் உள்ள தம் ஆசிரமத்தில் பின்வருமாறு பணித்தார்: 1) நாட்டுக்கு உதவு. 2) உண்மைச் சாத்திர நூல்களை உயர் நிலைபெறச் செய். 3) மதப் பழக்க வழக்கங்களுக் கிடையே அறியாமையினால் உள்ள வேறுபாடுகளை நீக்கு. 4) வேத நெறியைப் பரவச் செய்.

குருவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, ரிஷி தயானந்தர், 1864 மே மாதத்தில் ஆக்ரா நகரை அடைந்தார். புராண மதங்களையும், உருவ வழிபாட்டையும் கண்டித்துப் பிரசாரம் செய்த வண்ணம், வேத மந்திரங்களின் உண்மைப் பொருள் விளக்கமும் செய்த இந்த இளம் துறவியின் வாதிடும் வல்லமைக்கு முன் நிற்க இயலாமல் பல இந்துக்கள் "காயத்ரி ஜபம்", சந்தியா வந்தனம் செய்து, "அக்னிஹோத்ரம்" எனும் வேள்வியும் இயற்றி, வேத வழி நிற்கும் புதிய இந்துக்கள் - ஆரியர்கள் ஆயினர். கங்கைக் கரையின் பல நகரங்கள், சிற்றூர்கள், பேரூர்களில் வேத விளக்கம் செய்த தயானந்தர், பழமைவாதிகளின் கோட்டையான காசியிலேயே அவர்களைச் சந்திப்பது என்று முடிவு செய்து, 1869 அக்டோபர் 23ம் நாள் காசி நகருக்கு வந்து சேர்ந்தார்.

உலகில் வேறு எந்த நகருக்கும் இல்லாத ஒரு பெருமை காசிக்கு உண்டு. சமய, பண்பாட்டு அடிப்படையில், கோடிக்கணக்கான ஆரியர்களின்-இந்துக்களின் உண்மைத் தலைநகராக, அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, விளங்கி வருகிறது. காசி நகரத்துப் பண்டிதர்களின் தீர்ப்பே முடிவானதாக, இந்து இந்தியா ஏற்று வந்துள்ளது. புராணங்களின் பெயரால் பல மூடநம்பிக்கைகள், முறைகேடுகளை, உருவ வழிபாடு மூலம் வளர்த்து வரும் இந்த நகரில், வேதக் கொடி பறந்தாலொழிய, பாரதம் தம்மை ஏற்காது என்று கருதிய தயானந்தர், சிங்கங்களின் குகையிலேயே, அவற்றைச் சந்திக்க உறுதி கொண்டு, "துர்கா குண்ட"த்திற்கு அருகிலிருந்த "ஆனந்த் பாக்" எனும் தோட்டத்தில் தங்கினார்.

தயானந்தர் காசி வந்துள்ள விவரம் காட்டுத் தீ போல் பரவியது. பல பிரம்மசாரிகளும், பண்டிதர்களும் அவரை வந்து வணங்கித் தம் ஐயங்களைத் தீர்த்துச் சென்றனர் என்பதே, காசி மக்களுக்கு ஒரு புதுமையான, பரபரப்பான செய்தியாக இருந்தது.

இந்தப் பண்டிதர்களும், பிரம்மசாரிகளும், உயர் பண்டிதர்களால் தம்மை "ஆழம்" பார்க்க அனுப்பப்பட்டவர்களே என்பதை, ரிஷி தயானந்தர் அறிந்திருந்தார். எனவே அவர் காலம் தாழ்த்தாது, புகழ் பெற்ற பண்டிதரான ராஜாராம் என்பவருக்கு, "மகாபாஷ்யம்" எனும் சாத்திர நூல் பற்றி ஒரு வினா எழுப்பி, விடை தருமாறு அனுப்பிவைத்தார். அதற்கு அந்த மகாபண்டிதர் அனுப்பிய பதில்: "உம்முடைய வினாவுக்கு விடையளிப்பதற்கு முன், நம் இருவரிடையே ஒரு கத்தி வைக்கப்பட வேண்டும். உம்முடைய மூக்கை நான் அறுப்பேன். இல்லையென்றால், என் மூக்கை நீர் அறுக்கலாம்" என்பதே அது. அடிகள் கூறினார்: "நல்லது, ஆனால் இரண்டு கத்திகள் இருக்கட்டும். சாத்திரப் போர் புரிய உம்மால் முடியவில்லை என்றால், சஸ்திரப் போர் (ஆயுதப்போர்) புரிய, நம் இருவருக்கும் இரண்டு கத்திகள் தேவைப்படும்" (சாத்திரம்=நூல்; சஸ்திரம்=போர்க் கருவி)

தயானந்தரின் வாதங்களுக்கு முன் நிற்க முடியாத காசி நகரப் பண்டிதர் கூட்டம், அவரை இழித்தும் பழித்தும் பேச ஆரம்பித்தது. அடிகள் அமைதியே உருவாக இருந்தார். தாங்கள் இறங்கிவிட்ட கீழ்நிலைக்கு, தயானந்தர் வரமாட்டார் என்று கண்ட அவர்கள் திகைத்தனர். காசி நகர மன்னருக்கும் செய்தி செல்ல, அவரும் பண்டிதர்களின் இந்தப் போக்கைக் கண்டித்து, உண்மையை உலகு அறியச் செய்ய வேண்டியது தம் கடமை என உணர்ந்து, அறிஞர் அவையைக் கூட்டி, அதன் முன்னே வந்துத் தம் கருத்தைத் தெரிவிக்குமாறு தயானந்தருக்கும் அழைப்பு விடுத்தார்.

அவருடைய ஆலோசனையை ஏற்ற பண்டிதர் கூட்டம் முறையிட்டது, "அரசே! தயானந்தர் எங்களிடம் உள்ள நூல்கள் எல்லாவற்றையுமே உளறுமொழிகள் என்று கண்டிக்கிறார். "அப்படியானால், அவர் ஏற்கும் சாத்திர நூல்கள் தாம் எவை என்பதையும் அறிந்து கொள்வோமே?" என்று கூறிய காசி மன்னர், சாலிக்ராம், தோண்டிராஜ், தாமோதர், பாரத்வாஜ், கிருஷ்ணர் எனும்

ஐந்து பண்டிதர்களை, தயானந்தரிடம் அனுப்பி வைத்தார். எதிர்க் கட்சி பண்டிதர்கள் தம்மிடம் வந்து வினவிய பொழுது, தயானந்தர் அவர்களைப் பொருட்படுத்தாது, எழுத்து மூலம் பதில் அளிப்போம் என்றார். அவர்கள் தம்மை இன்னாரென்று வெளிப்படுத்திக் கொண்ட பின்னரே, அவர் தாம் ஏற்கும் நூல்களின் பட்டியல் ஒன்றைத் தந்தார். அதன்படி, நான்கு வேதங்கள், நான்கு உப வேதங்கள், ஆறு அங்கங்கள், ஆறு உப அங்கங்கள்-இவற்றுடன் இடைச்செருகல் நீக்கப்பட்ட "மனு ஸ்ம்ருதி"யும் தாம் ஒப்பும் சாத்திர நூல்கள் ஆகும் என்றார் அவர். ரிக், யஜுர், சாம, அதர்வம் என வேதங்கள் நான்கு. ஆயுர்வேதம், அர்த்த (பொருளாதார) வேதம், கந்தர்வ (இசை) வேதம், தனூர் (போர்முறை) வேதம் என உப வேதங்கள் நான்கு. சிட்சை (ஒலி நூல்), கல்பம் (சடங்கு, சட்டம்), "வியாகரணம்" (இலக்கணம்), "நிகண்டு" (சொற்பொருள் அகராதி, "சந்தஸ்" (மெட்டு), ஜோதிஷம்" (வானவியல்) என ஆறு உப வேத அங்கங்கள் (துணை வேதப்பகுதிகள்). "உபாங்கங்கள்" அல்லது "தர்சனங்கள்" எனப்படும் தத்துவ நூல்கள் ஆறு, முறையே, கவுதமர் இயற்றிய "நியாயம்", கணாதர் இயற்றிய "வைசேஷிகம்", பதஞ்சலி இயற்றிய "யோகம்", கபிலரின் "சாங்கியம்", ஜைமினியின் "பூர்வ மீமாம்சை" பாதராயண வியாசரின் வேதாந்தம் எனப்படும் "உத்தர மீமாம்சை" என்பன ஆகும். பண்டிதர்கள், அடிகளிடம், என்ன ஆதாரத்தின் மீது இவை மட்டுமே ஆதார நூல்கள் என்று கருதுகிறீர்கள் என்று கேட்ட பொழுது, அவர் அதற்கு பதில், விவாதத்தின் போது தரப்படும் என்றார்.

**1869** நவம்பர் **16** செவ்வாய்க் கிழமையன்று சாத்திரப் போருக்கான நாளாக முடிவு செய்யப்பட்டது. பல ஆங்கில அதிகாரிகள் தாமும் கலந்து கொள்ள விரும்பி, ஞாயிற்றுக் கிழமையன்று சாத்திரப் போர் இருக்கட்டும் என்று கூறியதை, காசி மன்னர் ஏற்க மறுத்தார். தம்முடைய பண்டிதர்கள் தயானந்தரிடம் சொற்போர் செய்வதை, அந்த வெளிநாட்டார் ஏன் வேடிக்கைப் பார்க்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நினைத்தாரோ என்னவோ. சுவாமிகள் தங்கியிருந்த "ஆனந்த் பாக்" தோட்ட மாளிகையே இடமாகவும் ஏற்கப்பட்டுக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு, காசி நகரக் காவல் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பட்டிமன்ற நாளன்று, ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளம், அந்தத் தோட்டத்தில் வந்து நிறைந்து அலைமோதியது.

அகன்ற மாளிகை அரங்கில் ஒருபுறம் காசியினுடைய மற்றும் சுற்றுப்புறத்தினுடைய பெரும்பண்டிதர்கள் வந்து அமர்ந்தனர். அவர்களுள் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் சுவாமி விசுத்தானந்தர், பண்டிதர்கள் பால சாஸ்திரி, சிவ சகாய், தேவதத்த சர்மா, ஜய நாராயண் தர்க்க வாசஸ்பதி, சந்திரசிங் திரிபாடி, ராதாமோகன் தர்க்க வாகீஷ், காசி பிரசாத் சிரோமணி, ஹரிகிருஷ்ண வியாஸ், நவீன் நாராயண் சிரோமணி, மேவ கிருஷ்ண வேதாந்தி, கணேஷ் சுரோத்தரி, மாதவாசார்யர், வாமனாசார்யர் முதலியோர் ஆவர். இவர்களுடன் காசி மன்னரின் அவைப் பண்டிதரான தாராசரண் நையாயிகர் (நியாய சாத்திரப்புலவர்) என்பவரும் வீற்றிருந்தார்.

பல மேன்மக்கள் சீமான்களுடன், காசி நகரத்துக் குண்டர்களும் அவையில் வந்து கூடியிருந்தார்கள். பல பாதிரியார்களும், வேடிக்கை பார்க்கவும், இந்நாட்டின் வேதம் சார்ந்த சிறந்த ஆன்மீக அறிவைப் பெறவும் வந்து அமர்ந்தனர். காசி நகரத்துக் குண்டர்கள் "புகழ்" உலகறிந்தது. எனவே, தாயனந்தரின் சீடர்களும், நலம் நாடுவோரும் அவருடைய உயிருக்கும், உடலுக்கும் ஏற்படக் கூடியத் தீங்கைப் பற்றிக் கவலை கொண்டு, அடிகளிடம் அதனைப் பற்றி வெளிப்படையாகவே தம் அச்சத்தையும் அறிவித்து, சாத்திரப் போரை பருக்காபாத் நகரில் வைத்திருக்கலாம், அங்கே எவ்வளவோ பாதுகாப்பாக இருந்திருக்கும் என்றார்கள். தயானந்தர் புன்னகையுடன் அவர்களைச் சமாதானப் படுத்தினார். "அஞ்ஞான இருட்சக்திகள் எத்துணை குவிந்தாலும், ஞான சூரியன் முன்னே அவை நிற்கமாட்டா என்பது நம்முடைய யோகிகள் கருத்தாகும். இறைவழி நின்று விருப்பு வெறுப்பின்றி உண்மையே பேசுகிற ஒருவர், எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அச்சம் காரணமாக, அறிஞர்கள் ஒரு பொழுதும் உண்மையை மறைக்க மாட்டார்கள். இறைவன் கட்டளைக்கு மாறுபட்டுச் செல்வதை விடத் தம் உயிர் போவதே மேல் என்றுதான் அவர்கள் சொல்வார்கள். நான் எதற்கும் அஞ்சவில்லை. ஏனெனில், நான் இறைவனுக்காகவும், தருமத்திற்காகவுமே வாழ்கிறேன். என்ன தான் நடக்கப்போகிறது என்று பார்க்கலாம்" எனக்கூறிய அடிகள் பின்னர், முகச்சவரம் செய்து கொண்டு குறித்த நேரத்தில் அவைக்கு வந்து சேர்ந்தார். அது மாலை நேரம்.

அரங்கின் மேடைப்பகுதியில், வலப்புறமாக மேற்கூறிய பண்டிதர் குழுவினர் அமர்ந்திருக்க, இடப்புறம் காசி மன்னர், அவருடைய சகோதரர், மன்னரின் மகன், காசியின் குறிப்பிடத்தக்கச் செல்வந்தர்கள், நில உரிமையாளர்கள் வீற்றிருந்தனர். மேடையின் நடுவில், சுவாமி தயானந்தருக்கு இடம் தரப்பட்டது.

சமய விவாதம் துவங்கு முன், மன்னரிடம் அடிகள் கேட்டார்: “வேதம் கொண்டு வரப்பட்டுள்ளதா?” என்று. பண்டிதர்கள் எல்லோருக்கும் வேதம் முழுவதும் மனப்பாடம், எனவே வேதப் புத்தகம் தேவையில்லை என்று பதில் வந்தது. சுவாமிகள் சொன்னார்: “புத்தகம் இல்லாவிட்டால், மேற்கோள்களின் முன் பின் விவரங்கள் சரிவரப் புரிந்துகொள்ள முடியாமற் போய், கருத்துகள் வளைத்தொடிக்கப்படவும் கூடும் என்ற நிலையும் வந்து சேரும்”. அதற்குப் பண்டிதர்கள் உருவ வழிபாடு வேண்டும் என்பதை நாங்கள் மெய்ப்பிப்போம் என்றனர்.

பின்னர், காசி நகரக் காவல் துறைத் தலைவர் பண்டித ரகுராத சகாய், விவாதத்தின் ஒழுங்குமுறைகள் பற்றி அவைக்கு அறிவித்தார். “சுவாமிகளுடன் ஒரு பண்டிதர் மட்டுமே ஒருமுறை உரையாடலாம். வாதத்திற்குரிய பொருள் “உருவ வழிபாடு வேதத்திற்கு ஏற்புடையதா?” என்பதாகும். உரையாடல் முழுவதும் சம்ஸ்கிருதத்தில் நடைபெற்றது.

இனி, ஆஜ்மீர் பரோபகாரிணி சபையினர் வெளியிட்டுள்ள, “காசி சாஸ்திரார்த்தம்” எனும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆங்கில சிறு நூலிலிருந்து அன்று நடைபெற்ற உரையாடல் விவரங்களை மொழி பெயர்ப்பாகவே தருகிறோம். இந்த அவை ரிஷி தயானந்தரால் வேத நூல்களை வெளியிடுவதற்கென்றே அமைக்கப்பட்டதாகும்.

- **K.வேலாயுத ஆர்ய**

# ஓம்
# கடவுளுக்கு உருவமுண்டா?

முதலாவதாகப், பண்டித தாராசரணர் எனும் “நியாய” நூல் வல்லார் உரையாட வந்தார்.

***தயானந்தர்:*** நீங்கள், வேதம் தான் ஆதாரமான நூல் என்பதை, ஒப்புக் கொள்கிறீர்களா?

***தாராசரணர்:*** வருண ஆசிரம தர்மத்தில் நம்பிக்கை உள்ள எல்லோருமே வேதத்தை எல்லா விதத்திலும் ஆதாரமாக ஏற்கிறவர்கள் தான்.

***தயானந்தர்:*** கல் உருவங்களை, அல்லது பிற பொருட்களை வணங்கலாம் என்று கூறப்படுவதற்கு வேதங்களில் ஏதேனும் ஆணித்தரமான ஆதாரம் உண்டா? உண்டு என்றால் அத்தகைய வேத மந்திரத்தை ஓதுங்கள், இல்லையென்றால், தயவு செய்து அதனைச் சொல்லுங்கள்.

***தாராசரணர்:*** அவ்விதமாக வேதத்தில் உண்டா இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். வேதம்தான் ஆதாரம், பிற சாத்திர நூல்கள் அல்ல என்று சொல்கிறவரைப் பற்றி என்ன சொல்வது?

***தயானந்தர்:*** பிற நூல்களைப் பற்றிப் பிறகு எடுத்துக் கொள்வோம். வேதங்களின் கருத்தை அறிந்து கொள்வதுதான் இன்றியமையாதது. எனவே, வேதங்களை முதலில் எடுத்துக் கொள்வோம். வேதம் சொல்கிறபடிதான் நடக்க வேண்டுமென்று சிறப்பாகக் கூறப்பட்டு வந்துள்ளது. மனு தர்மமும், பிற “ஸ்ம்ருதி”களும், வேதத்தையே ஏற்றுக்கொள்கின்றன. எனவே இவையும் ஆதாரமானவைதாம். ஆனால், வேதத்துக்கு எதிரான கருத்துகளைச் சொல்கிற நூல்களையோ அல்லது வேதங்கள் ஏற்றுக் கொள்ளாதனவற்றைச் சொல்கின்றனவற்றையோ, அந்த அளவுக்கேனும் ஆதாரமாகக் கொள்ளக் கூடாது என்பதைக் கவனிக்க வேண்டும்.

***தாராசரணர்:*** மனு “ஸ்ம்ருதியின்” தோற்றம் பற்றி, வேதத்தில் எங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

**தயானந்தர் :** சாம வேதத்தின் பிராமணத்தில் (விளக்க நூலில்), மனு கூறியதே மேலான பொருளாகும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

சுவாமி விசுத்தனாந்தர் குறுக்கிட்டு, “ஒரு சூத்திரத்தில் வியாசர் சொல்கிறார், இவ்வுலகைத் தோற்றுவித்தவர் உணர்வும், அறிவும் உள்ளவர், உயிரற்றப் பொருள் அல்ல என்று. இதற்கு வேதத்தில் எங்கே ஆதாரம்?” என்றார்.

**தயானந்தர்:** எடுத்துக்கொண்ட பொருளுக்கு முற்றிலும் தொடர்பில்லாதது இந்தக் கேள்வி. எனவே, இங்கே இந்த ஆராய்ச்சி வேண்டாம்.

**விசுத்தனாந்தர் :** உமக்குத் தெரிந்திருந்தால், என் கேள்விக்கு நீர் பதில் சொல்லியாக வேண்டும்.

தொடர்பில்லாத பொருளைப் பற்றி உரையாடுவதைத் தவிர்க்க எண்ணிய தயானந்தர், நினைவிலிருந்து (மனப்பாடமாக உள்ளத்திலிருந்து) சொல்ல முடியாவிட்டால், புத்தகத்தைப் பார்த்த பிறகுதானே பதில் சொல்ல முடியும்? என்று கூறினார்.

**விசுத்தானந்தர் :** (கேலியாக) நூல்களை மனப்பாடம் செய்யாமல் காசியிலே வெளிப்படையாக உரையாட வருவதற்கு ஏன் துணிந்தீர்?

**தயானந்தர் :** உமக்கு எல்லா நூல்களும் மனப்பாடமா?

**விசுத்தானந்தர் :** ஆம்.

**தயானந்தர் :** அப்படியானால் சொல்லும், தர்மத்தின் தன்மை என்ன?

**விசுத்தானந்தர்:** வேதம் சொல்கிறபடி நடந்து கொண்டு அதன் பலனைப் பெறுவதே தர்மம்.

**தயானந்தர்:** இது உம்முடைய சொந்தச் சொற்றொடர், இது ஆதாரமாகாது. வேதத்திலிருந்தோ அல்லது “ஸ்ம்ருதி” களிலிருந்தோ மேற்கோள் காட்டுங்கள்.

**விசுத்தானந்தர் :** ஜைமினி சூத்திரம் ஒன்று சொல்லுகிறது - வேதத்தால் கூறப்பட்டு, விரும்பப்படுவதே தர்மம் என்று.

**தயானந்தர் :** அது ஒரு சூத்திரம் மட்டும் தானே. வேதத்திலிருந்தோ அல்லது “ஸ்ம்ருதி’ களிலிருந்தோ ஏன் மனப்பாடமாக உம்மால் மேற்கொள் காட்ட முடியவில்லை? அந்த சூத்திரத்தில் வருகின்ற “சோதனா” என்ற சொல்லுக்கு

வற்புறுத்தல் என்று பொருள். வற்புறுத்தலுக்கும் வேதம் அல்லது "ஸ்ம்ருதி"யின் ஆதாரம் தேவை.

விசுத்தானந்தர் பேச்சின்றி இருந்தார்.

***தயானந்தர்:*** நல்லது. தர்மத்தின் தன்மை பற்றித்தான் உம்மால் கூறமுடியவில்லை. தர்மத்தின் (அறத்தின்) இலக்கணமாவது கூறுவீர்களா?

***விசுத்தானந்தர்:*** தர்மத்தின் இலக்கணமாக ஒன்றே ஒன்றுதான் உண்டு.

***தயானந்தர்:*** அதையே கூறும், கேட்போம்.

விசுத்தானந்தர் பேசாமல் இருந்தார். கேள்விக்கு பதில் சொல்லவில்லை.

***தயானந்தர் :*** மனுவின் கருத்துப்படி, தர்மத்தின் இலக்கணமாகப் பத்து பொருட்கள் உண்டு. மன நிறைவு, மன்னிக்கும் பண்பு, தன்னை யடக்குதல், பிறர் பொருள் விரும்பாமை, உடல் தூய்மை, புலன்களை அடக்குதல், அறிவு, இறை ஞானம், உண்மை, சினம் கொள்ளாமலிருப்பது முதலிய இந்தப் பத்தும் இலக்கணமாகும்.

***பால சாஸ்திரி (குறுக்கிட்டு):*** நாங்கள் எல்லா சாத்திரங்களும் பார்த்து விட்டிருக்கிறோம்.

***தயானந்தர்:*** அப்படியானால், அதர்மத்தின் இலக்கணம் கூறுங்கள்.

பால சாஸ்திரி பதில் சொல்லவில்லை. அமைதி நிலவியது. மற்ற பண்டிதர்கள் பொறுமையிழந்து, உரத்த குரலில் கேட்டார்கள் : "வேதத்தில்" "ப்ரதிமா" (சிலை) என்ற சொல் உண்டா, இல்லையா?"

***தயானந்தர்:*** உண்டு. வேதத்தில் அந்த சொல் வருகிறது.

***பண்டிதர்கள்:*** அதை எடுத்துச் சொல்லும்.

***தயானந்தர்:*** சாம வேதத்தின் பிராமணத்தில் "சிலை சிரிக்கிறது, ஆலயம் நடுங்குகிறது" என்று உள்ளது.

***பண்டிதர்கள்:*** ஆனால் "ப்ரதிமா" (உருவம் அல்லது சிலை) என்ற சொல், வேதத்திலும் உண்டு அல்லவா? அப்படியானால், நீர் ஏன் திறனாய்வு செய்கிறீர்? குற்றம் குறை சொல்கிறீர்?

**தயானந்தர்:** அந்தச் சொல் உருவங்களையும், கற்களையும் வணங்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக வரவில்லை. நாம் அந்தச் சொல்லுக்குச் சரியான பொருள் கொள்ள வேண்டும்.

**பண்டிதர்கள்:** இந்தச் சொல் வருகிற வேத மந்திரந்தின் பொருள் என்ன?

**தயானந்தர்:** பொருள் இதுதான். “இனி நாம் வியத்தகு பெரும் அமைதியினைப் பற்றி விளக்குவோம்.” இப்படிச் சொல்லி விட்டு சாம வேதத்தின் பிராமணம் “இந்தர்” என்று தொடங்கும் மந்திரத் தொகுப்பை பற்றிக் கூறுகிறது. ஒவ்வொரு மந்திரமும் ஓதிய பின்னர், வேள்வித் தீயில் மூவாயிரம் ஆஹுதிகள் தரவேண்டும். அதன் பின்னர், வ்யாஹ்ருதிகளான - மறைபொருட்சொற்களான பூ : புவ : ஸ்வ : எனும் மூன்றினையும் உச்சரித்து, ஐந்து ஆஹுதிகள் வேள்வித் தீயில் இட வேண்டும். இவை முடிந்த பிறகு, இசை ஆலாபனையாகச் சாம வேத மந்திரங்களைப் பாட வேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு செய்வதால், வியத்தகு பெரும் அமைதி-சாந்தி நிலை-கிட்டும். இம் மந்திரத்தில் வருகிற பிரதிமை என்ற சொல் மரணலோகத்தைப் பற்றிக் குறிப்பிடுவதல்ல. பிரம்ம லோகத்தைப் பற்றியே அது சொல்கிறது. பொருள் இதுவே. மந்திரங்களில் விவரிக்கப்படுகிற மிக உயர்ந்த (வியத்தகு) அமைதி வேண்டி, கிழக்குத் திசையில் தேவர்கள் தடை உண்டாக்குவர் என்பதாகும். மரண லோகம் (இவ்வுலகம்) பற்றிய பொருள் தென்திசை, மேல்திசை, வடதிசை, நிலம், வானம், விண்வெளி ஆகியவற்றில் அமைதியினை வேண்டி வேண்டுதல் செய்தபிறகு முடிகிறது. அதற்குப் பிறகு முக்தி நிலை அல்லது பிரம்மலோகம் எனப்படும் அமைதி வேண்டப்படுகிறது.

இந்த விளக்கம் கேட்டபிறகு, பண்டிதர்கள் வாய் திறவாமல் வீற்றிருந்தனர்.

ஆனால் பாலசாஸ்திரி எழுந்து, “அந்தத் திசையின் தேவதையிடம், தடைகளை விலக்கி, அமைதி நிலை தருமாறு வேண்டிய பிறகுதானே அந்தச் சாலச் சிறந்த ரிஷிகள் முக்தி நிலை பெறுகிறார்கள்?” என்றார்.

**சுவாமிகள்:** உண்மைதான். இந்த வழியில் உள்ள தடைகளைக் குறிப்பிட்டுச் சொல்வது யார் என்பதுதானே கேள்வி.

பாலசாஸ்திரி பதிலடியாக, “புலன்கள், தாம் தடைகளைக் குறிப்பிடுகின்றன” என்றார்.

***தயானந்தர்:*** புலன்கள், தாமே எல்லாவற்றையும் காண்கின்றன. எதையும் பிறர் காணுமாறு அவை செய்வது இல்லையே. மேலும் "ஸ ப்ராசிம்" முதலிய மந்திரங்களில் வருகின்ற "ஸ" என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

***பாலசாஸ்திரி*** பதில் சொல்லவில்லை. அமைதி.

***பண்டித சிவ சகாய்*** எழுந்தார். "இம்மந்திரம் வானிலும், பிற உலகங்களிலும் அமைதி நிலை பரவுவதனால் விளையும் பலன்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது."

***சுவாமி தயானந்தர்,*** "நீங்கள் அந்தப் பகுதியைப் படித்திருந்தால், எந்த மந்திரத்தின் பொருளையாவது விளக்குங்கள்" என்றார்.

***பண்டித சிவ சகாயர்*** பதில் பேசவில்லை.

பின்னர் ***சுவாமி விசுத்தானந்தர்*** முன்னால் வந்து, "வேதத்தைத் தோற்றுவித்தது யார்?" என்று வினவினார்.

***தயானந்தர்:*** கடவுள் வேதத்தைத் தோற்றுவித்தார்.

***பாலசாஸ்திரி:*** எந்தக் கடவுளால்? வாத (நியாய) சாத்திரம் சொல்லும் கடவுளாளா? யோக நூல் கூறும் கடவுளாளா? அல்லது வேதாந்த சாத்திரம் சொல்லும் கடவுளாளா?

***தயானந்தர்:*** ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள் உண்டா என்ன?

***பாலசாஸ்திரி:*** கடவுள் ஒருவர்தாம். ஆனால் வேதத்தைத் தோற்றுவித்தக் கடவுளின் தன்மைகள் என்ன?

***தயானந்தர்:*** சத்து-சித்து-ஆனந்தமாக உள்ளவர் இறைவன்.

***விசுத்தானந்தர்:*** கடவுளுக்கும், வேதத்திற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? தருகிறவர்-தரப்பட்டது, இயற்றியவர்-இயற்றப்பட்டது நிலையா, வாரிசு நிலையா, அல்லது தலைவர்-தொண்டர் நிலையா, அல்லது குறிப்பிடத்தக்க அடையாளம் தான் என்ன?

***தயானந்தர்:*** கடவுளுக்கும் வேதத்திற்கும் இடையே உள்ள தொடர்பு காரணம்-காரியம் போன்றதாகும்.

***விசுத்தானந்தர்:*** சூரியனை மனத்தில் கொண்டு பிரம்மத்தையும், பிரம்மத்தை மனத்தில் கொண்டு கடவுளையும் வணங்கவேண்டும் என்பதுபோல,

“சாலிக்ராம”த்தை, சிலையை வணங்க வேண்டிய முறை ஏற்கப்பட்டுப் பின்பற்றவும் படுகிறது.

**தயானந்தர்:** நீங்கள் வேதமாக ஏற்கின்ற பிராமணங்களில் சொல்லப்படுகிறது: மனோ ப்ரஹ்மதி உபாஸீத் ஆதித்யம் ப்ரஹ்மதி உபாஸீத்” என்றெல்லாம். ஆனால், “பாஷாணாதி ப்ரஹ்மேதி உபாஸீத்” (கற்களை பிரம்மமாக வணங்குக) என்று அவற்றில் எங்கும் கூறப்படவில்லை. அப்படியிருக்கும்பொழுது உருவ வழிபாடு எப்படி ஏற்கத்தக்கதாகும்?

அப்பொழுது மாதவாசார்யர் கேட்டார்: “உத்புத்யஸ் வாக்னே ப்ரதி ஜாக்ரஹி த்வமிஷ்டா பூர்த்தே” என்கிற மந்திரத்தில் வருகிற “பூர்த்தே” என்று சொல்லுக்கு என்ன பொருள்?

“அதற்கு கிணறு அல்லது குளம் என்று பொருள்’ என்றார் தயானந்தர்.

**மாதவாசார்யா:** சிலை வணக்கத்தையும் அது குறிப்பதாக ஏன் கொள்ளக்கூடாது?

**தயானந்தர்:** “பூர்த்த” என்ற சொல்லுக்கு பூர்த்தி-நிறைவு என்றுதானே பொருள்படும்? அது ஒருக்காலும் உருவ வணக்கத்தை - வழிபாட்டைக் குறிப்பது ஆகாதே. உமக்கு ஐயமிருந்தால், நிருக்த நூலையும், பிராமண நூலையும் ஆராய்ந்து, இம்மந்திரத்தின் பொருள் தெரிந்து கொள்ளலாம்.

**மாதவாசார்யர்:** புராணம் என்கிற சொல் வேதத்தில் உண்டா இல்லையா?

**தயானந்தர்:** புராணம் என்ற சொல், வேதத்தில் பல இடங்களில் வருகிறது. ஆனால், அது புராண நூல்களைக் குறிப்பிடுவது அல்ல. கடந்த காலத்தைக் குறிக்கும் உரிச் சொல்லாகவே எல்லா இடங்களிலும் வருகிறது.

**விசுத்தானந்தர்:** ப்ருஹதாரண்ய உபநிஷதத்தில் உள்ளது இந்த சுலோகம் : “ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிஷ்வஸிதமேத் ரிக்வேதோத யஜுர்வேத சாமவேதோ அதர்வ அங்கிரஸ் இதிஹாஸ புராணம் ஷ்லோக வ்யாக் யானன்ய னுவ்யத்யனந்தி’ என்ற இந்த சுலோகம் சொல்வது எல்லாம் ஆதாரமில்லையா?

**தயானந்தர்:** இந்த சுலோகம் ஆதாரமானதுதான்.

**விசுத்தானந்தர்:** இந்த சுலோகம் ஆதாரமானது என்றால் அதில் உள்ளது எல்லாமே ஆதாரம்தானே.

***தயானந்தர்:*** உண்மையான சுலோகங்களே ஆதாரம்; பிற அல்ல.

***விசுத்தானந்தர்:*** இங்கு புராணம் என்கிற சொல் குறிப்பிடும் பொருள்தான் என்ன?

***தயானந்தர்:*** நீங்கள் அந்த நூலைக் கொண்டு வந்தால், அதுபற்றி நாம் ஆலோசனை செய்வோம்.

***மாதவாசார்யர்:*** இரண்டு தாள்களை எடுத்தார். இதனில் "புராணம்" என்ற சொல்லை அடைமொழியாகப் பயன்படுத்துகின்ற சொல் எது?

***தயானந்தர்:*** தயவு செய்து, எழுதப்பட்டிருப்பதை முழுமையாகப் படியுங்கள்.

***மாதவாசார்யர்:*** "ப்ராஹ்மண மிதிஹாஸான் புராணானிதி" (க்ருஹ்ய சூத்ரம்)

***தயானந்தர்:*** இங்கு "புராணம்" என்ற சொல் "ப்ராஹ்மண"த்திற்கு உரிச் சொல்லாகும். 'ப்ராஹ்மண'ங்கள் பழமையானவை அதாவது "சனாதனம்" என்று பொருள்.

***பாலசாஸ்திரி:*** ஏதேனும் புதிய "ப்ராஹ்மண'ங்களும் உண்டா என்ன?

***தயானந்தர்:*** இல்லை, இல்லை, எனினும், அதைப் பற்றி சற்றேனும் ஐயம் உண்டாகக் கூடாது என்பதற்காக, இந்த அடைமொழி உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது.

***விசுத்தானந்தர்:*** இதிஹாசம்-வரலாறு-என்ற சொல் இடையில் இருக்கும்பொழுது, அது எப்படி உரிச்சொல்லாக வரும்?

***தயானந்தர்:*** இடையில் வேறு சொல் வந்தால், உரிச்சொல் கூடாது என்றோ, இடையில் வேறு சொல் இல்லாவிட்டால்தான் உரிச்சொல் உபயோகிக்க வேண்டும் என்றோ விதி இருக்கிறதா என்ன? எடுத்துக்காட்டாக "அஜோநித்ய : சாச்வதோ அயம் புராணோ ந ஹன்யதே ஹன்யமானே சரீரே" தொலைவில் இருக்கிற "தேஹி" என்ற சொல்லுக்கு இங்கு ஒரு உரிச் சொல் இருக்கிறதா இல்லையா? எந்த இலக்கண நூலிலும் மாறுபாடான விதி இல்லையே.

**விசுத்தானந்தர்:** "புராணம்" என்ற சொல், "இதிஹாசம்" என்ற சொல்லுக்கு உரிச்சொல் அல்ல. அதனால், இதிஹாசம் புதியது என்று எடுத்துக் கொள்ள வேண்டுமா என்ன?

**தயானந்தர்:** பிற நூல்களில் "புராண" மென்பது "இதிஹாச"த்தின் உரிச் சொல்லாகவே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டு : "இதிஹாச புராணம் பஞ்சம வேதானாம் வேத".

வாமனாசார்யரும் பிறரும் இந்த பாடம் (நூல் பகுதி) எந்த வேதத்திலும் காணப்படவில்லை என்றார்கள்.

**தயானந்தர்:** வேதங்களில் இப்பகுதி காணப்படவில்லை என்றால், இந்தப் பட்டிமன்றத்தில் நான் தோற்றுப் போனதாகவே கொள்ள வேண்டும். ஆனால் அங்கு இது உள்ளது எனில், நீங்கள் தோற்றுப் போனதாக ஆகும். நீங்கள் எல்லோரும் இதை ஒப்புக்கொண்டு எழுதித்தர வேண்டும். தயானந்தரின் இந்த வாதத்தைக் கேட்டபின் எல்லா பண்டிதர்களும் அமைதியாக இருந்தனர்.

**தயானந்தர்:** இலக்கணத்தில் எங்கேனும் "கல்மஸம்ஞா" இருக்கிறதா?

**பாலசாஸ்திரி:** இல்லை, இல்லை. ஒரு சூத்திர விளக்கம் செய்கையில், ஒரு விளக்கவுரையாளர் அதனை எள்ளி நகையாடியுள்ளார்.

**தயானந்தர்:** தயவுசெய்து ஒரு எடுத்துக்காட்டு தந்து, அது சரிதான் என்று விளக்கிச் சொல்லுங்கள்.

பாலசாஸ்திரியும் பிறரும் இதைக் கேட்டு பேசாமல் இருந்தார்கள்.

பின்னர் மாதவாசார்யர் இரண்டு ஏடுகளை எடுத்து, பண்டிதர்கள் முன் வைத்தார். யாகம் முடிந்த பத்தாம் நாள், தலைவர் புராணங்கள் கேட்க வேண்டும் என்று வேதங்கள் கூறுவதாக இந்த ஏடுகளில் உள்ளன. இந்தச் சொற்றொடரின் பகுதியில் வரும் 'புராணம்' என்ற சொல் எதைப் பற்றிச் சொல்கிறது?" (அவை, நான்கு வேதங்களின் எந்தப் பகுதியும் அல்ல; மாறாக கிருஹ்ய சூத்திரங்களின் ஏட்டுப் பகுதிகளாக இருந்தன. - முதல் மொழிபெயர்ப்பாளர்).

**தயானந்தர்:** அந்த பாடப்பகுதியைப் படியுங்கள்.

எந்தப் பண்டிதரும் அதனைப் படித்துக் காட்ட முன்வராததால், பாலசாஸ்திரி அந்த ஏடுகளை எடுத்துத் தயானந்தரின் கைகளில் கொடுத்து அவரையே படிக்கும்படிக் கூறினார்.

**தயானந்தர்:** தயவுசெய்து நீரே படியும்.

**பாலசாஸ்திரி** "மூக்குக் கண்ணாடியில்லாமல் என்னால் படிக்க முடியாது' என்று கூறி, மீண்டும் அவற்றைத் தயானந்தரின் கைகளில் வைத்தார்.

எனவே தயானந்தர் அந்தப் பக்கங்களைப் பார்த்துப் படிக்கலானார். ஏறக்குறைய இரண்டே விநாடிகள் எடுத்துக்கொண்டப் பின்னர், அவர் பின்வருமாறு கூறுனார்:

பழைய அறிவியல் அறிவு, 'புராண வித்யா' என்பதாகும். வேதம் கூறும் பழமையான அறிவியல் அறிவுக்கு, 'புராண வித்யா' எனவும் வேறு பெயர் உண்டு. அது, பிரம்ம ஞானத்தைக் குறிப்பிடுகிறது. ஏனெனில், இதற்கு முந்தைய பகுதியில், ரிக் வேதத்தையும், பிற மூன்று வேதங்களையும் செவியுற வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. வேதத்தில் எங்கும் உபநிஷத்துக்களைப் பாராயணம் செய்ய வேண்டும் என்று கூறப்படவில்லை. எனவே, இதனில் வரும் குறிப்பு, உபநிஷதங்கள் மட்டுமே என்று கொள்ள வேண்டும்; பிற நூல்களை அல்ல.

நான்கு வேதங்களின் அறிவியல் அறிவு மட்டுமே பழமையான கடவுள் அல்லது பிரம்ம ஞானமாகும். இது பிரம்ம வைவர்த்த முதலான பிற புதிய புராண நூல்களைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது. இந்த மேற்கோள் பகுதியில், பிரம்ம வைவர்த்தமென்றுள்ள பதினெட்டு புராணம் என்று இருப்பின் பொருளே வேறாக இருந்திருக்கும். ஆனால், நான்கு வேதங்களிலும் அத்தகைய சொற்றொடரின் பகுதி இல்லை. எனவே, இந்தச் சொற்றொடர் பகுதி, பதினெட்டுப் புராணங்களைக் குறிப்பிடுவது அல்ல.

தயானந்தர் முடிக்கு முன்னரே விசுத்தானந்தர் எழுந்து "எனக்கு நேரமாகி விட்டது, நான் போகிறேன்" என்றார். உடனே எல்லாப் பண்டிதர்களும் எழுந்து நின்று "தயானந்தர் தோற்றுவிட்டார்", என்று முழங்கிக் கொண்டு வெளியேறினார்கள். ஆனால் பண்டிதர்கள், சுவாமி தயானந்தரால் எழுப்பப்பட்ட நான்குக் கேள்விகளுக்கு விடை தராத நிலையில் அவர் தோற்றுப் போனதாக எடுத்துக் கொள்வது எப்படிப் பொருந்தும்?

*1869 நவம்பரில் வெளியான, "ரோஹில்கண்ட் அக்பர்" இதழ் எழுதியது, "தயானந்த சரஸ்வதி காசி பண்டிதர்கள் மீது வெற்றி கண்டார். காசி பண்டிதர்கள், தாம் வென்றதாகப் பொய் செய்தியினைப் பரப்பினர்."*

*- (ஹர்பிலாஸ் சாரதா அவர்கள் இயற்றிய "தயானந்த சரஸ்வதியின் வாழ்க்கை வரலாறு" ஆங்கில நூல் "காசி சாஸ்திரார்த்தம்" பகுதி பக்கம் 32)*

# உருவ வழிபாடு கூடாது

**ஓம் ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய**
**நாம மஹத் ய ச : |**
**ஹிரண்ய கர்ப s இத்யேஷ் மா மா**
**ஹிங்ஸீ தித்யேஷா யஸ்மான்ன**
**ஜாத s இத்யேஷ: ||- யஜுர் வேதம், 32-3**

பொருள்: (யஸ்ய) முழுமையானவனும், பிறப்பற்றவனும், உருவமற்றவனுமாகிய, ஒப்பரிய தலைவனுடைய கட்டளைப்படி நடந்து, புகழ்தரும் வழி சென்று, உண்மை கூறல் முதலியவற்றைச் செய்தலே நாம ஜபம் ஆகும். (ஹிரண்யகர்ப): ஒளிமயமான சூரியன் முதலியவற்றின் பிறப்பிடமாகிய இறைவனிடம் (மா மா ஹிங்ஸி) எம்மைக் காப்பாற்று என்று மனிதர் எல்லோரும் வேண்டுதல் செய்ய வேண்டும். எங்கும் நிறைந்தவனும், உருவமற்றவனுமாகிய இறைவனை ஏன் வணங்க வேண்டும் என்று வினவினால் அதற்கு விடை : (யஸ்மான் ந ஜாத:) தாய், தந்தை தொடர்பால் தோன்றாதவன், ஒருபொழுதும் உடல் தரித்து குழந்தையோ, குமரனோ, முதியோனோ ஆகாதவன் (ந தஸ்ய) : அவனுக்கு உருவமோ, வடிவமோ, அவனைப்போன்ற ஓவியமோ எதுவும் இல்லை. ஏனெனில், அப் பரம்பொருள் உருவமற்றதும், முடிவற்றதும், எங்கும் நிறைந்ததும் ஆகும்.

அதனால், உருவமற்ற பரம்பொருளையே எல்லோரும் வழிபட வேண்டும். உடல் எடுத்தவனாக அவனை உபாசனை செய்வதால் என்ன தவறு என்ற ஐயம் எவருக்கேனும் உண்டானால், அவர் இவ்வளவேனும் புரிந்து கொள்ளட்டும். முதலில் பிறப்பெடுத்து உடல் கொண்ட மனிதன் பின்னர் முதுமை அடைந்து இறக்கின்றான். அதற்குப்பின் எவரை வணங்குவது? எனவே உருவ வழிபாடு கூடாது என்பது வேதங்களிலிருந்து உறுதியாகிறது.

-ரிஷி தயானந்தர்

# பிறப்பால் ஜாதி இல்லை!



—Swami Dayanand Saraswati

மகரிஷி தயானந்த சரஸ்வதி

**சென்னை ஆர்ய சமாஜம் (சென்ட்ரல்) வெளியீடு**

ஓம்

# பிறப்பால் ஜாதி இல்லை!

K. வேலாயுத ஆர்யா

1st Edition 1986
2nd Edition 1991
3rd Edition 1995
4th Edition 2014

# ஓம்
# 4. பிறப்பால் ஜாதி இல்லை!

"ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதி முழங்கி சென்று அரை நூற்றாண்டுக்கும் அதிகமாகிவிட்டது. ஜாதி ஒழிப்பு பேசி அரசியலில் ஆதிக்கம் பெற்று வந்த சுதந்திர இந்தியாவின் அரசியல் கட்சிகள் நடைமுறையில் ஜாதி அரசியலைப் பின்பற்றி நமது நாட்டை மேலும் அழிவுக்குக் கொண்டு சென்றவாறு உள்ளன. ஜாதிகள் உள்ள காலம் வரை தீண்டாமையும் நடைமுறையில் இருக்கத்தான் செய்யும். பிறப்பால் உயர்வு, தாழ்வு என்கிற சூழ்நிலை உள்ள இந்த இந்து சமூகத்தைவிட்டு வெளியேறி கொள்கை அளவிலாவது ஜாதிகள் இல்லாத கிறிஸ்தவ, இஸ்லாம் சமூகங்களே மேல், குறிப்பாக இஸ்லாமே மேல் என்று "ஹரிசனங்கள்" என ஜாதி இந்துக்களால் அரசியலில் செல்லப் பெயர் இடப்பட்ட நடைமுறை தீண்டாதார் கலகம் செய்து கூட்டத்தோடு இஸ்லாமில் இணைந்து வருவதும் ஒரு உண்மை. 1980-81ல் தமிழகத்தில் நடைபெற்ற மீனாட்சிபுரம் மத மாற்றம் அகில இந்தியாவிலும் இந்துக்களிடையே ஒரு எச்சரிக்கை-விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இந்து சமய, சமூகக்காவலனான ஆர்ய சமாஜம் சவாலை ஏற்று சரித்தரம் தனக்கு இட்டுள்ள கட்டளையை ரிஷி தயானந்தர் பெயராலும், வேதத்தின் பெயராலும் நிறைவேற்றப் புறப்பட்டுள்ளது!

மகாபாரதக் காலத்திற்குப் பின் வேதப் பிரசாரகர்களான ரிஷி முனிவர்களின் பரம்பரை விட்டுப் போனதால் சுயநலமிகளான வேத விரோதிகள் வேதத்தின் பெயரால் மக்களைச் சுரண்டுவதற்காக அனேகவிதமான ஜாதி, மத சம்பிரதாயங்களை உருவாக்கினர். இன்று இந்து மதம் எனத்தோற்றம் அளிக்கும் புராண மதங்கள் இந்துக்களை ஜாதி, சம்பிரதாயக் கட்டுகளில் பிணைத்து அழித்து விடுகின்ற உண்மையை சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் 1875ல் பறைசாற்றி, இந்துக்கள் உயர்வதற்கு வேதம் ஒன்றே வழி என்று அறிவுறுத்தி உண்மை இந்து சமயமாகிய வேத தர்மத்தை மீண்டும் நிலைநாட்டிப் பரவச் செய்யவே ஆர்ய சமாஜத்தை அமைத்தார். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வேதக் கருத்தைப் பரவச் செய்து அது கூறும் பிராமண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திர

வருணங்கள் எனப்படும் சமூக அமைப்பை மீண்டும் கொண்டு வந்து சமூகச் சீர்திருத்தம் செய்யாத வரை இந்துக்கள் அழிவிலிருந்து தப்பமுடியாது என்ற உண்மையை ஆர்யசமாஜம் எனப்படும் சான்றோர் சங்கம் கூறி வருகின்றது.

ஆரிய சமாஜமும், தயானந்தரும் தோன்றும் முன்னரே இந்து ஞானிகள் பிறப்பால் ஜாதி இல்லை-உயர்வு, தாழ்வு இல்லை, மனிதர்களின் குண கர்ம சுபாவம் எனப்படும் தன்மை தொழில் தன்னுணர்வுகளே சமூகத்தில் அவர்களுடைய பதவிகளை நிர்ணயிக்கின்றன என்ற உண்மையை உணர்ந்திருந்தனர் என்பதை ரமேஷ்சந்திர தத்தர் எனும் அறிஞர் 1908ல் தாம் இயற்றிய "பண்டைய இந்து நாகரிகம்" (Ancient Hindu Civilisation) என்ற நூலில் விரிவாக விளக்கியுள்ளார். வாயு புராணம் கூறுகிறது: கிருத யுகத்தில் ஜாதி அமைப்பு இருக்கவில்லை. பின்னர் பிரம்மா தொழில்களுக்கேற்ப சமூகப் பிரிவுகளை அமைத்தார். இராமாயணம் உத்தரகாண்டத்தின் 14வது பகுதியும் பிராமணர்கள் கிருத யுகத்தில் கடுந்தவம் செய்தனர்; க்ஷத்திரியர்கள் திரேதாயுகத்தில் தோன்றினர்; பிறகு தான் நால்வகை வருண அமைப்பு உண்டாயிற்று என்று கூறுகிறது. மகாபாரதத்தின் சாந்தி பருவத்தின் 168வது பகுதியில் "ஒரு நேர்மையான, புரியக்கூடிய விவரம் ஜாதி அமைப்பு" பற்றிக் கிடைக்கிறது என்கிறார், ரமேஷ்சந்திர தத்தர். அதன்படி சிவந்த நிறம் கொண்ட இரு பிறப்பாளர்களே தம் வேள்விக் கடமைகளை மறந்ததால் வைசியர் ஆயினர். கருமை நிறம் கொண்ட இரு பிறப்பாளரே தம் வேள்விக் கடமைகளை மறந்து சூத்திரர் ஆயினர்.

நால் வகை வருணங்களின் உற்பத்தியைப் பற்றி புருஷ ஸூக்தம் எனப்படும் ரிக் வேத மந்திரத் தொகுப்பு கூறுவதையும் குறிப்பிட்ட பின்னர் ரமேஷ் சந்திரதத்தர், பிரம்மாவின் உடலிலிருந்து இந்த சமூகப்பிரிவுகள் தோன்றிய விவரத்தை ஒரு அலங்காரமான வருணனையாகவே பண்டைய நூல்கள் உள்ளபடி ஏற்றன என்றும் கூறிவிட்டு, யஜுர் வேதத்தின் 14,16 அத்தியாயங்களில் கூறப்படுகின்ற தொழில்கள் எல்லாம் சமூகங்களின் தொழில் சார்ந்த பிரிவுகளே அன்றி பிறப்பால் அமைந்தவை அன்று எனவும் விளக்குகின்றார். இந்த விஷயத்தையே தைத்திரிய பிராமணம் எனும் வேத விளக்க நூலும் வேறு வார்த்தைகளில் கூறுகின்றது. "ஆர்ய (இந்து) மக்கள் சமூகத்தை இந்த வருண

அமைப்பு ஒருபொழுதும் பிரித்ததில்லை; பிளவுறச் செய்ததில்லை'' Caste never divided and dis united the Aryan people'' என்று முடிவாகக்கூறி உதாரணமாக பின்வரும் இந்து சரித்திரச் சம்பவங்களையும் அவர் எழுதுகின்றார். யாஜ்ஞவல்கியர் எனப்படும் பிராமண வருண (ஜாதி அல்ல. அதாவது பிறப்பால் பிராமணர் அல்லர்) பெரியாருக்கும் ஜனக மன்னர் உபதேசம் செய்ததால் அந்த க்ஷத்ரியரும் பிராமணராகவே ஏற்கப்பட்டார். (சதபதப் பிராமணம்). ஒரு அடிமைப் பெண்ணின் மகனான கவசர் எனும் அறிஞர் ஆரம்பத்தில் பிற பிராமணர்களால் புறக்கணிக்கப்பட்டாலும் பின்னர் ஒரு ரிஷியாக ஏற்கப்பட்டார். (ஐதரேய பிராமணம்) சத்யகாமர் எனும் ரிஷி ஜாபாலி அம்மையாருடைய மகன். அவருடைய பிதா தாயாரால் சொல்லமுடியாத உண்மையை வெளிப்படையாக தன் குருவிடம் எடுத்துக்கூறிய பொழுது நீ உண்மை பேசுகிறவன் நீ பிராமணனே என்று அந்தக் குருவானவர் ஏற்று அவருக்கு வேதோபதேசம் செய்த வரலாறும் உண்டு. வேத கால ரிஷிகளான பராசரர், வசிஷ்டர், வேத வியாசர் போன்றோரின் வரலாறுகள் பண்டையக்காலத்தில் இந்துக்களிடையில் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை நிரூபிக்கின்றன. ஜாதி வெறி பிடித்த பிற்கால இந்துத்தலைவர்கள் அதாவது ''சனாதனிகள்'' இந்த உண்மைகளை மறைக்க முடியாமல் ''ரிஷி மூலம் நதி மூலம் பார்க்கக்கூடாது'' என்று மழுப்பல்வாதம் செய்து வருகின்றார்கள்! அந்தோ பரிதாபம்! எனவே தான் இந்து சமூகத்திற்குப் புத்துயிரும், புதுவலிவும் தந்த ஆர்ய சமாஜ ஸ்தாபகர் சுவாமி தயானந்தர் முழங்கினார், ''வேதமே உண்மை அறிவு நூல்; எனவே வேதத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்'' என்று.

வேதம் எல்லா தருமத்திற்கும் (அறத்திற்கும்) மூல நூல் என்பதை சனாதனிகளே ஒப்புகின்றனர். இடைக்காலத்தில் வேதத்தின் உண்மைப் பொருள் விளங்காத காரணத்தால் பிறப்பால் ஜாதி உயர்வு தாழ்வு மனப்பான்மையும் தீண்டாமை எனும் அனாசாரமும் இந்து சமூகத்தில் தோன்றி அதனை அழிக்கலாயிற்று. பிரம்மாவின் முகத்திலிருந்து தோன்றியவன் பிராமணன், புஜங்களிலிருந்து க்ஷத்ரியனும், தொடையிலிருந்து வைசியனும் கால்களிலிருந்து சூத்திரனும் தோன்றியதாக புருஷ ஸூக்த மந்திரத்திற்குத் தவறான பொருள் கொடுத்து வந்ததை தயானந்தர் கண்டித்து ''ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத்'' என்ற

*அந்த புகழ்பெற்ற வேத மந்திரத்தின் உண்மைப் பொருளை தமது ஒப்பற்ற நூலான சத்யார்த்த பிரகாசத்தில் விளக்கியுள்ளார்.*

*“பிறவியால் ஜாதி பேசி குண கர்மத்தை மறுப்பவனை இப்படிக் கேட்க வேண்டும். ‘ஐயா ஒரு பிராமணன் கிறிஸ்து, முஸல்மான் மதத்தில் சேர்ந்தால் அவனை பிராமணன் என்பதில்லையே ஏன்?” அவன் பிராமண ஆசாரங்களை விட்டதனால் என்பீர். ஆதலால் பிறவியாலன்று ஆசார சீலத்தினாலே தான் உத்தம கர்மத்தினாலே தான், ஒருவனை பிராமணன் எனலாம். உத்தம குணகர்ம சுபாவங் கொண்டவன் பிறவியால் கீழாயினும் ஒழுக்கத்தில் மேலான அந்தணனேயாவான். மேலான பிறப்பாளன் கீழானசெயல் செய்தால் அவன் கீழ்மகனே.*

**வினா: ப்ராஹ்மணோ அஸ்ய முகமாஸீத்**
**பாஹூ ராஜன்ய: க்ருத |**
**ஊரு ததஸ்ய யத் வைஸ்ய:**
**பதப்யாம் சூத்ரோ அஜாயத || (யஜுர் வேதம் 31.11)**

*யஜுர் வேதம் 31ம் அத்தியாயம் 11ம் மந்திரம் சொல்கிறது: “பிராமணன் பரம புருஷனுடைய முகத்திலிருந்து உண்டானான். க்ஷத்ரியன் புஜத்திலிருந்து வைசியன் தொடையிலிருந்து, சூத்திரன் பாதங்களிலிருந்து உண்டானார்; முகம் அல்லது புயம் தொடையாகாது; பாதம் முகமாகாது. அது போல் பிராமணன் க்ஷத்ரியாதிகளாகான். க்ஷத்ரியாதிகள் பிராமணராகார்.*

*விடை: இம்மந்திரத்திற்கு நீர் செய்த பொருள் சரியில்லை. ஏனெனில் “புருஷன்” என்பது அருவாக நிறைந்த பரமாத்மாவைக் குறிக்கும். அருவான பொருள்களுக்கு முகம் தோள் முதலிய உறுப்புகளில்லை. அப்படி உறுப்புகளிருந்தால் இறைவன் எங்கும் நிறைந்து எல்லாம் வல்லவனாய் உலகைப் படைத்து காத்து அழித்து ஜீவர்களின் நல்வினை. தீவினைக்கேற்ற நீதி செய்து எல்லாம் அறிந்தவனாய் பிறப்பிறப்பற்ற சிறப்புடையோனாக முடியாது. ஆதலால் இம்மந்திரத்தின் உண்மைப் பொருள் இதுவே (அஸ்ய) நிறைவான பரமாத்மாவின் படைப்பில் முகத்தைப் போன்று அறிவொழுக்கங்களால் சிறந்த உத்தமன் (ப்ராஹ்மண:) பிராமணன். (பாஹு) (பாஹுர்வைபலம்பாஹுவை வீர்யம்-சதபத பிராமணம்) பாஹுர் என்பது பலம், வீர்யம். இறைவன் படைப்பில் பலவானும், வீறுபெற்றவனும் (ராஜன்ய:) க்ஷத்ரியன். ஊரு என்பது தொடை, தொடையின்*

பலத்தால் தேச தேசமாகச் சென்று வாணிகம் செய்து சமுதாயச் செல்வத்தைப் பெருக்குகிறவன் (வைச்ய:) வைசியன். (பதப்யாம்) பாதத்தை போலமிகத்தாழ்வான நிலையில் அறிவு குறைந்திருக்கிறவன் (சூத்ர) சூத்ரன். அதுவுமின்றி சதபதப்ராஹ்மணத்தின் கருத்தும் பொருளும் இதுவே.

"யஸ்மாதேதே முக்யாஸ் தஸ்மான் முகதோ ஹ்யாஸ் ஜ்யந்த!" (சதபதம் 6.1.1.10) பிராமணர் ஜன சமுதாயத்தின் முக்கியத்தலைவர்களாதலால் முகம் எனப்பட்டனர். உறுப்புகளில் தலை சிறந்தது. அதுபோல நிறைவான கல்வியும் மேலான குணமும் நற்செயலும் நல்லியல்பும் உடைய தலையான மனிதனே பிராமணன் எனப்படுகின்றார். அருவான பரமேசனுக்கு முகாதி அங்கங்கள் இல்லையாதலால் பிராமணன் அவன் முகத்திலிருந்து பிறந்தான் என்பது அபத்தம். அது மலடி தன்மகனுக்குமணம் புரிந்தாள் என்பது போன்று பொய்யாகும். ஒருவன் எதிலிருந்து பிறந்தானோ அந்த உருக் கொள்கிறான். பிராமணன் முகத்திலிருந்தே பிறந்தான் என்றால் அவன் உருவம் முகம்போல உருண்டையாக மட்டும் இருக்கவேண்டும். க்ஷத்ரியன் வடிவம் புஜமாயிருக்க வேண்டும். வைசியன் உருவம் தொடை போலும், சூத்ரன் உருவம் பாதம் போலும் இருக்கவேண்டும். அப்படியில்லை. நீ சொல்வது போலவே பிறந்ததாக வைத்துக் கொள்வோம். நீ பிராமணன்! யார் முகத்திலிருந்தும் பிறக்கவில்லை; எல்லோரையும் போல் தாயின் கர்ப்பத்திலிருந்தே பிறந்தாய். நீ புருஷன் முகத்தில் பிறக்காமல் பிராமணன் என்று உன்னை அபிமானிப்பதேன்? ஆதலால் உன் அர்த்தம் வியர்த்தம். நான் சொல்வதே சரி. பிறரும் அப்படியே சொல்லியிருக்கிறார்கள்.

**சூத்ரோ ப்ராஹ்மனதா மேதி**
**ப்ராஹ்மணச் சேதி சூத்ரதாம்!**
**க்ஷத்ரியாஜ் ஜாத மேவந்து**
**வித்யாத் வைச்யாத் ததைவ ச !! (மனு 10.65)**

சூத்திரனாகப் பிறந்த போதிலும் குண, கர்ம, சுபாவங்களால் அவன் பிராமணன், க்ஷத்ரியன், வைசியன் ஆகிறான். அப்படியே பிராமணன், க்ஷத்ரியன், வைசியன் குலத்திலுதித்தும், கீழான குண கர்ம இயல்புடையவனானால் அவன் சூத்ரன் ஆகிறான். அதே மாதிரி க்ஷத்ரியனும் அந்தண்மையால் பிராமணன்

*ஆவான். கீழியல்பினர் கீழானவர்கள் ஆவார்கள். அதாவது நான்கு வருணங்களில் எவனெவன் எந்த எந்த வருண தர்மத்தை காக்கிறானோ அதது ஆகிறான். சாதி பிறப்பினாலன்று. ஒழுக்கத்தினால் அமைவது. ஆபஸ் தம்ப சூத்திரத்தைக் கேள்:*

**தர்ம சர்யயா ஜகன்யோ வர்ண:**
**பூர்வம் பூர்வம் வர்ணமாபத்யதே**
**ஜாதி பரிவ்ருத்தௌ !!**
**அதர்மசர்யயா பூர்வோ வர்ணோ**
**ஜகன்யம் ஜகன்யம் வர்ணமாபத்யதே**
**ஜாதி பரிவ்ருத்தௌ !!** (2)

**- (ஆபஸ்தம்ப 2-5-10-11)**

*தர்மாசரணத்தால் அறவழி நடத்தலால் கீழான வருணத்தானும், உத்தம வருணத்தை அடைகிறான். ஒருவன் எதற்குத் தகுதியோ அந்த வருணத்தில் வைத்து மதிக்கப்படுவான். (1) அதர்மாசரணத்தான் தீயவழி நடப்பவன் உயர் (பூர்வ) குலத்தில் பிறந்தவனேனும் கீழ்வரிசையில் வைத்தெண்ணப்படுவான். அவனை அந்த வர்ணமென்றே சொல்ல வேண்டும். (2) ஆண்களைப் போலவே பெண்களையும் இவ்வாறே வைத்து மதிக்க வேண்டும். இவ்வாறானால் அவரவர் தத்தமது வருண தர்மத்தைப் பழுதில்லாமல் பாதுகாத்து பரம சுத்தர்களாக வாழ்ந்து மேலோங்க முயல்வார்கள். ஆதனால் எந்த வர்ணத்திற்கும் நிந்தையும் கீழ்தனமும் உண்டாவதில்லை பார்க்க :*

*- "சத்யார்த்த பிரகாசம்"*

*(சென்னை ஆரிய சமாஜ வெளியீடு)*

*ஆக வேத நெறிப்படி பிறப்பால் சாதி இல்லை என்றும், பிராமண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர் எனப்படும் நால்வகை சமூகப்பிரிவுகள் மனிதர்களின் குண கர்ம சுபாவத்தால் மட்டுமே அமையுமென்றும் வலியுறுத்திய ரிஷி தயானந்தர் இந்த சமூகப்பிரிவை அமைத்து இன்னவர் இன்ன வருணத்தவர் என்று அவருக்கு மட்டும் அதிகாரப்படுத்தும் உரிமை வேத நெறி நிற்கும் அரசாங்கத்தினுடையது என்று விளக்கிச் சொல்கிறார். இன்றும் வக்கீல், டாக்டர் முதலிய தொழில்களை முறைப்படிக் கற்றுத் தேர்ந்தவர்களே அவ்வாறு அழைக்கப்பட்டு மதிக்கப்படுவது*

போல, நன்கு வேதம் பயின்று சமூகத்தின் தலைமைப்பதவிகளில் இருக்கக் கூடியவர்கள் பிராமணர்கள் ஆவர். வேதப் பயிற்சியுடன் ஆட்சித் துறைகளில் மட்டும் கவனம் செலுத்துவோர் க்ஷத்திரியராகவும், வேதப் பயிற்சியுடன் தொழில், விவசாயம், வாணிபத்தில் ஈடுபடுவோர் வைசியராகவும், வேதப் பயிற்சியில் நாட்டமின்றி பிற துறைகளில் ஈடுபட்டு சேவை மட்டுமே செய்வோர் சூத்திரர்களாகவும் இருப்பார்கள். தொழில் காரணமாக மட்டுமே உள்ள இந்தப் பிரிவுகளில் உயர்வு, தாழ்வு பிறப்பாலும் இராது. சம அதிகாரங்கள் உரிமைகளுடன், செய்யும் தொழில்களுக்கேற்ப சிறப்பு வசதிகள் மட்டுமே அரசாங்கத்தால் தரப்படும் என்பது வேதமதம்.

இங்கு நிச்சயம் ஒரு சந்தேகம் எழுகிறது. சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகளாகியும் இந்துக்களே (ஆர்யர்களே) பெரும்பான்மையாக உள்ள இந்த நாட்டில் ஏன் இந்த அமைப்பு ஏற்பட்டும் ஜாதிகள் ஒழியவில்லை? பெரும் பான்மையினரான இந்துக்களின் தலைவர்கள் பிறப்புக் காரணமாக அமைந்த தமது ஜாதிப் பிரிவுகளைக் கைவிடாததால் என்பதே இதற்கு விடை. பல்வேறு மத சம்பிரதாயங்களும் தடையாக இருப்பதாலும் இந்த நிலை. ஆர்ய சமாஜம் பரவி அரசியலில் ஆதிக்கம் பெற்று வேத நெறியில் இயங்கும் ஆட்சியை அமைக்கும் வரை, இந்த நிலை தொடரும். இந்த நிலை தொடருமாயின் எதிர்காலத்தில் இந்துக்களே சிறுபான்மையினராகி அவர்களுடன் ஆர்ய சமாஜமும் அழிந்து விடும் அபாயமும் உண்டு. எனவே தயானந்தர் காட்டிய புரட்சிப் பாதையில் சென்று இந்துக்களை ஒருங்கிணைத்துச் செல்ல ஆரிய சமாஜம் முயன்று வருகிறது. சுருக்கமாகக் கூறின் ஜாதிகளற்ற சமுதாயத்துக்கு ஒரே வழி வேத வழி. ஆர்ய சமாஜம் கூறும் வழி. வேறு வழி இல்லை.

நாலாயிரம் சாதி உபசாதிப் பிரிவுகளாக சென்ற ஐயாயிரம் ஆண்டுகளாக பிளவுபட்டே வந்துள்ள இந்து சமூகங்கள் வேத நெறிப்படியான நான்கு வருணம் எனும் சமூகப் பிரிவுகளாக அமையும்பொழுது அவை குண கர்ம சுபாவத்தால் மட்டுமே அமையும் என்பதைக் கண்டோம். வேத காலத்தில் நிலைமை இப்படித் தான் இருந்தது என்பதை மகாபாரத காலத்தில் வாழ்ந்த வேத ஞானியும் மன்னர் குலத்தவரும், ராஜதந்திரியுமாக விளங்கிய யோகேசுவர ஸ்ரீ கிருஷ்ணர் இறைவன் வாக்காக தாம் அருளிய கீதையில் வலியுறுத்துகிறார்.

"சாதுர் வர்ண்யம் மயா ச்ருஷ்டம்
குண கர்ம விபாகச:"

அதாவது "இறைவன் வாக்கு: தன்மை தொழில் தன்னுணர்வு எனும் அடிப்படையில் மனிதர்களை நால்வகைச் சமூகங்களாக நான் தோற்றுவித்தேன்." வர்ணம் என்ற இந்த சொல்லுக்கு ஜாதி என்று பொருள் கொண்டு சில வேத விரோதிகள் தவறான பிரசாரம் செய்து மக்களைக் குழப்பி வருகின்றனர். "வர்ணம்" என்ற சொல்லுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது; ஏற்கப்பட்டது என்பதே பொருள். உலகியலிலும் எல்லாத் தேர்வுகளும் குணகர்ம சுபாவம் எனும் தகுதிகளின் அடிப்படையில் அமைவதை நாம் காண்கிறோம். வைத்தியருக்குப் பிறந்த காரணத்தாலேயே வைத்தியர் மகனோ மகளோ வைத்தியர் ஆகிவிடுவதில்லை. அந்தத் துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு அதற்கான பயிற்சி பெற்றால் மட்டும் தானே ஆக இயலும். அது போன்றே வேதநெறி சமூகத்தில் தகுதிகள் காரணமாக மட்டுமே பிராமண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரப் பிரிவுகள் அமைந்து ஒன்றுக்கொன்று ஆதரவாக பக்கபலமாக இருந்து சமூகத்தைக் கட்டிக்காத்தன. உலகில் எல்லா நாடுகளிலும் இது இயல்பாக இருக்கின்றது. பாரதத்தில் மட்டும் ரிஷி முனிவர்கள் இந்த சமூக அமைப்புக்குப் பெயர் கொடுத்து வருண முறை என்று அழைத்தனர். பிற்காலத்தில் வேதப் பிரசாரம் மறைந்து போனதால் அந்த சமூகப் பிரிவுகள் இறுகி பலவேறு ஜாதிகளாக பிளவுப்பட்டுப் பிறப்பின் அடிப்படையில் நின்றுபோய் வேத விரோதிகளான நாத்திக இஸ்லாமிய கிறிஸ்தவ சமயங்களால் தாக்கப்பட்ட பொழுது அழிந்தும் வரலாயின. இந்துக்களை இந்த அழிவினின்றும் காத்தவர் ரிஷி தயானந்தரே. தமது உண்மை வேத விளக்க நூல்களால் அவர் ஆர்யர்களாகிய இந்துக்களுக்குப் புத்துயிரும், புத்துணர்வும் கொடுத்தார். ஜாதிப்பாகுபாடுகளை நீக்கி இந்துக்கள் மீண்டும் பழையபடி நான்கு வருணத்தவராக வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

இந்த நால் வகை வருணத்தாரின் குணம் கர்மம் கடமைகளைப் பற்றி "சத்யார்த்தப் பிரகாசத்" தில் தயானந்நர் கூறியுள்ளதைச் சுருக்கமாக இங்கு எழுதுகிறோம்.

வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என அந்தணர் கடமை ஆறு ஆகும். பிராமணன் தன்னுடைய சொந்த நன்மைக்காக

கையேந்துவது தாழ்வு என்கிறார் மனு. உண்மைப் பிராமணன் மன அடக்கம் புலனடக்கம், விடாமுயற்சி, உடல் தூய்மை, மனத் தூய்மை, அமைதி, எளிமை, ஞானம், உயர்ஞானம், கடவுள் நம்பிக்கை உடையவனாக இருப்பான்.

க்ஷத்ரியன் எனப்படும் ஆட்சியாளன் கடமைகள் பதினொன்று. பிரஜைகளைக் காத்தல், தக்காருக்கு ஆதரவு அளித்து பொருள் உதவி செய்தல், வேள்வி இயற்றல், வேதம் படித்தல்-படிப்பித்தல், புலனடக்கத்துடன் உடல்மன ஆத்ம உறுதியுடன் இருத்தல், பகைவரைக்கண்டு அஞ்சாது அவரை அடக்கும் திறன், சோர்வும் சலிப்பும் இன்றி உற்சாகத்துடன் செயலாற்றுதல், துணிவு, அரசியல் விவகாரங்களில் திறமையுடன் ஈடுபடுதல், போரில் வெற்றி பெறுதல், இறைநம்பிக்கையுடன் தானம்செய்தல் என்பது அவை.

வைசியன் கடமைகள் ஆறு. பயிர் செய்தல், கால்நடைச் செல்வத்தைப் பாதுகாத்து வளர்த்தல், கல்வி பரவ தானம் செய்தல், வேள்வி இயற்றல், வேதம் கற்றல், எல்லாவகையான பயனுள்ள வியாபாரம் தொழில்களில் ஈடுபடுதல், வட்டி வியாபாரம் அனுமதிக்கப்படுகிறது. ஒரு நிபந்தனையுடன்! நூற்றுக்கு நான்கு, ஆறு எட்டு அல்லது பதினாறு வரை வருட வட்டி வாங்கலாம் அதற்குமேல் கூடாது; நூறு வருடங்களானாலும் ஒரு ரூபாய்க்கு இரண்டு ரூபாய் கொடுக்கப்பட்டால் அசலும் வந்ததாகக்கருதி அதன்பிறகு வட்டி வாங்கலாகாது.

சூத்திரர் கடமை: தாம் உள்ளிட்ட மேற்கூறிய சமூகப் பிரிவினர் அனைவருக்கும் தம் உழைப்பைத் தந்து உதவி செய்தல் ஒன்று மட்டுமே.

பிறப்பால் சாதிகளற்ற இந்த வேத சமுதாயத்தைப் பற்றி விளக்கிய பிறகு தயானந்தர் முடிவாகக் கூறுகிறார்:- "இந்த வர்ண பேதம் பிறப்பினால் வருவதன்று. குண கர்ம சுபாவத்தாலும் அறிவு ஆற்றலாலும் வருவது. ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்கேற்ற வர்ணத்தில் மதிக்கப்பெறுவர். இந்த முறையில் அறிவு முன்னேற்றம் எய்தும். உத்தம வர்ணத்தவர் தமது பிள்ளைகள் மூடர்கள் ஆனால் சூத்ரர் ஆக வேண்டியது தான் என்றும், பிள்ளைகள் தாம் சரியாகப் படித்து வித்வான்கள் ஆகாவிட்டால் இழிநிலை அடைவோம் என்றும் பயந்து தம் கல்வி ஒழுக்கங்களை உயிர்போலக் காப்பர். கீழ் வகுப்பினர் அந்தண்மை எய்த மகிழ்வுடன் முயல்வார்கள். கல்விக்கும் தருமப் பிரசாரத்திற்கும் அந்தணருக்கு அதிகாரம் தருவது நலம். ஏனெனில் அறிவிலும் அறநெறியிலும்

சிறந்த அவர்கள் அக்கடமையை நன்றாக நிறைவேற்ற முடியும். க்ஷத்ரியருக்கு அரசியல் அதிகாரம் தந்தால் அரசிற்குக் கேடும் இடரும் வராமல் இருக்கும். பசு வளர்த்தல், வாணிகம் முதலியவற்றை வைசியரிடம் ஒப்புவிக்க வேண்டும். அவர்களே இக்காரியங்களை நன்றாக நிறைவேற்றுவார்கள். சூத்ரர் அதிகக் கல்வி இல்லாதவர்கள் ஆகையால் தேக பிரயாசைப்பட்டு சமுதாயத் தொண்டு செய்யலாம். இவ்வாறு அவரவர் தகுதிக்குத் தக்கபடி வர்ணமும் கடமையும் அமைந்து, அவரவருக்கு ஏற்ற அதிகாரம் தந்து நாட்டை முன்னேற்றல் அரசர் முதலியோர் கடமை ஆகும்.

- ("சத்யார்த்தப் பிரகாசம்"

சென்னை ஆரியசமாஜம் வெளியீடு)

பாரத நாட்டு அரசியல் கட்சிகள் இனியேனும் தமது போலியான மதச்சார்பின்மை கோஷத்தை விட்டு விட்டு வேத நெறி அரசு அமையப் பாடுபடுமாக! குறிப்பாக இந்துக்களின் வோட்டுகளைப் பெற்றும் அவர்களுக்கு நடைமுறையில் துரோகம் செய்யும் கட்சிகள்! இந்து மதங்களுக்கும் சமூகங்களுக்கும் ஆணிவேர் வேதமே என்பதை அவை மறக்க வேண்டாம்! நமது நாட்டினைச் சுற்றியுள்ள அரசுகள் அனைத்தும் தம்முடைய தர்மத்தில் பற்றுக்கொண்டு மதச்சார்புள்ள அரசுகளாக விளங்குகின்றன. பாகிஸ்தானும் வங்காள தேசமும் இஸ்லாமில் பெருமிதம் கொள்கின்றன. பர்மாவும், ஸ்ரீலங்காவும் தம்மை பௌத்த தர்ம நாடுகளாக அறிவிப்பதில் பெருமை கொள்கின்றன. நமக்கென ஒரு தருமம் உயரிய ஒப்பற்ற வேத தருமம் இருந்தும் நாம் விலாசமற்றவர்களாக ஏன் விளங்குகிறோம்? இந்துக்கள் (ஆரியர்கள்) என்பதில் பெருமை கொள்ள ஏன் தயங்குகிறோம்? இடைக்காலத்தில் வேதம் கூறும் உண்மை நெறியைக் கைவிட்டு அனேக போலி மத சம்பிரதாயங்களைத் தோற்றுவித்து... அவையும் வேதத்தின் பெயரால்! அனேக ஜாதிகளாகப் பிரிந்து அந்தப் பிளவுகள் காரணமாகவே அழிந்து போனோம். இறைவன் அருளால் இந்த அழிவைத் தடுக்க வேண்டும். உண்மை வழியாம் வேத வழிக்கு இந்துக்களை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்பதற்காகவே ரிஷி தயானந்தர் தோன்றினார். ஆரிய சமாஜம் என்னும் உண்மை வேதப் பிரசார சபையினையும் நிறுவினார். இந்த இந்து சமூக சீர்திருத்த இயக்கத்தின் பயனாக இன்று இந்துக்களிடையே

ஜாதிக்கட்டுகள் தளர்ந்து கலப்புத் திருமணங்கள் பெருகி வருகின்றன. கொள்கை அளவிலாவது தீண்டாமையை ஒழிக்க நம்மவர்க்குத் துணிவும் ஆர்வமும் தந்தது ஆர்ய சமாஜமே. ரிஷி பக்தராகிய லாலா ஹர்தயால் எனும் இந்துப் புரட்சி வீரர் கூறியது போல "ஜாதிகளே இந்தியாவின் சாபக்கேடு. எல்லாவிதமான ஜாதி அமைப்புக்களே நம்மை ஒரு அடிமை தேசமாக்கின. நம்மை அடிமைப்படுத்தியது இஸ்லாமோ அல்லது இங்கிலாந்தோ அல்ல. நமது எதிரி நமக்குள்ளேயே உண்டு. பூஜாரிக் கூட்டமும் (போலி பிராமணீயம்) ஜாதியும் நம்மைக் கொன்று விட்டன. பிறப்பால் ஜாதி நம் சமூகத்தை ஆளும்வரை ஒரு பொழுதும் நெடுங்காலத்திற்கு இந்தியாவால் ஒரு சுதந்திர அரசை நிறுவ இயலாது. நீங்கள் சொற்பொழிவாற்றலாம், தீர்மானங்கள் நிறைவேற்றலாம், சமூக நன்மைக்கான மசோதாக்களை எல்லையின்றிக் கையெழுத்திட்டு நிறைவேற்றலாம்... ஆனால் ஜாதி மனப்பான்மை கொண்ட இந்துக்களால் ஒரு பொழுதும் ஒன்று பட்டு இயங்க இயலாது. அவர்களால் ஒரு சுதந்திர அரவை நிறுவ முடியாது; வெற்றி பெறும் ராணுவத்தைத் தோற்றுவிக்க முடியாது; 1938 நவம்பர் இதழ் "மகாபோதி" யில் மேற்கோளாக லாலா ஹர்தயால் தெளிவாகக் கூறுகின்றார். "இந்து சமூகத்தின், பஞ்சாப் உள்ளிட்ட இந்துஸ்தானத்தின் - எதிர்காலம் பின்வரும் நான்கு தூண்களின் மீதுதான் அமைக்கப்படும் என்று நான் பிரகடனம் செய்கிறேன். 1) இந்து ஒற்றுமை 2) இந்து அரசு 3)முஸ்லீம்களை மீண்டும் இந்து தருமத்திற்குக் கொண்டு வருதல் 4) ஆப்கானிஸ்தான் போன்ற பண்டைய இந்து நாடுகளை இஸ்லாமிலிருந்து வென்று மீண்டும் இந்து நாடுகளாக்குதல்."

என்ன பரிதாபம்! ஆப்கானிஸ்தானை மீண்டும் இந்து சமயத்திற்குக் கொண்டு வருவது போகட்டும், இந்தியாவிலேயே பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற முஸ்லிம் நாடுகளை உருவாக்க அனுமதித்ததுடன், இன்று இந்தியாவையே இஸ்லாமுக்குக் காணிக்கையாக்கும் கைங்கரியத்தில ஜாதி இந்துத் தலைவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்!

லாலா அவர்கள் குறிப்பிட்ட இந்து ஒற்றுமைக்கு வழி வேத நெறி ஒன்றுமட்டுமே. அதுமட்டுமே உண்மையில் ஜாதிகளற்ற இந்து சமுதாயத்தை உருவாக்கும். வருண சமூக அமைப்பை பிரசாரம் செய்து ஆர்ய சமாஜம் இன்றும் கலப்புத் திருமணங்களை ஊக்குவித்து வருகிறது. வேத காலத்தில் ஜாதிக்

*கட்டுபாடுகள் இல்லை என்பதை ஆர்ய சமாஜத்தை எதிர்க்கிற புராணிகள் கூட ஒப்புக் கொள்கிறார்கள். வேத வியாசரின் தாயார் சத்யவதி ஒரு செம்படவத் தலைவரின் மகள். ஸ்ரீ கிருஷ்ணரின் தாயார் தேவகி அசுர குலத்தைச் சேர்ந்தவர் அதாவது வேதத்தை ஏற்காத குடும்பம்! பஞ்சபாண்டவரில் ஒருவனாகிய பீமன் ஹிடிம்பி எனும் ராட்சசியை மணந்ததாகவும், மற்றொருவனாகிய அர்ஜுனன் உலூபி எனும் நாகநாட்டு அரசகுமாரியைத் திருமணம் செய்து கொண்டதாகவும் மகாபராதம் கூறுகிறது. ஒரு நாகர் பெண்மணியின் வயிற்றில் பிறந்தவரே சோம ஷ்ருவா எனும் ரிஷி. ஜரத்காரு எனும் ரிஷியும் ஒரு நாகர் பெண்மணியை மணந்தார். ஏன் புத்தருடைய குலமே இந்து-மங்கோலியக் கலப்பின் விளைவு என்கின்றனர் வரலாற்று நூலார். ஆரிய-திராவிட-மங்கோலிய நீக்ரோ என்ற மனித இன வேறுபாடுகளை வேதம் ஏற்கவில்லை. மனுர்பவ-மனிதனாக இரு என்று அது உபதேசம் செய்கிறது. "முத்தோன் வருக என்னாது அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்ற சங்க இலக்கிய இலட்சியம் வேதம் பரவியதால் ஏற்பட்ட நிலை. திருக்குறள் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற அழகான குறளால் வருண அமைப்பை சுருக்கமாக விளக்கியுள்ளதும் காண்க. இந்த உயர்ந்த வருண அமைப்புதான் பண்டைக் காலத்தில் இந்துக்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க உண்மைக் காரணமாக இருந்தது. பண்டைக்கால இந்துக்களின் உயர்நிலை குறித்து ஆர்யசமாஜ அறிஞர் ஹர்பிலாஸ் சாரதா அவர்கள்* Hindu Superiority*-இந்து உயர்வு என்று தொகுப்பு நூலே இயற்றியுள்ளார். விவரங்களை அதனில் காண்க!*

*பிராமண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திர சமூகப் பிரிவுகளிடையே ஏற்றத் தாழ்வு இருந்ததில்லை. எல்லோரும் சம உரிமை பெற்றவர்களாக இருந்தனர் என்பதற்குப் பின் வரும் ரிக் வேத மந்திரமே போதுமான ஆதாரம்:*

**ஓம். அஜ்யேஷ்டாஸோ அகனிஷ்டாஸ**
**ஏதே ஸம்ப்ராதரோ வாவ்ரது:**
**ஸௌபகாய.**

*- "சமூகத்தின் உறுப்பினர்களிடையே ஒருவர் உயர்ந்தவர், மற்றவர் தாழ்ந்தவர் என்பது இல்லை. எல்லோரும் சம உரிமை உள்ள சகோதரர்களே. நாட்டின் நலனுக்காகவும் உயர்வுக்காகவும் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்."*

இவ்வாறிருக்க தமிழ்நாட்டில் ‘சூத்ரன்’’ என்ற சொல் குறித்து மிகப்பயங்கரமான கருத்து, விஷமயமான கருத்து திராவிடக்கழகம் போன்ற அமைப்புகளால் பரப்பப்பட்டு வந்துள்ளது. சூத்ரன் என்றால் வேசி மகன். தாசி மகன். இது மனுஸ்ம்ருதியில் இருப்பதாக ஆட்சேபிக்கப்படுகிறது. மனுஸ்ம்ருதியைப் பல இடங்களில் மேற்கோள் காட்டும் தயானந்தரே இடைக்காலப் போலி பிராமணப் பண்டிதர்கள் பல இடைச் செருகல்களை அதனுள் சேர்த்து அதற்குக் களங்கம் உண்டாக்கிவிட்டனர் என்று கண்டித்துள்ளார். 1875-ல் பூனா நகரத்தில் இந்துக்களின் வரலாற்று விஷயம் பற்றிய சொற்பொழிவில் இதனைப் பற்றி அவர் குறிப்பிட்டு, மனுஸ்ம்ருதியின் பிற உயரிய சிந்தனைகளையும் கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும் அத்தகைய கருத்துக்களுக்கு முரண்பட்டதாக உள்ள விஷயங்களை அதன் ஆசிரியர் எழுதியிருக்க முடியாது என்ற உண்மை விளங்கும் என்றார். ரிஷியின் இந்தக் கொள்கையின் வழி நின்று ஆரிய சமாஜம் உண்மை மனுஸ்ம்ருதியின் அதன் இடைச் செருகல் சுலோகங்களுடன் பதிப்பித்து பெரும் தொண்டாற்றியுள்ளது, வடமாநிலங்களில். சென்னை ஆரியசமாஜமும் அதனைத் தமிழில் வெளியிடும் முயற்சியினை மேற்கொள்ளும்.

சூத்ரனுக்கு பூணூல் அணியும் உரிமை உண்டு என்று சில சாஸ்திர நூல்கள் பறைசாற்றுகின்றன. (இன்றைய ஆர்யசமாஜம் இதனை வேத சம்மதம் என்றே ஏற்று நடைமுறையிலும் கொண்டு வந்துள்ளது!) இதற்கு ஆதாரம் நிருக்தம் எனும் வேத அகராதி நூலே. “சூத்ர” சொல்லுக்கு நிருக்தம் விளக்கம் சொல்கிறது - “சுசா சோகேன ரோததி இதி சூத்ர” பிராமண, க்ஷத்ரிய, வைசிய எனும் வருணத்தாரின் தொழில்களுக்குத்தான் தகுதிபெறாமல் உடலுழைப்பை மட்டும் தரவேண்டியுள்ளதே என வருந்துவோனே சூத்ரன். எனவே அவனுக்கும் பூணூல் அணிவித்து வேதம் பயில உரிமை தந்தது வேதசமூகம். உடலுழைப்பால் வேதப் பயிற்சியினை அறவே விட்டவர்களே பின்னாளில் சூத்ரர் ஆயினர். அவ்வளவே. எல்லோரையும் போலவே சூத்ரனுக்கு வேதக் கல்விப்பெற உரிமை உண்டென்பதை யஜுர் வேதம் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது.

**ஓம். யதே மாம் வாசம் கல்யாணீ மாவதானி**

**ஜனேப்ப: !**

**ப்ரஹ்ம ராஜன்யாப்யாம் சூத்ராய**
**ச ஸ்வாய சார்யாய சாரணாய!!** (யஜுர் வேதம் 26-2)

*பொருள்: இறைவனாகிய நான் எல்லோர்க்கும் நன்மை தருவதாகிய இந்த வேத வாணியை அளித்துள்ளேன். இது பிராமணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்ரர், பெண்கள், வேலைக்காரர், மிகக் கீழான நிலையில் உள்ளோர் உள்பட எல்லோருக்கும் உரியது. (எனவே வேதத்தைக் கற்று பரவச் செய்வீர்)*

*(ஹர்பிலாஸ் சாரதா- 'ரிஷி தயானந்தர் வாழ்க்கை வரலாறு' ஆங்கில நூல் பக்கம் 36-முன்னுரைப் பகுதியில்)*

*இத்தகைய வேதப்பிரசாரம் செய்த ரிஷி தயானந்தர் ஜாதி வேற்றுமை பாராட்டவில்லை என்பதற்கு உதாரணமாக ஒரு நாவித அன்பர் அளித்த உணவை அவர் எற்று மகிழ்ந்த சம்பவம் உண்டு. அருகில் இருந்த ஜாதி பிராமணர்கள் "ஐயனே, அது நாவிதர் ரொட்டியாயிற்றே" என்று தடுக்க, அவர் மறுத்து புன்னகையுடன் கூறினார்-இது நாவிதர் ரொட்டியல்ல, கோதுமை ரொட்டி என்று. ஜாதி பாராமல், தீண்டாதார் என்று தள்ளாமல் தம்மிடம் ஆசிபெற வந்த அன்பர்களுக்கு அவர் யஜ்ஞோபவீதம் எனும் பூணூல் அணிவித்து காயத்ரீ மந்திர உபதேசம் செய்து அவர்களை " ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று முழங்கும் வேத நெறியில் செல்ல அறிவுறுத்தினார்.*

*எனவே சூத்ரர் பற்றி இழிவாக எழுதியுள்ள போலிச் சாத்திர நூல்கள் அனைத்தும் அருவறுப்புடன் தள்ளற்குரியவை. ஸ்ரீ சங்கரர், ராமானுஜர் போன்ற இடைக்கால ஞானிகளும் வேதத்தின் உண்மைப் பொருள் பரவாதகாலத்தில் வாழ்ந்த ஒரே காரணத்தால் சூத்திரர்களைப் பற்றி இழிவாகக் கூறிச் சென்றனர். அவ்வளவே.*

*அவர்களைவிட தயானந்தர் தாம் உண்மையில் பெரிய ஞானியா என்று பட்சபாதிகளான சில அன்பர்கள் பொங்கி எழலாம். நடுநிலை நின்று ஆர்யசமாஜ இலக்கியங்களை அவர்கள் ஆராய்வாரே ஆயின், அப்பெரியோர்களை தயானந்தர் குறைகூறவில்லை. அவர்கள் ஆற்றிய தொண்டினை வியந்து பாராட்டினார்; ஆனால் உபநிஷத்து-பிரம்ம சூத்திரம்-கீதை என்ற அளவுக்கு மட்டும் நின்று விட்டார்கள் என்பதையும் எடுத்துச் சொன்னார் என்ற உண்மை புலனாகும். அவர்கள் காலத்தில் வேதம் வெறும் வேள்விச் சடங்குக்கு மட்டுமே*

உபயோகிக்கப்பட்டு வந்ததுடன் வேத மந்திரங்களுக்குத் தவறான - சில இடங்களில் மிக அருவறுக்கத்தக்க ஆபாசமான பொருளும் வேத வித்தகர்கள் எனக்கூறப்பட்ட சாயணர், மஹிதரர் போன்றோரால் அளிக்கப்பட்டது என்பதையும் விளக்கி, கண்டித்து, தம்முடைய வேத விளக்கம் பண்டைய ரிஷி முனிவர்கள் இயற்றிய உண்மை நூல்களின் அடிப்படையில் அமைந்துள்ளதையும் அவர் வலியுறுத்தினார். தயானந்தர் தோன்றிய பிறகே வேத விளக்க நூல்கள் வெளிவந்து இன்று யாவருக்கும் படிக்கக் கிடைக்கின்றன. சாயண மஹிதர பாஷ்யங்களை வெளியிடும் துணிவு சனாதனிகளுக்கு இன்று இல்லை! இதுவே தயானந்தர் செய்த புரட்சியின் விளைவு!

சூத்திரர்களைப்பற்றி மனுஸ்ம்ருதி இழிவாகக்கூறுகிறது என்று திராவிடக் கழகத்தினர் எதிர்ப்பதை மேலே குறிப்பிட்டோம். அதே மனுஸ்ம்ருதியின் ஒரு சுலோகம் கூறுகிறது. “நால்வகை வருணத்தோரும் சமூகத்தில் அவர்கள் ஆற்றும் கடமைகளால் உயர்ந்தோரே.” (9-297)

“ப்ரம்மஜானாதி ப்ராஹ்மண:” பிரம்மம் என்றால் கடவுள், வேதம் என இருபொருள் உண்டு. இரண்டையும் அறிந்தவனே பிராமணன். பாணினி மகரிஷியின் இந்த கொள்கைப்படி பிறப்பால் மட்டுமே பிராமணனாக இருப்பவனை எப்படி ஏற்க முடியும்? வேதத்தை அறிந்தவனாக அவன் இருப்பின் அவன் பிராமணனே. எந்த சமூகத்தில் பிறந்தவனாயினும் வேதம் கற்று கடவுளை அறிந்தவனே உண்மைப் பிராமணன் என்பது ஆன்றோர் கொள்கை.

பிறப்பால் ஜாதி இல்லை என்பதைப் புராணங்களும், மகாபாரதமும் வலியுறுத்துகின்றன. மகாபாரதம் சாந்தி பர்வத்தில் பராசரர் கூறுகிறார்: “அரசனே, என் பாட்டனார் காஷ்யப ரிஷியும், வேதர், தாண்டவர், கிருபர், கக்ஷீவான், காமதர், யவக்ருதர், துரோணர், ஆயு, மாதங்கர், மத்ஸ்யர் ஆகியோரும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களே. இக்குறையிருப்பினும் அதனையும் கடந்து தன் முயற்சியால் வேதம் கற்று அவர்கள் உயர்நிலை அடைந்தனர்.” (296.14.16) பிறிதொரு இடத்தில் மகாபாரதம் (அனுசாஸன பர்வம் 266-14) பிறப்பால் மட்டும் பிராமணத்துவம் கிட்டாது. அதற்கான தகுதிகள் வேண்டும் என்கிறது. காலத்தால் மிகப் பிற்பட்டதான பவிஷ்ய புராணம் கூட ஞானம் உள்ள சூத்திரனே ஞானமற்ற பிராமணனை விட உயர்ந்தவன் என்று அறிவுறுத்துகிறது.

இனி வாசகருக்கு ஒரு சந்தேகம் எழலாம்! இவ்வளவு ஆதாரங்கள் இருந்தும் ஏன் சுதந்திர இந்தியாவில் கூட ஜாதி ஒழிப்பு நடைபெற்று உண்மையான சமூக அமைதி ஏற்படவில்லை என்று. ஏன் ஆர்ய சமாஜம் பரவி இந்துக்களை ஒற்றுமைப்படுத்தவில்லை என்று. 1926-ல் சுவாமி சிரத்தானந்தர் உயிர்த் தியாகத்திற்குப் பின் ஆர்ய சமாஜத் தலைவர்கள் காங்கிரஸில் ஈடுபட்டு தேச விடுதலைக்காக போராடினால் வேத நெறி அரசினை காங்கிரஸே அமைக்கும் என்று நம்பிக்கையுடன் அரசியலில் முழுமையாக ஈடுபட்டார்கள். பாவம், அவர்கள் நினைத்தது நடக்கவில்லை. சனாதனிகளான இந்துத் தலைவர்கள் ஆங்கிலேயர்களின் மன அடிமைகளாக இருந்ததாலும் (Mental Slaves) முஸ்லீம்களை தாஜா செய்வதற்காக காந்தியடிகளே ஆர்ய சமாஜ எதிர்ப்புப் பிரசாரம் செய்ததாலும் இந்து உணர்வு அற்றவர்களாகி தேசப் பிரிவினைக்கு வழி வகுத்தனர். இன்றும் அனேக விதமான ஜாதி மத சம்பிரதாயங்கள் அவர்களை வேதத்தை ஏற்க மறுக்கும் சூழ்நிலையில் வைத்துள்ளன. தங்கள் இயலாமையை மறைக்க மதச்சார்பின்மை என்னும் திரை கிடைத்ததை நன்கு உபயோகித்துக் கொண்டு சந்தோஷமாக இந்துக்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு உடந்தையாயிருக்கிறார்கள். வேதப் பிரசாரம் அரை நூற்றாண்டாக அறவே நின்று விட்டதால் இன்று ஆரியசமாஜத்திற்கும் ஆள் இல்லை! மீனாட்சிபுரம் மத மாற்றம் எச்சரிக்கை மணி அடித்து விட்டது. இப்பொழுது ஆர்ய சமாஜம் விழித்துக் கொண்டு செயலாற்றி வருகிறது.

இனி ஜாதிகளற்ற வீறுபெற்ற இந்து சமூகம் ரிஷி தயானந்தரின் பாதையில் செல்லும். எத்துணை உயர்ந்த தாயினும், மேலானதாயினும் அன்னிய ஆட்சி வேண்டாம். எவ்வளவு மோசமாக இருப்பினும் சுயராஜ்யமே, சுதந்திர ஆட்சியே வேண்டும் என இந்து விடுதலைக்காக முதற்குரல் எழுப்பியவர் ரிஷி தயானந்தர். அவர் விருப்பம் நிறைவேறி வேத நெறி அரசு பாரதத்தில் தோன்றும் நாள் வெகு தூரத்தில் இல்லை. பிரம்ம தேஜஸ், ரிஷி தயானந்தர் உருவிலும் ஆர்ய சமாஜ உருவிலும் தோன்றியாகி விட்டது. இனி வேதக் கொள்கைகளை நிறைவேற்ற ஒரு க்ஷத்ரிய பலம்தான் தேவை.

அந்த க்ஷத்ரிய பலம் உருவாக, இந்து இளைஞர்களே, ஆரியசமாஜ இயக்கத்தில் ஈடுபடுவீர்!

# தீண்டாமை வேத விரோதம்



—Swami Dayanand Saraswati
மகரிஷி தயானந்த சரஸ்வதி

சென்னை ஆர்ய சமாஜம் (சென்ட்ரல்) வெளியீடு

ஓம்

# தீண்டாமை வேத விரோதம்

**K. வேலாயுத ஆர்யா**

1st Edition 1986
2nd Edition 1991
3rd Edition 1995
4th Edition 2014

# 5. தீண்டாமை வேத விரோதம்

“வேதத்தில் இல்லை, கீதையில் இல்லை, வேறுள சாத்திரங்கள் ஏதுக்கினி” என்று முழங்கினார், நாமக்கல் கவிஞர் அவர்கள், தீண்டாமையை எதிர்த்து. பாரத சுதந்திரப் போருக்கு தலைமை வகித்த அண்ணல் காந்தியடிகளும் தீண்டாமை ஒழிப்பைத் தம் தலையாய பணியாகக்கொண்டு வாழ்ந்தே காட்டினார். தீண்டாதார் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்களை நவீன மனுவென்று சனாதனிகளான இந்துக்களே போற்றினர். அவர் அமைத்துக் கொடுத்த இந்திய அரசியல் சாஸனம் தீண்டாமையைச் சட்ட விரோதமாக்கி இந்துக்களிடையே நெடுங்காலமாக நிலவி வந்த சமுதாயக் கொடுமைக்கு கொள்கை அளவில் ஒரு முடிவு தந்தது.

ஆனால் நடைமுறையில் தீண்டாமை இன்னும் ஒழியவில்லை என்பதைக் கண்டு டாக்டர் அம்பேத்கார் அவர்களே 1955ம் ஆண்டில் இந்து சமூகத்தையும், சமயத்தையும் விட்டு வெளியேறினார், இலட்சக்கணக்கான தம் தோழர்கள், துணைவர்களுடன். பிராமணீயத்தை எதிர்க்கிற ஒரே காரணத்தால், பிராமண ஆதிக்கம் இந்துக்களை அழித்து வருகிறது, இந்த மதத்தின் பெயரால் என்று மனப்பூர்வமாக நம்பிய அவரும், அவருடைய சமூகத்தில் அனேகரும் பௌத்தர்கள் ஆயினர்.

ஆனால் மிகத் தீவிரமான இந்துவாகவே வாழ்ந்தவர் டாக்டர் அம்பேத்கார் என்பது அனேகருக்குத் தெரியாது! “பாகிஸ்தான்” பற்றி அவர் எழுதிய ஆராய்ச்சி நூலில் பிரிவினைக்கு ஒப்புக்கொண்டு இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் எல்லோரையும் பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட்டு அங்கு இருந்து வரும் இந்துக்கள் எல்லோரையும் இங்கு (பாரதத்தில்) குடியேறச் செய்து இந்து - முஸ்லிம் பிரச்சினைக்கு என்றைக்குமாக ஒரு முடிவு காணவேண்டும் என்று இந்துக்களுக்கே அறிவுறுத்தியவர் அவர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? வேதத்தை மறந்து விட்ட ஒரே காரணத்தால் இந்துத் தலைவர்கள் அவரது வாதங்களை ஏற்காமல் இன்னும் மதச் சார்பின்மை என்ற திரை மறைவில் பாரதத்தில் இஸ்லாம் தழைத்து வளர உதவி செய்து வருகிறார்கள். இவர்கள் இப்படித் தான் செய்வார்கள் என்பதை அன்றே உணர்ந்தவர் டாக்டர் அம்பேத்கார். ஏனெனில் இந்து மதம்

பிராமண - பனியா ஆதிக்கத்தின் மொத்த உருவம்; சொந்த சுக இலாபத்திற்காக அது தர்மம், தேசம் எல்லாவற்றையும் தன் அறிவு உட்பட அடகு வைத்து விடும் என்பது அவர் கருத்தாக இருந்தது. அந்தப் போலிப்பார்ப்பனீயத்தின் ஒரு பகுதி தான் ஆர்ய சமாஜமும் என்று அவர் கருதி அதனையும் சாடினார், தம்முடைய “சூத்திரர் யார்?” (Who were the Sudras) என்ற ஆராய்ச்சி நூலில். அவர் உண்மையான இந்துவாக வாழ்ந்தவர். வேத விளக்கப்படி அவர் ஓர் உண்மையான பிராமணர் -தம் குண கர்ம சுபாவத்தால். உண்மையை நாடி அலைந்தவர் அவர்.

டாக்டர் அம்பேத்கார் அவர்களிடம் ரிஷி தயானந்தரின் நூல்கள் அனைத்தும் மொழி பெயர்க்கப்பட்டு உண்மையான நேர்மையான விளக்கங்கள் ஆர்ய சமாஜத்தால் அளிக்கப்பட்டிருந்தால் அவர் ஆர்ய சமாஜத்தினராகவே மாறியிருப்பார். ஏனெனில் அவர் இஸ்லாமை வெறுக்கிற அளவுக்குத் தீவிரமான இந்துவாக இருந்தவர். சனாதனியாகவும் இந்துவாகவும் தம்மைப் பறைசாற்றிக் கொண்டே இந்துக்களுக்குத் துரோகம் செய்கிறவராக அவர் இருக்கவில்லை. “இஸ்லாம்” பற்றித் தம்முடைய “பாகிஸ்தான்” நூலில் அவர் எழுதினார்:

‘இந்து மதம் மக்களைப் பிரிக்கிறதாக கூறப்படுகிறது. இதற்கு மாறாக இஸ்லாம் மக்களை ஒன்று சேர்க்கிறதாகக் கூறப்படுகிறது. இது ஓர் அரைகுறை உண்மை மட்டுமேயாகும். ஏனென்றால் இஸ்லாம் சேர்க்கிற அளவுக்குள்ளது போன்றே பிரிக்கின்றதுமாகும். இஸ்லாம் ஒரு நெருக்கமான சங்கம். முஸ்லிம் களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்குமிடையே அது உண்டாக்கும் வேறுபாடு மிக யதார்த்தமானது, வெகு தெளிவானது, மிகவும் பிரித்து வைப்பது. இஸ்லாமின் சகோதரத்துவம் மனிதனின் உலக சகோதரத்துவம் அன்று. அது முஸ்லிம்களுக்கு மட்டுமே உள்ள முஸ்லிம் சகோதரத்துவம். அதனில் சகோதரத்துவம் உண்டு தான். ஆனால் அது அந்த சங்கத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமே அந்த சங்கத்திற்கு வெளியே உள்ளவர்களைப் பற்றி அதற்கு அவமதிப்பும் பகையுமின்றி வேறு எதுவும் இல்லை. இஸ்லாமின் இரண்டாவது குறை என்னவென்றால் அது ஒரு சமூக சுயாட்சி அமைப்பு ஆகும். ஸ்தல சுய ஆட்சிக்கு ஒத்துவராது. ஏனென்றால் ஒரு முஸ்லிமினுடைய விசுவாசம் அவன் வாழ்கின்ற நாட்டிற்கு அல்ல. அவன் சேர்ந்திருக்கிற சமயத்திற்கே சொந்தமானது. முஸ்லிமுக்கு தான் வாழ்கின்ற நாட்டிற்கு விசுவாசம் என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விஷயம். எங்கு இஸ்லாம் ஆட்சி செய்கிறதோ அங்கே தான் அவனுடைய சொந்தநாடு. வேறு

வார்த்தைகளில் கூறுவதானால் இஸ்லாம் ஒரு உண்மை முஸ்லிமை இந்தியாவைத் தன் தாயகமாகக் காணவும் ஒரு ஹிந்துவைத்தன் உற்ற நண்பன் உறவினனாக ஏற்கவும் ஒரு பொழுதும் அனுமதிக்காது. மௌலானா முகமது அலி ஓர் இந்தியப் பெரியார் தாம். ஆனாலும் ஓர் உண்மை முஸ்லிமாக விளங்கிய அவர் இந்தியாவில் அல்ல, ஜெருசலத்தில் தம் உடல் அடக்கம் செய்யப்படவேண்டும் என விருப்பம் தெரிவித்ததற்கு ஒரு வேளை இதுவே காரணமாக இருக்கும்...'

இந்த மௌலானா முகமது அலி தாம் 1924-ல் காகினாடா காங்கிஸுக்குத் தலைமை வகித்தவாறு கூச்சமின்றிக் கூறியவர் தீண்டாதாரில் பாதிப்பேர் இஸ்லாமில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று. இப்போது இஸ்லாமியர்கள் அரிசனங்கள் அத்தனைபேரையும் மதமாற்றினால் பாரதம் முழுவதுமே இஸ்லாம் நாடாகிவிடும் என்று திட்டமிட்டு அனேக மீனாட்சிபுரங்களைத் தோற்றுவித்துக் கொண்டு வருகிறார்கள்! இந்த பயங்கரமான அரசியல் சதியை அறியாத சில அப்பாவி அரிசனங்கள் இஸ்லாமில் சாதி இல்லை, அதனால்ஜாதி இந்துக் கொடுமையிலிருந்து விடுபட "இனிய" இஸ்லாத்தில் "இணைந்து" வருகிறோம் என்கிறார்கள்! இஸ்லாமியரிடையே ஜாதிகள் இருப்பதை அம்பேத்காரே பாகிஸ்தான் நூலில் நிரூபித்துள்ளார்.

தமிழகத்தில் நடைபெற்ற மீனாட்சிபுரம், கூரையூர் அத்தியூத்து மதமாற்றங்கள் இஸ்லாமிய ஆபத்தை நன்கு வெளிபடுத்தும் எச்சரிக்கை சின்னங்கள். இந்துக்களிடையே நடைமுறையில் தீண்டாமைக் கொடுமைகள் இன்னும் இருப்பதும், இந்துக்கள் இன்னும் உண்மையான மனமாற்றம் அடையவில்லை என்பதும் இதற்கு உண்மைக் காரணம்.

ஏன் இந்துக்களிடையே உண்மையான மனமாற்றம் ஏற்படவில்லை?

உண்மை அறிவான வேதம் பரவாததால்,

ஏன் உண்மை அறிவான வேதம் பரவவில்லை?

அதற்கென அமைக்கப்பட்ட ஆரியசமாஜம் பரவாததால்.

ஏன் ஆர்ய சமாஜம் பரவவில்லை?

வேதப்பிரசாரம் செய்யாததால்.

தயானந்தர் கட்டளைப்படி வேதப்பிரசாரம் செய்து இந்து மக்களை ஒன்றுபடுத்தியிருந்தால் தீவிரமாக இயங்கியிருந்தால் 1947-ல் பாகிஸ்தானே தோன்றி இருக்காது. அறிவு இல்லாததால் இந்துக்கள் அழிந்தார்கள் என்று நாளை சரித்திரம் தீர்ப்பளிக்குமேயானால் அதோடு இந்தச் சொற்றொடரையும் அது சேர்க்கும். "அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டும் என ரிஷி தயானந்தர் அமைத்த ஆர்ய சமாஜம் இந்துக்களின் அநேக சம்பிரதாயங்களில் ஒன்றாக மாறிப் போய்விட்டிருந்தது."

எப்படிப்பட்ட ஆர்ய சமாஜம்?

வேதமே உண்மை அறிவுநூல் என்று முழங்கி போலிப் பார்ப்பனீயத்தை புராணி மதம் என்று முத்திரை குத்தி வேதத்தின் பெயரால் புரட்சிக்கொடி உயர்த்திய ஆர்ய சமாஜம்!

பண்டிதலேகராம் தொடங்கி 1938-ல் ஹைதராபாத் சத்யாக்கிரகிகள் வரை 50க்கும் அதிகமான ஆர்ய சமாஜத் தியாகிகளை இந்து தர்மத்திற்காகவும் தேசத்திற்காகவும் உயிர்ப்பலியாக்கிய ஆர்யசமாஜம்!

"பிறப்பால் ஜாதி இல்லை" என்று சாதி ஒழிப்புப் போராட்டம் நடத்திய ஆர்யசமாஜம்!

"தீண்டாமை வேத விரோதம்" என்று பறைசாற்றி காந்தியடிகள் ஹரிஜன இயக்கம் தோற்றுவிக்கும் முன்னரே உண்மையில் தீண்டா தாருக்காகப் பாடுபட்ட ஆர்ய சமாஜம். அதற்கென உயிர்த் தியாகமும் செய்த பெருமை உடைய ஆர்யசமாஜம்.

பெண்கல்வி, பெண் உரிமை, பெண் விடுதலை என்றெல்லாம் சில பெண்கள் இன்று முழங்குவதை அன்றே முழங்கி இந்துப் பெண்மணிகளின் உயர்வுக்காகப் பாடுபட்ட ஆர்ய சமாஜம். இந்திராகாந்தி அம்மையார் பிரதமராயிருக்க முடியாது - ஆர்யசமாஜம் ஐம்பது ஆண்டில் பெண் உயர்வுக்காகப் பணியாற்றியிராவிட்டால்! விதவை விவாகம் இன்று சாதாரண விஷயம் - இதற்கும் ஆரம்பத்தில் பாடுபட்டது ஆர்யசமாஜம் ஒன்றுமட்டுமே.

ஆர்ய சமாஜம் மீண்டும் புத்துயிரும் புத்துணர்வும் பெறத் துவங்கியிருக்கிறது என்பதற்கு இன்று மதுரை ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில்,

குறிப்பாக மீனாட்சிபுரத்தில் முஸ்லிம்களாகிவிட்ட ஹரிஜனங்களை மீண்டும் இந்துக்களாக்கி ஒப்பற்ற சேவை செய்ததுடன் வேதப் பிரசாரம் செய்வதற்காக ஏறத்தாழ 16 ஆர்ய சமாஜங்களைத் தோற்றுவித்திருப்பதே சாட்சியாகும்.

தீண்டாமை வேத விரோதம் என்று முழங்கி அதற்கு முதல் மரண அடி கொடுத்தவர் ஆர்ய சமாஜ ஸ்தாபகர் ரிஷி தயானந்தர். ஒரு பொது சபையில் நாவித அன்பர் அளித்த உணவை ஏற்று "தம்முடைய சொல் வேறு செயல் வேறு அல்ல" என்று நிரூபித்தவர். "பெண்களுக்கும் சூத்திரருக்கும் பூணூல் அணியவும், வேதம் கற்கவும் உரிமையில்லை எனக்கூக்குரலிட்டசனாதனிகளை அலட்சியப் படுத்தி பூணூல் அணியவும், வேதம் கற்கவும், வேள்வி செய்யவும் அவர்களுக்கும் உரிமை உண்டு என்று நிலைநாட்டிய அவரால் தீண்டாமையை எப்படி ஆதரிக்க முடியும்? அரசியல் நிர்ப்பந்தத்திற்காக தீண்டாமை எதிர்ப்பு பிரச்சாரம் ஆரம்பித்து ஹரிஜன இயக்கம் நடத்திய காந்தியடிகளின் முயற்சி பலன் அற்றுப் போனதற்கே உண்மைக் காரணம், அவரது இயக்கம் தருமத்தின் அடிப்படையில் அதாவது வேத தருமத்தின் அடிப்படையில் அமையவில்லை என்பதாகும். அரிசனங்கள் என்று அவர்களைப் பிரித்து வைத்ததே முதல் தவறு. வேத விரோதம். ஏனெனில் வேதக் கொள்கைப்படி எல்லா மனிதர்களும் அரிசனங்களே!"

ஆர்ய சமாஜமோ தான் பரவிய இடங்களில் உண்மையான தீண்டாமை எதிர்ப்பு பிரசாரம் செய்து இந்து சமூகக் காவலனாக விளங்கியது. 1888-ல் பஞ்சாபில் முஸபர் கட் ஜில்லாவில் பண்டித கங்காராம் எனும் ஆர்ய சமாஜ பிரசாரகர் ஓட் எனும் தீண்டாதார் சமூகத்தினை பூணூல் அணிவித்து இந்து சமூகத்திற்குள் கொண்டு வந்தார். அவர்களுக்காகக் கல்விச் சாலைகள் அமைத்தார். 1864-ல் குருதாஸ்பூர் ஜாலந்தர் பகுதிகளில் வாழ்ந்த ரஹதிகள் எனப்படும் தீண்டாதாரிடையே செயலாற்றியவர்பின்னாளில் சுவாமி சிரத்தானந்தர் எனப்பட்ட முன்ஷிராம் அவர்கள் இவ்வாறாக உண்மையில் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்த பெருமை ஆர்ய சமாஜத்திற்கே சாரும். இதற்கென உயிர்ப்பலி கொடுக்க வேண்டிய சூழ்நிலை பண்டித சோமநாதர் எனும் ஆர்ய சமாஜப் பிரசாரகரின் அன்னை யாருக்கு உண்டாயிற்று. ஜாதி இந்துக்கள் அவரை சமுகக் கட்டுப்பாடு செய்திருந்ததால் கிணற்றிலிருந்து நீர் எடுக்க முடியாமல் அம்மையார் வாய்க்கால் நீர் அருந்தி நோய் வாய்ப்பட்டார். டாக்டர்கள் அவர்

கிணற்று நீர் தான் அருந்த வேண்டும் என்று கூறியதால் பண்டித சோமனாதர் அன்னையின் உயிரைக்காக்க ஜாதி இந்துக்களாகிய புராணிகளுடன் சமரசமாகப் போகவும் தயாராக இருந்தார். அன்னையார் பிடிவாதமாகத் தம் வேத தருமத்தை விட மறுத்து விட்டார். அவர் உயிர் பிரிந்தது. கண்ணீர் மல்க நின்ற ஜாதி இந்துக்களும் மனம் மாறினர். தீண்டாதாரைத் தம்மவராக ஏற்றனர்.

ஜம்மு (காஷ்மீர்)வில் தீண்டாமை எதிர்ப்பு - ஒழிப்புப் பிரசாரம் செய்து தாழ்த்தப்பட்ட அவ்வெளிய மக்களுக்காகப் பாடுபட்ட பண்டித ராமச்சந்திரர் எனும் ஆர்ய சமரஜப்பிரசாரகரை ஜாதி இந்துக்கள் தடிகளால் அடித்தே கொன்றார்கள். 20 ஜனவரி 1923. இந்த உயிர்த்தியாகத்தால் ஜம்மு முழுவதும் மக்களிடையே உணர்ச்சி பரவி தீண்டாமை உண்மையில் ஒழிந்தது. இன்றும் பண்டிதர் அவர்கள் அடிபட்டு வீழ்ந்த இடத்தில் ஆண்டு தோறும் விழா நடைபெறுகிறது. பஞ்சாபில் ஸியால்கோட் பகுதியில் வாழ்ந்த மேக் எனப்படும் தீண்டாதாரிடையே வேதப் பிரசாரம் செய்வதிலும் இவர் முக்கியபங்கு வகித்தார். ஆர்ய சமாஜ குருகுலங்களில் தீண்டாதார் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்ந்தனர். அவர்களுடைய வாழ்வு முன்னேற்றத்திற்காக கைத்தொழில்பள்ளிகள் துவக்கப்பட்டன. ஏறத்தாழ 3 லட்சம் பேர் கொண்ட இந்த வகுப்பினர் முன்னேற்றத்திற்காக அரசாங்கத்திடமிருந்து நிலம் பெற்று “ஆர்யநகர்” குடியிருப்பு ஒன்றையும் அவர் அமைத்தார். சர்க்கார் பதிவேடுகளில் ஒரு லட்சிய ஸ்தாபனமாகவும் அது புகழ் பெற்றது.

அழியாப்புகழ் பெற்ற சுவாமி சிரத்தானந்தர் தீண்டாதார் முன்னேற்றக்கழகம் அமைத்தார் டில்லியில். (1921) ஆறு கோடி தீண்டாதார் முழு அளவில் இந்துக்களாகாதவரை பாரதம் உண்மையில் சுதந்தரம் அடையாது என்று அவர் உறுதியான கருத்துக் கொண்டிருந்தார். காங்கிரஸ் தலைவராகவும் அவர் இருந்ததால் காங்கிரஸின் செயல் திட்டத்தில் இதனை (தீண்டாதார் முன்னேற்றத்தை) சேர்க்கப்பாடுபட்டார். தோல்வி அடைந்தும் அதைரியப் படாமல் ஆர்ய சமாஜத்தின் அமைப்பாக இந்த முன்னேற்ற சங்கத்தை ஆரம்பித்தார். டில்லியிலும் சுற்று வட்டாரங்களிலும் பொதுக் கிணறுகளிலிருந்து தீண்டாதார் தண்ணீர் எடுப்பதை ஜாதிக்காரர்கள் தடுத்துவந்தனர். அன்றியும் இந்து சக்கிலியரிடம் செருப்புக்கடைக் காரர்கள் ஆன முஸ்லிம்கள் அநியாயமாக

நடந்து கொள்வதாக அறிய வந்ததும் முதன் முறையாக இந்து செருப்புக் கடை ஒன்று திறக்கச் செய்தார். (செருப்பு வியாபாரம் செய்வது "இந்து"வுக்கு தகாத செயல்!) பாரதத் தலைநகரின் தீண்டாதாரிடையே பல அரிய சேவைகள் செய்து சுவாமி சிரத்தானந்தரும் அவரது தோழர்களும் அம்மக்கள் சுயமரியாதையுடன் வாழவும், ஜாதி இந்துக்களுக்குச் சமமான உரிமைகள் பெறவும் வழி வகுத்தனர். அதற்காக அவர்கள் எவ்வளவு துன்பப்பட நேர்ந்தது! கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பதைத் தடைசெய்த ஜாதி இந்துக்களுடன் முஸ்லிம்களும் சேர்ந்து கொண்டார்கள். ஆர்ய சமாஜிகளை அடிப்பதில் மட்டும் இவர்களுக்குள் அன்று ஒற்றுமை ஏற்பட்டது. பின்னர் ஜாதிக்காரர்களின் மனம் மாறியது. நேற்று வரை தீண்டாதாரராக இருந்தவர்களுடன் அவர்கள் சமபந்தி போஜனம் செய்தார்கள்.

பஞ்சாபிலும் டில்லியிலும் பரவிய இந்த தீண்டாமை ஒழிப்பு வேள்வித் தீ அடுத்துள்ள உத்தரப்பிரதேசத்தை விட்டுவிடுமா? மீரட், அலிகட், பிஜ்னோர் ஜில்லாக்களில் ஆர்யசமாஜத்தின் தீண்டாமை எதிர்ப்பு பிரசாரத்துடன் தீண்டாதாரை இந்துக்களுடன் இணைக்கும் முயற்சி தொடர்ந்தது. 1928-ல் பிஜனோரில் ஆர்யசமாஜத் தலைவர் டாகுர் தாஸ் அவர்களின் தலைமையில் 500க்கும் அதிகமான சக்கிலித் தொழில் புரியும் அன்பர்கள் ஆர்ய சமாஜத்தில் சேர்ந்து பூணூல் எனப்படும் யஜ்ஞோபவீதம் அணிவிக்கப் பெற்றனர். சமபந்தி போஜனம் நடைபெற்றது மட்டுமல்ல அந்த தோட்டிகள்-சக்கிலியரான இந்து அன்பர்களின் கைகளிலிருந்தே அனைவரும் பிரசாதம் பெற்று மகிழ்வுற்றனர். உயர்ஜாதி வெறி கொண்ட ராஜபுத்திரர்களின் தடிகளுக்குப் பயப்படாமல் ஆர்யர்கள் பணியாற்றினர். இமயமலைச்சாரல் பகுதியான கட்வாலில் தீண்டாத ஜாதியினரின் திருமணத்தின் போது மணமக்களைப் பல்லக்கில் ஏற்றிச் செல்வதை ராஜபுத்ர இந்துக்கள் தடுப்பது வழக்கம். அவர்களைத் தடியால் அடிப்பதும் கயிற்றால் கட்டி இழுத்து செல்வதுமான கொடுமை ஆர்ய சமாஜத்தின் முயற்சியால் நிறுத்தப்பட்டு, ராஜபுத்திரர் வீடுகளுக்கும் கோயில்களுக்கும் முன்னாலேயே அவர்கள் பல்லக்கில் ஏறிச்செல்லலாயினர்.

சமபந்தி போஜனத்துடன் ஆரிய சமாஜத்தவர்கள் நிற்கவில்லை, கலப்புத் திருமணங்களும் நடைபெற்றன. சாதிப் பார்ப்பனரான மேதாதிதி என்ற ஆர்ய சமாஜ அறிஞர் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். (1924)

இந்தோர் சமஸ்தானத்தில் ஆர்ய சமாஜத்தின் பிரசார பலம் காரணம் கோயில்கள் தீண்டாதாருக்குத் திறந்து விடப்பட்டன. ஜாதி வெறியர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது ஆர்ய சமாஜத் தலைவர் மேகராஜ் அவர்கள் அதற்காகப் பாடுபட்டு உயிர்த் தியாகமும் செய்தார்.

இன்றைய ஹரியாணா மாநிலம் அந்நாளில் பஞ்சாபின் பகுதியாக விளங்கியது. தீண்டாதோர் முன்னேற்றத்திற்கு ஆர்யசமாஜத்தலைவர் பக்த பூல்சிங் ஆற்றிய தொண்டு சரித்திரத்தில் இடம் பெறக் கூடிய அளவுக்கு காவியமயமாக இருந்தது. இங்கு ராங்கோட் கிராமத்தில் முஸ்லிம்கள் (!) சக்கிலிய இந்துக்கள் குடிநீருக்காகத் தோண்டிய கிணற்றை மீண்டும் திறப்பதற்காக பக்த பூல்சிங் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் அறிவித்து, கிணறு திறந்த பின்னரே உணவருந்தினார். இது நடைபெற்றது **1942**ல் காந்தியடிகளே இதனைப் பற்றித் தமது ஹரிஜன் பத்திரிகையில் குறிப்பிட்டு அவரைப் பாராட்டியிருந்தார்.

திருவாங்கூரில் வைக்கம் சத்தியாகிரகத்திலும் ஆர்ய சமாஜத்தினர் பெருமளவில் பங்கேற்றனர். காமராஜ் அவர்களின் அரசியல் குருவாக விளங்கிய சத்யமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்: "தீண்டாமை ஒழிப்பிற்கு ஆர்ய சமாஜத்தி லிருந்து தான் மிகப் பெரும் பலம் கிடைத்தது. இன்று தீண்டாமை அதன் மரணத் தருவாயில் உள்ளது. அதற்காக நாம் ஆரிய சமாஜத்திற்கு நன்றி செலுத்த வேண்டும். சுயமரியாதை உணர்வுக்கும், உண்மையான நாட்டு முன்னேற்றத்திற்கும் தீண்டாமை ஒழிப்பு மிகத் தேவையான ஒன்று. நாம் தீண்டாதாரை நம்மவர்களாக ஏற்றுக்கொண்டு அவர்களிடையே தன்மானத்தை அடிப்படையாகக் கொண்ட மானிட உணர்ச்சிகளை நிறைக்க வேண்டும்."

காந்தியடிகளே சுவாமி தயானந்தரைப் பற்றி குறிப்பிடுகையில் ஒரு இடத்தில் கூறினார்: "சுவாமி தயானந்தர் நமக்கு அனேக விலைமதிப்பற்ற சாதனைகளை விட்டு சென்று உள்ளார். அவற்றுள் தீண்டாமையை எதிர்த்து அவர் குரல் கொடுத்ததும் ஒன்று ஆகும்." தீண்டாதாருக்காக வாதாடிப் போராடி ஓயாது உழைத்த சுவாமி சிரத்தானந்தரைப் பற்றி **டாக்டர் அம்பேத்கர்** அவர்கள் தம்முடைய காங்கிரஸ் அரசியல் விமர்சன நூலான "காங்கிரஸும் காந்தியடிகளும் தீண்டாதாருக்காக என்ன தான் செய்தனர்?" என்ற நூலில் எழுதினார்: **"சுவாமிகள் தீண்டாதாரின் மிகச் சிறந்தவரும், மிகப்பெரியவருமான போர்வீரராக இருந்தார்."**

“கேளுங்கள், அழிவற்ற பரமனின் குழந்தைகளாகிய மனிதர்களே” என்று ஒரு வேத மந்திரம் முழங்குகிறது. இறைவனின் குழந்தைகளான மனிதர்களிடையே ஜாதி, மத, பிறப்பால் உயர்வு, தாழ்வு, தீண்டாமை முதலியவற்றை இத்தகைய வேதம் எவ்வாறு ஏற்கும். மனிதர்கள் தத்தம் தொழில் திறமைகளாலும், குணத்தாலும் நான்கு வகையினர் ஆவர். பூரணமான வேத ஞானம் பெற்று சமூகத் தலைமைக்கு உரியவரே பிராமணர். வேத ஞானத்துடன் அரசியலில் ஈடுபட்டோர் க்ஷத்ரியரும், வேத ஞானத்துடன் வணிகம், பயிர் தொழில் முதலியவற்றில் உள்ளவர்கள் வைசியரும், வேத ஞானம் மிகக் குறைந்த அளவில் இருப்பதால் உடல் உழைப்பை மட்டுமே சமூகத்திற்கு அளித்தோர் சூத்திரரும் ஆயினர். மனித சமூகத்தை ஒரு விராட புருஷனாக அலங்காரமாக வருணித்த புருஷ ஸூக்தம் என்ற வேத மந்திரத் தொகுப்பு முறையே அவர்களை சமூகத்தின் தலை (முகம்), புயம், தொடை, கால்களாக வருணித்தது அவ்வளவே. பிற்கால ஜாதிப் பிராமணர்கள் தங்கள் ஜாதி உயர்வுக்கு இந்த “பிராஹ்மணோ அஸ்ய முகமாஸீத்” என்ற ரிக் வேத புருஷ ஸூக்த மந்திரத்திற்கு தவறான பொருள் கொடுத்து பிராமணர்கள் பிரம்மாவின் தலைப்பகுதியில் இருந்து தோன்றியவர்கள் என்றெல்லாம் தவறான அர்த்தம் கொடுத்து மக்களை அழிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றதற்கு வேதம் எப்படிப் பொறுப்பாகும்? ரிஷி தயானந்தர் இவ்வேத மந்திரத்தின் பொருளை “சத்யார்த்த பிரகாசம்” நூலில் தெளிவாக்கி பிறப்பால் ஜாதி வாதத்தைக் கண்டித்துள்ளார். வருணம் என்று வேதம் வகுத்த சமூகப்பிரிவு நான்கு மட்டுமே. இவ்வாறிருக்க தீண்டாதார் என்ற ஐந்தாவது ஜாதி எப்படி வந்தது? சூத்திரர்களை என்றும் தீண்டாதாராக மற்ற இந்துக்கள் நடத்தவில்லை என்பது தெளிவு. எனவே தான் ஆரம்ப காலத்தில் பிறப்பால் தான் ஜாதி உண்டு என்று சனாதனிகளுடன் சேர்ந்து வாதாடிய காந்தியடிகளும் குழம்பிப் போய் தீண்டாதார் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அவர்களை சூத்திர வர்ணத்துடன் சேர்த்து விடத் தயாராக இருந்தார்! ஜாதி இந்துக்கள் அதாவது சூத்திரர்களே ஒப்பாததால் தீண்டாதாரை அவர் அரசியல் இலாபத்திற்காக அரிசனங்களாக்கி விட்டார்.

வேத விரோதமான "பிறப்பால் சாதிகள்" என்ற அமைப்பு இந்துக்களிடையே வேரூன்றிப் பின்னர் தீண்டாமையும் சேர்ந்து கொள்ள இந்து சமூகம் அழியலாயிற்று. பிராமண ஆதிக்கம் ஏற்பட்ட இடைக்காலத்தில் சூத்திரர்களைப் பற்றி பயங்கரமான, அவமானகரமான, இழிவான, கேவலமான சட்ட திட்டங்கள் அமைத்த ஜாதிப் பிராமணர்கள் பஞ்சமர் என்று தீண்டாதாரை ஒரு ஜாதியாகவே ஏற்கவில்லை! "பஞ்ச ஜனா" ஐந்து வித மக்கள் என்றுவேத மந்திரங்களில் வருகிற ஒரு சொல்லுக்கு நாலுவகை வருணத்தோருடன் இந்த வருண அமைப்பு சமூகத்திற்குள் வராமல் இன்னும் வெளியே நிற்கிற யக்ஞோப வீதம் பெறாத மக்களையே இந்த ஐந்து என்ற எண்குறிக்கும் என்பதுதான் வேத ஞானிகள் கருத்தாகும். சூத்திரர்களுடன் பெண்களும் வேதம் படிக்க உரிமையில்லை" என்று பிராமண ஆதிக்கம் விதி வகுத்த பொழுதும் கூட தீண்டாதாரைப் பற்றி ஒரு குறிப்பும் அந்த பிற்கால வேத இலக்கியங்களிலும் காணோம். இது சரித்திர உண்மை. ரிக் வேதத்தின் கடைசி சூக்தம் ஒற்றுமை சூக்தம் எனும் இனிய கம்பீரமான மந்திரத் தொகுப்பு.

மனிதர்களே, ஒன்றுபட்டுச் செல்லுங்கள். ஒத்த மனத்தினராக இருங்கள். நீங்கள் சம உரிமை பெற்ற சகோதரர்கள் என்றெல்லாம் கூறுகிற இவ்வேத நெறியினைப் பின்பற்றுவோரிடையே தீண்டாமை என்னும் அனாசாரம் அக்கிரமம் ஏன், எப்படி, எப்பொழுது தோன்றியது? நியாயமான இந்தக் கேள்விகளுக்கு ஜாதி இந்து அறிஞர்களே விடையளிக்க முடியாமல் தத்தளித்து தவித்துப் போனபொழுது ஒரு நியாயமான, ஏறத்தாழ அனைவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய பதிலைத்தம் "தீண்டாதார் யார்?" என்ற நூலில் விளக்கி வழிகாட்டினார், இந்துக்களின் தவப்பயனாகத் தோன்றிய தலைவரான டாக்டர் அம்பேத்கார் அவர்கள். அந்த நூலின் சுருக்கத்தையே இங்கு தருகிறேன் - இச்சிறு நூலின் விரிவஞ்சி!

தீண்டாதார் ஒரு தனி இனமல்ல. ஆர்ய-திராவிட என்பதும் இனப்பிரிவு அல்ல. மொழிவழி நிலவழி பிரிந்து நின்ற இந்து சமுதாயத்தின் அங்கங்களே இவர்கள். வேத மதத்தைப் பின்பற்றிய ஆரிய இந்துக்கள் வடக்கில் வாழ்ந்த நாகர்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டனர். தெற்கில் வாழ்ந்த நாகர்கள் சம்ஸ்கிருதமொழி ஆதிக்கத்தை ஏற்காது சமய சமூக அளவில் மட்டும்

வேதமதத்தை ஏற்றனர். திராவிடர்கள் ஆயினர். இடைக்காலத்தில் பிராமண ஆதிக்கம் நிறைந்து வேள்வியின் பெயரால் கால்நடைச் செல்வங்களைக் கணக்கின்றி அழித்துவந்த பிராமண இந்து மதத்தை எதிர்த்துப் புரட்சியாக வந்த பௌத்தமதம் பரவிய பொழுதுகூட தீண்டாமை எனும்கொடுமை தோன்றவில்லை. புத்த மதத்தை அழித்து வெற்றி வாகை சூடிய பிராமணீயம் தன் ஆதிக்கத்தை ஏற்க மறுத்த ஜனங்களை சமூகத்திலிருந்து வெளியே தள்ளிவைத்தது. இவ்வாறு உடைக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு சேரிகளுக்கு ஊர் விலக்குச் செய்யப்பட்ட சிறுபான்மையே இன்றும் இந்துக்களாக விளங்குகிறவர்களும் ஒரு காலத்தில் புத்த மதத்தினராகவும் இருந்த "தீண்டாதார்" ஆவர். மாமிசம், குறிப்பாக பசு மாமிசம் தின்பது பாவம் என்று விதி அமைத்துக் கொண்ட பிராமணீயம், இந்த புத்த மதத்தினர் பசு மாமிசம் உண்போராகவும் இருந்ததினால் அவர்களைத் தீட்டுப்பட்டவர்களாக - தூய்மை அற்றவர்களாக ஒதுக்கியது. பிராமணர்கள் உள்ளிட்ட ஜாதி இந்துக்கள் கூட வேத பிற்காலத்தில் வேள்வியின் பெயரால் பசு மாமிசம் உண்டவர்களே என்பதை விளக்கிய பிறகு டாக்டர் அம்பேத்கார், பகவான் புத்தர் உட்பட புத்த மதத்தினர் அனைவரையும் மாமிசம் உண்போராகவே இருந்தனர் என்பதையும் குறிப்பிடுகிறார். வேள்வியின் பெயரால் கால்நடைகள் கணக்கின்றி அழிவதைத் தடுக்கமட்டுமே அஹிம்சை கொள்கை புத்தரால் ஏற்கப்பட்டது என்றும் விளக்கியுள்ளார். பவுத்தர்களை விட தங்களை உயர்வாகக் காட்டிக்கொள்ள விரும்பிய பிராமணர்கள் மாமிச உணவை அறவே விட்டுவிட்டனர். ஜாதி இந்துக்கள் பசு மாமிசம் உண்பதை மட்டும் நிறுத்தினர். மாட்டுக்கறி தின்பவர்களை இருசாராரும் (ஜாதி இந்துக்களும் ஜாதி பார்ப்பனரும்) சமூகப் பிரஷ்டம் செய்யலாயினர். உணவுக்காக பசு மாமிசம் சாப்பிடுவதை விடமுடியாத நிலையில் இருந்த பௌத்தர்களே பிற்காலத்தில் இவ்வாறு ஊருக்கு வெளியே விலக்கி வைக்கப்பட்ட "அசுத்த" மான ஜாதியினராகிய திண்டாதார். உண்மை வருணாசிரம தருமத்தை மறந்து பிறப்பால் ஜாதிகளாகிவிட்ட இந்துக்களிடமிருந்து விலக்கப்பட்டு ஜாதியில்லாத ஜாதி, தீண்டாத ஜாதி, பஞ்சம ஜாதி என்று நடைமுறையில் நிலைத்துவிட்ட இந்த தீண்டாதார் இந்து சமூகங்களின் எல்லைகளில் அவற்றிற்கு வெளியே நிறுத்தப் பட்டனர். பசு மாமிசம் சாப்பிடுவது என்பதைத் தவிர பிற எல்லாவற்றிலும் இந்துக்களைப் போலவே வாழ்ந்து வந்த இவர்கள் தீண்டத்தகாத இந்துக்களாக

உருமாறியது எந்தக் காலகட்டத்தில் என்பதையும் நன்கு ஆராய்ந்து சில சரித்திர ஆதாரங்களின் அடிப்படையில் குப்தர்களின் காலத்திற்குப் பின்னும், ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியின் காலத்திலும் தான், அதாவது கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தான் என்று முடிவு செய்கிறார் டாக்டர் அம்பேத்கார். (Who were the Untouchables?' Dr. B.R. Ambedkar published by Jetavan Mahavira, Balarampur, Gonda UP. IInd Edition 1969) நூல் இயற்றப்பட்டது, அதாவது முதல் பதிப்பு 1948ல் . இந்த நூலின் ஒரு புதுமை இது புத்தர்பிரானுக்கு அர்ப்பணிக்கப்படாமல் தீண்டாதாரிடையே அதாவது தாழ்த்தப்பட்ட இந்துக்களிடையே தோன்றிய நந்தனார், ரவிதாசர், சோகாமேளர் ஆகிய மூவருக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளதாகும்! டாக்டர் அம்பேத்கார் அவர்களின் இந்துப்பற்று இதிலிருந்து புலனாவது குறித்து மெத்த மகிழ்ச்சியே! இந்துக்கள் காந்தியடிகளின் தலைமையை ஏற்காமல் டாக்டர் அம்பேத்காரின் தலைமையை ஏற்றிருந்தார்களானால் பாகிஸ்தான் தோன்றியே இராது என்றும் கூடத் தோன்றுகிறது. செய்த கர்மத்தின் பலனை இந்துக்கள் அனுபவித்தே ஆகவேண்டும் என்பது வேதவிதி அவ்வளவே.

ஜாதி இந்துக்களே இந்த ஆயிரத்து நானூறு ஆண்டுகளில் இஸ்லாமில் சேர்ந்து பாகிஸ்தான், பங்களாதேசம், காஷ்மீர். மலப்புரம் உருவாகக் காரணமாக இருந்தனர் என்பதும் ஒரு சரித்திர உண்மை! ஆனால் ஏழை எளியவர்களான தீண்டாதார் இஸ்லாமாலும் ஏற்கப்படவில்லை என்பதும் உண்மை! ஆனால் இப்பொழுது கிறிஸ்தவத்துடன் இஸ்லாம் போட்டி போட்டு 'இனிய' இஸ்லாத்தில் இணைய வருமாறு அரிசனங்களுக்கு அழைப்பு விடுத்து பெருமளவில் வெற்றியும் பெற்று வருகிறது. அரிசனங்களை இஸ்லாமுக்கு மதமாற்றம் செய்வதன்மூலம், குடும்பக்கட்டுப்பாடு செய்யாமலிருப்பதன் மூலம் முஸ்லிம்களின் எண்ணிக்கை பெருகி இன்னும் பதிற்றாண்டுகளில் இந்துக்கள் சிறுபான்மையினராகி, பெரும்பான்மை பலம் முஸ்லிம்களுக்கே வந்து சேரும். இந்தியாவே இரண்டாவது பாகிஸ்தான் ஆகிவிடும். இந்த இலட்சியத்தை அடைய தீர்க்க திருஷ்டியுடன் முஸ்லிம்கள் வேலை செய்து வருகின்றனர். பாகிஸ்தானைப் பெற எவ்வளவு தீர்க்க திருஷ்டியுடன் அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றித் தம்முடைய **"பாகிஸ்தான்"** நூலில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டு அவர்களை (ராஜதந்திரிகள்) "Statesmen"என்று புகழ்ந்திருக்கிறார்!

வேத நெறியை விட்டு விலகியதால் அறிவிலிகளாகி விட்ட இந்துக்கள் வரப்போகும் ஆபத்தை வழக்கம் போல் பொருட்படுத்தாமல் இருக்கிறார்கள். வெறும் பக்தி மட்டும் போதும், சக்தி வேண்டாம் என்று இருக்கிறார்கள்! இந்த அழிவிலிருந்து இந்துக்களைக் காக்கும் சக்தி ஆர்ய சமாஜத்திற்கு மட்டுமே உண்டு. எனவே வேதப் பிரசாரம் செய்வதன் மூலம் உண்மையில் தீண்டாமையை ஒழிப்பதான பணியில் ஈடுபட ஆர்ய சமாஜம் முன் வந்திருக்கிறது. வேத சமூகத்தில் ‘‘அரிசனங்கள்’ பிறரைப் போலவே தம் குணகர்ம சுபாவத்திற்கேற்ப இடம்பெறுவர்.

சில வேத வாக்கியங்கள் இங்கு மேற்கோள்களாகத் தரப்படுகின்றன. தீண்டாமை ஏன் வேத விரோதம் என்பதை அவையே கூறட்டும்!

1. ஸ நோ பந்துர் ஜனிதா ஸ விதாதா (யஜுர் 32-10)

   அவனே (இறைவனே) நம் அனைவரின் நண்பன், தந்தை, துணைவன், அரசன் ஆவான்.

2. இமே த இந்த்ர தேவயம் (ரிக் 1-57-4)

   இறைவா, நாங்கள் அனைவரும் உன்னுடையவர்கள்.

3. ஸா நோ பூமிர் விஸ்ரு ஜதாம் மாதா

   புத்ராய மே பய. (அதர்வம். 12-1-10)

   நம்முடைய இந்த பூமி அன்னை தன் குழந்தைக்குப் பாலூட்டுவது போல நமக்கு எல்லாவற்றையுமே அளிக்குமாக.

4. த வே மே ப்ருதிவி பஞ்ச மானவா: (அதர்வம். 12-1-15) ஐவகையான மனிதர்களே, இவ்வுலகு உங்களுடையது

   கருத்து: வேதநெறிக்கு உட்பட்டு ஒழுகும் பிராமண, க்ஷத்ரிய வைசிய, சூத்திர சமூகப் பிரிவுகள் நான்கு. ஐந்தாவது பிரிவு வேதத்தை ஏற்காமல் வெளியே நிற்பது!

5. அஜ்யேஷ்டாஸோ அகனிஷ்டாஸ ஏதே

   ஸம் ப்ராதரோ வாவ்ருது: ஸௌபகாய. (ரிக். 5-10-5)

உங்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று எவரும் (பிறப்பால்) இல்லை. நீங்கள் அனைவரும் சகோதரர்கள். எனவே ஒன்றுபட்டு இயங்குவீர். மேன்மை அடைவீர்.

6. மாநோ த்விக்ஷத கஷ்சன.(அதர்வம். 12-1-24)

எவரும் நம் மீது பகைமை கொள்ளற்க.

7. மித்ரஸ்ய மா சக்ஷுஷா ஸர்வாணி

பூதானி ஸசிக்ஷந்தாம். (யஜுர். 36-18)

உலகில் உள்ள அனைத்து உயிர்களும் என்னை நட்புக் கண்களுடன் பார்க்கட்டும்.

8. மித்ரஸ்யா ஹம் சக்ஷுஷா ஸர்வாணி |

பூதானி ஸமீக்ஷே (யஜுர். 36-18)

நானும் உயிர்கள் அனைத்தையும் நட்புக் கண்களுடன் காண்பேனாக.

9. மித்ரஸ்ய சக்ஷுஷா ஸமீக்ஷாமஹே. (யஜுர். 36-18)

நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் நட்புக்கண்களுடன் காண்போமாக.

10. ப்ரியம் ஸர்வஸ்ய பஷ்யத

உத சூத்ர உதார்யே. (அதர்வம். 19.62.2)

என்னைக் காண்போர் அவர் ஆரியர் (மேலோர்) அல்லது சூத்ரர் (சாமானியர்) ஆயினும் என் மீது அன்பு கொள்வாராக.

11. ஸர்வா ஆஷா மம மித்ரம் பவந்து. (அதர்வம். 19.16.6)

அனைவரும் என் நண்பர்களாக இருக்கட்டும்.

12. அபானுதோ ஜன மமித்ரயந்தம். (ரிக். 10.180.3)

பகைமூட்டுகிற மனிதரை விலக்கி ஒதுக்குவீர்.

13. அன்யோ அன்யம பிஹர்யத. (அதர்வம். 3.30.1)

ஒருவருக்கொருவர் அன்புடன் இருங்கள்.

14. *அன்யா வோ அன்யா மவத் வன்யான்யஸ்யா*

*உபாவது. (யஜுர். 12.88)*

*ஒருவர் மற்றவரைப் பாதுகாத்து உதவிசெய்து பெருமைப் படுத்தியவாறு இருங்கள்.*

15.

ஸங்கச்சத்வம் |
-ஒன்றுபட்டுச் செல்வீர்.
ஸம் வதத்வம் |
-ஒருமித்தவாறு பேசுங்கள்.
ஸம் வோ மனாம்ஸி |
- உங்கள் மனம் ஒன்றுபட்டிருக்குமாக.
ஸமானோ மந்த்ர : ஸமிதி; ஸமானி |
- நோக்கம், சிந்தனை ஒன்றாக இருக்கட்டும். சபையிலும்
பொதுநோக்கு நிலவட்டும்.
ஸமானா ஹ்ருதயானி வ: |
- உங்கள் இதயங்கள் ஒன்றுபடுமாக.
ஸமானி வ ஆகூதி : |
- ஒன்றுபட்டு முடிவு செய்வீர். (ரிக். 10.191-1-4)

16. *ஸமானீ ப்ரபா ஸஹ வோ அன்ன பாக : |*

*(அதர்வம். 3.30.6)*

*உங்களுடைய உணவு, குடிநீர், இருப்பிடம் எல்லாம் வேறுபாடுகளின்றி சமமாக, பொதுவாக இருக்கட்டும்.*

17. *ஸமானே யோக்த்ரே ஸ ஹ வே யுனஜ்மி. (அதர்வம். 3.30.6)*

*இறைவனாகிய நான் உங்களை சமூகம் என்ற இந்தசமத் தன்மையால் இணைக்கிறேன்.*

18. *உத தேவா அவஹிதம் தேவா உன்னயதா புன: |*

*(அதர்வம். 10-137-1)*

*அறிஞர்களே, வீழ்ந்து விட்டவர்களை மீண்டும் உயர்த்துவீர்.*

19. வாசா வதாமி மதுமத்| (அதர்வம். 1-34-3)

என் பேச்சு தேன் போன்று இனிதாக இருக்கட்டும்.

20. அயா தியா து துர்யாமாத்யம்ஹ:| (ரிக். 4-45.11)

அறிவு மூலம் தவறுகளை (பாவங்களை) நீக்குவோமாக.

21. அஹமன்ருதாத் ஸத்ய மு பைமி.

நான் பொய்யை விட்டுவிட்டு உண்மையை ஏற்பேனாக.

22. ஆரே பாதஸ்வ துச்சுனாம். (யஜுர்.19-38)

தீயோரை தூர ஓட்டுங்கள்.

23. பத்ரம் கர்ணேபி: ஷ்ருணுயாம. (ரிக்.1-81-8)

நன்மை நிறைந்தவற்றையே செவியுறுத்துவோம்.

24. தன்மே மன: சிவ சங்கல்பமஸ்து | (யஜுர். 34-1)

என் மனம் நல்ல எண்ணங்கள் நிறைந்ததாக இருக்கட்டும்.

25. ஆரோஹண மாக்ரமணம் ஜீவதோ

ஜீவதோ அயனம். (அதர்வம். 5-30-7)

எழுச்சி பெறவும், முன்னேறவும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு.

26. ப்ரதி திஷ்டோர்த்வ | (அதர்வம்.4.12.6)

நிமிர்ந்து நில், உயர்ந்து நில்.

27. க்ஷத்ரேணாத்மானம் பரிதாபயாத| (அதர்வம். 12.3.51)

உடல், மன வலிமையுள்ளவன் ஆகி உன்னைக் காப்பாற்றிக் கொள்

28. ஸ்யேனே க்ருணுத்வஸூரபா உலோகே. (யஜுர். 12.35)

சுகமான, சுகந்தமான சூழ்நிலையில் வாழ்க்கை நடத்துவீர்.

29. ஸம் வர்சஸா பயஸா ஸம் தனூபி ரகன்மஹி

மனஸா ஷம் சினேன. (யஜுர்.2.24.)

ஞானம், பால் முதலிய உணவுகள், நல்ல உடல்கள், நல்ல மனம் இவற்றைப் பெற நாம் ஒற்றுமையுடன் இருப்போம்.

30. ஸமானோ அத்வா ப்ரவ தாமனுஷ்பதே| (ரிக். 1.16.2)

நடப்பன யாவற்றுக்கும் பாதைகளையும் வீதிகளையும் உபயோகிக்க உரிமை உண்டு.

31. ஸர்வான் க்ருண்வபிதோ ஜனான். (அதர்வம். 3.5.6)

எல்லோரையும் உன் வசமாக்கிக்கொள்.

32. ஸாயம் ப்ராத: ஸௌமனஸோ வோ அஸ்து. (அதர்வம். 3.30.7)

காலையும் மாலையும் நீ இன்முகத்துடன் (இனிய மனத்துடன்) இருப்பாயாக.

# பசுச் செல்வம்



—Swami Dayanand Saraswati
மகரிஷி தயானந்த சரஸ்வதி

சென்னை ஆர்ய சமாஜம் (சென்ட்ரல்) வெளியீடு

ஓம்

# பசுச் செல்வம்



## *இனியாவது பசுவினம் காக்கப்படுமா?*

1st Edition 1995
2nd Edition 2014

# 6. பசுச் செல்வம்

ஓம் நமோ நம : சர்வ சக்தி மதே ஜகதீ ஸ்வராய ||

முன்னுரை

இந்த் $^{3}$ரோ விஸ்வஸ்ய ராஜதி |
சன் னோ அஸ்து த்$^{3}$ விபதே $^{3}$ஸம் சதுஷ் பதே$^{3}$ ||
யஜுர் வேதம் - அத்தியாயம் - 36 மந்திரம் - 8.

தனோது சர்வேஸ்வர உத்தமம் ப$^{3}$லம் க$^{3}$வா
- தி $^{3}$ரக்ஷம் விவிதம் த $^{3}$யோித : |
அஸேஷ விக்$^{4}$ நானி நிஹத்ய ந:ப்ரபூ : சஹாய காரீ
- வி$^{3}$ த்தா$^{4}$து கோ$^{3}$ஹிதம் |
யே கோ $^{3}$சுகம் சம்யகு$^{3}$ஸந்தி தீ$^{3}$ராஸ்தே -
த$^{4}$ர்மஜம் சௌக்யதா த$^{3}$த$^{3}$ந்தே |
க்ரூரா - நரா: பாபரதா ந யந்தி ப்ரஜ்ஞாவி -
ஹீனா : பஸுஹிம்ஸகாஸ் தத்|| 2

*இறைவனின் பண்பு, செயல், இயல்புத்தன்மை, கருத்தும் மற்றும் இயற்கையின் விதிமுறைகள். (சிருஷ்டி - கிரமம்), நேரடிக் காணல் முதலிய சான்றுகள் (பிரமாணம்) வேத ஞானிகளின் நற்பண்புகள் முதலியவனுக்கு இசைவாக நல்வழி நடந்து உலகிற்கு நன்மை செய்பவர்களாகிய ஆன்றோர் அறவழி நிற்போர் பாராட்டத் தக்கவர்கள்.*

*இதற்கு மாறாகச் சுய நலத்தோடு இரக்கமற்ற முறையில் உலகிற்குத் தீமை விளைவிப்பவர்கள் மீது வருத்தமே உண்டாகிறது. தமக்கு எத்தனை கஷ்டம் வந்தாலும் (உலகிற்கு) எல்லோருக்கும் நன்மை செய்வதில் உடல், பொருள், ஆவி யாவற்றையும், தியாகம் செய்பவரே, பூஜிக்கத் தக்கவர்கள்.*

*தமது நன்மைக்காகப் பிறருக்குக் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் தருவோர் வெறுக்கத் தக்கவர்கள்.*

*உலகில் இன்ப துன்பங்களை ஒப்புக் கொள்ளாத மனிதனும் உண்டா? தன் தலையை வெட்டும்போது, துன்பமும், அதிலிருந்து காக்கப்படும்போது இன்ப உணர்வும் கொள்ளாத மனிதனும் உண்டா? குற்றமற்ற பிராணிகளை வதை*

செய்து உடல் வளர்க்கும் செயலை நல்லோர் நிந்திப்பார்களேயானால், எல்லோருக்கும் இலாபமும், சுகமும், ஆனந்தமும் உண்டாகாதா?

சர்வ சக்திமான், ஜகதீஸ்வரானாகிய இறைவன் உலகில் மனித ஆத்மாவின் மீது, தன் கருணையையும், நீதியையும் அருளட்டும். அதன் மூலமாக மனிதன் கருணையோடும், நீதி நேர்மையோடும், எப்பொழுதும், எல்லோர்க்கும், நன்மை செய்து, சுய நலத்தை விட்டு, பாரபட்சம் இல்லாமல் பசு முதலிய பிராணிகளை வதை செய்யாமல், பசுக்களால் பால் முதலிய செல்வங்களைப் பெற்று, விவசாயத் தொழிலில் மேன்மை பெற்று மனித இனம் இன்பம் அடையட்டும்.

இந்தப் புத்தகத்தில் அதிகபட்சமாகவோ, குறைவாகவோ, ஏற்கத் தகாத முறையிலோ எழுதப்பட்டிருந்தால், இந்தப் புத்தகம் எழுதும் நோக்கம் குறித்து, ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். நாங்கள் எந்த நோக்கத்தோடு இந்தப் புத்தகத்தை எழுதுகிறோமோ அதற்கேற்ப நீங்களும் பொருள் கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

இந்தப் புத்தகம், பசு முதலிய பிராணிகள் காக்கப்பட்டு, பசுக்களால் கிடைக்கும் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்மேலும் விவசாயம் போன்ற நன்மைகளை அதிகமாகப் பெற்று, எல்லோரும் நலம் பெறவேண்டி எழுதப்படுகிறது. இறைவனும் இவ்வெண்ணம் நிறைவேற அருள் புரியட்டும்.

இந்தப் புத்தகம் மூன்று அத்தியாயங்கள் கொண்டது.

1. விளக்கம்

2. வழிமுறை

3. உப வழிமுறை

பாரபட்சமின்றி, இந்தக் கருத்துகளை மனதில் கொண்டு நடைமுறை படுத்துவீர்களேயானால், இவ்வுலகம் நலம் பெறும்.

### பசு–செல்வம்–விளக்கம்

### பசு - விவசாயம் முதலியனவைகளைப் பாதுகாக்கும் சபை

இந்தச் சபை "கோக்ருஷ்யாதி ரக்ஷிணி" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், பசு முதலிய பிராணிகளைக் காப்பதாலும், விவசாயம் முதலிய தொழில்களைப் பாதுகாப்பதாலும், அவை வளர்ச்சி அடைந்து மனித குலத்துக்கும்,

மற்றப் பிராணிகளுக்கும் எல்லா நன்மையும் கிடைக்கும். அப்படியில்லை எனில், எவ்வுயிர்க்கும் எந்த நன்மையும் கிடைக்காமல் போய்விடும்.

***சர்வ சக்திமான் ஜெகதீஸ்வரர்*** : இந்த ஸ்ருஷ்டியில் எந்த எந்தப்பொருளை எல்லாம் படைத்துள்ளாரோ அவை அனைத்தும் பல விதத்தில் உபயோகம் உள்ளவை. அவைகளில் இருந்து, அந்தப் பயனை மட்டுமே அடைய முயற்சிக்க வேண்டும்.

அதுவே நியாயமும் கூட. கண்கள் பார்ப்பதற்காக நாம் பெற்றிருக்கிறோம். அதன் பயனை முழுவதுமாக அடையாமல், அதைக் குருடாக்கிக் கொள்வது முறையாகாது. எந்த எந்தப் பொருளை எந்த எந்த உபயோகத்திற்காக இறைவன் படைத்தானோ, அந்த அந்தப் பொருளில் இருந்து, அந்தப் பயனை மட்டுமே பெறவேண்டும்.

அதை விடுத்து, முதலிலேயே அந்தப் பொருளை அழித்துவிடுவது, ஆன்றோர்க்கு அழகல்லவே? பக்ஷபாதமின்றிச் சிந்தித்துப் பார்ப்பீர்களேயானால் தெரியும். அதாவது பசு, விவசாயம் முதலியவை காக்கப்படுவதால், அனைத்துயிர்களுக்கும் நன்மை உண்டாகும் அல்லவா? இரண்டும் இரண்டும் நான்கு என்பதை எப்படி நல் அறிவால் அறிகிறோமோ, அதைப்போல, மெய்யறிவின்றி நன்மைகளை அறிய முடியுமோ? இரண்டும் இரண்டும் நான்கு என்பதைப் போல மெய்யறிவால் செய்யப்படும் நற்செயல்களால், நன்மையே விளையும்.

ஒரு பசு குறைந்த பட்சம் இரண்டு சேர் (ஒருசேர் என்பது ஏறக்குறைய ஒரு லிட்டர்) பால் கொடுக்கிறது என்றால், மற்றொன்று 20 சேர் பால் கொடுக்கிறது. ஆக சராசரியாக ஒரு பசு 11 சேர் பால் கொடுக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இந்தக் கணக்குப்படி-மாதத்தில் ஒரு பசு 8¼ மணங்கு பால் கொடுக்கிறது. ஒரு பசு குறைந்தது 6 மாதம் பால் கொடுக்கிறது எனில், ஒரு பசு 18 மாதத்திற்குப் பால் கொடுக்கிறது. ஆக சராசரி ஒரு பசு 12 மாதம் பால் கொடுக்கிறது. இந்த விதமாக 12 மாதத்தில் ஒரு பசு - 99 மணங்கு பால் கொடுக்கிறது.

இவ்வளவு பாலில் ஆறில் ஒரு பங்கு அரிசியும், ஆறில் ஒரு பங்கு சர்க்கரையும் சேர்த்து, கீர் செய்து சாப்பிடுவோமேயானால், ஒரு மனிதனுக்கு, இரண்டு சேர் பாலில் செய்த கீர் போதுமான நிறைவைத் தருகிறது. ஏனெனில் இதுவும் ஒரு நடுத்தர விதிதாச்சாரமே! அதாவது ஒரு மனிதன் இரண்டு சேர் அளவு கீர்

சாப்பிடுவானெனில், இன்னொருவன் மிகக் குறைவு. இந்தக் கணக்குப் படி ஒரு பசுவின் பாலில் இருந்து 1980 பேர் ஒரு வேளை திருப்தியான உணவு உண்கிறார்கள்.

பசு குறைந்தது 8லிருந்து 16 முறை கன்று ஈனுகிறது. சராசரியாக 13 முறை கன்று ஈனுகிறது. ஆக ஒரு பசுவின் வாழ்நாளில் கிடைக்கும் பாலை மட்டுமே 25,740 மனிதர்கள் ஒரு வேளை உணவாகப் பெற்று திருப்தியடைகிறார்கள்.

ஒரு பசுவினுடைய பரம்பரையில் ஆறுபெண் கன்றுகளும், ஏழு ஆண் கன்றுகளும் உண்டாகின்றன. இவைகளில் ஒன்று ஏதோ ஒரு காரணத்தால் அல்லது நோயின் காரணமாக இறந்தவிடுவதாக வைத்துக் கொண்டாலும் மீதம் 12 கன்றுகள் இருக்கும். அவைகளின் அந்த 6 பெண் கன்றுகள் மட்டும், மேற்சொன்ன கணக்குப்படி 1,54,440 மனிதர்களுக்கு உணவாகப் பால் தருகிறது.

இப்பொழுது அந்த ஆறு கன்றுகள் (எருதுகள்) அவற்றில் ஒரு ஜோடி எருதின் மூலமாக 200 மணங்கு உணவுப்பொருள் உற்பத்தி செய்ய முடியும். இந்த விதமாக மூன்று ஜோடி எருதின் மூலமாக 600 மணங்கு உணவுப் பொருள் உற்பத்தி செய்ய முடியும். மேலும் அந்த எருதுகள் எட்டு ஆண்டுகள் நன்கு உழைக்கக் கூடியவை.

மூன்று ஜோடிகளும் தங்கள் வாழ்வில் அதாவது எட்டு ஆண்டுகளில் 4,800 மணங்கு உணவுப் பொருளை உற்பத்தி செய்யக்கூடிய சக்தி உள்ளவை. இந்த 4,800 மணங்கு உணவுப் பொருளிலிருந்து ஒரு மனிதனுக்கு மூன்று கால் பங்கு உணவு எனக் கணக்கிட்டால், 2,56,000 (இரண்டு லட்சத்து, ஐம்பத்தாராயிரம்) மனிதர்களுக்கு ஒரு முறை உணவாகிறது.

பால் மற்றும் உணவு இவைகளைச் சேர்த்துக் கணக்கிடும் போது நிச்சயமாக 4,10,440 (நான்கு லட்சத்து, பத்தாயிரம் நானூற்று நாற்பது) மனிதர்களுக்கு ஒரு முறை உணவளிக்க முடிகிறது. இப்படியாக ஆறு பசுக்களின் பரம்பரையையும், அவற்றின் பரம்பரையையும், கணக்கிடும் போது எண்ணற்ற மக்களுக்கு உணவு கிடைக்கிறது. ஆனால் இந்தப் பசுவின் மாமிசத்தை உண்பதால் 80 பேர் மட்டுமே திருப்தி அடைய முடியும்.

சிறு இலாபத்திற்கு இலட்சக்கணக்கான பிராணிகளைக் கொன்று, எண்ணற்ற மனிதர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்குவது, பெரிய பாபம் இல்லையா? இருந்த போதிலும், பசுக்களின் பாலைவிட எருமைகளின் பாலினாலும், எருதைவிட எருமைகடா (ஆண் எருமை)வினாலும் சிறிது அதிக லாபம் இருக்கிறது.

ஆனால், பசுவின் பாலைப் போல எருமையின் பாலோ, எருதைப் போல எருமைக் கடாவினால், மனிதர்களுக்கு பயன் அதிகம் இல்லை. பசு, எருது இவைகளின் மூலம் பெறும் பயன் மனிதனுக்கு அறிவையும், ஆரோக்கியத்தையும் அளிக்கிறது. ஆனால் எருமைக் கடா மூலம் அவ்வளவு பயன் இல்லை. ஆகவே, ஆரியர்கள் பசுவையே மிக உயர்ந்ததாகக் கருதினார்கள்.

மேலும், ஒட்டகம், பசுவைவிட, எருமையைவிட பால் அதிகம் கொடுத்தாலும், பசுவின் பாலின் பலன் அதில் மனிதனுக்குக் கிடைப்பதில்லை. ஒட்டகங்கள் சுமைகளைச் சுமப்பதற்கே சிறந்தவை.

இப்பொழுது ஆட்டிற்கு வருவோம். ஓர் ஆடு குறைந்தது 1 சேர் பாலும், அதிக பட்சம் 5 சேர் பாலும் கொடுக்கிறது. சராசரியாக ஓர் ஆடு மூன்று சேர் பால் கொடுக்கிறது. சில குறைந்தது, மூன்று மாதம் பால் கொடுக்கின்றன. சில ஐந்து மாதம் பால் கொடுக்கின்றன. சராசரியாக ஆடுகள் நான்கு மாதம் பால் கொடுக்கின்றன.

மாதத்தில் ஓர் ஆடு 2¼ மணங்கு பாலும், நான்கு மாதத்தில் 9 மணங்கு பாலும் கொடுக்கிறது. மேற்படி கணக்கீட்டால் ஓர் ஆட்டின் பாலில் 180 மனிதர்களுக்கு ஒருவேளை உணவு கிடைக்கிறது. ஓர் ஆடு ஆண்டுக்கு இருமுறை குட்டி ஈனுகிறது.

இந்த விதமாக ஓர் ஆட்டின் பாலினால் மட்டும், ஆண்டுக்கு 360 மனிதர்களுக்கு ஒரு வேளை உணவு தருகிறது. சில ஆடுகள் நான்கு ஆண்டுகளும், சில எட்டு ஆண்டுகளும் குட்டிகளை ஈனுகின்றன. ஆக ஜன்மம் முழுவதும் 2,160 மனிதர்களுக்கு ஒரு வேளை உணவு கிடைக்கிறது.

அதன் குட்டிகளைக் கணக்கிடும் போது 24 ஆகிறது. ஏனெனில் சில ஆடுகள் குறைந்த பட்சம், சில ஆடுகள் அதிக பட்சம் மூன்று குட்டிகள் ஈனுகின்றன. மொத்தத்தில் இரண்டு குட்டிகள் இறந்து விடுகின்றன என்று வைத்துக்கொண்டாலும், 22 குட்டிகள் இவைகளில் 11 பெண் ஆடுகளின் பாலினால் மட்டும் 25920 (இருபத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது) மனிதர்களுக்கு ஒரு நாள் உணவு தருகின்றன. அவைகளின் பரம்பரையைக் கொண்டு, கணக்கிடும்போது, கணக்கற்ற மனிதர்களுக்கு உணவு கிடைக்கிறது. மேலும் ஆண் ஆடுகள் (ஆட்டுக்கடா) சுமைகளைச் சுமக்கப் பயன்படுகின்றன. வெள்ளாடு, செம்மறியாடுகளின்

முடிகளில் இருந்து தயாரிக்கப்படும் கம்பளி ஆடைகளினால், மனிதர்களுக்கு நல்ல பயன் உண்டாகிறது.

செம்மறியாட்டுப் பால், வெள்ளாட்டுப்பாலை விட குறைவாக இருந்தாலும், வெள்ளாட்டுப் பாலில் நல்ல பலமும், நல்ல நெய்யும் கிடைக்கின்றன. இதே போல் மற்ற பால் தரும் பிராணிகளின் மூலமும் நல்ல லாபமும், சுகமும் கிடைக்கின்றன.

எப்படி ஒட்டகம், யானை, குதிரை இவைகளின் மூலம் நல்ல பயன் கிடைக்கின்றனவோ, அதே போலப் பன்றி, நாய், கோழி,சேவல், மற்றும் மயில் முதலிய பறவைகளின் மூலமும் பல விதத்தில் பயன் உண்டாகிறது.

மனிதர்கள் விரும்பினால் மான், சிங்கம் மற்றும் மயில் முதலியவை களிடமிருந்தும் பயன் பெற முடியும். ஆனால் இவைகளின் பராமரிப்பிற்குத் தகுந்தபடிதான் பலனும் நமக்குக் கிடைக்கும். நிகழ் காலத்தில் பரோபகாரம் என்பது, பசுவை ரக்ஷிப்பதே.

இதனால் இரண்டு விதத்திலும் பிராணிகளின் பாதுகாப்பும், வாழ்க்கை, சுகம், கல்வி, பலம் மேலும் புருஷார்த்தமும்கூட வளர்கிறது.

**1. உணவு = 2. நற்செல்வம்**

இதில் முதலாவது இல்லையெனில், பிராணிகளின் அழிவும், இரண்டாவது இல்லை எனில், பல விதத்தில் துன்பமும் உண்டாகிறது.

பாருங்கள், காரமற்ற புல், பூண்டு, இலை, தழை, காய், மலர் இவைகளைத் தின்று பால் என்ற அமுதத்தைத் தருகிறது. மேலும், காளைகளோ கலப்பை, வண்டி முதலியவைகளை இழுத்து, உணவுப் பொருளை உற்பத்தி செய்கின்றன. மேலும் புத்தி, பலம், பராக்கிரமம், பெருகவும், நோய், நொடி இன்றி வாழவும் உதவுவதோடு மகனாக, மகளாக, நண்பனாக மனிதர்களிடம் நம்பிக்கையும், அன்பும் வைத்திருக்கின்றன.

அவைகளை எங்கே கட்டுகிறார்களோ, அங்கே கட்டுண்டுக் கிடக்கின்றன. எங்கே ஓட்டிச் செல்கிறார்களோ அங்கே செல்வது, அழைக்கப்படும் பொழுது அருகில் வருவதும், எப்பொழுது காட்டில் உள்ள பல மிருகங்களால் ஆபத்து உண்டாகின்றனவோ அப்பொழுது வளர்ப்பவர்களிடம் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் ஓடி வருகின்றன.

இவைகள் இறந்த பிறகும்கூட அவற்றின் தோல்கள் மனிதர்களைப் பல விதங்களில் காக்கின்றன. காடுகளில் மேய்ந்தாலும், தமது கன்றுகளுக்கும் எஜமானுக்கும், பால் தருவதற்குக் குறித்த இடத்திற்கு தாமாகச் செல்கின்றன. தம் எஜமானுக்காகத் தம்மையே தியாகமாகத் தருகின்றன. இப்படியாக மன்னனுக்கும் மக்களுக்கும், நன்மையே செய்கின்ற சுப குணங்களையே கொண்ட சுகம் தரும் பிராணிகளின் கழுத்தைக் கத்திகளால் வெட்டி தன் வயிற்றை நிரப்பிக்கொள்வது பாவம் அல்லவா?

உலகிற்கு நஷ்டத்தை உண்டாக்கும் இப்படிப் பட்டவர்களைவிட, நம்பிக்கைத் துரோகிகள், துன்பம் தரும் பாவிகள் வேறு யாரேனும் இருக்க முடியுமா?

ஆகவே, யஜுர் வேதத்தினுடைய மந்திரத்தில் இறைவனின் கட்டளை கீழ்க் கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

**“அக்ந்யா” , “யஜமானஸ்ய பசூன் பாஹி”**

ஹே மனிதா! நீ இந்தப் பிராணிகளை ஒரு பொழுதும் கொல்லாதே, யஜமானனாக இருந்து அவைகளை நீ காப்பாற்றினால் அவைகளால் உனக்கும் நன்மை உண்டாகும்.

ஆகவே, பிரம்மாவிலிருந்து, ஆரியர்கள் இன்று வரைக்கும், பசுவை (பிராணிகளை) வதைப்பதைப் பாவம் என்றும், அதர்மம் என்றும் நினைத்தனர். இந்தப் பிராணிகளைக் காப்பதால், உணவுப் பொருள்கள் பற்றாக்குறை உண்டாவதில்லை. ஏனெனில் பால் போன்றவை, மிகவும் ஏழைகளுக்கு கூட உணவுப் பொருள்களோடு கிடைப்பதால், உணவு குறைவாக உண்ணப்படுகிறது.

உணவுப் பொருள்கள் குறைவாகச் சாப்பிடுவதால் மலம் போன்ற கழிவு குறைவாக வெளியேற்றப்படுகிறது. மலம் குறைவாக வெளியேற்றப்படுதால், துர்நாற்றம்கூட குறைகிறது. துர்நாற்றம் குறைவதால் வாயு, மழை நீர் போன்றவை, தூய்மை கெடுவதில்லை. அதனால் மனிதர்களுக்கு நோய் வருவதில்லை; சுகம் அதிகமாகக் கிடைக்கிறது.

(பிராணிகளின்) பசுக்களின் அழிவால் மன்னன், மக்கள் அனைவரும் அழிவார்கள். இதுவும் உண்மையே. பசுக்களின் குறைவால், பால் முதலியவை குறைவாகக் கிடைக்கின்றன மேலும், விவசாயம் முதலியவை தடைப்படுகிறது.

(குறைகிறது) 700 ஆண்டுகளுக்கு முன் கிடைத்ததைப் போல், பால் நெய் போன்றவை, இப்பொழுது மிகக் குறைந்த விலையில் கிடைப்பதில்லை.

ஏனெனில் 700 ஆண்டுகளுக்கு முன்தான் இங்கு வந்து புலால் உண்டும் வெளி நாட்டினர் பாரதத்தில் குடியேறினார்கள். அவர்கள் எல்லோருக்கும் உதவிடும் பசுக்களின் மாமிசத்தையும்கூட விட்டு வைக்கவில்லை.

"நஷ்டே மூலே நைவ பலம் ந புஷ்பம்"

காரணம் அழிக்கப்படும் போது காரியமும் அழிகிறதல்லவா?

"ஹே புலால் உண்பவரே! நீங்கள் சில காலத்திற்குப் பிறகு உண்பதற்குப் பசுக்களின் மாமிசம் கிடைக்கவில்லை எனில், அப்பொழுது மனிதனையும் கொன்று தின்றுவிடுவீர்கள் இல்லையா?"

ஹே பரமேஸ்வரா! நீ ஏன் இந்தக் குற்றமற்ற பசுக்கள் கொல்லப்படும்போது கருணை காட்டுவது இல்லை?

அவைகளுக்கு உன் அருள் இல்லையோ?

அவைகளுக்கு உன் நீதி மன்றத்தில் நீதி கிடைக்காதா?

அவைகளின் துன்பத்தைப் போக்க மாட்டாயோ?

அவைகள் உன்னை அழைப்பது கேட்கவில்லையோ?

அந்தப் புலால் உண்பவர்கள் மீது, கருணை காட்டி அவர்களிடம் இருக்கும் சுயநலம், பொறாமை, முட்டாள்தனம், கொடூர குணம் இவைகளைப் போக்கி, அதன் மூலம் அவர்கள் தீயச் செயல்கள் செய்வதிலிருந்து விலகி வாழச்செய்.

விளக்கம் : ஹிம்சாவாதி - அஹிம்சாவாதி இருவருக்கும் இடையே சிறு வாதம்.

**ஹிம்சா** : இறைவன் அனைத்துயிர்களையும், மனிதனுக்காகப் படைத்தான். மனிதனைத் தன்னை வழிபடப் (பக்தி செலுத்த) படைத்தான். ஆகவே, மாமிசம் சாப்பிடுவது ஒன்றும் குற்றம் இல்லையே?

**அஹிம்சா** : சகோதரா, நீ கூறுகிறாய், பிராணிகள், மனிதன் சாப்பிடவே படைக்கப்பட்டன என்று. " உன் சரீரத்தைப் படைத்த இறைவன் தான் பசு

முதலான பிராணிகளையும் படைத்தான். நீ எப்படி அவைகளின் மாமிசத்தை விரும்புகிறாயோ, அதைப் போலவே" அந்தப் பிராணிகள் மனித மாமிசத்தை விரும்புகின்றன. அதாவது சிங்கம், புலி முதலான பிராணிகளுக்காகத்தான் நீ படைக்கப்பட்டாய் என்று கூறுகிறேன்.

***ஹிம்சா*** : இறைவன் மாமிசம் உண்ணும் பிராணிகளுக்கு எப்படி உண்மையானப் பற்களைக் கொடுத்து உள்ளானோ அப்படியே மனிதனுக்குக் கொடுத்துள்ளான். ஆகவே, மனிதனும் மாமிசம் உண்பது சரியானதே! (தவறு இல்லை).

***அஹிம்சா*** : புலி, சிங்கம் முதலான பிராணிகளின் பற்களோடு உன் பற்களை ஒப்பிடுகிறாயோ, நீயும் விலங்கும் ஒன்றா? நீ மனித இனம். அவைகள் விலங்கு இனம். உனக்கு இரண்டு கால்கள், பிராணிகளுக்கு நான்கு கால்கள். நீ கற்று, தெளிந்து, நன்மை, தீமை உணரக் கூடியவன். அவைகள் அப்படி அல்ல. உனது பேச்சும் சரியானது அல்ல. அதாவது குரங்கை எடுத்துக்கொள். அதற்கும் சிங்கம், பூனை போன்று பற்கள் கூர்மையாக இருக்கின்றன. ஆனால், குரங்குகள் மாமிசம் உண்பதில்லையே! அதோடு மட்டுமல்ல மற்ற விலங்கினத்தோடு ஒப்பிடுவதை விட குரங்கோடு மனிதனை ஒப்பிட்டுப் பார்த்தால், மிகவும் அதிகமான பொருத்தங்கள் இருக்கின்றன. ஆக குரங்கு எப்படி எப்பொழுதும் மாமிசம் உண்பதில்லையோ, பழ வகைகளையும் காய்கறிகளையும் தின்று உடல் வளர்க்கிறதோ, அப்படியே மனிதனும் வாழ வேண்டும் என்று (இறைவன் கூறுவதாக) நீ எடுத்துக் கொள்.

***ஹிம்சா*** : மாமிசம் உண்பவர்கள் மிக பலம் பெற்றவர்களாக இருக்கின்றனர். சைவ சாப்பாட்டினால் (காய்கறிகள் உண்பதில்) பலஹீனமே உண்டாகிறது. ஆகவே, பலம் கிடைக்க மாமிசம் உண்ண வேண்டும்.

***அஹிம்சா*** : சின்ன சாதாரண விஷயம், இதை ஒப்புக்கொள்கிறாய். ஆனால், சிந்திப்பதில்லை. சிங்கம் மாமிசம் உண்ணுகிறது. ஆனால், காட்டுப் பன்றியோ அல்லது காட்டு எருமையோ மாமிசம் எப்பொழுதும் சாப்பிடுவதில்லை. சிங்கம் மனிதக் கூட்டத்தில் புகுந்தால் மனிதனை தான் அடித்துச் சாப்பிடும். ஆனால், சிங்கத்தைத் துப்பாக்கியாலோ, கத்தியாலோ (தான்) கொலை செய்துவிட முடிகிறது.

அதே சமயம், காட்டு எருமையோ, காட்டுப் பன்றியோ, எந்தப் பிராணிகளின் கூட்டத்தில் புகுந்தாலும் சரி அல்லது மனிதனேயானாலும் தப்பித்து ஓட முயற்சிக்கின்றன. கத்தியினாலோ, துப்பாக்கியினாலோ எளிதில் கொல்லவும் முடிவதில்லை. சிங்கமும் அவைகளைக் கண்டு பயப்படுகின்றன. ஆனால் அவைகள் சிங்கத்திடம் எப்பொழுதும் பயப்படுவதில்லை.

மேலும் நேராகப் பார்க்க விரும்பினால், ஒரு மாமிசம் உண்பவன் பால், நெய். அன்னம் முதலியன உண்ணும் மதுராவைச் சேர்ந்த ஒரு மல்யுத்த வீரனுடன் யுத்தம் செய்தால், நிச்சயமாக மல்யுத்த வீரன் அந்த மாமிசம் உண்பவனை வென்றுவிடுவான். இதில் சந்தேகமே இல்லை. பிறகு தேர்வு செய்வார்கள். எதை எதை உண்பதால், பலம் உண்டாகும் என்று.

நீயே எண்ணிப்பார்! பழங்களின் தோல்களைச் சாப்பிடுவதால், பலம் உண்டாகுமா? அல்லது பழத்தின் சாறை (ரசத்தை) அருந்துவதால் பலம் உண்டாகுமா? தாவர உணவு பழச்சாறு போன்றது, மாமிசம் பழங்களின் தோலுக்குச் சமம்.

மேலும், முறையோடு காய்கறிகள், கீரைகள், சாப்பிட்டு வந்தால், மாமிசம் உண்பதைவிட பல மடங்கு பலம் கிட்டும். அதோடு மாமிசம் உண்பதால், பல தீமைகள், நோய்கள் விளைகின்றன. மாமிசம் உண்பது பாவச் செயல், அதர்மம், அநீதியும் கூட.

**ஹிம்சா** : சில நாடுகளில் மாமிசத்தைத் தவிர உண்பதற்கு வேறு எதுவும் கிடைப்பதில்லை. அப்படிப் பட்ட இடங்களில் மாமிசம் உண்பது ஆபத்துக் காலத்தில் அதாவது, வேறு வழியே இல்லாத போது மாமிசம் உண்பது, சில நோய்களைக் குணப்படுத்துவதற்கு மாமிசம் உண்பது போன்றவை தவறு ஆகாதே?

**அஹிம்சா** : நீ சொல்வது முற்றிலும் தவறு. ஏனெனில் மனிதன் எங்கு வசிக்கிறானோ அங்கு (பூமி) இயற்கைத் தாவரங்கள், பழங்கள் அவசியம் உண்டு. விவசாயமோ அல்லது காய்களிகள், பழங்கள் இல்லாத இடத்தில் மனிதன் அவசியம் வாழ முடியாது.

நல்ல விளைநிலமும், காய்களும், கனிகளும், கிழங்குகளும் இன்னும் பல வகைகளும் இல்லை எனில், மனிதன் வாழ்வது மிகக் கடினமே. பச்சைக் காய்கறிகள், கனிகள் உண்பவர்கள் ஆபத்து காலத்தில், எப்படி தங்களைக் காத்துக்கொள்கிறார்கள்? நோய்களைத் தீர்க்க சில மூலிகை மருந்துகளால் நீக்க முடியும். ஆகவே, மாமிசம் உண்பது நல்லது அல்ல!

**ஹிம்சா** : இறைவன் மிருகங்களையும், பிராணிகளையும் படைத்ததே, மனிதன் உண்பதற்காகத்தான். இல்லை எனில், பூமியில் மிருகங்கள், பிராணிகள் பெருகிவிடாதா?

**அஹிம்சா** : ஆஹா! இந்த எண்ணம் உனக்கு வந்ததே மாமிசம் நீ உண்பதாலோ! என்னவோ! மனித இனம் பெருகிவிட்டதே, என்று யாராவது, மனித மாமிசத்தை உண்கிறார்களா? இல்லையே! மிருகங்கள் அதிகமாகப் படைக்கப்பட்டதன் காரணம், ஒவ்வொரு மனிதனும் வாழப் பல மிருகங்களின் உதவி தேவைப்படுவதால்.

**ஹிம்சா** : நீங்கள் சொன்ன அனைத்தும், பொதுவாக மக்களுக்கு. ஆனால் எங்கள் மதத்தில் மாமிசம் உண்பது அதர்மம் இல்லை! உனக்கு ஒரு வேளை அது பாவமாக இருக்கலாம். உன் மதம் அப்படி. ஆகவே நீங்கள் சாப்பிடாதீர்கள். நாங்கள் மாமிசம் சாப்பிடுவோம். எங்கள் மதத்தில் மாமிசம் உண்பதால் பாவம் இல்லை.

**அஹிம்சா** : தர்மமும், அதர்மமும் நாம் செய்யும் செயல்களால் உண்டாகிறதா? இல்லை மற்றதினாலா? செயலால் இல்லாமல் உன்னால் உணர முடியாது, தர்மம் எது, அதர்மம் எது என்று?

எந்தச் செயல் பிறருக்கு நஷ்டத்தை உண்டாக்குகிறதோ, அது அதர்மம். எந்தச் செயல் பிறருக்கு நன்மைசெய்கிறதோ, அது தர்மம்.

இதை ஏன் ஒப்புக்கொள்ள மறுக்கிறாய்? திருடுவது அதர்மம், ஏனெனில், அச்செயலால், பிறருக்கு நஷ்டம் உண்டாகிறது.

இல்லை எனில், நல்லவனுக்கு உபயோகம் - ஆவதைப் போலத் திருடனுக்கும் செல்வம் உபயோகம் ஆகிறது என்றாகிவிடும். ஆகவே, எந்தச் செயலால்

பிறருக்குத் துன்பமோ நஷ்டமோ, அது அதர்மம் என்றும், பிறருக்குப் பிரதி பலனை எதிர்பாராமல் உதவி செய்வதை, தர்மம் என்றும் சொல்லப்படுகிறது.

திருடுவது பிறருக்கு நஷ்டமும்-துன்பமும் உண்டாக்குகிறது. அதைப் பாவம் என்று கூறுகிறோம். அப்பொழுது பல வகையில் நன்மை செய்யும் பசுவைக்கொல்வதை ஏன் பாவம் என்று கூறக்கூடாது?

புலால் உண்பவர்களுக்குக் கருணை போன்ற நல்ல குணங்கள் இருப்பதில்லை. மேலும், சுய நலத்திற்காகப் பிறருக்குத் துன்பம் உண்டாக்கவும் இவர்கள் தயங்குவதில்லை. மேலும் தின்று கொழுத்துப் பருமனாக இருக்கும் பசுவைக்கண்டால் புலால் உண்பவன், இந்தப் பசுவின் உடலில் நிறைய மாமிசம் இருக்கும். இதைக் கொன்று தின்றால், நன்றாக இருக்கும் என்று நினைப்பான்.

புலால் உண்ணாதவன் (காய், கனி சாப்பிடுபவன்) பசுவைப் பார்க்கும்போது, பசு நல்ல சுகமாக வாழ்கிறது என்று நினைப்பான். சிங்கம் எப்படி மற்ற கொழுத்தப் பிராணிகளைச் சுயநலத்துக்காகக் கொன்று தின்று இன்பம் அடைகிறதோ, அதைப் போலத்தான் புலால் உண்பவனும் இன்பம் அடைகிறான். ஆகவே, மாமிசம் உண்பது மனிதனுக்கு நல்லது அல்ல.

**ஹிம்சா** : பசுக்கள் நமக்குப் பயன் தரும் வரை அதன் மாமிசத்தை உண்ணக்கூடாது எனில், அது வயதாகிவிட்டாலோ, அல்லது இறந்துவிட்டாலோ அதன் மாமிசத்தை உண்பதில் தவறில்லையே!

சிறு பருவத்திலிருந்து நம்மைச் சீராட்டி, வளர்த்து, பெரியவர்களாக்கிய, வயதான பெற்றோர்களைக் கொல்வதைப் போன்றது வயதான பசுக்களைக் கொல்வது. மேலும், இறந்த பசுக்களின் மாமிசத்தை உண்பதாலும் அதனால் வரும் பாவத்தின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது. ஆகவே, எந்த ஒரு நிலையிலும் மாமிசம் சாப்பிடக்கூடாது.

**ஹிம்சா** : காடுகளில் வாழும் பசு, பட்சிகளினால் யாருக்கும் எந்த லாபமும், பயனும் இல்லை. நஷ்டமே! அவைகளை உண்பது ஒன்றும் தவறு இல்லையே?

**அஹிம்சா** : அவைகளையும் சாப்பிடக்கூடாது. ஏனெனில், அவைகளில் இருந்தும் நன்மைகள் பெற முடியும். அதாவது நூறு தோட்டிகள் எவ்வளவு சுத்தம்

செய்கிறார்களோ, அதைவிட அதிகமாக நமக்கு சுத்தமும், சுகாதாரமும் விளைவிக்கும்.

இந்தப் பன்றி, சேவல், மயில், பாம்பு போன்றவைகள் மேலும், எப்படி மனிதர்கள் சாப்பிடும் சாப்பாட்டால், மற்ற ஜீவன்களுக்கு உபகாரம் உண்டாகிறதோ, அதைப் போல் காட்டில் வாழும் மாமிசாகாரி விலங்குகளுக்கு காட்டுப் பசு பட்சிகள்தான் உணவு.

அறிவினால், நல்ல கருத்துகளைக் கொண்டு, அந்தகாட்டு மாமிசாகாரி விலங்குகளிடம் பயன்களைப் பெற முயற்சித்தால், பல விதத்திலும் இலாபம் அடைய முடியும், அந்தப் பிராணிகளிடம். ஆகவே, மாமிசம் உண்ணாமல் இருப்பதே மிக நன்று.

நமக்கு உணவாகப் பயன்படும் பாலைத் தரும் பசுக்களையும், பிராணி களையும் தாய், தந்தைக்குச் சமமாக கருத வேண்டாமா? மனிதர்களைவிடப் பசு, பட்சிகள் படைக்கப்பட்டிருப்பது (நமது) நன்மைக்கே.

மனிதர்களுக்குப் பயன்படும் உணவு வகைகளை விட பசு, பட்சிகளுக்கு உணவாகும் தாவரங்கள் இறைவன் அருளால், யாரும் பயிரிடாமலேயே தாமாக உண்டாகின்றன. அவைகளுக்குத் தேவையான மழையையும் இறைவனே தருகிறான். இவற்றிலிருந்து நாம் அறிகிறோம். பசு, பட்சிகள் இறைவனால் படைக்கப்பட்டிருப்பது காக்கப்படுவதற்காகத்தானே அன்றி, அழிக்கப்படு வதற்காக அல்ல.

***ஹிம்சா*** : மனிதன் பசுவைக் கொன்று தின்றால் பாவம். ஆனால், மாமிசம் விற்பவனிடம் வாங்கி உண்பதாலோ அல்லது பைரவன் - சாமுண்டி - துர்கா - ஐகையா வாம மார்க்க (அல்லது) யாகம் போன்ற பூஜையில் இறைவனுக்குச் சமர்ப்பித்து, பின் உண்பதால், பாபம் உண்டாகாது. ஏனெனில், அவை முறையாக பூஜிக்கப்பட்டு உண்ணப்படுகின்றன.

***அஹிம்சா*** : மாமிசம் சாப்பிடக்கூடாது. மாமிசம் சாப்பிட உபதேசிக்கவோ, அனுமதிக்கவோ கூடாது. பசுக்களைக் கொல்லவும் கூடாது. பசுவதையால் ஏற்படும் பாவங்களைத் தடுக்கப் பசுக்களை, கொல்லாமல் விட்டுவிடுங்கள். இதற்கு ஆதாரமாக மனுவின் வாக்கு ஒன்றும் உள்ளது.

**அனுமண்தா - விஸசிதா - நிஹந்தா-க்ரய-விக்ரயி சன்ஸ்கர்த்தா - சோ - பஹர்த்தா - ச - காத கஸ்சேதி காதகா :** || மனு -அ -5 - ஸ்லோகம் 5.

**பொருள்**

கொலை செய்யத் தூண்டுபவன், மாமிசம் அறுப்பவன், பசு முதலிய விலங்குகளைக் கொல்பவன், பசுக்களைக் கொல்வதற்காக வாங்குபவன், விற்பவன், மாமிசத்தைச் சமைப்பவன், அதை பரிமாறுபவன், இவர்கள் பாவிகளாகவும், இச்செயல்கள், பாவச் செயல்களாகவும், வர்ணிக்கப்படுகின்றன.

மேலும் பைரவ போன்ற இறைவனின் பெயரில், பசுவதை செய்வது, சாப்பிடுவது, பசுவதைகளைத் தூண்டுவது இவைகள் பாபச் செயல்களாகும். ஆகவே, இறைவன் வேதங்களில் மாமிசம் உண்பது பற்றியோ அல்லது, பசுவதைபற்றியோ எழுதவில்லை.

சாராயம் குடிப்பதுகூட மாமிசம் உண்பதற்கு ஒரு காரணம். ஆகவே, அதைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்கிறோம்.

**போதையில் உள்ளவன்**

மாமிசம் சாப்பிடுவது கெடுதல் என்கிறீர்! மது அருந்துவதனால் குற்றம் ஒன்றும் இல்லையா?

மது அருந்துவதாலும் மாமிசம் உண்பதிலுள்ள விளைவுகள் உண்டு.

மது அருந்துவதால், போதை உண்டாகி போதையின் காரணத்தால் அறிவு இழந்து கடமையை மறந்து தவறான செயல்களைச் செய்கிறார்கள். நீதிக்கு அநீதியையும், அநீதிக்கு நீதியையும் - விபரீதமாகச் செயல்படுகின்றனர்.

மேலும், மது பானங்கள் அழுகிய பொருள்களிலிருந்து தயாரிக்கின்றனர். ஆகையினால், மது அருந்துபவர்கள் மாமிசம் சாப்பிட ஆரம்பித்து விடுகின்றனர். மது அருந்துவதால், ஆத்மா தவறான எண்ணங்களை எண்ண ஆரம்பித்து விடுகின்றன.

ஆக, மது அருந்துபவன் கல்வி போன்ற சுப குணங்களைவிட்டு விலகி, தவறுக்கு அடிமையாகி தர்ம வழியை மறந்து பசுவதை, புலால் உண்பது, தூக்கம், பயம், காமம் போன்ற தீய குணங்களுக்கு அடிமையாகி, வாழ்க்கையை

வீணாக்கிக்கொள்கிறான். ஆகவே, மது போன்ற போதைத் தரும் பொருள்களையும் சாப்பிடக்கூடாது.

கஞ்சா, புகையிலை போன்ற பொருள்களும்கூட போதைப் பொருள்களே. ஆகவே, இவைகளையும் சாப்பிடக்கூடாது. ஏனெனில், இவைகளும் அறிவை அழித்து போதை, சோம்பல், துன்புறுத்தல் போன்ற குணங்களில் மனிதனைத் தள்ளிவிடுகிறது. ஆகவே, மதுவைப் போலவே இவைகளையும் சாப்பிடக் கூடாது.

ஆகவே நல்லவரே! நீங்கள் பசுக்களின் பாதுகாப்பிற்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் தர முன் வரவேண்டாமா? மிகவும் துக்கத்திற்குரிய விஷயம் என்னவெனில் பசு, ஆடு முதலிய விலங்கினங்களையும் கோழி, மயில் போன்ற பறவை இனங்களையும் கொல்வதற்காக, கொடுமைக்காரர்கள் கொண்டு செல்லும்பொழுது, அந்த வாயற்ற ஜீவன்கள் தங்களது பரிதாபமான சோகத்தை வெளிப்படுத்தியவாறு நம்மைப் பார்த்துக் கூறுகின்றன.

“நல்லோரே! குற்றமற்ற எங்களை, கொடூரமாகக் கொலை செய்கிறார்கள். ஆனால், நாங்களோ, எங்களைக் காப்பாற்றுவர்களுக்கும், கொலை செய்பவர்களுக்கும் பால் முதலிய அமிர்தங்களைத் தருவதற்காகவே இருக்கிறோம். மேலும், இறப்பதற்கு விரும்பவில்லை” என்று.

நாங்கள் எங்களிடம் இருப்பவைகளை, மற்றவர்களுக்காகவே அர்ப்பணிக்கிறோம். ஆகவேதான் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று உங்களை அழைக்கிறோம். எங்களுடைய துன்பத்தை உங்களுடைய மொழியில் புரிய வைக்க இயலாது. உங்களுக்கோ எங்கள் பாஷைத் தெரியாது.

இல்லையெனில், எங்களை யாராவது துன்புறுத்தினாலோ, கொன்றாலோ உங்களிடம் நியாயம் கோரி, அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தந்து விட மாட்டோமா! நாங்களே மிகக் கஷ்டத்தில் இருக்கிறோம். ஏனெனில் எங்களைக் காப்பாற்றுவதற்கு யாரும் முன் வரவில்லை. அப்படி யாரேனும் முன் வந்தாலும் மாமிசம் உண்பவர்கள் அவர்களிடம், பகை கொள்கிறார்கள்.

மேலும், சுய நலத்திற்காகப் பகை கொள்வதானால் கொள். ஏனெனில், **“ஸ்வார்த்தீ தோஷம் ந பஷ்யதி.”** அதாவது சுயநலக்காரன் தன்னுடைய குற்றங்கள் மீது கவனம் செலுத்துவதில்லை. ஆனால், மற்றவர்களுக்கு நஷ்டம்

உண்டானால் உண்டாகட்டும். எனக்குச் சுகமே உண்டாகவேண்டும் என்று எண்ணுகிறான். ஆகவே, உதவி செய்வோரே, அப்படிப்பட்ட கஷ்டங்களில் இருக்கும் பசு, பட்சி இனங்களைக் காப்பதற்கு முன் வருவீர்களாக! பூலோகத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும், இப்படிப்பட்ட நற்காரியங்களைச் செய்ய வேண்டும்.

அதாவது, ஆரியர்கள் எப்படி அக்காலத்திலிருந்து இக்காலம் வரை வேதத்திற்கு அனுசரனையாக புகழத்தக்க செயல்களைச் செய்து வந்தார்களோ, அப்படிப்பட்ட செயல்களைச் செய்ய வேண்டும். இறைவனின் படைப்பை அனுசரித்து, எவனொருவன் பரோபகாரத்திற்காக, தன்னுடைய-உடல்-பொருள்-ஆவி அனைத்தையும், தியாகம் செய்கிறானோ, அப்படிப்பட்ட ஆர்யவர்த்தத்தைச் (பாரதம்) சேர்ந்த ஆரியர்களுக்கு நன்றி மற்றும் புகழ் உண்டாகட்டும். அக்காலத்தில் ராஜா, மஹாராஜா, செல்வந்தர் போன்றவர்கள் பசு, பட்சிகளைக் காப்பாற்றி அவைகளின் மூலமாக பால் முதலிய உணவுப் பதார்த்தங்களைப் பெற்று அவைகளை உண்டு ஆரோக்கியம், புத்தி, பலம், பராக்கிரமம் முதலிய நற்குணங்களைப் பெற்று வாழ்வதற்காகப் பூமியில் அதிகமான இடங்களில் காடுகளை வளர்க்க முற்பட்டார்கள்.

மேலும் மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுவதால், மழை பொழிவதற்கு ஏதுவாகிறது. காற்றுத் தூய்மையாகிறது. பசுக்களும், பட்சிகளும் அதிகமாக வளர்க்கப்படுவதால், இயற்கை உரங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆனால், இப்பொழுது மனிதர்கள் அதற்கு மாறாக நடக்கிறார்கள். அதாவது காடுகளை அழிப்பது, பசு, பட்சிகளைக் கொல்வது, கொன்று தின்பது, இரசாயன உரங்களை நிலங்களில் இட்டு, அதன் மூலமாகவும் நோய்களை வளர்ப்பது போன்ற செயல்களால் உலகிற்குத் தீமை விளைவிக்கிறார்கள். மேலும், சுயநலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தும், பொதுநலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமலும், எதிர்மறையாகச் செயல்படுகிறார்கள்.

**“விஷாதப்யமிருதம் க்ராஹ்யம்”**

அதாவது விஷத்திலிருந்தும், அமிர்தத்தை எடுப்பது, நல்லோர்களின் கொள்கை. மேலும், பசு முதலிய விலங்கினங்களின் மாமிசத்தை உண்பதால்,

ஏற்படும் தீமைகளைத் தவிர்த்து, அவைகளின் பால் முதலிய உணவுப் பொருள்களை உண்பது அவர்களுடையக் கொள்கையாகும்.

அது மட்டுமல்லாமல், அவைகளைக் காப்பாற்றி, மக்களுக்கு நன்மை செய்வதும், அவர்களுடைய கொள்கையாகும். இறைவனால் உலகில் படைக்கப்பட்டிருக்கும் அனைத்துப் பொருள்களும், மற்றவர் நன்மைக்காகவே இருக்கின்றன. அதைப் போல மானிடராகிய நாமும், நமது உடல்-பொருள்-ஆவி அனைத்தையும் பரோபகாரியத்திற்காக தியாகம், செய்யலாமே? மேலும், பசு போன்ற விலங்கினங்களைக் கொடுமைப்படுத்துவது முறையாகுமா? மிகவும் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவெனில், பசுவதை தடைச்சட்டம் என்று சட்டப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கின்றோம்.

பலஹீனமான விலங்கினங்களுக்கு அவைகளால் சுமக்க முடியாத அளவுக்குச் சுமைகளை ஏற்றக்கூடாது என்றும் சட்டம் இயற்றி வைத்திருக்கின்றோம். ஸ்ரீமதி ராஜராஜேஸ்வரி, ஸ்ரீவிக்டோரியா மகாராணியின் கருத்து, தூக்குத் தண்டனையைவிட சிறைத்தண்டனை அதிகத் துன்பம் தருவதாகும். ஆனாலும், ஒரு குற்றவாளி சிறைத்தண்டனை வேண்டுமா அல்லது தூக்குத் தண்டனை வேண்டுமா என்று கேட்கும் பொழுது, அவன் தெளிவாகக் கூறுவான்.

“எனக்கு மரண தண்டனை வேண்டாம், சிறை தண்டனைதான் வேண்டும்” என்று. அது போல உயிரினங்களைக் கொல்வதும் பாவம். அதைவிட அவைகளை இம்சிப்பதோ மிகவும் பாவச் செயலாகும்.

எப்படி ஒரு மனிதன் சாப்பிடுவதற்குத் தயாராக இருக்கும்போது, சாப்பிடுவதைப் பறித்தாலோ அல்லது தடுத்தாலோ அவன் துன்பம் கொள்கிறானோ, அதே நிலைதான் மற்ற உயிரினங்களுக்கும். ஆனால், நமது நாட்டிலோ, அரசுக்குச் சொந்தமான காடுகளில் புல், இலை, தழை போன்ற தங்களுக்கு உணவாகிய பொருள்களைச் சாப்பிட பசு இனங்கள் சென்றாலோ அல்லது சாப்பிட்டாலோ, அந்தப் பசுவினங்களுக்கும், அவைகளை வளர்ப்பவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்படுகிறது.

காடுகள் தீப்பற்றி அழிந்தாலும் பரவாயில்லை. ஆனால், பசு இனங்கள் சாப்பிடக்கூடாது என்கிறார்கள். ஆனால் நாமோ, ஒரு ராஜாவிடமோ அல்லது

பெரிய மனிதனிடமோ, ஒரு குற்றவாளி செல்லும்போது, அவனுக்கு உணவு கொடுக்கப்படவில்லையென்றால், அவனுக்குத் துன்பம் உண்டாகாதா என்கிறோம். அப்படித்தானே நாம் பசு இனங்கள் மேல் கருணை காட்ட வேண்டும்.

கவனமாக கேளுங்கள்! நமக்கு எப்படி இன்ப-துன்பம் வரும்போது பதறுகிறோமோ, அதுபோலத்தான் மற்றவர்களுக்கும் என்று உணர வேண்டும். பசு முதலிய உயிரினங்களாலும், அவை வளர்ப்பவர்களாலும் விவசாயத்திற்கு உதவிடும் பசுவினங்களாலும், மக்களின் நல்ல செயல்களாலும் மன்னனின் செல்வம் உயர்கிறது.

மன்னன் பசுவினங்களைக் காப்பதற்காகவும், தம் மக்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் வரி வசூலிக்கிறான். அவைகளை அழிப்பதற்கு அல்ல. ஆகவே, இன்றுவரை நடந்தது நடந்தவையாக இருக்கட்டும், இனிமேலாவது, பிறருக்குத் தீமை தரும் செயல்களை விடுத்து, நன்மையே செய்வோமாக.

நன்மை, தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வோமாக. நடுநிலையாக நின்று அனைத்து உயிர்களுக்கும் நன்மை தரும் செயல்களைச் செய்வோமாக! பிறருக்குத் தீமை தரும் செயல்களை விடுத்து, நன்மை தரும் செயல்களைச் செய்து, நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு, இறைவன் அருள் செய்யட்டும். ஆதரவற்ற உயிரினங்களைக் காப்பீர்களாக! இந்த விஷயத்தை வீண் என்று விட்டுவிடாமல் செயல்படுத்துவீர்களாக!

சர்வ வல்லமை படைத்த இறைவா!

இந்த உயிரினங்களை எவரும் காக்கவில்லையெனில், நீயாவது காப்பாற்று! அல்லது அவைகளைக் காக்கும் வல்லமையை எங்களுக்குக் கொடு.

முற்றும்.

வேதம் சொல்கிறது :-

*1. காம் மா ஹிம்ஸீ | யஜுர் வேதம் (19-44) பசுவைக் கொல்லாதே.*

*2. புஷ்ட்யை கோபாலம் | யஜுர் வேதம் (30-11) வலிவும் வனப்பும் பெற பசுக்களை வளர்ப்போம்.*

*3. அந்தகாய கோ காதம்*

பசுவைக் கொல்வோனுக்கு மரண தண்டனை. (பால் தரும் பசு தாய்க்குச் சமம். அதனைக் கொல்லக்கூடாது)

இதனையே திருவள்ளுவரும், திருக்குறளில் புலால் மறுத்தல் என்ற அதிகாரத்தில், 260-வது குறளில் :-

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"**

என்கிறார். அதாவது கொலை செய்யாமலும், புலால் உண்ணாமலும் வாழும் உயர்ந்த பண்பாளனை, எல்லா உயிரும் கைகூப்பித் தொழும். மேலும்,

திரு அருட்பிரகாச வள்ளலாரும் :-

**"புலால் உண்ணற்க; எவ்வுயிரையும் கொலை செய்யற்க"**

**"ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்"**

என்கிறார்.

# ஆர்ய சமாஜத்தின் பத்து கொள்கைகள்

1. இறைவனே எல்லா மெய்யறிவுக்கும் அவ்வறிவால் அறியப்படும் எல்லாவற்றிற்கும் மூலகாரணம்.

2. இறைவன் உண்மை - அறிவு - இன்பவடிவினர், உருவமற்றவர், பேராற்றலுடையவர், நியாயவள்ளல், அருளாளர், பிறவாதவர், எல்லையற்றவர், மாறாதவர், ஆதியற்றவர், இணையற்றவர், அனைத்துக்கும் ஆதாரமானவர், எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், மூப்பற்றவர், அழிவற்றவர், அச்சமற்றவர், என்றும் உள்ளவர், தூயவர், அனைத்து உலகுக்கும் மூலகாரணமானவர். அவருக்கே வணக்கம் உரியது.

3. வேதங்கள் அறிவு நூல்கள், அவற்றைப் படிப்பதும், படிக்கக் கேட்பதும், கற்பதும், கற்பிப்பதும், பிறருக்கு விளக்குவதும், ஒவ்வொரு ஆர்யனின் (சான்றோனின்) தலையாய கடமையாகும்.

4. உண்மையை ஏற்கவும், பொய்யைப் புறத்தே ஒதுக்கவும், ஒருவர் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

5. எச்செயலையும் அறத்துக்கு இசைந்ததாகவே செய்ய வேண்டும். அதாவது நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்தே செய்ய வேண்டும்.

6. மனிதர்களின் உடல்நலம், ஆன்மநலம், சமுதாயநலம் இவற்றை மேம்படுத்தி உலகுக்கு நன்மை செய்வதே ஆர்ய சமாஜத்தின் முக்கிய நோக்கம்.

7. எல்லோரிடத்தும் அன்புடனும், நீதி உணர்வுடனும் தக்க மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

8. அறியாமை அழிக்கப்பட வேண்டும். அறிவு பரப்பப்பட வேண்டும்.

9. தனது மேன்மையில் யாரும் நிறைவடைந்து விடக்கூடாது. மற்றவர் மேன்மையில் தனது மேன்மையும் கலந்திருப்பதை உணர வேண்டும்.

10. சமுதாய நன்மைக்காக சட்டங்களை ஒப்புக்கொண்டு அவைகளுக்குட்பட்டு நடக்க வேண்டும். ஆனால், பொதுநலத்தைப் பாதிக்காத சொந்த விஷயங்களில் மட்டும் சுதந்தரமாக நடந்துக்கொள்ளலாம்.

# KASHI SHASTRATH



—Swami Dayanand Saraswati

# Preface

Kashi Shastrartha gives an account of the famous religious debate which took place between swami Dayaand Saraswati and the Pandits of Benaras under the Chairmanship of the Maharaja of Benaras onTusday the 16th November. 1869 A.D. The Subject of the debate was whether idol worship is sanctioned by the Vedas. The pandits failed to prove that it is. The Shastrarth took place in Sanskrit but Hindi Version was also given when it was first published in the form of a book. The English translation of the Shastrartha was long felt need and we are happy to announce that late R.B.Ratan Lalji of Merrut was kind enough to translate the same. Dr. Bhawani Lal Bhartiya, M.A., Ph.D. has thoroughly seen the translation and compared it with the original.

We hope the publication of this book will enlighten the readers.

Arya Samaj Sthapna Divas
Samvat 203I Vikrami
Dayanand Ashram,
Ajmer

**Shri Karan Sharda**
Secretary
Paropkarini Sabha

Om

# KASHI SHASTRARTH
# (Religious Discussion at Varanasi)

## Introductory

A Sanyasi by the name of Dayanand Saraswati Wearing his lnagot only keeps going along the banks of the Ganges and Knows the true shastras and his personality is a symbol of truth. He has studied and meditated upon Rig and other Vedas deeply with the result that he contends that there is no sanction whatsoever in the Vedas for idolatry or worship of stocks and stones or for the marks on foreheads or for the rudrakash necklace of the Shaivites, Ganpatya and Vaishnava and other sects (of india). Hence all these ceremonials are false and no one should follow and practice them, for, it is a great sin to practice what is against the Vedas and not supported by them, for, the Vedas themselves laydown that rule of human conduct.

Hence the said Swami8 started criticism and condemnation of all those ceremonials in Hardwear and followed it up all along the banks of the Ganges and has arrived at Kashi (Varanasi) and is Staying at Anand Bag near Durga Kund. 1 The news of his arrival spread like wild fire in the whole city, and many pundits of Kashi began to study the Vedas but nowhere found Sanction for Idol worship in them though, most of them insisted upon that worship.

The Swami's fearless and through exposure of idolatry at last aroused the Maharaja (Ruler) of Kashi and he Called many pundits and asked them how to meet it. After final agreement amongst themselves they told the Ruler that some how there should be a religious discussion with Swami Dayanand Saraswati and the ancient ceremonials should be upheld in it, somehow or other.

In short on Tuesday, the Sixteenth November 1869 the Maharaja of Kashi came along with many Pandits to hold a religious discussion with many Pandits to hold a religious discussion with swami Dayanand. The latter asked the ruler whether he brought the Vedas.

The ruler replied that the Pandits know the Vedas by heart, there is no necessity of the books. Dayanand remarked that without books there can not be accurate consideration of previous and following contexts. However, there need be no books but then what is to be the subject ofl discussion.

The Pandits retorted that you condemn idol worship and we shall prove that it must be practiced.

Thereupon the Swami requested that one pandit who may be the head of all may come forward for discussion.

Pandit Raghunath Prasad Kotwal (Police Station Officer) also laid down that only one Pandit at a time should hold discussion with the Swami.

(debate proper commences)

Thereupon first of all Pandit Tara Charna, The Logician Stepped Forward for debate.

Dayanand: Do you recognize the authority of the Vedas?

Talracharana: All those who believe in Varnashram belive in the authority of the Vedas by all means.

Dayanand: is There any authority in the Vedas for the worship of Idols of stone or other materials? If there be, cite that hymn of the Veda, if there be no such hymn please say so.

Tawracharan: Whether there is or is not a hymn in the Vedas to that effect is a different matter but what should be said of one who asserts that the Vedas alone are authoritative and no other bookl whatsoever?

Dayanand: Consideration of other books may taken up later on. Consideration of the Vedas themselves is the principal thing. Hence the Vedas should be taken up first, for, The action enjoined in the Vedas is the Principal rule of conduct. Manu and other smritis also support the Vedas. Hence these are also authoritative but is should be noted which ever book lays down anything contrary to the Vedas or what is not acknowledged by Veda is to that extent not authoritative.

Taracharana: Where is the Origin of Manusmiriti Specified in the Vedas?

Dayanand: It is written in the Brahmana of the Sam veda that what Manu has said is the remedy of the remedies.

Vishudhanand: (intervening)- Vyas says in a sutra that the creator of the world is a conscious. Intelligent Being and not inanimate, Where is the authority for this in the Vedas?

Dayanand: Theis Question is Wholly irrelevant to the subject under discussion, therefore it should not be considered here.

Vishudhanand: If you know you must give reply to my question.

Dayanand: To avoid the discussion becoming irrelevant to the subject under debate he said if one does not remember by heart he can only reply after seeing the book concerned.

Vishudhanand: (remarking sarcastically) why have you dared to enter into open discussion in Kashi if you do not know these books by heart?

Dayanad: Do you know all these books by heart?

Vishudhanand : yes.

Dayanand: Then let us know what is the nature of Dharm (religion)?

Vishudhanand: Dharm is that action which is enjoyed in the Vedas with fruits thereof.

Dayanand: This sentence is your own composition and is of no authority. Give any quotation from the Vedas or Smirtis.

Vishudhanand: There is a sutra of Jaimini that Dharm is that which being desirable, is indicated (or taught) by Vedic injunction.

Dayanand: But this is a sutra. Why do you not quote any thing from the Vedas or smrities from your memory, please? The word chodna means persuation, the persuation too requires the authority of the Vdas or smrities.

Swami Vishudhanand thereupon became silent. There upon Swami Dayanand Said "Well you could not teel the nature of Dharm, now pleae define Dharm."

Vishudhanand: There is only one element in the definition of Dharma.

Dayanand: Let us know that.

Vishudhanand became silent and said nothing in reply to that question.

Dayanand : There are ten ingredients is Manu's definition of Dharma according to Manu: Contentment, forgiveness, self control, abstaining from unrighteously appropriating anything, (obedience to the rules of) Purification,coercion of the organs, wisdom, knowledge (of the Supreme soul), truthfulness and abstention fromanger, (form) the tenfold law.

Balshastri: (intervening)- we have seen all the scriptures.

Dayanand: If so please define adharm (irreligion).

Balshastri: No reply, silent, thereupon many pundits cried out "Do the Vedas contain the word pratima or not".

Dayanand: yes that word occurs in the Vedas.

Pandits: Quote it.

Dayanand:It is mentioned (in the Shadvinsh Brahmana ofsam Veda) that the pratima laughs and the temple trembles!

Pandits: But the word pratima is in the Vedas too. Why do you cirticise it then?

Dayanand: The word, however, does not authorize the worship of stocks and stones. We should interpret the word correctly.

Pandits: What is the meaning of the Vedic hymn in Which this word occurs?

Dayanand: The meaning is this: we now explain the wonderfully great peace. Saying this, the Brahmana of the Samveda gives the hymn commencing with indra etc, three thousand offerings are to be made in fire after reciting each of those hymns. Thereafter, after Vyahriti (utterance of te three words Bhu, Bhuwa and Svah) five offerings in fire should be made. It is also laid down that after doing that the hymns of the Samveda Should be sung in musical tones. The wonderful peace is enjoined by these steps; The hymn in which the word pratima occurs does not relate to the region of death but to the region of Brahma. It is like this: The wonderful peace is described is in the easter direction etc. The subject of the region of death is closed after invoking peace of the southern direction, western direction and northern direction, the earth and the intermediate region or atmosphere. Thereafter peace of the region of salvation or the great emancipation or the region of brahma is invoked. Hearing this, all the Pandits kept quiet.

But Balshastri said ‘The wonderful seers attin peace over their impedements by invoking peace of the Devta of the direction concerned.’

Swamiji replied that it was true but who points out the obstacles in this way is the question?

Balshastri retorted ‘The Senses point out the impedements. Swami Dayanand replied’ The sense see themselves and not make others see anything. And what is the meaning of the word sa in the hymns like ‘Sa prachim etc. Balshastri thereupon said nothing and kept. Silence. But Pandit shiv Sahai and This hymn gives the fruits which flow from peace by going into intermediate and other regions.

Thereupon Swamiji remarked ‘If you have seen that chapter please give the meaning of any hymn.’

Pt. Shiv sahai, however, became quiet and spoke nothing. Swami Vishudhanand thereupon stepped forward and asked ‘who produced the Vedas-?’

Dayanand: God produced the Vedas.

Balshastri: By which God? By the God of Nyaya Shastra (Logic), By the God of Yoga (Yoga Darshan) or by the God of Vedanta etc (Brahm Shastras)?

Dayanand: Are there more than one God?

Bal Shastri: God is one only. But what are the attributes of the God which produced the Vedas?

Dayanand: by the God whose attributes are Sat, Chit and Anand or Self – existence, consciousness and bliss.

Vishudhanand: What is the relation between God and the Vedas? It is that of imparting and imparted or of begetter and begetted or of inherence or of Master and servant or of essential identity?

Dayannand: The relation between God and the Vedas is that of cause and effect.

Vishudhanand: As it said that one should worship God with the idea of Brahma in the mind and the idea ofk Brahma in the sun so Should worship of idol (Shaligram) be adopted and followed.

Dayanand: It is said in the Vedas (Brahmanas which you hold) to be (Vedas) ‘Mano Brahmati upasit adityam Brahmati upasit etc but there are no such texts as pashanadi brahmeti upasit’ etc in them. How can then idol worship be said to be borne by any authority?

Thereupon Madhavacharya asked ‘What does the word ‘Purte’ in hymn ‘Udhuhyansvagne Pratijagrihi tvamishta pura’ mean.

Dayanand replied that it meant a well (Vapi or kup) a tank (tadaga) and (aram).

Madhavacharya: Why does it notk signify and include worship of idols of stone etc.?

Dayanand: The word ‘Purta’ signifies ‘Purte’ (fulfillment).

It can never mean worship of idols of stone etc., you may consult Nirukta and Brahman on the meaning of this hymn, if you have any doubts.

Madhavacharya: is the word purana in the Vedas or not?

Dayanand: The word Purana occurs in many places in the Vedas. But the word does not mean there, the books called Puranas, it refers to past and it is every – where adjective of substance.

Vishudhanand: There is this hymn in the Brihadaranyaka Upanisad. ‘Etasya mahto bhutasya nihshvasitmetadrigvedo Yajurvedah Samvedo-atharva-angiras iti hasah puranam shloka vyakhayananya nuvyathynanti.’

Is all that it says authority?

Dayanand: Yes it is authority.

Vishudanand: If the Sholka (Verse) is authority, all that it contains is authoritative.

Dayanand: It is true Shlokas only, That are authoritative. Not others.

Vishudhanand: What substance is qualified by the word purana here?

Dayanand: We shall consider over it if you bring the book.

Madhavacharya took out two pages and asked 'what word is qualified by the word Purana here?'

Dayanand: Please read out the whole text.

Madhavacharya: 'Brahmananitihasan Purananiti' (Grihyasutra)

Dayanand: Here the word Purana is adjective of the word Brahmana and means that Brahmana are old i.e. Sanatana.

Balshastri: Are there any new Brahmanas too?

Dayanand: No, Not, But in order that anyone may not have the least doubt about it, this qualifying word is used here.

Vishudhanand: How can it be adjective in the face of the intervention or interposition of the word itihas (History).

Dayanand: Is there any such rule that there is no adjective in case of interpositions and adjective in used only when there are no interpositions in between, for see 'Ajo nityah shashvto ayam ppurano na hanyate hanyamane Sharire.' Does not the remote Dehi has an adjective here? And there is no contrary rule laid down in any grammer.

Vishudhanand: The word 'Purana' is not adjective of the word Itihas. Does it follow that 'Itihas' should be taken to be new?

Dayanand: In other texts 'Purana' is used as adjective of 'Itihas' e.g. Itihasah Puranam pancham vedanam vedah.

Vamanacharya and others – They all said that this text does not appear in any of the Vedas.

Dayanand: If this is not found in the Vedas I Should be taken as defeated in this debate. But if it is found there, it shall follow that you are defeted. You should, all of you, give this undertaking in writing. Thereupon all the Pandits Became silent.

Dayanand: Is there Kalp Sangya anywhere in Grammar?

Balashastri: No, Not, rather in commenting upon one sutra (aphorism) a commentator has ridiculed it.

Dayanand: Please give example of it and justify it by giving illustration.

Balshastri and others became silent on hearing this.

Madhavacharya took out two leafs and put them before the Pandits and said ‘In these leafs the Vedas lay down that on the tenth day after the termination of a Yajna, the host should hear the Puranas. What word does the word Purana qualify in these text? (Tr. These were not pages of any of the four Vedas but were two leafs from Grihyasutras.)

Dayanand: Read out this text, When no Pandit read it Bal Shastri took up the leafs and giving them in Dayanand’s hands asked him to read them.

Dayanand: Please recite them yourself.

Balshastri: I can not read them Without spects and gave the pages again into Dayanad’s hands.

Dayanand: Thereupon Swami Dayanand Began to ponder over the pages. He had hardly taken two minutes and said something like this: The old Science is called ‘Purana Vidya’ and the old science of the Vedas is called Purana Vidya etc. This refers to Brahm Vidya (knowledge of Brahm, or God) for, in the previous context the hearing of the Rigveda and other three Vedas is enjoined. It is however no where said that there should be recital of the upanisads. Hence this reference must be taken to be of upanisads only and not of other books.

The Science of the four Vedas alone is the old science of Brahm or God. This can not mean Brahmavaivart and other new puranas. Had this text said ‘Brahmvaivarta etc. eighteen puranas it would h ave been different. But there is no such text in the four Vedas. Hence this text does not refer to the eighteen puranas’ Dayanand hardly finished his answer aforesaid when Vishudhanand got up and said, ‘I am getting late, I am going.’ Thereupon all the pandits got and went away crying that Dayanand was dereated. But when ehe pandits could not answer the four questions put by swami Dananand, how can he be dedaned as defeahed?